தமிழ்நாடு அரசு

# ஆறாம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

தொகுதி 3

# அறிவியல்
# சமூக அறிவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2018*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## நுழையும் முன்

தொடக்கக் கல்வியில் அறிவியல் பாடத்தைப் பொது அறிவியலாகப் (General Science) பயின்ற மாணவர்கள் தற்போது ஆறாம் வகுப்பு முதல் அறிவியல் பாடத்தை நான்கு பெரும் பிரிவுகளாகப் (Specific Science) படிக்கின்றனர். அதாவது இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் வகைமைகளின் கீழ் அமைந்த பாடங்களைத் தனித்தனியே படிக்கின்றனர்.

இப்புத்தகம் படிக்க, அறிந்துகொள்ள மற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் கற்கும் அனுபவங்கள் பெற உதவும் வகையில் உள்ளது. மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் ஆசிரியர்களின் பாட விளக்கங்கள் மூலமாகவும் பாடக் கருத்துகள் அமைந்துள்ளன. ஆகையால், இப்புத்தகமானது ஆசிரியர்களின் மேற்பார்வையோடு மாணவர்களின் எளிய செயல்பாடுகளைக் கொண்டு கற்போரை மையப்படுத்தியே வடிவமைக்கப்பட்டுள்ளது.

## எப்படி பயன்படுத்துவது?

- இரண்டாம் பருவ அறிவியல் புத்தகத்தில் ஏழு (VII) அலகுகள் உள்ளன.
- ஒவ்வொரு மாதத்திற்கும் இரு அலகுகள் வீதம், கணினி அறிவியலும் கூடுதலாக இத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு அலகும் எளிய செயல்பாடுகள் மற்றும் சோதனைகளைக் கொண்டுள்ளன. அவற்றை ஆசிரியர்கள் செய்து காண்பித்து விளக்கலாம். தேவைப்படின், மாணவர்களைக் கொண்டும் செயல்பாட்டுகளைச் செய்யலாம்.
- வண்ணமயமான தகவல் விளக்கப்படங்கள் (Info graphics) மற்றும் தகவல் துணுக்குகள் (Info bits) மாணவர்களின் பார்த்துக் கற்கும் திறனை அதிகரிக்கும்.
- கலைச்சொல் பட்டியல் மூலம் அறிவியல் சொற்களைக் (Scientific Terms) கற்றுக்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.
- உலகளவிய பொது அறிவியல் சிந்தனையை வளர்த்துக் கொள்ள "உங்களுக்குத் தெரியுமா?" என்ற பெட்டிச்செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- இணைய வழிக் கற்றல் மற்றும் QR Code முதல் முதலாக, ஒவ்வொரு அலகிலும் அறிமுகப்படுத்தப்பட்டு கணினி சார்ந்த திறன் , (Digital Science Skill) மேம்பாடடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**இப்பொழுது நாம் QR Code நுட்பத்தைப் பாடப் புத்தகத்தில் பயன்படுத்தலாம். எப்படி?**

QR GUIDE

- உங்கள் திறன் பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை பதிவிறக்கம் செய்து நிறுவிக் கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தி திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன்அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச்(URL) சொடுக்க, அதன் விளக்கப்பக்கம் திரையில் தோன்றும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil Book_Index.indd 3 30/07/18 5:11 PM

## அறிவியல் இரண்டாம் பருவம்
## பாடப் பொருளடக்கம்




| | | | |
|---|---|---|---|
| அலகு | 1 | வெப்பம் | 1 |
| அலகு | 2 | மின்னியல் | 19 |
| அலகு | 3 | நம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்கள் | 35 |
| அலகு | 4 | காற்று | 45 |
| அலகு | 5 | செல் | 63 |
| அலகு | 6 | மனித உறுப்பு மண்டலங்கள் | 74 |
| அலகு | 7 | கணினியின் பாகங்கள் | 93 |


9745NV
மின்நூல்

977SCS
மதிப்பீடு

B440_SCI_6_T2_TM
இணைய வளங்கள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil Book_Index.indd 4 30/07/18 5:11 PM



# அலகு 1 வெப்பம்



## கற்றல் நோக்கங்கள்

- ❖ வெப்ப மூலங்களைப் பட்டியலிடுதல்
- ❖ வெப்பம் வரையறை செய்தல்
- ❖ வெப்பமான மற்றும் குளிர்ச்சியான பொருள்களை வேறுபடுத்தி அறிதல்
- ❖ வெப்பநிலை வரையறை செய்தல்
- ❖ வெப்பம் மற்றும் வெப்பநிலை வேறுபடுத்துதல்
- ❖ வெப்பச் சமநிலைக்கான நிபந்தனைகளை அறிதல்.
- ❖ திடப்பொருளில் வெப்பவிரிவு எதனால் ஏற்படுகிறது என்று புரிந்து கொள்ளுதல்.
- ❖ வெப்ப விரிவின் நடைமுறைப் பயன்பாடுகளைக் கூறுதல்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 1 11-08-2018 10:16:40

## அறிமுகம்

வெப்பம் நாம் அனைவரும் அறிந்ததே. சூரிய ஒளி நம் உடலில் படும்பொழுது நாம் வெப்பத்தை உணர்கிறோம். வெப்பம் நமக்குப் பல வழிகளில் பயன்படுகிறது. வெப்பத்தை உணவு சமைக்கப் பயன்படுத்துகிறோம். பழச்சாறு தயாரிக்கையில் வெப்பத்தைக் குறைக்க பனிக்கட்டிகளைச் சேர்க்கிறோம். நமக்கு எந்தெந்த மூலங்களில் இருந்து வெப்பம் கிடைக்கிறது என்று நாம் இப்பொழுது காண்போம்.

## 1.1 வெப்ப மூலங்கள்

❖ சூரியன்



சூரியன் ஒளியைத் தருகிறது என நமக்குத் தெரியும். அது வெப்பத்தையும் தருகிறதா? சூரிய ஒளியில் சிறிது நேரம் நின்று விட்டு உனது தலையைத் தொட்டுப்பார். சூடாக உள்ளதல்லவா? ஆம், சூரியன் ஒளியோடு வெப்பத்தையும் தருகிறது. இதனால்தான், கோடை வெயிலில் வெற்றுக் கால்களுடன் சாலையில் நடப்பது கடினமாக உள்ளது.

❖ எரிதல்



மரக்கட்டை, மண்ணெண்ணெய், நிலக்கரி, கரி, பெட்ரோல், எரிவாயு போன்றவற்றை எரிப்பதனால் வெப்ப ஆற்றலைப் பெறலாம். உனது வீட்டில் உணவு சமைக்கத் தேவையான வெப்ப ஆற்றல் எதனை எரித்துப் பெறப்படுகிறது?

❖ உராய்தல்



உனது இரு உள்ளங்கைகளையும் ஒன்றுடன் ஒன்று சேர்த்து உரசவும். தற்போது உனது உள்ளங்கைகளைக் கன்னத்தில் வைத்துப் பார். எவ்வாறு உணர்கிறாய்? இருபரப்புகள் ஒன்றோடொன்று உராயும்பொழுது வெப்பம் வெளிப்படுகிறது. ஆதிகால மனிதன் இரு கற்களை ஒன்றோடொன்று உரசச்செய்து நெருப்பை உருவாக்கினான்.

❖ மின்சாரம்

மின்னோட்டம் ஒரு கடத்தியின் வழியாகப் பாயும்பொழுது வெப்ப ஆற்றல் உருவாகிறது. மின் இஸ்திரிப்பெட்டி, மின் வெப்பக்கலன், மின் நீர்சூடேற்றி போன்றவை இந்தத் தத்துவத்தில்தான் இயங்குகின்றன.

## 1.2 வெப்பம்

எல்லாப் பொருட்களிலும் மூலக்கூறுகளானது அதிர்விலோ அல்லது இயக்கத்திலோ உள்ளன. அவற்றை நம் கண்களால் பார்க்க இயலாது. பொருட்களை வெப்பப்படுத்தும் பொழுது அதில் உள்ள மூலக்கூறுகளின் இந்த அதிர்வும், இயக்கமும் அதிகரிக்கின்றன. அதோடு பொருளின் வெப்பநிலையும் உயர்கிறது.

எனவே, **வெப்பம் என்பது ஒரு பொருளின் வெப்பநிலையை உயரச்செய்து,**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 2 11-08-2018 10:16:41

மூலக்கூறுகளை வேகமாக இயங்க வைக்கக்கூடிய ஒரு வகையான ஆற்றல் என நாம் புரிந்துகொள்ளலாம்.



வெப்பப்படுத்துவதற்கு முன் மூலக்கூறுகளின் நிலை

வெப்பப்படுத்திய பின் மூலக்கூறுகளின் நிலை

வெப்பம் என்பது ஒரு பொருளல்ல. அது இடத்தினை ஆக்கிரமிப்பதில்லை. ஒலி, ஒளி மற்றும் மின்சாரத்தினைப் போல இதுவும் ஒரு வகை ஆற்றலாகும்.

ஒரு பொருளில் அடங்கியுள்ள மூலக்கூறுகளின் இயக்க ஆற்றலே வெப்பம் என அழைக்கப்படுகிறது. **வெப்பத்தின் SI அலகு ஜூல் ஆகும்.** கலோரி என்ற அலகும் வெப்பத்தை அளக்கப் பயன்படுத்தப்படுகிறது.

## 1.3 சூடான மற்றும் குளிரான பொருட்கள்

நமது அன்றாட வாழ்வில் பல்வேறு வகையான பொருள்களை நாம் பார்க்கிறோம். அவற்றில் சில சூடானவை, சில குளிர்ச்சியானவை. எந்தெந்தப் பொருள்கள் மற்றவற்றைவிட அதிக சூடாக இருக்கின்றன என்பதை எவ்வாறு நிர்ணயிப்பது?

நாம் அருந்தும் அளவிற்குத் தேநீர் சூடாக உள்ளதா? அல்லது பாலானது தயிர் உருவாக்க வேண்டிய அளவுக்குக் குளிர்ச்சியடைந்துள்ளதா? என்பதனை நமது கைகளால் தொட்டுப்பார்த்து உணர்கிறோம். ஆனால் சரியான வெப்பநிலையை உணர நமது தொடுஉணர்வு நம்பகத்தன்மையுடையதா?

**செயல்பாடு 1:** மூன்று கிண்ணங்கள் அல்லது பாத்திரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். முதலாவதில் குளிர்ந்த நீரும் (குளிர்ச்சிக்காக சில பனிக்கட்டிகளை சேர்த்துக் கொள்ளலாம்), இரண்டாவதில் சூடுபடுத்தப்படாத அறைவெப்பநிலையில் உள்ள நீரும், மூன்றாவதில் சூடான (கையை சுட்டுவிடும் அளவு சூடு வேண்டாம்) நீரும் நிரப்புங்கள். அவற்றை வரிசையாக ஒரு மேஜையின் மீது வைக்கவும். உனது வலக்கையை குளிர்ந்தநீரிலும், இடக்கையை சூடான நீரிலும் வைக்கவும். சில நிமிடங்களுக்கு இவ்வாறு வைத்திருக்கவும். இப்போது இரு கைகளையும் வெளியே எடுத்து உதறிவிட்டு நடுவிலுள்ள பாத்திரத்தில் வைக்கவும். என்ன உணர்கிறீர்கள்?



குளிர்ந்த நீர் அறைவெப்பநிலை நீர் சூடான நீர்

பிரியா, கிண்ணத்தில் உள்ள நீர்சூடாக இருப்பதாக வலதுகையும், அதே நீர் குளிராக இருப்பதாக, இடதுகையும் உணர்வதாகக் கூறுகிறாள். உனக்கு என்ன தோன்றுகிறது? எழுதுக.

______________________________

______________________________

ஏன் இவ்வாறு நமக்குத் தோன்றுகிறது? என்பதனை வகுப்பறையில் விவாதிக்கவும். நீ உனது இடதுகையை சூடான நீரில் வைக்கும்போது, சூடான நீர் உனது கையை சூடாக்குகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 3 11-08-2018 10:16:41

அதாவது உனது கையிலுள்ள மூலக்கூறுகளை வேகமாக அதிர்வடையச் செய்கிறது. இந்த சூடான கையை சாதாரண அறைவெப்பநிலையில் உள்ள நீரில் வைக்கும்போது, உனது கையிலிருந்து வெப்பஆற்றல் நீருக்குக் கடத்தப்படுகிறது. அதாவது உனது கையிலுள்ள மூலக்கூறுகள் நீர் மூலக்கூறுகளுக்குத் தனது அதிர்வைக் கடத்துவதன் மூலம் தனது வெப்பநிலையை குறைத்துக் கொள்கின்றன. இதன் காரணமாகவே நாம் நீர் குளிர்ச்சியாக இருப்பதாக உணர்கிறோம்.

இதைப்போலவே, ஏற்கனவே குளிர்ந்த நீரில் வைக்கப்பட்டிருந்த வலதுகை இப்போது நீரிலிருந்து வெப்ப ஆற்றலை எடுத்துக்கொள்வதால், அது சூடான உணர்வைப் பெறுகிறது.

ஆக, ஒரே வெப்பநிலையில் உள்ள நீரானது, நமது கைகளின் வெப்பநிலையைப் பொறுத்து வேறுபட்ட உணர்வுகளைத் தரு கி றது. எனவே, வெப்பநிலையைத் தொ டு உணர்வால் அளவிடுவது சரியானதல்ல.

**வெப்பநிலையை நாம் துல்லியமாகக் கணக்கிட வெப்பநிலைமானி உதவுகிறது.**

## 1.4 வெப்பநிலை

### வெப்பநிலையின் வரையறை

**ஒரு பொருள் எந்த அளவு வெப்பமாக அல்லது குளிர்ச்சியாக உள்ளது என்பதனை அளவிடும் அளவுக்கு வெப்பநிலை என்று பெயர்.**

**வெப்பநிலையின் SI அலகு கெல்வின் ஆகும்.** செல்சியஸ், °பாரன்ஹீட் போன்றவை பிற அலகுகள் ஆகும். செல்சியஸ் என்பது சென்டிகிரேட் எனவும் அழைக்கப்படுகிறது.

வெவ்வேறு வெப்பநிலையில் உள்ள இரு பொருள்கள் ஒன்றையொன்று தொடும்பொழுது வெப்பமானது எந்தத் திசையில் பாய்கிறது என்பதனை அவற்றின் வெப்பநிலை நிர்ணயிக்கிறது.

**செயல்பாடு 2:**

**கொதிநிலையில் உள்ள நீரின் வெப்பநிலை**

ஒரு பாத்திரத்தில் நீரை எடுத்துக்கொண்டு அதை அடுப்பில் வைத்து படத்திலுள்ளவாறு வெப்பநிலைமானியைப் பொருத்துங்கள். (**கவனம் தேவை**– வெப்பநிலைமானி பாத்திரத்தை தொடாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். இல்லையேல் அதிக வெப்பநிலையில் வெப்பநிலைமானி உடைந்துவிடும்.)

நீர் சூடேற ஆரம்பித்தவுடன் ஒவ்வொருவராக வரிசையாக நீரின் வெப்பநிலையை வெப்பநிலைமானியில் பார்த்து கரும்பல கையில் குறியுங்கள். வெப்பநிலை தொ டர்ந்து அதிகரித்துக் கொண்டு வருவதை நீங்கள் பார்க்கிறீர்களா?

நீர் கொதிக்கும் போது அதன் வெப்பநிலை எவ்வளவு? ______________



கொதிநிலைக்குப் பின் நீரின் வெப்பநிலை உ ய ர் கி ற த ா ? ______________

கொ தி நி லை யி லு ள் ள நீரை மேலும் வெப்பப்படுத்தும்பொழுது அந்த நீரானது தொடர்ந்து வெப்பத்தை உ ள் வ ா ங் கி ன ா லு ம் அதன் வெப்பநிலை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 4 11-08-2018 10:16:41

உயர்வதில்லை. எந்த வெப்பநிலையில் நீர் கொதிக்கத் துவங்கி, வெப்பநிலை நிலையாக இருக்கிறதோ அந்த வெப்பநிலைக்குத்தான் நீரின் **கொதிநிலை** என்று பெயர்.

**ஊகித்துக் கூறுங்கள்.**

(உங்களது யூகம் எவ்வளவு சரியாக இருக்கிறதென வெப்பநிலைமானி கொண்டு சரிபாருங்கள்.)

❖ நீ அருந்தும் தேநீரின் வெப்பநிலை தோராயமாக எவ்வளவு இருக்கும்? ____________

❖ நீ அருந்தும் குளிர்விக்கப்பட்ட எலுமிச்சை ஜூஸின் வெப்பநிலை தோராயமாக எவ்வளவு இருக்கும்? ____________

சாதாரணமாக அறைவெப்பநிலையில் உள்ள நீரின் வெப்பநிலை சுமார் 30°C அளவில் இருக்கும். நீரைச் சூடுபடுத்தும் போது வெப்பநிலை அதிகரித்து, அது 100°C ல் கொதித்து நீராவியாக மாறுகிறது. நீரைக் குளிர்விக்கும்போது வெப்பநிலை குறையத் தொடங்கி 0°C ல் பனிக்கட்டியாக உறைகிறது.

(குறிப்பு: 30°C என்பதை 30 டிகிரி செல்சியஸ் அல்லது 30 டிகிரி சென்டிகிரேடு என உச்சரிக்க வேண்டும்.)

**நீலாவின் கூற்று சரியா?**

A, B என்ற இரு முகவைகளில் 80°C வெப்பநிலை கொண்ட நீர் உள்ளது. A, B முகவைகளிலுள்ள நீரை C என்ற காலி முகவைக்குள் ஊற்றவும். தற்போது முகவை C யின் வெப்பநிலை என்ன? நீலா 160° C எனக் கூறுகிறாள்.







உன் கணிப்பு என்ன? நீலா சரியாகக் கூறினாளா? விடையை அனுமானித்து சோதனை மூலம் நிரூபிக்கவும்.

____________________________________

____________________________________

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆப்பிரிக்காவிலுள்ள, லிபியாவில், 1922 ம் வருடத்தில் ஒரு நாள், காற்றின் வெப்பநிலையானது 59°C எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. அண்டார்ட்டிக் கண்டத்தின் வெப்பநிலைதான் உலகிலேயே மிகக் குறைந்த வெப்பநிலையாக அளவிடப்பட்டுள்ளது. அது தோராயமாக −89°C எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வெப்பநிலை நீரின் உறைநிலைக்குக் குறைவாக இருக்கும் பொழுது எதிர்குறி (−) உபயோகப்படுத்தப் படுகிறது. நீரின் உறைநிலை 0°C எனக் கணக்கிடப்படுகிறது. நீரானது 0°C வெப்பநிலையில் பனிக்கட்டியாக மாறுகிறது என்றால் – 89°C என்பது எந்த அளவுக்குக் குளிராக இருக்கும் என்பதனை சிந்தித்துப் பார். நமது உடலின் சராசரி வெப்பநிலை 37°C ஆகும். காற்றின் வெப்பநிலை 15°C முதல் 20°C அளவில் இருக்கும்பொழுது நமது உடல் குளிர்ச்சியாக உணர்கிறது.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 5 11-08-2018 10:16:42

உனது கிராமம் அல்லது நகரத்தில் குளிர்காலத்தில் இரவு வெப்பநிலை எந்த அளவுக்கு இருக்கும் என்பதனை மதிப்பிடவும்.

## 1.5 வெப்பம் மற்றும் வெப்பநிலை

வெப்பமும் வெப்பநிலையும் ஒன்றல்ல, அவை இரு மாறுபட்ட காரணிகள்;

- வெப்பநிலையானது ஒரு பொருளிலுள்ள அணுக்கள் அல்லது மூலக்கூறுகள் எவ்வளவு வேகத்தில் இயங்குகின்றன அல்லது அதிர்கின்றன என்பதைப் பொறுத்தது.
- வெப்பமானது வெப்பநிலையை மட்டுமல்ல, ஒரு பொருளில் எவ்வளவு மூலக்கூறுகள் உள்ளன என்பதையும் பொறுத்தது.
- வெப்பநிலையானது மூலக்கூறுகளின் சராசரி இயக்க ஆற்றலைக் குறிப்பிடும் ஓர் அளவீடு. வெப்பமானது அப்பொருளில் அடங்கியுள்ள மூலக்கூறுகளின் மொத்த இயக்க ஆற்றலைக் குறிப்பிடும் ஓர் அளவீடு.

**செயல்பாடு 3:** ஒரு பாத்திரத்தில் ஒரு லிட்டர் நீரை எடுத்துக் கொண்டு அடுப்பில் வைத்து சூடாக்கவும். அது எவ்வளவு நேரத்தில் கொதிக்க ஆரம்பிக்கிறது என குறித்துக் கொள்ளுங்கள் (அதாவது வெப்பநிலைமானியில் 100°C காண்பிக்க ஆகும் நேரம்).



பின்னர் மற்றொரு பாத்திரத்தில் ஐந்து லிட்டர் நீரை எடுத்துக் கொண்டு அதே அடுப்பில் வைத்து சூடாக்கவும். இப்பொழுது நீர் கொதிக்க ஆரம்பிக்க எவ்வளவு நேரம் ஆகிறது எனக் குறித்துக் கொள்ளவும்.

**எந்தப் பாத்திரத்தில் உள்ள நீர் சீக்கிரமாக கொதிக்க ஆரம்பிக்கிறது?**

- ☐ ஒரு லிட்டர் நீர்
- ☐ ஐந்து லிட்டர் நீர்

இரண்டுமே கொதிநிலையில் 100°C வெப்பநிலையைத்தான் காண்பிக்கின்றன. ஆனால் ஐந்து லிட்டர் நீரானது ஒரு லிட்டர் நீரைவிட கொதிப்பதற்கு அதிகநேரம் எடுத்துக்கொள்கிறது. அதாவது, அதிக அளவு நீரை கொதிக்க வைக்க அதிக அளவு வெப்பம் தேவைப்படுகிறது. அதாவது ஒரு லிட்டர் கொதிநீரைவிட ஐந்து லிட்டர் கொதிநீரில் அதிக வெப்ப ஆற்றல் உள்ளது.

ஒரே மாதிரியான இரு சிறிய தகரக் குவளைகளை எடுத்துக் கொள்ளவும். அவற்றில் அறை வெப்பநிலையில் உள்ள நீரை முழுவதுமாக நிரப்பிக் கொள்ளவும். தற்போது கொதிக்கும் நீர் (100°C) உள்ள மேலே கூறிய இரு பாத்திரங்களிலும், இந்த இரண்டு தகரக் குவளைகளையும் திறந்த நிலையில் வைக்கவும்.

**எந்த பாத்திரத்தில் உள்ள தகரக் குவளையில் நீர் வேகமாகச் சூடாகிறது?**

- ☐ ஒரு லிட்டர் கொதிக்கும் நீர் உள்ள பாத்திரத்தில் வைக்கப்பட்ட குவளை
- ☐ ஐந்து லிட்டர் கொதிக்கும் நீர் உள்ள பாத்திரத்தில் வைக்கப்பட்ட குவளை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 6 11-08-2018 10:16:42

ஐந்து லிட்டர் நீர் உள்ள பாத்திரத்திலுள்ள தகரக் குவளையிலுள்ள நீர் அதிக வெப்ப நிலைக்குச் செல்வதைப் பார்க்கலாம். இரண்டு கொதிநீர் பாத்திரங்களிலும் $100^{\circ}C$ வெப்பத்தில்தான் நீர் உள்ளது. ஆனால் ஐந்து லிட்டர் கொதிநீர், ஒரு லிட்டர் கொதி நீரை விட அதிக வெப்ப ஆற்றலைப் பெற்றுள்ளதால், குவளைக்கு அதிக அளவு வெப்ப ஆற்றலைத் தருகிறது. அதனால் அது வேகமாகச் சூடாகிறது.

வெப்ப ஆற்றலை நாம் கலோரியில் அளவிடலாம். ஒரு கிராம் நீரின் வெப்பநிலையை ஒரு டிகிரி சென்டிகிரேட் உயர்த்தப்பயன்படும் வெப்ப அளவு ஒரு **கலோரி** ஆகும்.

❖ **ஒவ்வொரு இணையிலும் எதில் வெப்ப ஆற்றல் அதிகம் உள்ளது ✓ குறியிடவும்.**




**சிந்தியுங்கள்:**

பவித்ரா தனது வீட்டின் அருகே உள்ள குளத்தினை வேடிக்கை பார்த்தபடி தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறாள். நிச்சயமாக, குளத்து நீரைவிட பவித்ரா கையிலுள்ள தேநீரின் வெப்பநிலை அதிகமாகத்தான் இருக்கும். பவித்ராவிற்கு தற்போது மனதினுள் ஒரு கேள்வி எழுகிறது. தேநீர் கோப்பை அதிக வெப்ப ஆற்றலை உள்ளடக்கியிருக்கிறதா? குளம் அதிக வெப்ப ஆற்றலை உள்ளடக்கியிருக்கிறதா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

______________________________

______________________________

______________________________



தேநீரின் வெப்பநிலை அதிகமாக இருந்தாலும்கூட, தேநீர் குவளையில் இருக்கும் தேநீரில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கையைக் காட்டிலும், குளத்தில் உள்ள நீரின் அளவும், அதிலுள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகம். எனவே குளத்தில்தான் வெப்ப ஆற்றல் அதிகமாக இருக்கும்.

## 1.6 வெப்பம் பரவுதல்

### நீர்மட்டமும், வெப்பநிலையும் ஓர் ஒப்பீடு

97GNEF

வெப்பநிலையானது வெப்பஆற்றல் பாயும் திசையை நிர்ணயிக்கிறது என்பதை நாம் அறிவோம். நீர் உயரமான பகுதியிலிருந்து தாழ்வானபகுதிக்குப் பாய்வதைப்போல, வெப்பஆற்றலானது உயர்ந்த வெப்பநிலையில் உள்ள பொருளிலிருந்து, குறைந்த வெப்பநிலையில் உள்ள பொருளுக்குக் கடத்தப்படுகிறது.

நீரானது உயரமான இடத்திலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாயும். அது எந்தப்பக்கம் நீர் அதிகமாக உள்ளது, எந்தப்பக்கம் நீர் குறைவாக



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 7 11-08-2018 10:16:42

உள்ளது என்பதனைப் பொறுத்ததல்ல. அது குட்டையிலிருந்து பெரிய நீர்த்தேக்கத்துக்கும் பாயலாம், அல்லது நீர்த்தேக்கத்திலிருந்து குட்டையை நோக்கியும் பாயலாம். நீர்மட்டமே நீர்பாயும் திசையைத் தீர்மானிக்கிறது.

நீர்மட்டம் நீர்பாயும் திசையைத் தீர்மானிப்பது போல, பொருள்களின் வெப்பநிலை, வெப்ப ஆற்றல் பாயும் திசையைத் தீர்மானிக்கிறது.

### வெப்பத்தொடர்பும், வெப்பச்சமநிலையும்




▲ வெவ்வேறு வெப்பநிலையில் உள்ள பொருட்கள் ஒன்று சேரும்போது

A, B என்ற இரு பொருட்களைக் கருதுவோம். A யின் வெப்பநிலை அதிகமாகவும் B யின் வெப்பநிலை குறைவாகவும் உள்ளது. A மற்றும் B யை ஒன்றுடன் ஒன்று தொடர்புக்கு கொண்டு வரும்பொழுது, வெப்பமானது வெப்பப்பொருள் A யிலிருந்து குளிர்பொருள் B க்குப் பாய்கிறது. இரண்டு பொருள்களும் ஒரே வெப்பநிலைக்கு வரும்வரை வெப்பம் தொடர்ந்து பரிமாற்றம் செய்யப்படும்.

### வெப்பநிலை, வெப்பம் பாயும் திசையைத் தீர்மானிக்கிறது.

1. நீ ஒரு சூடான காப்பிக் குடுவையைக் கையில் பிடித்துள்ளாய். வெப்ப ஆற்றல்,



அ. உன் உடலிலிருந்து காப்பிக்குச் செல்கிறதா? அல்லது

ஆ. காப்பியிலிருந்து உன் உடலுக்குப் பாய்கிறதா?

2. ஒரு கோடை நாளில் நீ வெயிலில் நிற்கிறாய். வெளி வெப்பநிலையானது 40°C அளவில் உள்ளது (மனித உடலின் சராசரி வெப்பநிலை 37°C) வெப்ப ஆற்றலானது,



அ. உன் உடலிலிருந்து காற்று மூலக்கூறுகளுக்குப் பாய்கிறதா? அல்லது

ஆ. காற்று மூலக்கூறுகளிலிருந்து உனது உடலுக்குப் பாய்கிறதா?

3. நீ ஒரு குளிர்கால நாளில் வெட்ட வெளியில் நிற்கிறாய். வெளி வெப்பநிலையானது 23°C அளவில் உள்ளது. வெப்ப ஆற்றலானது



அ. உன் உடலிலிருந்து காற்று மூலக்கூறுகளுக்குப் பாய்கிறதா? அல்லது

ஆ. காற்று மூலக்கூறுகளிலிருந்து உன் உடலுக்குப் பாய்கிறதா?

ஒரு பொருள் மற்றொரு பொருளின் வெப்பநிலையை பாதிக்குமானால் அவை இரண்டும் **வெப்பத்தொடர்பில்** உள்ளன எனலாம். வெப்பத்தொடர்பில் உள்ள இருபொருட்களின் வெப்பநிலையும் சமமாக இருந்தால் அவை **வெப்பச்சமநிலை**யில் உள்ளன எனப்படுகிறது. இரு பொருட்கள் வெப்பச்சமநிலையில் உள்ளபோது ஒன்றின் வெப்பநிலை மற்றொன்றை பாதிப்பதில்லை.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 8 11-08-2018 10:16:43

எடுத்துக்காட்டாக, குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்து சமையலறை மேடையில் வைக்கப்பட்ட பால்பாத்திரமும், சமையலறை மேடையும் வெப்பத்தொடர்பில் உள்ளன. குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் அவை ஒரே வெப்பநிலைக்கு வருகின்றன, அப்போது அவை வெப்பச்சமநிலையில் உள்ளன.




## 1.7 திண்மப் பொருள்கள் விரிவடைதல்

சாம் ஓர் இறுக்கமான ஜாடியைத் திறக்க முயல்கிறான். ஆனால் இயலவில்லை. அவன் மாமாவிடம் உதவி கேட்கிறான். மாமா சிறிது சுடுநீரை ஜாடியின் மூடியில் ஊற்றச் சொல்கிறார். சாம் அவ்வாறே செய்கிறான். ஆகா! ஜாடி எளிதில் திறந்து விட்டதே !

உனக்கு இப்படிப்பட்ட அனுபவம் உள்ளதா? இறுக்கமாக மூடப்பட்ட உனது பேனாமூடியை நீ எவ்வாறு திறப்பாய்?



**செயல்பாடு 4:** ஒரு தகரடப்பாவில் ஆணியை அடிக்கவும். ஆணியை வெளியில் எடுக்கவும். ஆணியைத் திரும்பச் செலுத்தித் துளையானது ஆணி புகும் அளவுக்குப் பெரிதாக உள்ளதா என ஆராயவும். பின் ஆணியை வெளியில் எடுத்து ஓர் இடுக்கியால் பிடித்து மெழுகுவர்த்திச் சுடரில் வெப்பப்படுத்தவும்.

இப்பொழுது ஆணியை தகரடப்பாவில் செலுத்தவும்.



நான் காண்பது: ______________________

______________________________

தற்பொழுது ஆணி துளையினுள் உட்புகுதல் கடினமாக இருப்பதை உணர்வாய் வெப்பம் திண்மங்களை விரிவடையச் செய்கிறது. திண்ம மூலக்கூறுகள் விரிவடைந்து வேகமாக இயங்கி முன்னிருந்ததை விட அதிக இடத்தினை ஆக்கிரமிக்கின்றன.

பொருள்கள் வெப்பப்படுத்தும் பொழுது விரிவடைந்து குளிர்விக்கும் பொழுது சுருக்கமடைகின்றன. அவற்றின் நீளம், பரப்பளவு அல்லது கனஅளவில் ஏற்படும் மாற்றமானது வெப்பநிலை மாற்றத்தைப் பொறுத்தது.

**ஒரு பொருளை வெப்பப்படுத்தும்பொழுது அது விரிவடைவதை அப்பொருளின் வெப்ப விரிவடைதல் என்கிறோம்.**

## 1.8 நீள் மற்றும் பரும விரிவு

ஒரு திண்மப் பொருளுக்கு வரையறுக்கப்பட்ட வடிவம் உள்ளது. எனவே அதைச் சூடுபடுத்தும்பொழுது அது எல்லா பக்கங்களிலும் விரிவடைகிறது. அதாவது



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 9 11-08-2018 10:16:43

அதன் நீளம், பரப்பளவு, கனஅளவு போன்றவை அதிகரிக்கின்றன.

**வெப்பத்தினால் பொருளின் நீளத்தில் ஏற்படும் அதிகரிப்பு நீள்விரிவு என்றும், பொருளின் பருமனில் ஏற்படும் அதிகரிப்பு பருமவிரிவு எனவும் அழைக்கப்படுகிறது.**

மாட்டு வண்டியின் சக்கரத்தின் இரும்பு வளையத்தைச் சக்கரத்துடன் பொருத்தும்முன் அதை வெப்பப்படுத்துவது ஏன்? தண்டவாளத்தின் இரு இரும்புப் பாளங்களுக்கு இடையில் சிறிது இடைவெளி விடப்படுவது ஏன்?

இக்கேள்விகளுக்கான விடையை ஓர் ஆய்வு மூலம் தேடலாமா?

நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் ஒரு மிதிவண்டிச் சக்கரத்தின் கம்பியைச் சூடுபடுத்துவதுதான்.

**செயல்பாடு 5: நீள் விரிவு**

ஒரு மின்விளக்கு, மின்கலன், மெழுகுவர்த்தி, மிதிவண்டிச் சக்கரக்கம்பி, நாணயம் மற்றும் இரு மரக்கட்டைகள் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்.

மிதிவண்டிச் சக்கரக்கம்பியின் ஒரு முனையை ஒரு மரக்கட்டையின் மேல் வைத்து அதனுடன் மின்கம்பியைப் பொருத்தவும். மிதிவண்டிச் சக்கரக்கம்பியும், மின்கம்பியும் மரக்கட்டையில் இணையும் இடத்தில், அவை நகராமல் இருக்க ஒரு சிறு கல்லை படத்தில் காட்டியவாறு வைக்கவும். மிதிவண்டிச் சக்கரக்கம்பியின் மறு முனையை அடுத்த மரக்கட்டையின் மேல்தளத்துக்கு இணையாக வரும்படியாக வைக்கவும். நாணயத்தின் மேல் மின்கம்பியைச் சுற்றி அதை இரண்டாவது

97LHS6



மரக்கட்டையின்மேல் வைத்து நிலை நிறுத்தவும்.

நாணயத்தில் சுற்றப்பட்ட மின்கம்பிக்கும் மிதிவண்டிச் சக்கரக்கம்பியின் முனைக்கும் இடையில் ஒரு மின்கலனையும், மின் விளக்கையும் பொருத்தவும். மிதிவண்டிச் சக்கரக்கம்பியின் முனையும், நாணயமும் ஒன்றுடன் ஒன்று தொடும்பொழுது மின்சுற்று முழுமையடைந்து மின்விளக்கு ஒளிர்கிறது. மின்விளக்கு ஒளிரவில்லை எனில் மின்சுற்று முழுமையடையவில்லை என்பது பொருள். எனவே மின்சுற்று முழுமையடைந்துள்ளதா என்பதனைச் சரிபார்க்கவும். (குறிப்பு – மின்சுற்றுகள் பற்றி நாம் மின்னியல் பாடத்தில் விரிவாகப் படிக்க இருக்கிறோம்.) தற்பொழுது நாணயத்துக்கும் மிதிவண்டிச் சக்கரக்கம்பிக்கும் இடையில் ஒரு தாளை வைத்து, தாளின் தடிமனுக்கு இணையான இடைவெளியை உருவாக்கவும். தற்பொழுது மின்விளக்கு ஒளிர்கிறதா? காரணம் என்ன?

______________________________

______________________________

மிதிவண்டிச் சக்கரக்கம்பியும் நாணயமும் ஒன்றுடன் ஒன்று தொடாதநிலையில் மின்விளக்கு ஒளிராது.

தற்பொழுது மெழுகுவர்த்தியை ஒளிரச்செய்து மிதிவண்டிச் சக்கரக்கம்பியைச் சூடுபடுத்தவும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 10 11-08-2018 10:16:46

# வெப்பம் – ஓர் உள்ளார்ந்த பார்வை




எல்லாப் பொருள்களும் மூலக்கூறுகளால் ஆனவை. பொருள்களிலுள்ள மூலக்கூறுகள் எப்பொழுதும் அதிர்விலோ அல்லது இயக்கத்திலோ உள்ளன. ஆனால் நம் வெற்றுக்கண்களால் இந்த இயக்கத்தைப் பார்க்க முடியாது.

ஒரு பொருளை வெப்பப் படுத்தும்போது மூலக்கூறுகளின் அதிர்வும், இயக்கமும் அதிகரிக்கிறது.




வெப்பப்படுத்துவதால் அப்பொருளின் மூலக்கூறுகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுவதில்லை. எனவே, எடையும் மாறுவதில்லை.



இந்த அதிர்வு ஒரு மூலக்கூறிலிருந்து அடுத்த மூலக்கூறுக்கு கடத்தப்படுவதால் வெப்பம் பரவுகிறது.




வெப்பத்தினால் மூலக்கூறுகளின் அதிர்வு அல்லது இயக்கம் அதிகரிப்பதால் அவற்றிற்கிடையே இடைவெளி அதிகரிக்கிறது. இதனால் பொருள்கள் விரிவடைகின்றன.

திடநிலை –யிலிருந்து திரவநிலைக்கும், திரவநிலையிலிருந்து வாயுநிலைக்கும் நிலைமாற்றமடைகின்றன.



நீர் உயரமான இடத்திலிருந்து தாழ்வான இடத்தை நோக்கிப் பாய்வதைப் போல, வெப்பஆற்றல் வெப்பநிலை அதிகமான பொருளிலிருந்து, வெப்பநிலை குறைவான பொருளுக்கு கடத்தப்படுகிறது.






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 11 11-08-2018 10:17:02

❖ கம்பி சிறிதுநேரம் சூடாக்கப்பட்டதும் மின்விளக்கு ஒளிர்கிறதா?

___________________________________

___________________________________

❖ அப்படியாயின், கம்பியானது சூடாக்கப்பட்ட பின் எவ்வாறு நாணயத்தைத் தொடுகிறது?

___________________________________

___________________________________

❖ மெழுகுவர்த்தி அணைந்து சிறிது நேரத்திற்குப்பின் ஏன் மின்விளக்கு அணைகிறது?

___________________________________

___________________________________

❖ மிதிவண்டிச் சக்கரக்கம்பியைச் சூடாக்கும் பொழுதும், குளிரச் செய்யும் பொழுதும் கம்பியில் நீளத்தில் என்ன மாற்றம் நிகழ்கிறது?

___________________________________

**செயல்பாடு 6: பரும விரிவு**

ஓர் இரும்புக்குண்டு மற்றும் அது மிகச்சரியாக உள்ளே நுழையும் அளவில் ஓர் இரும்புவளையம் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும்.



❖ தற்போது இரும்புக்குண்டை நன்கு சூடாக்கவும். சூடாக்கியபின் அது இரும்புவளையத்தினுள் நுழைகிறதா?

☐ நுழைகிறது

☐ நுழையவில்லை

❖ இரும்புக் குண்டை நன்கு குளிரச்செய்து அது இரும்பு வளையத்தினுள் நுழைகிறதா? எனச் சரிபார்க்கவும்.

☐ நுழைகிறது

☐ நுழையவில்லை

திடப்பொருள்கள் வெப்பத்தினால் விரிவடைகின்றன. வெப்பநிலை குறைந்ததும் சுருங்கி, மறுபடியும் பழைய நிலைக்கே திரும்புகின்றன.

## 1.9 வெப்ப விரிவின் பயன்கள்

**மரச்சக்கரத்தின் மீது இரும்பு வளையத்தைப் பொறுத்துதல்**

மரச்சக்கரத்தின் விட்டமானது இரும்பு வளையத்தின் விட்டத்தைவிட சற்றுப் பெரியதாக இருக்கும். எனவே இரும்புவளையத்தை மரச்சக்கரத்தின் மீது மிக எளிதாகப் பொருத்த இயலாது.




இரும்புவளையத்தை முதலில் உயர்ந்த வெப்பநிலைக்கு வெப்பப்படுத்த வேண்டும். வெப்பத்தினால் இரும்பு வளையம் விரிவடையும். இப்பொழுது எளிதாக மரச்சக்கரத்தின் மீது இரும்பு வளையத்தைப் பொருத்த முடியும். பிறகு இரும்பு வளையத்தைக் குளிர்ந்தநீர் கொண்டு உடனடியாக குளிர்விக்கும் பொழுது, இரும்புவளையம் உடனடியாகச் சுருங்குகிறது. எனவே இரும்பு



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 12 11-08-2018 10:17:02

வளையமானது மரச்சக்கரத்தின் மீது, மிக இறுக்கமாகப் பொருந்துகிறது.

### கடையாணி

இரண்டு உலோகத்தகடுகளை ஒன்றிணைக்க கடையாணி பயன்படுகின்றது. நன்கு வெப்பப்படுத்தப்பட்ட கடையாணியை தகடுகளின் துளை வழியே பொருத்தி கடையாணியின் அடிப்பக்க முனையைச் சுத்தியலைக் கொண்டு அடித்து மறுபுறம் ஒரு புதிய தலைப்பகுதி உருவாக்கப்படுகிறது. கடையாணி குளிரும்பொழுது சுருங்குவதால், அது இரண்டு தகடுகளையும் இறுக்கமாகப் பிடித்துக் கொள்கின்றது.



**1** கடையாணி செந்நிறமாகும் வரை வெப்பப்படுத்தப்பட்டு, உரிய இடத்தில் பொருத்தப்படுகிறது.

**2** இருபுறமும் சுத்தியால் அடிக்கப்பட்ட பின்னர் கடையாணி குளிர்விக்கப்படுகிறது.

**3** வெப்பம் குறையும்போது, கடையாணி சுருங்குவதால், இரு இரும்புத் தகடுகளையும் இறுகப் பிடித்துக் கொள்கிறது.




## 1.10 வெப்ப விரிவு – உதாரணங்கள்:

### கீழ்காண்பவைகளுக்குக் காரணம் தருக.

1. இரயில் தண்டவாளங்கள் அமைக்கும் பொழுது, அதன் இரு இரும்புப் பாளங்களுக்கிடையே ஏன் இடைவெளி விடப்படுகின்றது?

____________________

____________________

____________________



2. மேம்பாலங்களிலுள்ள கற்காரைப் பாளங்களுக்கு இடையில் ஏன் இடைவெளி விடப்படுகிறது?



____________________

____________________

____________________

### தடிமனான கண்ணாடி குவளை விரிசல்:

கண்ணாடி வெப்பத்தை அரிதிற் கடத்தும் பொருளாகும். சூடான நீரினை கண்ணாடிக் குவளையில் ஊற்றும்பொழுது, முகவையின் உட்புறம் உடனடியாக விரிவடையும், அதேநேரத்தில் முகவையின் வெளிப்புறம் சுற்றுப்புறத்தின் வெப்பநிலையில் இருப்பதால் விரிவடைவதில்லை. எனவே முகவையானது சமமாக விரிவடையாத காரணத்தால் விரிசல் ஏற்படுகிறது.



**உங்களுக்குத் தெரியுமா?**

சமையலறை மற்றும் ஆய்வகங்களில் பயன்படுத்தும் கண்ணாடிப் பொருள்கள் போரோசிலிகேட் கண்ணாடியால் (பைரக்ஸ்



கண்ணாடி) உருவாக்கப் படுகின்றன. இந்த கண்ணாடிப் பொருள்களை வெப்பப்படுத்தும் பொழுது, மிகமிகக் குறைவாகவே விரிவடைகின்றன. எனவே இவற்றில் விரிசல் எற்படுவதில்லை.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 13 11-08-2018 10:17:03

### மின்சாரக் கம்பிகள்:

மின்கம்பங்களுக்கு இடையே உள்ள மின்சாரக் கம்பியானது கோடைக்காலங்களில் தொய்வாகவும், குளிர்காலங்களில் நேராகவும் இருக்கின்றது. இதற்கான காரணம் வெப்பம் அதிகமாக உள்ளபொழுது, உலோகங்கள்




விரிவடைகின்றன. குளிர்காலங்களில் உலோகங்கள் சுருங்குகின்றன. எனவே பருவநிலைக்கு ஏற்ப மின்சாரக்கம்பியின் நீளத்தில் ஏற்படும் மாற்றத்தைக் கணக்கிட்டு மின்கம்பங்களில் மின்சாரக்கம்பியை சற்று தொய்வாகப் பொருத்துகின்றனர்.

❖ அருகிலுள்ள புகைப்படங்களில் ஒரு பாலத்தின் இணைப்புப்பகுதி கோடை மற்றும் குளிர்காலங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

A மற்றும் B ஆகியவற்றுள் எது எந்தக் காலநிலையில் (கோடைகாலம்/ குளிர்காலம்) எடுக்கப்பட்ட புகைப்படம்? அதை நீ எவ்வாறு அறிந்தாய் எனக் கூறு.




______________________________

______________________________

______________________________

## 1.11 கணக்கீடுகள்

1. நான் ஒரு முகவையில் ஒரு லிட்டர் நீரினை எரிவாயு அடுப்பில் வைத்து வெப்பப்படுத்தும் போது அது ஐந்து நிமிடங்களில் கொதிநிலையை அடைந்தது. எனது நண்பன் அரை லிட்டர் நீரினை மின்சார அடுப்பில் வைத்து வெப்பப்படுத்தினான். அதுவும் சரியாக ஐந்து நிமிடங்களில் கொதிநிலையை அடைந்தது.

   எது ஐந்து நிமிடங்களில் அதிக வெப்பத்தைத் தந்தது?

   அ) எரிவாயு அடுப்பு ஆ) மின்சார அடுப்பு

   எத்தனை மடங்கு அதிகம் என்று கூற முடியுமா?

2. ஒரு லிட்டர் நீரை 30°C இல் இருந்து 31°C க்கு மாற்றத் தேவைப்படும் வெப்ப ஆற்றல் ஒரு கலோரி என்றால், ஒரு லிட்டர் நீரை 30°C இல் இருந்து 35°C க்கு மாற்றத் தேவைப்படும் வெப்ப ஆற்றல் எவ்வளவு?

### நினைவில் கொள்க

❖ நமது முதன்மை வெப்ப ஆற்றல் மூலம் சூரியனாகும். எரிதல், உராய்வு மற்றும் மின்சாரம் போன்றவற்றின் மூலமும் நாம் வெப்ப ஆற்றலைப் பெறுகிறோம்.

❖ பொருட்களை வெப்பப்படுத்தும்போது அதில் உள்ள மூலக்கூறுகளில் இந்த அதிர்வும், இயக்கமும் அதிகரிக்கின்றன. அதோடு பொருளின் வெப்பநிலையும் உயர்கிறது.

❖ ஒரு பொருளில் அடங்கியுள்ள மூலக்கூறுகளின் இயக்க ஆற்றலே வெப்பம் என அழைக்கப்படுகிறது.

❖ வெப்பத்தின் SI அலகு ஜூல் ஆகும்.

❖ ஒரு பொருள் எந்த அளவு வெப்பமாக அல்லது குளிர்ச்சியாக உள்ளது என்பதனை அளவிடும் அளவுக்கு வெப்பநிலை என்று பெயர்.

❖ வெப்பநிலையின் SI அலகு கெல்வின் ஆகும்.

❖ வெவ்வேறு வெப்பநிலையில் உள்ள இருபொருட்கள் ஒன்றுடன் ஒன்று தொடும்பொழுது வெப்பமானது எந்தத் திசையில் பாய்கிறது என்பதனை அவற்றின் வெப்பநிலை நிர்ணயிக்கிறது.

❖ ஒரு பொருள் மற்றொன்றின் வெப்பநிலையை பாதிக்குமானால் அவை வெப்பத் தொடர்பில் உள்ளன எனலாம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 14 11-08-2018 10:17:03

❖ வெப்பத்தொடர்பில் உள்ள இருபொருள்களின் வெப்பநிலையும் சமமாக இருந்தால் அவை வெப்பச்சமநிலையில் உள்ளன எனலாம்.

❖ பொருள்கள் வெப்பப்படுத்தும்பொழுது விரிவடைந்து குளிர்விக்கும் பொழுது சுருக்கமடைகின்றன. ஒரு பொருளை வெப்பப்படுத்தும்பொழுது அது விரிவடைவதை அப்பொருளின் வெப்ப விரிவடைதல் என்கிறோம்.

❖ ஒரு திண்மப் பொருளுக்கு குறிப்பிட்ட வடிவம் உள்ளது. எனவே அதைச் சூடுபடுத்தும்பொழுது அது எல்லா பக்கங்களிலும் விரிவடைகிறது. அதாவது அதன் நீளம், பரப்பளவு, கனஅளவு போன்றவை விரிவடைகின்றன.






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 15 11-08-2018 10:17:04

## இணையச்செயல்பாடு

### வெப்பம்

வெப்ப ஆற்றலை அறிவோமா!




படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி Thermal Energy Transfer பக்கத்திற்குச் செல்க.

படி 2: திரையின் இடப்பக்கம் தோன்றும் = என்பதைச் சொடுக்கியதும் பட்டியல் தோன்றும். அதில் தேவைப்படும் தெரிவைத் தேர்வு செய்து கொள்ளவும்.

படி 3: இப்போது திரையில் தோன்றும் ப்ளாஷ் காணொளியினை இயக்கி, காட்சிகளை உற்று நோக்குக.

படி 4: வெப்பப் பரிமாற்றத்தை அறிய, பட்டியலில் உள்ள 'Example' என்னும் தெரிவுகளைத் தேர்வு செய்து, அதில் வரும் ப்ளாஷ் செயல்பாடுகளை இயக்கி வெப்ப ஆற்றல் கடத்தப்படுவதை அறிக. Menu வில் உள்ள பிற தலைப்புகளையும் ஆராய்ந்து பார்க்கவும்.

படி 1




படி 2




படி 3




படி 4




**உரலி:**

http://d3tt741pwxqwm0.cloudfront.net/WGBH/conv16/conv16-int-thermalenergy/index.html#/intro

B440_SCI_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 16 11-08-2018 10:17:05

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. ஒரு பொருளை வெப்பப்படுத்தும்பொழுது, அதிலுள்ள மூலக்கூறுகள்

   அ. வேகமாக நகரத் தொடங்கும்

   ஆ. ஆற்றலை இழக்கும்

   இ. கடினமாக மாறும்

   ஈ. லேசாக மாறும்

2. வெப்பத்தின் அலகு

   அ. நியூட்டன்     ஆ. ஜூல்

   இ. வோல்ட்     ஈ. செல்சியஸ்

3. 30°C வெப்பநிலையில் உள்ள ஒரு லிட்டர் நீரும், 50°C வெப்பநிலையில் உள்ள ஒரு லிட்டர் நீரும் ஒன்றாகச் சேரும்பொழுது, உருவாகும் நீரின் வெப்பநிலை

   அ. 80°C

   ஆ. 50°C க்கு மேல் 80°C க்குள்

   இ. 20°C

   ஈ. ஏறக்குறைய 40°C

4. 50°C வெப்பநிலையில் உள்ள ஓர் இரும்புக் குண்டினை, 50°C வெப்பநிலையில் உள்ள நீர் நிரம்பிய முகவையில் போடும்பொழுது வெப்பமானது,

   அ. இரும்புக்குண்டிலிருந்து நீருக்குச் செல்லும்

   ஆ. இரும்புக்குண்டிலிருந்து நீருக்கோ (அல்லது) நீரிலிருந்து இரும்புக் குண்டிற்கோ மாறாது

   இ. நீரிலிருந்து இரும்புக்குண்டிற்குச் செல்லும்.

   ஈ. இரண்டின் வெப்பநிலையும் உயரும்.

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. வெப்பம் ____________ பொருளிலிருந்து ____________ பொருளுக்கு பரவும்.

2. பொருளின் சூடான நிலையானது ________ கொண்டு கணக்கிடப்படுகிறது.

3. வெப்பநிலையின் SI அலகு ____________.

4. வெப்பப்படுத்தும்பொழுது திடப்பொருள் ____________ மற்றும் குளிர்விக்கும் பொழுது ____________.

5. இரண்டு பொருள்களுக்குக்கிடையே வெப்பப்பரிமாற்றம் இல்லையெனில் அவை இரண்டும் ____________ நிலையில் உள்ளன.

### III. சரியா (அ) தவறா எனக் கூறுக. தவறாக இருப்பின் சரியாக எழுதவும்

1. வெப்பம் என்பது ஒருவகை ஆற்றல். இது வெப்பநிலை அதிகமான பொருளிலிருந்து வெப்பநிலை குறைவான பொருளிற்கு பரவும்.

2. நீரிலிருந்து வெப்பம் வெளியேறும் பொழுது, நீராவி உருவாகும்.

3. வெப்பவிரிவு என்பது பொதுவாக தீங்கானது.

4. போரோசிலிகேட் கண்ணாடியானது வெப்பப்படுத்தும்பொழுது அதிகம் விரிவடையாது.

5. வெப்பம் மற்றும் வெப்பநிலை இரண்டும் ஒரே அலகினைப் பெற்றுள்ளன.

### IV. கீழ்க்கண்டவற்றிக்கு காரணம் தருக

1. கொதிக்கவைத்த நீரை சாதாரண கண்ணாடி முகவையில் ஊற்றும்பொழுது, விரிசல் ஏற்படுகிறது. ஆனால் போரோசில் கண்ணாடி முகவையில் ஊற்றும்பொழுது விரிசல் ஏற்படுவதில்லை.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 17 11-08-2018 10:17:06

2. மின்கம்பங்களில் உள்ள மின்கம்பியானது கோடைக்காலங்களில் தொய்வாகவும், குளிர் காலங்களில் நேராகவும் இருக்கும்.

3. இரு உலோகத் தகடுகளைப் பிணைப்பதற்காக அறையப்படும் முன் கடையாணி வெப்பப்படுத்தப்படுகிறது.

## V பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1 | வெப்பம் | – | $0^oC$ |
| 2 | வெப்பநிலை | – | $100^oC$ |
| 3 | வெப்பச் சமநிலை | – | கெல்வின் |
| 4 | பனிக்கட்டி | – | வெப்பம் பரிமாற்றம் இல்லை |
| 5 | கொதிநீர் | – | ஜூல் |

## VI. ஒப்புமை தருக

1. வெப்பம் : ஜூல் :: வெப்பநிலை: ________

2. பனிக்கட்டி : $0^oC$ :: கொதி நீர் : ________

3. மூலக்கூறுகளின் மொத்த இயக்க ஆற்றல் : வெப்பம் :: சராசரி இயக்க ஆற்றல் : ________

## VII. மிகக் குறுகிய விடையளி

1. வீட்டில் எந்தெந்த மின்சார சாதனங்களிலிருந்து நாம் வெப்பத்தைப் பெறுகிறோம் எனப் பட்டியலிடுக.

2. வெப்பநிலை என்றால் என்ன?

3. வெப்பவிரிவு என்றால் என்ன?

4. வெப்பச்சமநிலை பற்றி நீ அறிந்ததைக் கூறுக.

## VIII. குறுகிய விடையளி

1. வெப்பத்தினால் திடப் பொருள்களின் மூலக்கூறுகளில் ஏற்படும் மாற்றங்களை விவரி.

2. வெப்பம் மற்றும் வெப்பநிலை வேறுபடுத்துக.

## IX. விரிவான விடையளி

1. வெப்பவிரிவைத் தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.

## X. உயர் சிந்தனைத்திறன் வினாக்களுக்கு விடையளி

1. குளிர்கால இரவில் நீ உனது படுக்கை அறையில் படுத்துள்ளாய். அப்போது அறையின் ஜன்னல் கதவு தற்செயலாக திறந்துவிட்டால் குளிரினால் நீ உறக்கம் கலைந்து சிரமமாக உணர்கிறாய். இதற்கு என்ன காரணம்? அறையில் உள்ள வெப்பம் வெளியே கடத்தப்படுவதால் அல்லது வெளியே உள்ள குளிர்ச்சி அறைக்குள்ளே கடத்தப்படுவதால். இரண்டில் உனது விடைக்கான காரணத்தினைத் தருக.

2. ஒருவேளை நமது உடல் வெப்பநிலை தனது இயல்பான வெப்பநிலையைவிடக் குறைந்து விடுவதாகக் கருதுவோம். அப்பொழுது நமது உடலானது சுற்றுச்சூழலை முன்பிருந்ததை விட எவ்வாறு உணரும்?

3. துளையுள்ள வட்டத்தகட்டினை வெப்பப்படுத்தும்பொழுது, தகட்டின் துளையின் விட்டத்தில் என்ன மாற்றம் எதிர்பார்க்கிறாய்? வெப்பத்தின் விளைவால் துகள்களுக்கிடையேயான இடைவெளி அதிகரிக்கும் என்பதை நினைவில் கொள்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_1.indd 18 11-08-2018 10:17:06



அலகு

# 2 மின்னியல்

97VSTT




## கற்றல் நோக்கங்கள்

- ❖ மின்சாரத்தின் மூலங்களை அறிந்து கொள்ளுதல்
- ❖ மின்சாரத்தால் இயங்கும் பொருள்களை அறிந்து கொள்ளுதல்
- ❖ மின்கலன்களின் பல்வேறு வகைகளை அறிந்து, அவற்றின் பயன்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல்
- ❖ வெவ்வேறு பயன்பாடுகளுக்கு உகந்த மின்கலன்களைக் கண்டறிந்து பயன்படுத்துதல்
- ❖ மின்சாதனங்களின் குறியீடுகளை அறிந்து அவற்றை வெவ்வேறு மின்சுற்றுகளில் பயன்படுத்துதல்
- ❖ மின்கடத்திகள் மற்றும் அரிதிற் கடத்திகளை இனங்காணுதல்
- ❖ எளிய பொருள்களைக் கொண்டு மின்கலன்களைத் தாமாகவே உருவாக்கும் திறன் பெறுதல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## அறிமுகம்

நம் அன்றாட வாழ்வில் நாம் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறோம். நமக்கு இம்மின்சாரம் எங்கிருந்து கிடைக்கிறது, அது எவ்வாறு வேலை செய்கிறதென என்றாவது வியந்திருக்கிறோமா? மின்சாரம் இல்லாத ஒரு நாளை நம்மால் கற்பனை செய்து பார்க்க இயலுமா? உன் தாத்தாவிடம் வினவினால் மின்சாரம் கண்டுபிடிக்கப்படாத காலகட்டத்தை, நீ அறிந்து கொள்ளலாம். நம் முன்னோர்கள் வெளிச்சத்திற்காக இரவில் எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தினார்கள். மேலும் விறகு அல்லது கரியை எரிபொருளாகப் பயன்படுத்தி, உணவு சமைத்தனர். இன்றோ! மின்சாரத்தின் உபயோகத்தால் நமது வேலைகள் எல்லாம் சுலபமாயிருக்கின்றன. உலகமே நம் கையில் வந்துள்ளது. மின்சாரத்தால் இயங்கும் மின்சாதனங்கள் எவை? மின்சாரத்தைத் தங்களின் வழியே கடத்தும் பொருள்கள் எவை? மின்சுற்று என்றால் என்ன? மின்கலன் மற்றும் மின்கல அடுக்கு என்றால் என்ன? வாருங்கள் இப்பாடத்தினுள் மின்சாரம் பற்றி விரிவாகக் காண்போம்.

**செயல்பாடு 1:** உங்களது வீட்டில் உள்ள மின்சாதனங்களைப் பட்டியலிடுக

______________________________

______________________________

______________________________

______________________________

## 2.1 மின் மூலங்கள்

செல்வனும், செல்வியும் இரட்டையர்கள். அவர்கள் ஆறாம் வகுப்பு பயில்கின்றனர். கோடை விடுமுறையைக் கழிக்க, தங்கள் தாத்தாவின் கிராமத்துக்குச் சென்றனர். அங்கு அவர்களின் தாத்தா மாலை ஆறு மணிக்கு மின்விளக்கு போட்டார். அதை கவனித்துக்கொண்டிருந்த செல்வன் தனது தாத்தாவிடம் மின்பொத்தனை அழுத்தியவுடன் எவ்வாறு மின்விளக்கு ஒளிர்கிறது எனக்கேட்டான். தாத்தா அவனை அருகிலுள்ள மின்வாரிய அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு நடைபெற்ற உரையாடலைக் கீழே காண்போம்.

**செல்வன்** : ஐயா, எவ்வாறு நாம் மின் பொத்தானை அழுத்தும்போது மின்விளக்கு ஒளிர்கிறது?

**பொறியாளர்** : மின்சாரம் தான் காரணம்.

**செல்வன்** : நமக்கு மின்சாரம் எங்கிருந்து கிடைக்கிறது

**பொறியாளர்** : நாம் அனல்மின்நிலையம், நீர்மின்நிலையம், கடலலை, காற்றாலை மற்றும் சூரியஒளி போன்றவற்றிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம்.

**செல்வன்**: இந்நிலையங்கள் எல்லா இடங்களிலும் உள்ளனவா, ஐயா?

**பொறியாளர்** : இல்லை. இடத்தின் தன்மையைப் பொறுத்தே நாம் மின்நிலையங்களை அமைக்கிறோம். எடுத்துக்காட்டாக, தமிழகத்தின் நெய்வேலியில் அதிக அளவு பழுப்பு நிலக்கரி கிடைப்பதால் அங்கு அனல் மின்நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

**செல்வன்** : ஆம். நான் திருநெல்வேலிக்கு அருகில் காற்றாலைகளைப் பார்த்திருக்கிறேன். ஏனெனில் அங்கு மலைப்பகுதியில் காற்று தொடர்ந்து வீசும். தங்களின் மேலான தகவலுக்கு நன்றி ஐயா!

**தாத்தா** : (வீட்டிற்குச் செல்லும் வழியில்) இம்மூலங்களிலிருந்து மட்டும்தான் மின்சாரம் கிடைக்கிறது என நீ நினைக்கிறாயா?

**செல்வன்** : (வீட்டில் நுழையும்பொழுது சுவர்க்கடிகாரத்தைப் பார்த்து) தாத்தா! அக்கடிகாரத்தைப் பாருங்கள். அது எவ்வாறு இயங்குகிறது?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 20 11-08-2018 10:23:06

**தாத்தா** : ஆம். அது இயங்குவதற்கு மின்னாற்றல் தேவைப்படுகிறது. மேற்குறிப்பிட்ட மூலங்களைத்தவிர, நாம் மின்னாற்றலை மின்கலன்கள் மற்றும் மின்கல அடுக்குகளிலுருந்தும் பெறுகிறோம்.

**செல்வன்** : ஆம், தாத்தா, நான் இன்று தெரிந்து கொண்டவற்றை செல்வியிடம் விவாதிக்கப் போகிறேன்.




மேலே கொடுக்கப்பட்டுள்ள உரையாடலில் இருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள். **மின்சாரத்தை உருவாக்கும் மூலங்கள் மின் மூலங்கள் எனப்படும்.** பலவகையான மின் மூலங்களிலிருந்து மின்சாரம் பெறப்படுகிறது.

தமிழகத்தின் முக்கிய மின்நிலையங்கள்:

**அனல்மின் நிலையங்கள்** (கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி, திருவள்ளூர் மாவட்டத்தில் எண்ணூர்), **நீர்மின் நிலையங்கள்** (சேலம் மாவட்டத்தில் மேட்டூர், திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம்), **அணுமின்நிலையங்கள்** (காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்பாக்கம், திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளம்), **காற்றாலைகள்** (கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் கயத்தாறு). இவற்றைத் தவிரப் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சூரியஒளித் தகடுகள் மூலமும் பரவலாக மின்சாரம் பெறப்படுகிறது.

மின் உற்பத்தி நிலையங்கள் எவ்வாறு மின் உற்பத்தி செய்கின்றன? எனச் சுருக்கமாகக் காண்போம்.

### 1. அனல்மின் நிலையங்கள்

அனல்மின் நிலையங்களில் நிலக்கரி, டீசல் அல்லது வாயுக்களை எரிப்பதன் மூலம் கிடைக்கும் வெப்ப ஆற்றலால் நீராவி



உருவாக்கப்படுகிறது. இந்த நீராவியால் டர்பைன் இயங்குகிறது. டர்பைன் இயங்கும் பொழுது இரு மின்காந்தங்களுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ள கம்பிச்சுருள் சுழல்வதால் உருவாகும் மின்காந்தத் தூண்டலால் மின்சாரம் உருவாக்கப்படுகிறது. இங்கு வெப்ப ஆற்றலானது மின்னாற்றலாக மாற்றப்படுகிறது.

### 2. நீர்மின் நிலையங்கள்

நீர்மின் நிலையங்களில் அணைக் கட்டிலிருந்து பாயும் நீரால் டர்பைன் சுழற்றப்பட்டு





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 21 11-08-2018 10:23:07

மின்சாரம் உருவாக்கப்படுகிறது. இங்கு இயக்க ஆற்றல் மின்னாற்றலாக மாற்றப்படுகிறது. நீர்மின் நிலையங்கள் அதிக காலம் இயங்கக்கூடியவை மற்றும் சிக்கனமானவை.

### 3. அணுமின் நிலையங்கள்



அணுமின் நிலையங்களில் அணுக்கரு ஆற்றலைக்கொண்டு நீரானது கொதிக்க வைக்கப்படுகிறது. இதனால் உருவாகும் நீராவியைக் கொண்டு டர்பைன் இயக்கப்படுகிறது. டர்பைனின் இயக்கத்தால் மின்சாரம் உருவாக்கப்படுகிறது. இங்கு அணுக்கரு ஆற்றலானது இயக்க ஆற்றலாகவும் பின் மின்னாற்றலாகவும் மாற்றப்படுகிறது.

### 4. காற்றாலை நிலையங்கள்



காற்றாலைகளில், காற்றின் ஆற்றலால் டர்பைன் சுழற்றப்படுகிறது. இதன்மூலம் மின்சாரம் உருவாகிறது. இங்கு இயக்க ஆற்றல் மின்னாற்றலாக மாற்றப்படுகிறது.

## 2.2 மின்கலன்

மின்கலன் என்பது வேதியாற்றலை மின்னாற்றலாக மாற்றும் ஒரு கருவியாகும். நேர் மற்றும் எதிர்மின் அயனிகளைத் தாக்கூடிய வேதிக்கரைசல் மின்பகுளியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதில் இரு வேறுபட்ட உலோகத் தகடுகள் மின்முனைகளாகப் பொருத்தப்பட்டு மின்கலன் உருவாக்கப்படுகிறது. வேதிவினைகள் மூலம் ஒரு மின் முனை நேர்மின்வாயாகவும், மற்ற மின் முனை எதிர் மின்வாயாகவும் செயல்பட்டு மின்சாரத்தைத் தருகிறது.

தொடர்ந்து மின்னோட்டத்தை வழங்குவதைப் பொறுத்து மின்கலன்கள் முதன்மை மின்கலன்கள் மற்றும் துணை மின்கலன்கள் என இரு வகைப்படும்.

### முதன்மை மின்கலன்கள்

இவ்வகை மின்கலன்களை மீண்டும் மின்னேற்றம் செய்ய இயலாது. எனவே, இவற்றை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த இயலும். பொதுவாக முதன்மை மின்கலன்கள் சிறிய உருவ அளவுகளில் மட்டுமே தயாரிக்கப்படுகின்றன

எ.கா: சுவர்க் கடிகாரம், கைக் கடிகாரம் மற்றும் ரோபோ பொம்மைகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மின்கலன்கள்.




### துணை மின்கலன்கள்

துணை மின்கலன் என்பது பலமுறை மின்னேற்றம் செய்து தொடர்ந்து பயன் படுத்தக்கூடியது. ஒருமுறை பயன்படுத்திய



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 22 11-08-2018 10:23:08

பின்பு, மீண்டும் மீண்டும் மின்னேற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து மின்னோட்டம் உருவாக்கப்படுகிறது. துணைமின்கலன்களின் உருவளவு அதன் பயன்பாட்டைப் பொறுத்து சிறியதாக அல்லது பெரியதாக இருக்கும். கைபேசியில் பயன்படுத்தப்படும் துணைமின்கலனின் அளவு உள்ளங்கையளவு சிறியதாகவும், கனரக வாகனங்களான மகிழுந்து மற்றும் பேருந்து போன்றவற்றில் பயன்படுத்தப்படும் துணைமின்கலன்கள் பெரியதாகவும் கனமானவையாகவும் இருக்கும்.

எ.கா: கைபேசிகள், மடிக்கணினிகள், அவசர கால விளக்குகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மின்கலன்கள்.





### மின்கல அடுக்கு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலன்களை இணைத்து, மின்கல அடுக்கு உருவாக்கப்படுகிறது. மின்கல அடுக்கு என்பது பல மின்கலன்களின் தொகுப்பாகும்.



மின்கல அடுக்கு

**செயல்பாடு 2:** கீழே கொடுக்கப்பட்டவற்றுள் முதன்மை மின்கலன்கள் அல்லது துணை மின்கலன்களை பயன்படுத்தும் பொருள்களைக் கண்டறிந்து வகைப்படுத்தவும். கட்டத்துக்குள் முதன்மை மின்கலத்திற்கு 'முதன்மை' எனவும் துணை மின்கலத்திற்கு 'துணை' எனவும் குறிப்பிடவும்.



**செயல்பாடு 3:** ஒரு டார்ச் விளக்கு அல்லது கடிகாரத்தில் பயன்படுத்தப்படும் உலர்மின்கலத்தை எடுத்துக்கொள்க. அதன் மேற்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் படித்து, கீழ்க்கண்டவற்றை குறிக்கவும்.

1. நேர் (+) மற்றும் எதிர்மின் (–) முனைகள் எங்கு குறிக்கப்பட்டுள்ளன.
2. மின்னழுத்தத்தின் அளவு.

நீவிர் பார்க்கக்கூடிய அனைத்து மின்கலன்களின் குறியீடுகளையும் மின்னழுத்தத்தின் அளவையும் குறித்துக் கொள்க.

**எச்சரிக்கை**



மின்சாரம் தொடர்பான சோதனைகள் அனைத்தும் டார்ச்விளக்கு அல்லது வானொலிப் பெட்டியில் பயன்படுத்தப்படும் மின்கலன்களைக் கொண்டே செய்யப்பட வேண்டும். எந்த சூழ்நிலையிலும் உன் வீட்டிலோ அல்லது பண்ணையிலோ அல்லது பள்ளியிலோ உள்ள மின்சாரத்தைக் கொண்டு, எந்த சோதனையையும் செய்து பார்க்கக்கூடாது. வீட்டிலுள்ள மின்சாரத்துடன் விளையாடுவது மிகவும் ஆபத்தானது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 23 11-08-2018 10:23:12






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 24 11-08-2018 10:23:13

## 2.3 மின்சுற்றுகள்

தாத்தா செல்வியிடம் டார்ச் விளக்கு எடுத்து வரச் சொல்கிறார். டார்ச் விளக்கு எடுத்து வரும்பொழுது கீழேவிழுந்து மின்கலன்கள் வெளியே வந்துவிட்டன. மின்கலன்களை உள்ளே வைத்து இயக்கியும் டார்ச் விளக்கு ஒளிரவில்லை. (படம்–1)



படம்: 1

டார்ச் விளக்கு பழுதடைந்துவிட்டதாகக் கருதி செல்வி அழத் தொடங்கினாள். அங்கு வந்த அவளது மாமா, மின்கலன்களை சரியாகப் பொருத்தி டார்ச் விளக்கை ஒளிரச் செய்தார். (படம்–2)



படம்: 2

செல்வியின் முகமும் ஒளிர்ந்தது. மாமா காரணத்தைக் கூறி மின்சுற்றுகள் குறித்து அவளுக்கு விளக்கினார்.

### டார்ச் விளக்கின் உட்புற அமைப்பிற்கான படம்




**மின்சுற்று** என்பது மின்கலத்தின் நேர்முனையிலிருந்து எதிர்முனைக்கு மின்னூட்டம் செல்லும் தொடர்ச்சியான மூடிய பாதையாகும்.

மின்சுற்று என்பது பொதுவாகப் பின்வருவனவற்றால் உருவாக்கப்படும்.

அ) **மின்கலன் (அ) மின்கல அடுக்கு** – மின்னோட்டத்தைத் தரும் மூலம்.

ஆ) **இணைப்புக்கம்பிகள்** – மின்னோட்டத்தை எடுத்துச் செல்ல.

இ) **மின்விளக்கு** – போன்ற மின்னாற்றலைப் பயன்படுத்தும் அமைப்பு.

ஈ) **சாவி** – மின்னோட்டத்தைத் தேவையானபோது செலுத்தவோ, நிறுத்தவோ பயன்படும் அமைப்பு. இது மின்சுற்றின் எப்பகுதியிலும் இணைக்கப்படலாம்.

### அ. திறந்த மின்சுற்று




ஒரு மின் சுற்றில் சாவியானது திறந்த நிலையில் (OFF) இருந்தால் அந்த மின் சுற்றில் மின்னோட்டம் செல்லாது. அத்தகைய மின் சுற்று திறந்த மின் சுற்று எனப்படும். இதில் மின் விளக்கு ஒளிராது.

### ஆ. மூடிய மின்சுற்று

ஒரு மின் சுற்றில் சாவியானது மூடிய (ON) நிலையில் இருப்பின் அந்தச் சுற்றில்






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 25 11-08-2018 10:23:13

மின்னோட்டம் பாயும். எனவே மின்விளக்கு ஒளிரும். இது மூடிய மின்சுற்று எனப்படும். உனக்குக் கிடைக்கும் எளிய பொருள்களைக் கொண்டு உன்னால் ஒரு சாவியை (switch) உருவாக்க முயற்சி செய்.

### மின்சுற்றின் வகைகள்

1. எளிய மின்சுற்று
2. தொடரிணைப்பு
3. பக்க இணைப்பு

985NVG

### 1. எளிய மின்சுற்று

ஒரு சாவி, ஒரு மின்கலன் மற்றும் இணைப்புக் கம்பி கொண்டு உருவாக்கப்படும் மின்சுற்று எளிய மின்சுற்று எனப்படும்.




### 2. தொடர் இணைப்பு மின்சுற்று




ஒன்றுக்கு மேற்பட்ட மின் விளக்குகள் தொடராக இருக்குமாறு சாவி, மின்கலன் மற்றும் இணைப்புக் கம்பிகள் மூலம் இணைக்கப்படும் மின்சுற்று தொடர் இணைப்பு மின்சுற்று எனப்படும். இந்த மின்சுற்றில் ஏதேனும் ஒரு மின்விளக்கு பழுதடைந்தாலும் மின்சுற்று தொடரில் உள்ள அனைத்து விளக்குகளும் அணைந்துவிடும்.

### 3. பக்க இணைப்பு மின்சுற்று

ஒன்றுக்கு மேற்பட்ட மின் விளக்குகள் இணையாக இருக்குமாறு சாவிகள், மின்கலன் மற்றும் இணைப்பு கம்பிகள் கொண்டு உருவாக்கப்படுவது பக்க இணைப்பு மின்சுற்று எனப்படும். இந்த மின்சுற்றில் ஏதேனும் ஒரு மின்விளக்கு பழுதடைந்தாலும், அந்த இணைப்பில் மற்ற விளக்குகள் எரியும். எனவே, வீடுகளில் பக்க இணைப்பு முறையே பின்பற்றப்படுகிறது.




உங்களுக்குத் தெரியுமா?

ஈல் என்னும் ஒரு வகை மீன் மின்சாரத்தை உருவாக்கும் திறன் கொண்டது. இவை மின்னதிர்வை வெளியிட்டு எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், தங்களது உணவைப் பிடிக்கவும் செய்கின்றன.



### மேலும் தெரிந்து கொள்வோம்



அம்மீட்டர் என்பது ஒரு மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்தின் அளவை அளவிடும் கருவியாகும். இக்கருவியானது சுற்றில் தொடரிணைப்பில் இணைக்கப்பட வேண்டும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 26 11-08-2018 10:23:16

### மின் பொருட்களின் குறியீடுகளின் பட்டியல்

மின்சுற்றுகளில் நாம் மின் சாதனங்களின் படங்களைக் குறிப்பிட்டோம். மிகப்பெரிய மின்சுற்றுகளைப் படங்களால் குறிப்பிடுவது கடினம். எனவே, அவற்றைக் குறியீடுகளால் குறிப்பிடுகிறோம். மின்பொருள்களின் குறியீடுகளினால், மிகப் பெரிய மின்சுற்றுகளையும் மிக எளிதாக நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

| வ. எண் | மின்சாதனம் | படம் | குறியீடு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | மின்கலன் |  மின்கலன் |  | பெரிய செங்குத்துக் கோடு நேர் முனையாகவும், சிறிய செங்குத்துக்கோடு எதிர் முனையாகவும் குறிப்பிடப்படுகின்றன. |
| 2 | தொடர் மின்கலன் (மின்கல அடுக்கு) |  மின்கல அடுக்கு |  | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலன்கள் தொடராக இணைக்கப்பட்ட அமைப்பு |
| 3 | தொடு சாவி திறந்தது |   |  திறந்த | தொடுசாவி செயல்படா நிலை (OFF) (சுற்றில் மின்னோட்டம் செல்லாது) |
| 4 | தொடு சாவி மூடியது |   |  மூடிய | தொடு சாவி செயல்படும் நிலை (ON) (சுற்றும் மின்னோட்டம் பாயும்) |
| 5 | மின் விளக்கு |  |  | மின் விளக்கு ஒளிரவில்லை |
| | |  |  | மின் விளக்கு ஒளிர்கிறது |
| 6 | இணைப்புக் கம்பி |  |  | மின் சாதனங்களை இணைக்கப் பயன்படும். |

## 2.4 மின்கடத்திகள் மற்றும் அரிதிற் கடத்திகள்

### மின்சாரம் அனைத்துப் பொருட்களின் வழியேயும் பாயுமா?

மின்சாரக்கம்பியை வெட்டி பிரித்துப் பார்க்கும் பொழுது, உள்ளே உலோகத்தால் ஆன கம்பியும் அதன் மேல்பகுதியில் வேறு ஒரு பொருளால் ஆன உறையும் இருப்பதைக் காணலாம். ஏன் இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என அறிவாயா?



### மின் கடத்திகள்

கடத்தியில் மின்னூட்டங்கள் பாயும் வீதமே மின்னோட்டம் எனப்படும். அவ்வாறு எந்தெந்த



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 27 11-08-2018 10:23:17

பொருள்கள் தன் வழியே மின்னூட்டங்களைச் செல்ல அனுமதிக்கின்றனவோ அவற்றை நாம் மின் கடத்திகள் என்கிறோம்.

எ.கா: உலோகங்களான தாமிரம், இரும்பு, அலுமினியம், மற்றும் மாசுபட்ட நீர், புவி, போன்றவை.



### அரிதிற் கடத்திகள் (மின் கடத்தாப் பொருள்கள்)

எந்தெந்தப் பொருள்கள் தன் வழியே மின்னூட்டங்களைச் செல்ல அனுமதிக்க வில்லையோ அவற்றை நாம் அரிதிற்கடத்திகள் (அ) மின்கடத்தாப் பொருள்கள் என்கிறோம்.

எ.கா : பிளாஸ்டிக், கண்ணாடி, மரம், ரப்பர், பீங்கான், எபோனைட் போன்றவை.



**செயல்பாடு 4:** பட்டியலில் உள்ள பொருள்களை, A, B என்ற இருமுனைகளுக்கு இடையே இணைத்து, மின்விளக்கு ஒளிருமா அல்லது ஒளிராதா என்பதை எழுதுக.




| வ. எண் | பொருள்கள் | இப் பொருள்கள் எதனால் ஆனவை | ஒளிரும் (அ) ஒளிராது |
|---|---|---|---|
| 1. | குண்டூசி | | |
| 2. | தீக்குச்சி | | |
| 3. | ஊக்கு | | |
| 4. | பென்சில் | | |
| 5. | உலோகக் கரண்டி | | |
| 6. | ரப்பர் | | |
| 7. | பேனா | | |
| 8. | மர அளவுகோல் | | |
| 9. | கொண்டை ஊசி | | |
| 10. | கண்ணாடித் துண்டு | | |

### ஒருவருக்கு மின் அதிர்ச்சி ஏற்பட்டால் (Electric shock) அவரைக் காப்பாற்ற செய்ய வேண்டியவை

I. மின்அதிர்வு ஏற்படக் காரணமான மின் இணைப்பை அணைக்கவும்.

II. சாவியிலிருந்து இணைப்பைத் துண்டிக்கவும்.

III. மின்கடத்தாப் பொருட்களைக் கொண்டு அவரை மின்கம்பியின் தொடர்பிலிருந்து தள்ளவும்.

IV. அவருக்கு முதலுதவி தந்து, அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவும்.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 28 11-08-2018 10:23:19



### மேலும் அறிந்து கொள்வோம்

தாமஸ் ஆல்வா எடிசன் (பிப்ரவரி 11, 1847 முதல் அக்டோபர் 18, 1931) ஓர் அமெரிக்க கண்டுபிடிப்பாளர்.

இவர் 1000 க்கும் மேற்பட்ட உபயோகமான பொருட்களை உருவாக்கியுள்ளார். அவற்றில்



தாமஸ் ஆல்வா எடிசன்



பல வீடுகளில் பயன்படுத்தக் கூடியவை. மின் விளக்கைக் கண்டுபிடித்ததற்காக நாம் என்றும் அவரைப் போற்றுகிறோம்.

**செயல்பாடு 5:** தாமிரத் தகடுகள், துத்தநாகத் தகடுகள், இணைப்புக் கம்பி, சாவி, பீக்கர், கஞ்சி (சாதம் வடித்த நீர்) கொண்டு மின்னோட்டம் உற்பத்தி செய்க.




படத்தில் காட்டியவாறு தாமிரம், துத்தநாகத் தகடுகளை தொடர் இணைப்பில் இணைப்புக் கம்பி மூலம் இணைத்து, இரண்டு பீக்கரில் சாதம் வடித்த நீரை பாதி அளவு ஊற்றி தகடுகளைச் செருகுக. பின்னர் தாமிரத் தகட்டினை ஒளி உமிழும் விளக்கின் (LED) நேர்மின் முனையுடனும் துத்தநாகத் தகட்டினை ஒளி உமிழும் விளக்கின் (LED) எதிர்மின் முனையுடனும் இணைக்கவும். என்ன நிகழ்கிறது என்பதைக் கவனி. இந்தச் செயலில் சாதம் வடித்த நீருக்குப் பதிலாக தயிர், உருளைக்கிழங்கு, எலுமிச்சம் பழம் போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

98EJX4

### நினைவில் கொள்க

- மின்சாரத்தை உருவாக்கும் மூலங்கள் மின்மூலங்கள் எனப்படும்.
- அனல்மின் நிலையங்கள், நீர்மின் நிலையங்கள், காற்று ஆலைகள், அணு மின் நிலையங்கள் போன்ற பல மின் மூலங்கள் உள்ளன.
- வேதி ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் கலன் மின்கலன் எனப்படும்.
- தொடர்ச்சியாக நீண்டகாலம் மின்னோட்டத்தை அளிப்பதன் அடிப்படையில், மின்கலன்கள் இரு வகைப்படும்.
- ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய மின்கலன் முதன்மை மின்கலன் எனப்படும்.
- பல முறை மின்னேற்றம் செய்து தொடர்ந்து பயன்படுத்தக்கூடிய மின்கலன்கள் துணை மின்கலன்கள் எனப்படும்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலன்களை இணைத்து



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 29 11-08-2018 10:23:19

உருவாக்கப்படும் அடுக்கு மின்கல அடுக்கு எனப்படும்.

- ❖ மின்சுற்று என்பது மின்கலத்தின் நேர்முனையிலிருந்து எதிர்முனைக்கு மின்னூட்டம் செல்லும் தொடர்ச்சியான மூடிய பாதையாகும்.
- ❖ மின்கலன், சாவி, மின்விளக்கு மற்றும் இணைப்புக்கம்பி போன்றவற்றின் தொகுப்பு எளிய மின்சுற்று எனப்படும்.
- ❖ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்விளக்குகள் தொடரிணைப்பில் இணைக்கப்படும் மின்சுற்று, தொடரிணைப்பு மின்சுற்று எனப்படும்.
- ❖ இரண்டு அல்லது மேற்பட்ட மின் விளக்குகள் பக்கஇணைப்பில் இணைக்கப்படும் மின் சுற்று பக்க இணைப்பு மின்சுற்று எனப்படும்
- ❖ மின்சாதனங்களை குறியீடுகளால் குறிப்பதன் மூலம் பெரிய மின் சுற்றுப்படங்களை மிக எளிதாக நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.
- ❖ தன் வழியே மின்னூட்டங்களைச் செல்ல அனுமதிக்கும் பொருள்கள் மின்கடத்திகள் எனப்படும்.
- ❖ தன் வழியே மின்னூட்டங்களைச் செல்ல அனுமதிக்காத பொருள்கள் மின்கடத்தாப் பொருள்கள் எனப்படும்.

## இணையச்செயல்பாடு

### மின்சாரம்

**எளிய மின் சுற்றுகளைக் கொண்டு விளையாடிப் பார்ப்போமா!**



படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி எளிய மின்சுற்று பக்கத்திற்குச் செல்க.

படி 2: செயல்பாட்டின் வலப்பக்கத்தில் சில மின்கம்பிகளும், இடப்பக்கத்தில் மின்கலங்களும், சுவிட்ச் மற்றும் மின் விளக்கும் கொடுக்கப்பட்டிருக்கும்.

படி 3: சுட்டியின் உதவியுடன் மின்கம்பிகளை இழுத்து, மின்கலத்தில் சரியாகப் பொருத்த வேண்டும். அவ்வாறு சரியாகப் பொருத்திவிட்டால், சுவிட்சை அழுத்தியதும் மின்விளக்கு ஒளிரும்.

படி 4: இரண்டாவது உரலியைப் பயன்படுத்தி, தொடர் மற்றும் பக்க மின்சுற்றுகளைக் கொண்டு செயல்பாட்டைத் தொடர்க.

படி 1





படி 2



படி 3

B440_SCI_6_T2_TM

**உரலி:**

**Simple Circuit's**
http://www.physics-chemistry-interactive-flash-animation.com/electricity_electromagnetism_interactive/simple_circuit.htm

**Series and parallel circuits**
http://www.physics-chemistry-interactive-flash-animation.com/electricity_electromagnetism_interactive/components_circuits_association-series_parallel.htm

*படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 30 11-08-2018 10:23:21

# மக்களின் விஞ்ஞானி






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

# மதிப்பீடு

98NFYR

## I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. வேதி ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் சாதனம்

அ. மின் விசிறி ஆ. சூரிய மின்கலன்

இ. மின்கலன் ஈ. தொலைக்காட்சி

2. மின்சாரம் தயாரிக்கப்படும் இடம்

அ. மின்மாற்றி

ஆ. மின்உற்பத்தி நிலையம்

இ. மின்சாரக் கம்பி

ஈ. தொலைக்காட்சி

3. மின்கல அடுக்கின் சரியான குறியீட்டைத் தேர்ந்தெடு

அ) 

ஆ) 

இ) 


ஈ) 

4. கீழ்க்கண்ட மின்சுற்றுகளில் எதில் மின்விளக்கு ஒளிரும்?

அ) 

ஆ) 

இ) 

ஈ) 

5. கீழ்க்கண்டவற்றுள் எது நற்கடத்தி?

அ. வெள்ளி ஆ. மரம்

இ. அழிப்பான் ஈ. நெகிழி

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. __________ பொருள்கள் தன் வழியே மின்னோட்டம் செல்ல அனுமதிக்கின்றன.

2. ஒரு மூடிய மின்சுற்றினுள் பாயும் மின்சாரம் __________ எனப்படும்.

3. __________ என்பது மின்சுற்றை திறக்க அல்லது மூட உதவும் சாதனமாகும்.

4. மின்கலனின் குறியீட்டில் பெரிய செங்குத்து கோடு __________ முனையைக் குறிக்கும்.

5. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலன்களின் தொகுப்பு __________ ஆகும்.

## III. சரியா (அ) தவறா எனக் கூறுக. தவறாக இருப்பின் சரியாக எழுதவும்

1. பக்க இணைப்பு மின்சுற்றில், ஒன்றுக்கு மேற்பட்ட மின்னோட்டப் பாதைகள் உண்டு.

2. இரண்டு மின்கலன்களைக் கொண்டு உருவாக்கப்படும் மின்கல அடுக்கில் ஒரு மின்கலத்தின் எதிர் முனையை மற்றொரு மின்கலத்தின் எதிர்முனையோடு இணைக்க வேண்டும்.

3. சாவி என்பது மின்சுற்றினைத் திறக்க அல்லது மூடப்பயன்படும் மின்சாதனம் ஆகும்.

4. தூய நீர் என்பது ஒரு நற்கடத்தியாகும்.

5. துணை மின்கலன்களை ஒருமுறை மட்டுமே பயன்படுத்த முடியும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 32 11-08-2018 10:23:22

## IV. பொருத்துக

| | குறியீடு | விளக்கம் |
|---|---|---|
| 1. |  | திறந்த சாவி |
| 2. |  | மின்கலன் |
| 3. |  | ஒளிரும் மின்விளக்கு |
| 4. |  | மின்கல அடுக்கு |
| 5. |  | ஒளிராத மின்விளக்கு |

## V. பின்வரும் சொற்களைக் கொண்டு ஒரு முழுமையான வாக்கியத்தை உருவாக்குக

| | | | |
|---|---|---|---|
| மாற்றும் | சாதனம் | மின்னாற்றலாக | |
| ஆற்றலை | மின்கலன் | வேதி | ஆகும் |

## VI. மிகக் குறுகிய விடையளி

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள மின்சுற்றில் மின்விளக்கு A மட்டும் ஒளிர வேண்டும் எனில் எந்தெந்த சாவி(கள்) மூடப்பட வேண்டும்.




2. கூற்று(A): நமது உடலானது மின்அதிர்வை வெகு எளிதில் ஏற்றுக்கொள்கிறது.

காரணம் (R) : மனித உடலானது ஒரு நல்ல மின்கடத்தியாகும்.

அ. A மற்றும் R இரண்டும் சரி மற்றும் R என்பது A க்கு சரியான விளக்கம்.

ஆ. A சரி, ஆனால் R என்பது Aக்கு சரியான விளக்கம் அல்ல.

இ. A தவறு ஆனால் R சரி.

ஈ. A மற்றும் R இரண்டும் சரி. R என்பது A க்கு சரியான விளக்கம் அல்ல.

3. எலுமிச்சம் பழத்தில் இருந்து மின்னோட்டத்தை உருவாக்க முடியுமா?

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களிலிருந்து மின்கடத்தியைக் கண்டுபிடித்து எழுதுக.

 

 

5. டார்ச் விளக்கில் எவ்வகையான மின்சுற்று பயன்படுத்தப்படுகிறது?

6. பொருந்தாததை வட்டமிடுக. அதற்கான காரணம் தருக.

**சாவி, மின்விளக்கு, மின்கல அடுக்கு, மின்னியற்றி**

## VII. குறுகிய விடையளி

1. தொடரிணைப்பு ஒன்றிற்கு மின்சுற்றுப் படம் வரையவும்.

2. கடிகாரத்தில் பயன்படுத்தப்படும் மின்கலன் மூலம் நமக்கு மின் அதிர்வு ஏற்படுமா? விளக்கம் தருக.

3. வெள்ளி உலோகம் மிகச் சிறந்த மின்கடத்தியாகும். ஆனால் அது மின் கம்பி உருவாக்கப் பயன்படுத்தப்படுவதில்லை? ஏன்?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_2.indd 33 11-08-2018 10:23:23

## VIII. விரிவான விடையளி

1. மின்மூலங்கள் என்றால் என்ன? இந்தியாவில் உள்ள பல்வேறு மின் நிலையங்கள் பற்றி விளக்குக.

2. மின்சுற்றுகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மின்சாதனங்களின் பெயர்களையும் அவற்றின் குறியீடுகளையும் பட்டியலிடுக.

3. மின்கடத்திகள் மற்றும் அரிதிற்கடத்திகள் குறித்து சிறு குறிப்பு வரைக.

## IX. உயர் சிந்தனைத்திறன் வினாவிற்கு விடையளி

1. ராகுல் ஒரு மின்சுற்றை அமைக்க விரும்பினான். அவனிடம் ஒரு மின்விளக்கு, குண்டூசி, இரு இணைப்புக் கம்பிகள் மற்றும் ஒரு தாமிரக் கம்பி ஆகியவை மட்டுமே உள்ளன. அவனிடம் மின்கலனோ, மின்கல அடுக்கோ இல்லை. எனினும் திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. எலுமிச்சம்பழத்தைப் பயன்படுத்தி மின்கல அடுக்கினை உருவாக்கினால் என்ன என்று ஒரு யோசனை தோன்றியது. அந்த மின்விளக்கு ஒளிருமா?

## X. கீழ்க்காணும் கட்டத்திலிருந்து மின்கடத்திகள் மற்றும் அரிதிற்கடத்திகளை கண்டறிந்து அட்டவணையில் நிரப்புக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சு | க் | டா | ப் | ழி | சி | தா | ம் | ஞ |
| இ | டி | ணா | ண் | க | உ | து | க | பு |
| ரு | ம | சி | த | நெ | கா | கி | த | ம் |
| ம் | ர | மி | தா | டி | ஆ | ணி | ஜி | ஊ |
| பு | ம் | பூ | வு | கா | ன் | இ | தி | போ |
| ரு | அ | லு | மி | னி | ய | ம் | ர | டு |
| ச | யா | க | ட | ல் | நீ | ர் | லு | மா |
| த | அ | ழி | ப் | பா | ன் | ங் | ஏ | ணு |

| வ. எண் | மின் கடத்திகள் | அரிதிற் கடத்திகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

அலகு

# 3 நம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்கள்





## கற்றல் நோக்கங்கள்

- நம் அன்றாட வாழ்க்கையில் நடக்கும் ஒரு சில மாற்றங்களை அடையாளம் கண்டு பதிவு செய்தல்
- காணப்பட்ட மாற்றங்களை வகைப்படுத்துதல்
  - மெதுவான / வேகமான மாற்றங்கள், மீள் / மீளா மாற்றங்கள்
  - இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள்
  - விரும்பத்தக்க / விரும்பத்தகாத மாற்றங்கள், இயற்கையான / மனிதனால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள்
- கரைதல் செயல்பாட்டினை விளக்குதல்
- ஒரு கரைப்பான் மற்றும் கரை பொருளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டினைக் காணுதல்.

98XC1E



6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 35 11-08-2018 10:26:53
athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

முன்பக்கத்தில் உள்ள படங்களை உற்று நோக்கிக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை நிரப்பவும்.

| ஆரம்ப நிலை | மாற்றநிலை |
|---|---|
| விதை | மரக்கன்று |
| | இரவு |
| பாறை | |
| காய் | |

மேற்கண்ட இணைகளில் காணப்படும் பொதுவான நிகழ்வு என்ன?

## அறிமுகம்

### மாற்றம் என்றால் என்ன?

ஒரு பொருள் தன்னுடைய நிலையில் இருந்து மற்றொரு நிலைக்கு மாறும் நிகழ்வே மாற்றம் எனப்படும். பொருளின் ஆரம்ப நிலைக்கும் இறுதி நிலைக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடே மாற்றம் எனப்படும்.

மாற்றம் என்பது இயற்கையின் நியதியாகும். நம் அன்றாட வாழ்வில் நம்மைச் சுற்றிப் பல மாற்றங்களைக் காண்கிறோம். குறிப்பிட்ட கால இடைவெளியில் வானிலையில் மாற்றம் நிகழ்கிறது. இதேபோல் பருவங்களும் மாறுகின்றன. காகிதம் தீப்பிடித்த உடனே எரிகிறது. ஆனால் இரும்பு ஆணி துருப்பிடிக்க சில நாட்கள் ஆகின்றன. பால் தயிராக மாற சில மணிநேரங்களை எடுத்துக் கொள்கிறது. ஆனால், சமைக்கும் போது சில நிமிடங்களில் காய்கறிகள் வெந்து விடுகின்றன.

மாற்றங்கள் என்பது வடிவம், நிறம், வெப்பநிலை, நிலை மற்றும் இயைபு போன்ற பண்புகளில் (எந்தப் பண்பிலும்) நிகழலாம். பொருட்களில் ஏற்படுத்தப்படும் இத்தகைய மாற்றங்களில் சிலவற்றை நாம் கண்களால் காணமுடியும் சிலவற்றைக் கண்களால் காண இயலாது.

சில மாற்றங்களை உற்றுநோக்கி அவற்றைப் பற்றி எழுதவும்.

**செயல்பாடு 1:** பலூன் ஒன்றில் காற்றை நிரப்பும் போது நிகழ்வது என்ன ?



❖ வடிவத்தில் மாற்றம் ஏற்படுகிறதா?

☐ ஆம் ☐ இல்லை

❖ அளவில் மாற்றம் ஏற்படுகிறதா?

☐ ஆம் ☐ இல்லை

❖ வேறு ஏதேனும் மாற்றம் நிகழ்கிறதா?

☐ ஆம் ☐ இல்லை

## 3.1 மாற்றங்களின் வகைகள்

997832

இயற்கையில் பல்வேறு மாற்றங்கள் நம்மைச் சுற்றி நிகழ்கின்றன. சில மாற்றங்கள் மிக விரைவாக நிகழ்கின்றன. சில மாற்றங்கள் நிகழப் பல மணித்துளிகள், நாட்கள் அல்லது வருடங்கள் தேவைப்படுகின்றன. சில மாற்றங்கள் தற்காலிகமானவை, சில மாற்றங்கள் நிரந்தரமானவை. சில மாற்றங்கள் புதிய பொருட்களை உருவாக்குகின்றன, சில மாற்றங்கள் புதிய பொருட்களை உருவாக்குவதில்லை. சில மாற்றங்கள் இயற்கையானவை, சில மாற்றங்கள் மனிதர்களால் உருவாக்கப்படுபவை. சில மாற்றங்கள் விரும்பத்தக்க மாற்றங்களை உண்டாக்குகின்றன, சில மாற்றங்கள் விரும்பத்தகாத மாற்றங்களை உண்டாக்குகின்றன.

இதன் அடிப்படையில் நாம் மாற்றங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

❖ மெதுவான மற்றும் வேகமான மாற்றங்கள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 36 11-08-2018 10:26:54

- மீள் மற்றும் மீளா மாற்றங்கள்
- இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள்.
- விரும்பத்தக்க மற்றும் விரும்பத்தகாத மாற்றங்கள்.
- இயற்கையான மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள்.

### 3.1.1 மெதுவான மற்றும் வேகமான மாற்றங்கள்

**செயல்பாடு 2:** கீழ்கண்ட மாற்றங்கள் நிகழ ஆகும் நேரம் / கால அளவைக் குழுவில் கலந்துரையாடுக.



#### மெதுவான மாற்றங்கள்

சில மாற்றங்கள் நிகழ அதிக நேரத்தை எடுத்துக்கொள்கின்றன. (மணிகள்/நாட்கள்/மாதங்கள்/ஆண்டுகள்) இவை மெதுவான மாற்றங்கள் என அழைக்கப்படுகின்றன.

**எ.கா:** நகம் மற்றும் முடி வளர்தல், பருவநிலை மாற்றம், விதை முளைத்தல்.

#### வேகமான மாற்றங்கள்

சில மாற்றங்கள் நிகழ குறைந்த அளவே நேரத்தை எடுத்துக் கொள்கின்றன (நொடிகள் / நிமிடங்கள்). இவை வேகமான மாற்றங்கள் என அழைக்கப்படுகின்றன.

**எ.கா:** பலூன் வெடித்தல், கண்ணாடி உடைதல், பட்டாசு வெடித்தல், காகிதம் எரிதல்.

### 3.1.2 மீள் மற்றும் மீளா மாற்றங்கள்

**செயல்பாடு 3:** ஒரே காகிதத்தை கொண்டு படகு, மற்றும் ஆகாய விமானம் ஆகியவற்றைச் செய்து பார்க்கவும். இச்செயல்பாட்டில் அதே காகிதத்தை மீண்டும் மீண்டும் வெவ்வேறு வடிவங்கள் செய்யப் பயன்படுத்துகிறோம். இதிலிருந்து உருவங்கள் மாறுபட்டிருந்தாலும் இச்செயல்பாட்டில் நிகழ்வது மீள் மாற்றமே என அறிகிறோம்.



**செயல்பாடு 4:** இவை எவ்வகையான மாற்றங்கள் எனக் கூறுக.



அ) எரியும் மெழுகுவர்த்தி

______________________

ஆ) ஊசியால் குத்தப்படும் பலூன்

______________________

#### மீள் மாற்றம்

சில மாற்றங்கள் நிகழும்போது, மாற்றமடைந்த பொருள்கள் மீண்டும் தங்களின் பழைய


athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 37 11-08-2018 10:27:03

நிலைக்குத் திரும்ப முடிந்தால் அவை மீள் மாற்றம் என்றழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு: தொட்டால் சிணுங்கி தாவரம் (தொடுதலுக்குத் துலங்குதல்), ரப்பர் வளையம் நீளுதல், பனிக்கட்டி உருகுதல்.

தொட்டால் சிணுங்கி தாவரம்



#### மீளா மாற்றம்

சில மாற்றங்கள் நிகழும்போது, மாற்றமடைந்த பொருள்கள் மீண்டும் தங்களின் பழைய நிலைக்குத் திரும்பமுடியாது. அதாவது மீண்டும் ஆரம்பநிலைப் பொருள்களை பெற முடியாது. அவ்வகை மாற்றம் மீளா மாற்றம் என்றழைக்கப்படும்.

எடுத்துக்காட்டு: பால் தயிராக மாறுதல், உணவு செரித்தல், மாவிலிருந்து இட்லி தயாரித்தல்.

### 3.1.3 இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள்



**செயல்பாடு 5:** ஒரு ஆப்பிள் பழத்தை எடுத்து இரு பாகங்களாக வெட்டவும். ஒரு பாதியை, சிறு துண்டுகளாக வெட்டி உங்களின் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.



ஆப்பிளை வெட்டியதால் அதன் இயல்பில் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்ததா? இல்லை அதன் உருவம் மற்றும் அளவு மட்டுமே மாறியது. இவ்வகை மாற்றம் **இயற்பியல் மாற்றம்** ஆகும்.

மற்றொரு பாதி ஆப்பிளை அப்படியே மேசை மேல் சற்று நேரம் வைத்திருக்கவும். சிறிது நேரம் கழித்து ஆப்பிள் பழத்தின் வெட்டிய பகுதியின் மேற்பரப்பில் பழுப்பு நிற திட்டுகள் தோன்றியிருப்பதை காணலாம். இது ஆப்பிள் பழத்திலுள்ள சில பொருள்கள் காற்றுடன் வினைபுரிவதால் ஏற்பட்ட மாற்றமே ஆகும். இவ்வகை மாற்றம் **வேதி மாற்றம்** ஆகும்.

#### இயற்பியல் மாற்றங்கள்

இயற்பியல் மாற்றம் என்பது ஒரு தற்காலிக மாற்றம் ஆகும். ஒரு பொருளின் வேதியியல் இயைபு மாறாமல் அதன் இயற்பியல் பண்புகளில் மட்டுமே மாற்றங்கள் நிகழ்வது இயற்பியல் மாற்றங்கள் ஆகும். இங்கு புதிய பொருள் எதுவும் உருவாவது இல்லை.

எடுத்துக்காட்டு: பனிக்கட்டி உருகுதல், உப்பு அல்லது சர்க்கரையினை கரைசலாக்குவது, இரப்பர் வளையத்தினை இழுத்தல்.

நாம் இப்பொழுது **நீரில் நிகழும் இயற்பியல் மாற்றங்களைப் பற்றி புரிந்து கொள்ளலாம்.**

நீரானது, திட, திரவ மற்றும் வாயு நிலைகளில் உள்ளது. வெப்பப்படுத்துதல் மூலமோ அல்லது குளிர்வித்தல் மூலமோ இந்நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். வெப்பப்படுத்தும் போது ஆற்றல் அளிக்கப்படுவதும், குளிர்விக்கும் போது ஆற்றல் வெளியேற்றப்படுவதும் இம்மாற்றங்களுக்குக் காரணமாகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 38 11-08-2018 10:27:03




நீரின் நிலைமாற்றங்களும் அவற்றின் பெயர்களும்.

| மாற்றம் | | முறை |
|---|---|---|
| பனிக்கட்டியை வெப்பப்படுத்தி நீராக மாற்றுதல் | – | உருகுதல் |
| நீரை வெப்பப்படுத்தி நீராவியாக மாற்றுதல் | – | ஆவியாதல் |
| நீராவியை குளிர்வித்து நீராக மாற்றுதல் | – | ஆவி சுருங்குதல் |
| நீரை குளிர்வித்து பனிக்கட்டியாக மாற்றுதல் | – | உறைதல் |

**மேலும் அறிந்து கொள்வோம்**

ஒரு திடப்பொருளை வெப்பப்படுத்தும் பொழுது திரவமாகாமல் நேரடியாக வாயு நிலைக்கு மாறுவது **பதங்கமாதல்** எனப்படும். உதாரணம் : கற்பூரம்

மேலும் ஒரு இயற்பியல் மாற்றத்தை பற்றி நாம் புரிந்து கொள்ளலாம்

## கரைதல்

திண்மத் துகள்கள் தனித்தனி மூலக்கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, நீர்ம மூலக்கூறுகளுக்கு இடையே விரவுதலை நாம் கரைதல் என்கிறோம்.

❖ **கரைப்பான்** என்பது கரைபொருளைக் கரைக்கக்கூடிய பொருளாகும்.

❖ **கரைபொருள்** என்பது கரைப்பானில் கரையக்கூடிய பொருளாகும்..

❖ கரைபொருள் கரைப்பானில் கரையும் போது **கரைசல்** உண்டாகிறது

கரைபொருள்+கரைப்பான் ⟶ கரைசல்

**உங்களுக்குத் தெரியுமா?**

நீர் ஒரு பொதுக் கரைப்பான். அது பெரும்பாலான பொருள்களை கரைக்கிறது.

**செயல்பாடு 6:** ஒரு கண்ணாடிக் குவளையில் பாதியளவு நீரை எடுத்துக் கொள்ளவும். அதில் ஒரு தேக்கரண்டி அளவு சர்க்கரையை சேர்த்து நன்றாக கலக்கவும்.



நீ என்ன காண்கிறாய்?

________________________

சேர்க்கப்பட்ட சர்க்கரை என்ன ஆனது?

________________________

தற்போது சர்க்கரை எங்குள்ளது?

________________________

மேற்கண்ட கரைசலில் கரைபொருள் எது?

________________________

மேற்கண்ட கரைசலில் கரைப்பான் எது?

________________________

ஒரு குவளை நீரும் ஒரு குவளை சர்க்கரை கரைசலும் தோற்றத்தில் ஒரே மாதிரியாக / ஒன்றுபோல் இருப்பதைக் காண்கிறீர்களா?

________________________



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 39 11-08-2018 10:27:04

### வேதியியல் மாற்றங்கள்

பொருள்களின் வேதிப்பண்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் அது வேதியியல் மாற்றங்கள் எனப்படும். வேதியியல் மாற்றங்கள் புதிய பொருள்களை உண்டாக்குகின்றன.

**எடுத்துக்காட்டு:** மரம் எரிதல், சோளம் பொரிதல், வெள்ளி ஆபரணங்கள் கருமையாதல், மற்றும் இரும்பு துருப்பிடித்தல்.

| இயற்பியல் மாற்றம் | வேதியியல் மாற்றம் |
|---|---|
| புதிய பொருள்கள் உருவாவதில்லை | புதிய பொருள்கள் உருவாகின்றன |
| வேதி இயைபில் மாற்றம் ஏற்படாது | வேதி இயைபில் மாற்றம் ஏற்படும் |
| இது ஒரு தற்காலிக மாற்றம் | இது ஒரு நிரந்தர மாற்றம் |
| இது ஒரு மீள் வினை | இது ஒரு மீளா வினை |

**செயல்பாடு 7:** கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து, இயற்பியல் / வேதியியல் மாற்றங்களை இனங்கண்டு எழுதவும்




____________ ____________




____________ ____________

## 3.1.4 விரும்பத்தக்க மற்றும் விரும்பதகாத மாற்றங்கள்

**செயல்பாடு 8:** கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை பார்த்து, அவை விரும்பத்தக்க/ விரும்பத்தகாத மாற்றங்கள் எனக் கண்டறியவும்.

காட்டுத் தீ



____________

பழம் அழுகுதல்



____________

முட்டையிலிருந்து – குஞ்சு பொரித்தல்



____________

காற்றாலை



____________

### விரும்பத்தக்க மாற்றங்கள்

சுற்றுச்சூழலுக்குப் பயன்தரும் அல்லது சுற்றுச்சூழலைப் பாதிக்காத, நம்மால் விரும்பப்படும் மாற்றங்கள் விரும்பத்தக்க மாற்றங்கள் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** காய் கனியாதல், பருவ நிலை மாற்றம், தாவரங்கள் வளருதல், உணவு சமைத்தல், பால் தயிராதல்.

### விரும்பத்தகாத மாற்றங்கள்

சுற்றுச்சூழலுக்குப் பயன்தராத அல்லது தீங்கு விளைவிக்ககூடிய, நம்மால் விரும்பப்படாத மாற்றங்கள் விரும்பதகாத மாற்றங்கள் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** காடுகள் அழிதல், பழம் அழுகுதல், இரும்பு துருப்பிடித்தல்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 40 11-08-2018 10:27:05

## 3.1.5 இயற்கையானமற்றும்மனிதனால் ஏற்படக்கூடிய மாற்றங்கள்

### இயற்கையான மாற்றங்கள்

இயற்கையில் தானாகவே நிகழும் மனித கட்டுபாட்டிற்கு அப்பாற்பட்ட மாற்றங்கள் இயற்கையான மாற்றங்கள் எனப்படும்.

99G44P

**எடுத்துக்காட்டு**: புவியின் சுழற்சி, மழை பெய்தல், அமாவாசை முதல் பௌர்ணமி வரை நிலவின் வெவ்வேறு நிலைகள்.

**செயல்பாடு 9:** கீழ்காணும் படங்களைப் பார்த்து அவை எவ்வகையான மாற்றங்கள் எனக் கண்டறியவும்.

வெள்ளப்பெருக்கு



___________________

மரச்சாமான்கள்



___________________

நாற்று நடுதல்



___________________

நிலச்சரிவு



___________________

### மனிதனால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் அல்லது செயற்கையான மாற்றங்கள்

மனிதன் தன் விருப்பத்திற்காக ஏற்படுத்தும் மாற்றங்கள் மனிதனால் எற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அல்லது செயற்கையான மாற்றங்கள் எனப்படும். இத்தகைய மாற்றங்கள் தன்னிச்சையாக நிகழாது.

**எடுத்துக்காட்டு**: சமைத்தல், காடுகளை அழித்தல், பயிரிடுதல், கட்டிடங்கள் கட்டுதல்.

### நினைவில் கொள்க

- உலகிலுள்ள அனைத்துமே ஏதோ ஒரு மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகிறது. இவை இடம், வடிவம், உருவம், நிலை, வண்ணம், வெப்பநிலை மற்றும் இயைபில் நிகழலாம்.
- வேகமான மாற்றம் – குறுகிய கால அளவில் நடைபெறும். மெதுவான மாற்றம் – அதிக காலம் எடுத்துக்கொள்ளும்.
- மீள் மாற்றம் – மீண்டும் தன் ஆரம்ப நிலையை அடையும். மீளா மாற்றம் – மீண்டும் தன் ஆரம்ப நிலையை அடையாது.
- விரும்பத்தக்க மாற்றம் – சுற்றுச் சூழலுக்குப் பயன் தரக்கூடியது மற்றும் ஆபத்து அற்றது.

  விரும்பத்தகாத மாற்றம் – சுற்றுச் சூழலுக்குப் பயன்தராது மற்றும் ஆபத்தானது .
- இயற்கையான மாற்றம் – இயற்கையில் தன்னிச்சையாக நடைபெறக்கூடியது.

  மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் – மனிதன் தன் விருப்பத்திற்காக ஏற்படுத்தியது.
- கரைசல் – கரைபொருளை கரைப்பானில் கரைத்துப் பெறப்படுகிறது.
- திண்மத் துகள்கள் தனித்தனி மூலக்கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, நீர்ம மூலக்கூறுகளுக்கு இடையே விரவுதலை நாம் கரைதல் என்கிறோம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 41 11-08-2018 10:27:07

## இணையச்செயல்பாடு

# மீள் மற்றும் மீளா வினை

செயல்பாட்டின் மூலம் பொருள்களின் மீளும் / மீளா வினைகளை அறிவோமா




படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி 'Reversible and irreversible changes' பக்கத்திற்குச் செல்க. பொருள்களைத் தேர்வு செய்ய இரண்டு ஓரங்களிலும் இருக்கும் அம்புக்குறிகளைப் பயன்படுத்தவும்.

படி 2: சுட்டியைப் பயன்படுத்தி பொருளைக் கண்ணாடி குவளைக்குள் இழுத்து, பொருளின் நிலையை உற்று நோக்குக. செயல்பாட்டின் இடையில் உள்ள Dissolving / Reversing என்பதைச் சொடுக்கவும்.

படி 3: மீளாச்செயல்பாட்டிற்குச் சில பொருள்களைக் குளிரூட்டவோ வெப்பமாக்கவோ செய்க. மேலும் சில பொருள்களை வெப்பமூட்டி வடிகட்டத் தேவையான பொத்தானைச் சொடுக்கவும். இந்நிலையில் திரையில் காணும் பொருளைச் சூடாக்கவோ குளிரூட்டவோ தேர்வு செய்து கொள்ளலாம். அவற்றுக்குரிய பொத்தான்களைப் பயன்படுத்தலாம்.

படி 4: Reset என்பதைச் சொடுக்கி மீள்நிலைக்கு வருக.

படி 1





படி 2

படி 3





படி 4

**உரலி:**

http://www.bbc.co.uk/schools/scienceclips/ages/10_11/rev_irrev_changes_fs.shtml

B440_SCI_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 42 11-08-2018 10:27:09

## மதிப்பீடு

### I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. பனிக்கட்டி நீராக உருகும்போது ஏற்படும் மாற்றம் __________ ஆகும்.

   அ. இட மாற்றம்

   ஆ. நிற மாற்றம்

   இ. நிலை மாற்றம்

   ஈ. இயைபு மாற்றம்

99PZ6C

2. ஈரத்துணி காற்றில் உலரும் போது ஏற்படும் மாற்றம் __________ ஆகும்.

   அ. வேதியியல் மாற்றம்

   ஆ. விரும்பத்தகாத மாற்றம்

   இ. மீளா மாற்றம்

   ஈ. இயற்பியல் மாற்றம்

3. பால் தயிராக மாறுவது ஒரு ________ ஆகும்.

   அ. மீள் மாற்றம்

   ஆ. வேகமான மாற்றம்

   இ. மீளா மாற்றம்

   ஈ. விரும்பத்தகாத மாற்றம்

4. கீழுள்ளவற்றில் விரும்பத்தக்க மாற்றம் எது?

   அ. துருப்பிடித்தல்

   ஆ. பருவநிலை மாற்றம்

   இ. நில அதிர்வு

   ஈ. வெள்ளப்பெருக்கு

5. காற்று மாசுபாடு, அமில மழைக்கு வழிவகுக்கும், இது ஒரு __________ ஆகும்.

   அ. மீள் மாற்றம்

   ஆ. வேகமான மாற்றம்

   இ. இயற்கையான மாற்றம்

   ஈ. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. காந்தம் இரும்பு ஊசியைக் கவர்ந்திழுக்கும். இது ஒரு __________ மாற்றம். ( மீள் / மீளா)

2. முட்டையை வேகவைக்கும் போது ________ மாற்றம் நிகழ்கிறது. (மீள்/மீளா)

3. நமக்கு ஆபத்தை விளைவிப்பவை ________ மாற்றங்கள் (விரும்பத்தக்க / விரும்பத்தகாத)

4. தாவரங்கள் கரியமில வாயு மற்றும் நீரைச் சேர்த்து ஸ்டார்ச்சை உருவாக்குவது ________ (இயற்கையான / மனிதனால் நிகழ்த்தப்பட்ட மாற்றம்) ஆகும்.

5. பட்டாசு வெடித்தல் என்பது ஒரு _______ மாற்றம்; விதை முளைத்தல் ஒரு _______ மாற்றம் (மெதுவான / வேகமான)

### III. சரியா (அ) தவறா எனக் கூறுக. தவறாக இருப்பின் சரியாக எழுதவும்

1. குழந்தைகளுக்குப் பற்கள் முளைப்பது மெதுவான மாற்றம்.

2. தீக்குச்சி எரிவது ஒரு மீள் மாற்றம்.

3. அமாவாசை பௌர்ணமியாக மாறும் நிகழ்வு மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கூடிய மாற்றம்.

4. உணவு செரித்தல் என்பது ஓர் இயற்பியல் மாற்றம்.

5. உப்பை நீரில் கரைத்து உருவாக்கும் கரைசலில், நீர் ஒரு கரைபொருள் ஆகும்.

### IV. ஒப்புமை தருக

1. பால் தயிராதல் : மீளா மாற்றம் : : மேகம் உருவாதல் : _______ மாற்றம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 43 11-08-2018 10:27:09

2. ஒளிச்சேர்க்கை : ________ மாற்றம் : : நிலக்கரி எரிதல் : மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம்

3. குளுக்கோஸ் கரைதல் : மீள் மாற்றம் : : உணவு செரித்தல் : ________ மாற்றம்

4. உணவு சமைத்தல் : விரும்பத்தக்க மாற்றம் : : உணவு கெட்டுப்போதல் : ________ மாற்றம்.

5. தீக்குச்சி எரிதல் : ________ மாற்றம் : : பூமி சுற்றுதல் : மெதுவான மாற்றம்.

## V. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதற்கான காரணத்தைக் கூறுக.

1. குழந்தை வளருதல், கண் சிமிட்டுதல், துருப்பிடித்தல், விதைமுளைத்தல்.

2. மின் விளக்கு ஒளிர்தல், மெழுகுவர்த்தி எரிதல், காபிக் குவளை உடைதல், பால் தயிராதல்.

3. முட்டை அழுகுதல், நீராவி குளிர்தல், முடிவெட்டுதல், காய் கனியாதல்.

4. பலூன் ஊதுதல், பலூன் வெடித்தல், சுவற்றின் வண்ணம் மங்குதல், மண்ணெண்ணெய் எரிதல்.

## VI. மிகக் குறுகிய விடையளி

1. தாவரங்கள் மட்குதல் என்ன வகையான மாற்றம்?

2. உங்களிடம் சிறிது மெழுகு தரப்பட்டால் அதை வைத்து உங்களால் மெழுகு பொம்மை செய்ய முடியுமா? அவ்வாறு செய்ய முடியுமெனில் எவ்வகை மாற்றம் எனக் குறிப்பிடுக.

3. மெதுவான மாற்றத்தை வரையறு.

4. கரும்புச் சர்க்கரையை நன்றாக வெப்பப்படுத்தும் போது என்ன நிகழும்? இதில் நடைபெறும் ஏதேனும் இரண்டு மாற்றங்களைக் குறிப்பிடுக.

5. கரைசல் என்றால் என்ன?

## VII. குறுகிய விடையளி

1. காகிதத்தை எரிப்பதால் ஏற்படும் மாற்றங்கள் யாவை? விவரிக்கவும்.

2. காடுகளை அழித்தல் என்பது விரும்பத்தக்க மாற்றமா? உங்கள் பதிலுக்கான காரணத்தை விவரிக்கவும்.

3. விதையிலிருந்து செடி முளைத்தல் என்ன வகையான மாற்றம்? விவரிக்கவும்.

## VIII. விரிவான விடையளி

1. உன்னைச் சுற்றி நடக்கும் மாற்றங்களிலிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாற்றத்திற்கும் தகுந்த எடுத்துக்காட்டு தருக.

அ. மெதுவான / வேகமான மாற்றம்

ஆ. மீள் / மீளா மாற்றம்

இ. இயற்பியல் / வேதியல் மாற்றம்

ஈ. இயற்கையான / செயற்கையான அல்லது மனிதனால் நிகழ்த்தப்பட்ட மாற்றம்

உ. விரும்பத்தக்க / விரும்பத்தகாத மாற்றம்.

## IX. உயர் சிந்தனைத்திறன் வினாக்களுக்கு விடையளி

1. ஒரு மெழுகுவர்த்தி எரியும் போது கீழ்காணும் மாற்றங்களைக் காண முடியும்.

அ. மெழுகு உருகுதல்.

ஆ. மெழுகுவர்த்தி தொடர்ந்து எரிதல்.

இ. மெழுகுவர்த்தியின் அளவு குறைதல்.

ஈ. உருகிய மெழுகு திண்மமாக மாறுதல்.

உ. மேற்கண்டவற்றில் எவற்றை எல்லாம் மீள் மாற்றமாக்கலாம்? உமது பதிலை நியாயப்படுத்துக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_3.indd 44 11-08-2018 10:27:09



# அலகு 4 காற்று

99YV7Z




## கற்றல் நோக்கங்கள்

- ❖ காற்றின் இயைபு மற்றும் பயன்களை பட்டியலிடுதல்
- ❖ சோதனைகளில் ஈடுபடுவதிலும், கருவிகளை கையாளுவதிலும் திறன் பெறுதல்
- ❖ எரிதலில் ஆக்ஸிஜனின் பயன்பாட்டை அறிந்துக் கொள்ளுதல்
- ❖ பூமியில் தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு காற்றின் முக்கியத்துவம் குறித்து உணர்ந்து கொள்ளுதல்.
- ❖ நமது வளிமண்டலத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்தல்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 45 11-08-2018 10:28:39

## அறிமுகம்

காற்று நம்மைச் சுற்றி எங்கும் நிறைந்துள்ளது. நம்மால் காற்றை பார்க்க இயலாது. ஆனால் காற்று இருப்பதை நாம் பல வழிகளில் உணரமுடியும்.

எடுத்துக்காட்டாக, மரங்களின் சலசலப்பு, கொடியில் போட்ட துணிகளின் அசைவு, மின்விசிறி இயங்கும்பொழுது அசையும் திறந்த புத்தகத் தாள்கள், வானத்தில் பறக்கும் பட்டம் போன்றவை மூலம் காற்றின் இருப்பை நாம் அறிந்து கொள்ளலாம். நம்மால் காற்றினைப் பார்க்கவோ, தொடவோ, சுவைக்கவோ முடியாது, ஆனால் உணர முடியும். காற்றினால் தான் இந்த அசைவுகள் அனைத்தும் சாத்தியமாகின்றன. இதிலிருந்து, **நம்மைச் சுற்றிலும் காற்று உள்ளது** என்பதனை நம்மால் புரிந்துக் கொள்ள முடிகிறது.

நாம் உயிர்வாழ காற்று மிக அத்தியாவசியமானது ஆகும். உணவில்லாமல் நம்மால் சில நாட்கள் வாழ இயலும், நீரில்லாமல் சில மணி நேரங்கள் வாழ இயலும். ஆனால் காற்றில்லாமல் சில நிமிடங்கள் கூட வாழ இயலாது. எனவே **அனைத்து உயிரினங்களுக்கும் உயிர்வாழ காற்று மிக அவசியமாகிறது.**

காற்று அசைந்து சில சமயங்களில் தென்றலாகவும், சில சமயங்களில் புயலாகவும் வீசும். மெல்லிய விசையுடன் வீசும் காற்று குளிர்ச்சியாகவும் இனிமையாகவும் இருப்பதால் தென்றல் என்று அழைக்கப்படுகிறது. அதிக விசையுடன் வீசும் காற்று மரங்களை வேருடன் சாய்க்கவும் வீடுகளின் கூரைகளை அடித்துச் செல்லும் திறனையும் பெற்றிருப்பதால் புயல் என்று அழைக்கப்படுகிறது. சுவாசித்தலுக்கும் எரிதலுக்கும் காற்று மிக அவசியமாகிறது.

நாம் ஒரு செயல்பாட்டினைச் செய்வோமா?

### செயல்பாடு 1: காற்று எங்கும் நிறைந்துள்ளது

ஒரு காலியான கண்ணாடி பாட்டிலை எடுத்துக் கொள்வோம். அது உண்மையிலேயே காலியாக உள்ளதா? அல்லது அதனுள் ஏதாவது உள்ளதா?

இப்போது, கண்ணாடி பாட்டிலைத் தலைகீழாகப் பிடிப்போமா? இப்போதும் பாட்டிலினுள் ஏதோ ஒன்று உள்ளது என்றால் ஏற்றுக் கொள்வாயா? கீழே கொடுக்கப்பட்ட செயல்பாட்டின் மூலம் பாட்டிலினுள் என்ன உள்ளது என்பதனைத் தெரிந்துக் கொள்வோம்.




தண்ணீர் நிரப்பிய பாத்திரத்தினுள் பாட்டிலின் வாய்ப்பகுதியை படம்1 இல் உள்ளவாறு வைத்து அழுத்தவும். என்ன நடக்கிறது? பாட்டிலினுள் நீர் புகுகிறதா? தற்போது பாட்டிலை மெதுவாகச் சரிக்கவும். தற்போது மீண்டும் பாட்டிலை நீரினுள் படம்2 இல் காட்டியபடி மூழ்க வைக்கவும். பாட்டிலினுள் நீர் புகுகிறதா?

படம்2 ஐ உற்று நோக்கவும். பாட்டிலில் இருந்து காற்றுக் குமிழ்கள் வெளிவருவதைக் காணலாம்.

இச்சோதனையில் குமிழ்கள் வரும் ஒலி கேட்கிறதா?

கண்ணாடிப் பாட்டிலினுள் என்ன இருந்தது என்று இப்போது உங்களுக்குத் தெரிகிறதா?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 46 11-08-2018 10:28:39

# காற்று

9A8R9M




## காற்றின் பயன்கள்






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 47 11-08-2018 10:28:40

ஆம், உங்கள் யூகம் சரியே. பாட்டிலில் இருந்தது காற்றுதான்.

பாட்டில் காலியாக இல்லை. அதைத் தலைகீழாய்ப் பிடிக்கும் பொழுது கூட அதனுள் காற்று நிரம்பியிருந்தது. அதனால்தான் நாம் பாட்டிலைத் தலைகீழாகத் தண்ணீரினுள் மூழ்கடிக்க அமிழ்த்தியபொழுது தண்ணீர் அதனுள் புகவில்லை. ஏனெனில், உள்ளிருந்த காற்றிற்கு வெளியேற வழியில்லை.

பாட்டிலைச் சரித்துத் தண்ணீரில் அமிழ்த்தியபொழுது, அதன் உள்ளிருந்த காற்று குமிழியாக வெளியேறியது. நீர் காற்றின் இடத்தை ஆக்கிரமித்தது.

**இதிலிருந்து பாட்டில் முழுவதும் காற்று நிறைந்து இருந்தது எனத்தெரிகிறது.**

## 4.1 வளிமண்டலம்

**நமது பூமியானது காற்றாலான ஒரு மிகப்பெரிய மேலுறையால் மூடப்பட்டுள்ளது. இது வளிமண்டலம் என்று அழைக்கப்படுகிறது.** புவிப்பரப்பிலிருந்து 800 கி.மீ தொலைவிற்கு மேல் பரந்து விரிந்துள்ள வளிமண்டலமானது புவியின் ஈர்ப்புவிசையால் பூமியின் கட்டுப்பாட்டில் நிலை நிறுத்தப்படுகிறது. வளிமண்டலமானது சூரியனில் இருந்து வரும் தீங்கு விளைவிக்கக் கூடிய பெரும்பாலான கதிர்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. காற்றின் பரவலானது புவிக்கு அருகில் மிக அதிகமாகவும், மேலே செல்லச்செல்லக் குறைவாகவும் காணப்படும். ஏனெனில், நாம் மேலே செல்லச்செல்ல புவியின் ஈர்ப்புவிசை குறைவதால், அதிக அளவு காற்றினை புவியால் ஈர்க்க முடியாமல் போகிறது.

வளிமண்டலமானது ஐந்து வெவ்வேறு அடுக்குகளால் ஆனது. அவையாவன: அடிவளி மண்டலம் (Troposphere), அடுக்குவளி மண்டலம் (Stratosphere), இடைவளி மண்டலம் (Mesosphere), அயனி மண்டலம் (Ionosphere), புறவளி மண்டலம் (Exosphere).




அடிவளி மண்டலமானது பூமிக்கு அருகிலுள்ள நாம் வாழும் அடுக்கு ஆகும். இது புவி மேற்பரப்பிலிருந்து 16 கி.மீ உயரம் வரையிலானது. காற்றின் இயக்கம் இந்த அடுக்கில்தான் நடைபெறும். இவ்வடுக்கில் உள்ள நீராவிதான் மேகங்கள் உருவாகக் காரணமாக இருக்கிறது. பூமியில் நாம் அனுபவிக்கும் வானிலைக்கு இந்த அடுக்கே காரணமாகிறது. வலுவான காற்று மற்றும் மாறுபாடான வானிலையைத் தவிர்ப்பதற்காக இவ்வடுக்குக்கு மேல்தான் வானூர்திகள் பறக்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

ஒரு குறிப்பிட்ட இடத்தில் காற்று வீசும் திசையைக் கண்டறிய காற்றுத்திசைகாட்டி பயன்படுகிறது. காற்றின் திசையறிய நீங்கள் ஒரு திசைகாட்டியையும் உருவாக்கலாம். நீங்களே செய்து பார்த்து மகிழவும்.







athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 48 11-08-2018 10:28:42

அடுக்குவளி மண்டலமானது அடிவளி மண்டலத்துக்கு மேல் அமைந்துள்ளது. இந்த அடுக்கில் தான் ஓசோன் படலம் உள்ளது. ஓசோன் படலமானது, சூரியனிலிருந்து வரக்கூடிய புற ஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் பாதுகாக்கிறது.

## 4.2 ஆக்சிஜன், கார்பன்–டை–ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் போன்றவை காற்றில் கலந்துள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் சோதனை

### காற்று ஒரே பொருளால் ஆனதா? அல்லது ஒரு கலவையா?

பன்னெடுங்காலமாக, அதாவது 18ஆம் நூற்றாண்டு வரையிலும், மனிதர்கள் காற்றினை பருப்பொருளில் அடங்கியுள்ள ஒரே வகையான அடிப்படைத்துகள்கள் என்றே நினைத்தனர். எனினும், 1774ல் ஜோசப் பிரிஸ்ட்லி என்பவர் தனித்துவமான ஒரு சோதனையை மேற்கொண்டு, "காற்று என்பது ஒரு அடிப்படைப் பொருள் அல்ல; ஆனால் அது பல வாயுக்கள் அடங்கியுள்ள ஒரு கலவை" என்பதைச் சோதனை மூலம் நிரூபித்தார். அவர் நிறமற்ற, அதிக வினை த்திறன் கொண்ட வாயுவினைக் கண்டறிந்தார். பின்னர் அவ்வாயு ஆண்டனி லவாய்சியர் என்ற பிரெஞ்சு வேதியியலாளரால் 'ஆக்சிஜன்' என்று பெயரிடப்பட்டது.

பிரிஸ்ட்லி ஒரு நீர்த்தொட்டியில் ஒரு மிதவையினைப் போட்டு அதில் ஒரு மெழுகுவர்த்தியினை வைத்தார். [அந்த மெழுகுவர்த்தியினை ஒரு கண்ணாடி ஜாடியினைக் கொண்டு மூடினார். ஜாடியின் அடிப்பகுதியில் நீர் இருந்தமையால் இவ்வமைப்பினுள் காற்று நுழையவோ, வெளியேறவோ வழியில்லாதவாறு ஜாடி முற்றிலும் அடைக்கப்பட்டுள்ளது (படம் – 1).]

நீங்கள் யூகித்தவாறே மிகச் சிறிய காலத்திற்குள், எரியும் மெழுகுவர்த்தியானது அணைந்துவிடும். ஓர் உருப்பெருக்கும் கண்ணாடியினைக் கொண்டு சூரிய ஒளிக்கற்றைகளைக் குவித்து, மெழுகுவர்த்தியினை மீண்டும் எரிய வைக்க முயற்சித்தார். இவ்வாறாக மூடிய ஜாடியினைத் திறக்காமலேயே அவர் பலமுறை ஜாடியினுள் உள்ள மெழுகுவர்த்தியை மீண்டும் மீண்டும் எரிய வைக்க முயற்சித்தார். ஆனால் மெழுகுவர்த்தியை மீண்டும் எரிய வைக்க முடியவில்லை. இதிலிருந்து நாம் என்ன அறியலாம்? (படம் – 2).

காற்றினுள் எரிதலுக்குத் துணை செய்யும் ஏதோ ஒரு பொருள் இருந்தது என்றும், அது வேறு ஒரு பொருளாக மாற்றம் அடைந்துவிட்டது என்றும் அறியலாம். எரிதலுக்குத் துணை செய்யும் ஒரு பொருள் வேறொரு பொருளாக முற்றிலும் மாற்றும் வரை சுடரானது எரிகின்றது, பின்னர் அணைந்து விடுகின்றது.

[பின்னாளில் வந்த வேதியியலாளர்கள் எரிதலுக்குத் துணை செய்யும் வாயுவினை ஆக்சிஜன் என்று பெயரிட்டு, எரிதல் நிகழும் பொழுது பெரும்பாலான ஆக்சிஜன், கார்பன்–டை–ஆக்சைடாக மாற்றப்படும் என்றும் கண்டறிந்தனர்].

தற்பொழுது நீரினுள் அமிழ்த்தி வைக்கப்பட்டுள்ள ஜாடியினை வெளிக்காற்று நுழையாதவாறு கவனமாகத் தூக்கி, ஜாடியினுள் உயிருள்ள ஒரு சுண்டெலியினை பிரிஸ்ட்லி வைத்தார் (படம் –3). நீங்கள் யூகித்தவாறே ஜாடியில் ஆக்சிஜன் இல்லாததால் சுண்டெலி இறந்துவிட்டது. இதிலிருந்து எலி உயிர்வாழ ஆக்சிஜன் அவசியம் என்பது தெளிவாகிறது (படம் –4).

அடுத்தபடியாக, ஜாடியினை கவனமாகத் தூக்கி, அதனுள் ஒரு புதினாச் செடியினை வைத்தார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 49 11-08-2018 10:28:42

படம் – 1



மெழுகுவர்த்தி எரிகின்றது

படம் – 2



ஆக்சிஜன் தீர்ந்துவிட்டதால் மெழுகுவர்த்தி அணைந்தது

படம் – 3



சுண்டெலி நுழைக்கப்படுகிறது

படம் – 4



ஜாடி அமைப்பினுள் ஆக்சிஜன் இல்லாததால், சுண்டெலி இறந்துவிடுகின்றது

படம் – 5



புதினாச் செடி நுழைக்கப்படுகிறது

படம் – 6



புதினாச் செடி ஆக்சிஜன் வழங்குவதால், மெழுகுவர்த்தி தொடர்ந்து எரிகின்றது

படம் – 7



புதினாச் செடி உள்ளே இருப்பதால், மெழுகுவர்த்தி எரிகின்றது. சுண்டெலி உயிருடன் இருக்கின்றது

சுண்டெலியைப் போன்று புதினாச் செடியும் உயிருள்ளது என்பதால், அச்செடி வாடிவிடும் என்று நினைத்தார் (படம்– 5). (குறிப்பு படம் 5யைக் காண்க. அதில் ஜாடி நீருக்குள்ளே அமிழ்ந்து இருக்கும்பொழுதே செடி உள்நுழைக்கப்படுகிறது. ஏனெனில் வெளிக்காற்று ஜாடியினுள் நுழைவதைத் தடுப்பதற்காக இவ்வாறு நீரினுள் செடியானது நுழைத்து ஜாடியினுள் வைக்கப்படுகிறது). ஆனால் அச்செடியானது வாடவில்லை. புதினாச் செடியினை வைத்த சிறிது நேரத்திற்குப் பின், மெழுவர்த்தியினை மீண்டும் எரிய வைக்க முடிந்தது. மேலும் சுடர் அணையாமல் எரிந்தது (படம் – 6).

ஒரு ஜாடியினுள் ஒரு மெழுகுவர்த்தி எரிய வைக்கப்பட்டு, புதினாச் செடியும் சுண்டெலியும் ஜாடியினுள் வைக்கப்பட்டன. இவ்வாறாக செய்து ஜாடியினுள் உள்ள ஆக்சிஜன் முழுவதையும் கார்பன்–டை–ஆக்ஸைடாக மாற்றமடைய வைத்தார். அதனைத் தொடர்ந்து ஜாடியினுள் வைக்கப்பட்ட இரு உயிரினங்களும் தொடர்ந்து உயிர் வாழ்ந்தன (படம்–7). இதிலிருந்து தாவரத்திற்கும் விலங்கிற்கும் இடையில் ஓர் இணக்கமான உறவு ஏற்பட்டு உள்ளதை புரிந்து கொண்டார். அதாவது சுண்டெலியானது ஆக்சிஜனைப் பயன்படுத்தி கார்பன்–டை–ஆக்ஸைடினை வெளியிடுகிறது என்றும், சுண்டெலி வெளியிட்ட கார்பன்–டை–ஆக்ஸைடினை தாவரம் பெற்றுக் கொண்டு ஆக்சிஜனை வெளியிடுகிறது என்றும் கண்டறிந்தார்.

1730 முதல் 1799 முடிய, ஜான் இன்ஜென்ஹவுஸ் என்பவர் தாவரங்கள் ஒளிச்சேர்க்கையினை நிகழ்த்துவதற்கு சூரியஒளி தேவைப்படுகிறது என்பதனை நிரூபித்தார். மேலும், சுவாசிக்கும் சுண்டெலியாலும், எரியும் மெழுகுவர்த்தியாலும், கார்பன்–டை–ஆக்சைடு வெளியிடப்பட்டு மாசடையும் காற்றினை, தாவரங்கள் ஒளிச்சேர்க்கை புரிந்து, ஆக்சிஜனை வெளியிட்டு, தூய்மைப்படுத்துகிறது என்பதையும் நிரூபித்தார்.

**இச்சோதனைகளின் மூலம், காற்று ஒரு கலவை என்பதனையும், காற்றானது ஆக்சிஜன், கார்பன்–டை–ஆக்சைடு போன்ற**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 50 11-08-2018 10:28:42

பல வாயுக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

### ஒளிச்சேர்க்கையில் ஆக்சிஜன் வெளியாகிறது

**செயல்பாடு 2:** ஹைட்ரில்லா செடியின் ஒரு கிளையை எடுத்து அதனை ஒரு புனலில் வைக்கவும். புனலை படத்தில் காட்டியவாறு நீர் நிரப்பப்பட்ட முகவையினுள் தலைகீழாக வைக்கவும். ஒரு சோதனைக் குழாயை புனலின் தண்டின் மீது தலைகீழாக கவிழ்க்கவும்.




புனலின் தண்டு நீருக்குள் மூழ்கியிருக்குமாறு செய்ய வேண்டும். இந்த அமைப்பை சூரிய ஒளி படுமாறு சிறிது நேரம் வைக்கவும். சோதனைக் குழாயினுள் வாயுக்குமிழிகள் மேலெழுவதைக் காணலாம். வாயுக்குமிழ்களினுள், தாவரத்தின் ஒளிச்சேர்க்கை மூலம் பெறப்பட்ட ஆக்சிஜன்தான் உள்ளது. சோதனைக் குழாயினுள் சேகரிக்கப்பட்ட காற்றினருகில் எரியும் தீக்குச்சி ஒன்றைக் கொண்டுவந்தால் அது சுடர்விட்டு எரியும். இதிலிருந்து சேகரிக்கப்பட்ட வாயுவானது ஆக்சிஜன் எனத் தெளிவடையலாம்.

### காற்றில் கலந்துள்ள ஆக்சிஜன் மற்றும் நைட்ரஜனின் இயைபை கணக்கிடும் சோதனை

**செயல்பாடு 3:** இரும்பு ஆக்சிஜனுடன் இணைந்து துருப்பிடித்து இரும்பு ஆக்சைடாக மாறுவது நாம் அறிந்ததே. இந்த நிகழ்வினைப் பயன்படுத்தி காற்றில் உள்ள ஆக்சிஜனின் அளவினைக் கணக்கிடலாம். ஏனெனில், துருப்பிடித்தல் வினைக்குத் தேவையான ஆக்சிஜன் காற்றிலிருந்து பெறப்பட்டது.




ஒரு சிறிய அளவில் மெல்லியதான இரும்புக் கம்பிச் சுருளினை எடுத்து சுருட்டி ஒரு 20 மி.லி அளவீட்டுடன் கூடிய சோதனைக் குழாயினுள் அழுத்தி வைக்கவும். பின் குழாயினுள் நீரை ஊற்றவும். அதிகளவு நீரினை சோதனைக்குழாயினைச் சாய்த்து வெளியேற்றவும். ஒரு 500 மி.லி பீக்கரினுள் பாதியளவு நீரினை ஊற்றவும். அதனுள் சோதனைக் குழாயினை கவிழ்ந்த நிலையில் வைக்கவும். இந்த அமைப்பினை எந்தவொரு தொந்தரவும் செய்யாமல் ஒரு வாரம் அப்படியே வைக்கவும்.

அந்த இரும்புக் கம்பிச்சுருளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் சோதனைக் குழாயினுள் உள்ள நீரின் அளவினையும் உற்றுநோக்கவும்.

சோதனைக் குழாயினுள் நீரின் அளவு உயர்ந்துள்ளதைக் காணலாம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 51 11-08-2018 10:28:43

இரும்பானது நீரில் உள்ள ஆக்சிஜனை எடுத்துக் கொண்டு துருப்பிடிப்பதால் அதற்கு ஈடான அளவு சோதனைக் குழாய்க்கு வெளியே உள்ள நீர், சோதனைக் குழாயினுள் நுழையும். இது ஏறத்தாழ 20% இருக்கும். **இதன் மூலம் காற்றில் ஏறத்தாழ 20% ஆக்சிஜன் இருப்பதை அறியலாம்.**

**மேலும் அறிந்துகொள்வோம்!**

டேனியல் ரூதர்ஃபோர்டு என்ற ஸ்காட்லாந்தைச் சேர்ந்த வேதியியலாளர் நைட்ரஜனைக் கண்டறிந்தார். அவர் முதலில் எரியும் மெழுகுவர்த்தியினை உள்ளடக்கிய மணிஜாடியினை பயன்படுத்தி காற்றிலுள்ள ஆக்சிஜனை கார்பன்–டை–ஆக்ஸைடாக மாற்றினார். பின் அந்தக் காற்றினைச் சுண்ணாம்பு நீரில் செலுத்தி அதிலுள்ள கார்பன்–டை–ஆக்சைடு வாயுவினையும் முற்றிலும் நீக்கினார்.

இவ்வகையில், காற்றில் ஆக்சிஜன் மற்றும் கார்பன்–டை–ஆக்சைடு முற்றிலும் இல்லை என்பதை உறுதி செய்தபின்னர் அக்காற்றானது எரிதலுக்கும் துணை புரியவில்லை, தாவரம் உயிர்வாழவும் பொருத்தமானதாக இல்லை என்று அறிந்தார். அக்காற்று நைட்டரிலிருந்து பெறப்பட்ட நைட்ரஜன் வாயுவின் பண்பினை ஒத்திருந்ததைக் கண்டறிந்து அதற்கு **'நைட்ரஜன்'** எனப் பெயரிட்டார்.

**காற்றில் உள்ள கார்பன்–டை–ஆக்சைடைக் கண்டறியும் சோதனை**

ஒரு கண்ணாடிக் குவளையில் சிறிதளவு சுண்ணாம்பு நீரை எடுத்துக்கொள்ளவும். அதனுள் ஊறிஞ்சு குழாய் கொண்டு காற்றினை செலுத்தவும். அவ்வாறு செலுத்தும்பொழுது, சுண்ணாம்பு நீரினுள் வெண்ணிற வீழ்படிவு உருவாகும். சிறிது நேரம் உற்று நோக்கினால், அந்தச் சுண்ணாம்பு நீர் பால்போல மாறும். இதிலிருந்து **காற்றினுள் கார்பன்–டை–ஆக்சைடு இருப்பதை அறியலாம்.**



## 4.3 காற்றின் இயைபு

பிரிஸ்ட்லியின் சோதனையைத் தொடர்ந்து இன்ஜென்ஹவுஸ் மற்றும் ரூதர்ஃபோர்டு நிகழ்த்திய சோதனைகளிலிருந்து காற்று ஒரேவிதமான துகள்களைக் கொண்ட பொருளல்ல என அறிந்து கொண்டோம். தற்போது காற்றில் அடங்கியுள்ள பகுதிப் பொருள்களைப் பட்டியலிடுவோம். இதுவே காற்றின் இயைபு ஆகும்.

காற்றின் பெரும்பகுதி நைட்ரஜன் வாயு ஆகும். காற்றில் ஐந்தில்–நான்கு பங்கு நைட்ரஜன் வாயு உள்ளது. காற்றின் இரண்டாவது பெரும்பங்கு ஆக்சிஜன் ஆகும். இது தோராயமாக ஐந்தில்–ஒரு பங்கு ஆகும். நைட்ரஜனையும், ஆக்சிஜனையும் தவிர, காற்றில் சிறிதளவு கார்பன்–டை–ஆக்சைடு, நீராவி, ஆர்கான் மற்றும் ஹீலியம் போன்ற வாயுக்களும் உள்ளன. மேலும் காற்றில் சிறிதளவு தூசுப் பொருள்களும் அடங்கியுள்ளன.

**காற்றின் கூறுகளின் இயைபு கீழுள்ள படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது**






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 52 11-08-2018 10:28:45

**காற்றின் இயைபு இடத்துக்கு இடமும், காலநிலையைப் பொறுத்தும் மாறுபாடு அடைகிறது. உதாரணத்திற்கு,**

- தொழிற்சாலை அதிகமுள்ள நகரங்களில் உலவும் காற்றில் மற்ற இடங்களில் உள்ளதை விட அதிக அளவு கார்பன்–டை–ஆக்சைடு இருக்கும்.
- கடலோர பகுதிகளிலுள்ள காற்றில் மற்ற இடங்களை விட அதிக அளவு நீராவி அடங்கியிருக்கும்.
- மழைக்காலங்களில் காற்றில் அதிக அளவு ஈரப்பதம் காணப்படும்.
- காற்றோட்டமுள்ள இடங்களில் உள்ள காற்றில் அதிக அளவு தூசுப்பொருள்கள் காணப்படும்.

### காற்றில் உள்ள தூசுப்பொருள்களைக் கண்டறியும் சோதனை

ஓர் இருட்டு அறையினுள் மெல்லிய துவாரம் வழியாக சூரிய ஒளி ஊடுருவினால் ஒளி செல்லும் தடத்தில் தூசுப்பொருள்கள் அசைந்தாடுவதைக் காணலாம். அறையில் உள்ள காற்றில் எப்போதும் தூசுப்பொருள்கள் நிறைந்து இருக்கும். ஆனால் அவற்றை சூரிய ஒளி படும்போது மட்டுமே நம் கண்களால் பார்க்கமுடிகிறது. நமது பகுதியில் உள்ள தூசுப்பொருள்களின் அளவினைக் கணக்கெடுக்க ஒரு செயல்பாட்டினைச் செய்யலாமா?

ஒரு வரைபடத்தாளினை எடுத்துக் கொண்டு, அதில் 5x5 செ.மீ என்ற அளவில் ஒரு கட்டத்தினை வரையவும். அந்த வரைபடத்தாளில் மெல்லிய படலமாக சிறிது கிரீஸினைத் தடவவும். இந்தத்தாளானது தூசுகளைச் சேகரிக்கும் தாளாகச் செயல்படும். இதே போல் நான்கு அல்லது ஐந்து தாள்களைத் தயார் செய்யவும். பின்னர் வகுப்பறையில் கலந்தாலோசித்து, இந்தத் தாள்களை எங்கு வைப்பது, எவ்வளவு நாட்கள் வைப்பது, எந்த முறையில் வைத்திருந்தால், அது சிறந்த சோதனையாக அமையும் என்று விவாதித்து, அவ்விடங்களில் வைக்கவும். அந்த தாள்கள் பறந்து போகாதவாறு தாள்களைப் பொருத்தி வைக்கவும். குறிப்பிட்ட நாட்களுக்குப் பின், அனைத்துத் தாள்களையும் சேகரித்து தூசுப்பொருள்களின் எண்ணிக்கையை உருப்பெருக்கி கண்ணாடியின் துணையுடன் கணக்கிடவும். பின்வரும் படத்தில் காணப்படும் அமைப்பு போன்ற ஒன்று உங்களுக்கும் கிடைக்கலாம்.



குறிப்பிட்டுள்ள கட்டத்தினுள் சேகரிக்கப்பட்டுள்ள சராசரி தூசுப் பொருட்களின் எண்ணிக்கையை பின்வருமாறு கணக்கிடலாம்.

$$\text{சராசரி} = \frac{\text{(தாளில் குறிப்பிட்டுள்ள பகுதியில் காணப்படும் தூசுப்பொருள்களின் மொத்த எண்ணிக்கை )}}{\text{(தாளில் குறிப்பிட்ட பகுதியில் உள்ள கட்டங்களின் எண்ணிக்கை )}}$$

தூசுப்பொருள்களின் வீச்சினை பின்வருமாறு கணக்கிடலாம்,

வீச்சு = அதிகபட்ச அளவு – குறைந்த பட்ச அளவு

எல்லா இடங்களிலிருந்தும் பெறப்பட்ட தாள்களில் தூசுப்பொருள்களைக் கணக்கிட்டு அதனைப் பின்வரும் அட்டவணையில் பூர்த்தி செய்யவும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 53 11-08-2018 10:28:45

| தூசு சேகரிக்கப்பட்ட இடம் | சராசரி தூசின் அளவு | வீச்சு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

❖ எந்த இடத்தில் அதிகளவு தூசுப்பொருள்கள் காணப்படுகிறது?

---

❖ எந்த இடத்தில் குறைந்தளவு தூசுப்பொருள்கள் காணப்படுகிறது?

---

**காற்றில் உள்ள நீராவியைக் கண்டறியும் சோதனை**



ஒரு முகவையில் சில பனிக்கட்டித் துண்டுகளை எடுத்துக்கொள்ளவும். சிறிது நேரம் அதனை மேஜை மீது வைக்கவும். என்ன நிகழ்கிறது என உற்று நோக்கவும். அந்த முகவையின் வெளிப்புறத்தில் சிறிய நீர்த் துளிகள் உருவாவதைக் காணலாம். அந்த நீர்த் துளிகள் எங்கிருந்து வந்தவை எனத் தெரியுமா? முகவையின் மேற்பரப்பிலுள்ள குளிர்ச்சியினால், காற்றிலுள்ள நீராவி குளிர்ந்து நீர்த்துளிகளாக மாற்றம் பெற்றுள்ளன. **இச்சோதனையிலிருந்து, காற்றில் நீராவி உள்ளதை அறிய முடிகிறது.**

## 4.4 எரிதல் மற்றும் உள்ளெரிதல்

நாம் மெழுகுவர்த்தி, காகிதம், மண்ணெண்ணெய், கரி, மரம் மற்றும் சமையல் எரிவாயுவை எரிக்கும்பொழுது ஆக்சிஜன் தேவைப்படுகிறது. இவற்றை எரியச் செய்யும் ஆக்சிஜன் நம்மைச் சுற்றியுள்ள காற்றிலிருந்துதான் கிடைக்கிறது. ஒரு பொருள் தொடர்ந்து எரிய வேண்டுமானால் தொடர்ச்சியான காற்று தேவைப்படுகிறது. எரியும் பொருளுக்குக் கிடைக்கும் ஆக்சிஜனை நிறுத்திவிட்டால் பொருள் எரியாது.

**செயல்பாடு 4: எரிவதற்கு ஆக்சிஜன் தேவை**

இரு மெழுகுவர்த்திகளை மேசைமேல் வைக்கவும். இரு மெழுகுவர்த்திகளும் சமஅளவிலும் சமஉயரத்திலும் இருக்குமாறு அமைக்கவும். அவற்றை சுண்ணக்கட்டியினால் மெழுகுவர்த்தி 1 மற்றும் 2 என்று குறிக்கவும். இரண்டு மெழுகுவர்த்திகளையும் ஒளிரச் செய்யவும். தற்போது மெழுகுவர்த்தி 2 ஐ ஒரு கண்ணாடி முகவையால் படத்தில் காட்டியவாறு மூடவும்




இரு மெழுகுவர்த்திகளும் என்ன நிகழ்கிறது என கவனிக்கவும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 54 11-08-2018 10:28:46

மெழுகுவர்த்தி 1 ல் என்ன நிகழ்கிறது?

மெழுகுவர்த்தி 2 ல் என்ன நிகழ்கிறது?

ஏன் மூடப்பட்ட மெழுகுவர்த்தி அணைந்தது என்பதனை யூகிக்க முடிகிறதா?

நிகழ்வுகளைத் தொகுப்போம்.

மெழுகுவர்த்தி 1 ஊதி அணைக்கும் வரையிலும் அல்லது வெளிவிசை எதுவும் செயல்படாதவரையிலும் தொடர்ந்து எரியும். ஏனென்றால் அது எரிவதற்கான காற்று தொடர்ந்து கிடைத்துக் கொண்டு இருக்கிறது. மெழுகுவர்த்தி 2 சிறிது நேரம் எரிந்து பின் அணைகிறது. எரியும் மெழுகுவர்த்தியைக் கண்ணாடி முகவையால் மூடும்பொழுது, மூடிய முகவைக்குள் இருந்த ஆக்சிஜனை எடுத்துக்கொண்டு மெழுகுவர்த்தி எரிகிறது. குறைந்த அளவு காற்று மட்டுமே முகவையினுள் உள்ளதால், மிகக் குறைந்த அளவு ஆக்சிஜன்தான் மெழுகுவர்த்தி எரியத் துணைபுரிகிறது. முகவையினுள் உள்ள காற்றிலுள்ள ஆக்சிஜன் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்டபின் மெழுகுவர்த்தி அணைகிறது.

இந்தச் சோதனையை வெவ்வேறு அளவுகள் கொண்ட கொள்கலன்களைக் கொண்டு திரும்பச்செய்யவும். எடுத்துக்காட்டாக, 250 மி.லி கூம்புக்குடுவை, 500 மிலி கண்ணாடிப் புட்டி, ஒரு லிட்டர் ஜாடி மற்றும் இரண்டு லிட்டர் ஜாடி போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். எரியும் மெழுகுவர்த்தியை இந்தக் கொள்கலன்களைக் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக மூடவும். பின்னர் மெழுகுவர்த்தி அணைவதற்கு எடுத்துக்கொள்ளும் காலத்தைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.

| வ. எண் | கொள்கலனின் கன அளவு (மிலி) | மெழுகுவர்த்தி அணைய எடுத்துக் கொள்ளும் காலம் (வினாடி) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு உம்மால் விளக்கம் எழுத முடியுமா?

______________________________

வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் ஆக்சிஜன் அளவு குறைவாக இருக்கும். இதனால் ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்தும்போது, எரிபொருளுடன் ஆக்சிஜனையும் சேர்த்தே செலுத்துகிறோம்.

ஆக்சிஜன் முன்னிலையில் ஒரு பொருளை வெப்பப்படுத்தும் பொழுது ஒளியையும் வெப்பத்தையும் வெளிபடுத்தும் நிகழ்வு **எரிதல்** எனப்படும். ஒளியின்றி வெப்பத்தை வெளிப்படுத்தும் நிகழ்வு **உள்ளெரிதல்** எனப்படும்.

## 4.5 தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கையில் காற்றின் முக்கியத்துவம்

### தாவரங்களின் சுவாசம்

தாவரங்களின் வளர்ச்சிக்கு ஆற்றல் தேவைப்படுகிறது. எனவே தாவரங்களிலும் சுவாசம் நடைபெறுகிறது. சுவாசித்தலின்பொழுது, தாவரங்கள் விலங்குகளைப் போலவே ஆக்சிஜனை உள்ளிழுத்து கார்பன்–டை–ஆக்சைடை வெளிவிடுகின்றன. தாவரங்கள் வளிமண்டலக் காற்றுடன் நிகழ்த்தும் வாயுப்பரிமாற்றம் அவற்றின் இலைகளிலுள்ள ஸ்டொமட்டா என்ற மிகச்சிறிய இலைத்துளைகள் மூலம் நடைபெறுகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 55 11-08-2018 10:28:46




### ஒளிச்சேர்க்கை

தாவரங்கள் அவற்றிற்கான உணவினை ஒளிச்சேர்க்கை மூலம் உற்பத்தி செய்கின்றன. ஒளிச்சேர்க்கையின் பொழுது, காற்றிலுள்ள கார்பன்–டை–ஆக்சைடும் மண்ணிலுள்ள நீரும் சூரிய ஒளியின் துணையுடன் வினை புரிந்து உணவை உற்பத்தி செய்கின்றன. பெரும்பாலான தாவரங்களில் பச்சையம் எனும் ஒரு நிறமி காணப்படுகிறது.

இது ஒளிச்சேர்க்கையின் பொழுது சூரிய ஒளியினை உறிஞ்ச பயன்படுகிறது. கீழுள்ள சமன்பாடு ஒளிச்சேர்க்கையை விளக்குகிறது.

$$\text{கார்பன்–டை–ஆக்சைடு} + \text{நீர்} \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரியஒளி}} \text{உணவு} + \text{ஆக்சிஜன்}$$

தாவரங்கள், சுவாசித்தலின்பொழுது எடுத்துக் கொண்ட ஆக்சிஜனை விட அதிக அளவு ஆக்சிஜனை ஒளிச்சேர்க்கையின் பொழுது வெளிவிடுகின்றன.

### விலங்குகளின் சுவாசம்

உயிரினங்கள் அனைத்தும் உயிர் வாழக் காரணமாக இருக்கும் மிக முக்கியமான தனிமமான ஆக்சிஜன் காற்றில் உள்ளது என்பதை நாம் அறிவோம். நாம் சுவாசிக்கும் காற்றில் ஆக்சிஜன் 21% உள்ளது. ஆக்சிஜன் இன்றி உயிர்கள் வாழ இயலாது.

நாம் சுவாசிக்கும்பொழுது, அதிலுள்ள ஆக்சிஜன், செரிக்கப்பட்ட உணவுப் பொருளுடன் வேதி வினைபுரிந்து, கார்பன்– டை–ஆக்சைடு, நீராவி மற்றும் ஆற்றலை உருவாக்குகிறது. இவ்வினையில் உருவாகும் ஆற்றலானது, நமது உடலின் பல்வேறு செயல்களான இயக்கம், வளர்ச்சி மற்றும் வளர்சிதை மாற்றத்திற்கு உதவுகிறது. இவ்வினையில்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 56 11-08-2018 10:28:47

செரிக்கப்பட்ட உணவுப் பொருளுடன் ஆக்சிஜன் வினைபுரிந்து, கார்பன்–டை–ஆக்சைடு, நீராவி மற்றும் ஆற்றல் உருவாகும் நிகழ்வு "சுவாசம்" எனப்படும். இவ்வினையை சமன்பாட்டில் பின்வருமாறு எழுதலாம்.

உணவு + ஆக்சிஜன் ⟶ கார்பன்–டை–ஆக்சைடு + நீர் + ஆற்றல்

சுவாசத்தின் போது உருவாகும் கார்பன்–டை–ஆக்சைடு இரத்தத்தில் கலந்து, நுரையீரல்கள் மூலம் வெளியேற்றப்படுகின்றது.

நாம் உள்ளிழுக்கும் மற்றும் வெளியிடும் காற்றில் ஒரே மாதிரியான வாயுக்கள் உள்ளன. ஆனால் நைட்ரஜனைத் தவிர, மற்ற வாயுக்களின் அளவுகளில் மாற்றம் ஏற்படும். உள்ளிழுக்கும் காற்றில் ஆக்சிஜன் அளவு அதிகம், வெளியிடும் காற்றில் கார்பன்–டை–ஆக்சைடின் அளவு அதிகம்.

உள்ளிழுக்கும் மற்றும் வெளியிடும் காற்றின் இயைபுகளைக் கீழ்கண்ட அட்டவணையில் காண்க.

| பகுதிப் பொருட்கள் | உள்ளிழுக்கும் காற்று | வெளியேற்றும் காற்று |
|---|---|---|
| நைட்ரஜன் | 78% | 78% |
| ஆக்சிஜன் | 21% | 16% |
| கார்பன் – டை– ஆக்சைடு | 0.03% | 4% |
| நீராவி | மாறுபடும் அளவு | கூடுதலாக வெளியேறும் |
| மந்த வாயுக்கள் | 0.95% | 0.95% |
| தூசு | மாறுபடும் அளவு | இல்லை |
| வெப்பநிலை | அறை வெப்பநிலை | உடல் வெப்பநிலை |

### நீரில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் சுவாசம்

குளங்கள், ஏரிகள், ஆறுகள் மற்றும் கடல்கள் போன்றவற்றில் உள்ள நீரில் குறிப்பிட்ட அளவு ஆக்சிஜன் கரைந்திருக்கும். இந்த ஆக்சிஜனை நீர்நிலைகளில் வாழும் தாவரங்கள் மற்றும் விலங்குகள் தங்களது சுவாசத்திற்கு பயன்படுத்திக் கொள்கின்றன. உதாரணமாக தவளைகள் தோல்வழியாகவும், மீன்கள் செதில்களின் துணை கொண்டும் சுவாசிக்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

கார்பன் – டை – ஆக்சைடை –57°C க்கு குளிர்விக்கும் பொழுது, அவை திரவ நிலையை அடையாமல், நேரடியாக திட நிலைக்கு மாறுகிறது. இதனை உலர்பனிக்கட்டி என்றழைக்கின்றனர். இது குளிர்விக்கும் காரணியாகப் பயன்படுகின்றது. இறைச்சி மற்றும் மீன்கள் போன்றவற்றை சரக்குந்து மற்றும் சரக்குப் பெட்டிகளில் ஏற்றுமதி செய்யும் பொழுது, அப்பொருள்களைப் பதப்படுத்த உலர்பனிக்கட்டியைப் பயன்படுத்துகின்றனர்.



## 4.6 காற்றின் பயன்கள்

- ❖ தாவர மற்றும் விலங்குகளின் சுவாசத்திற்கு காற்று பயன்படுகிறது.
- ❖ மரக்கட்டை, நிலக்கரி, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு (LPG), போன்ற எரிபொருள்களை எரிக்கக் காற்று உதவுகின்றது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 57 11-08-2018 10:28:47

❖ அழுத்தப்பட்ட காற்று பல்வேறு வாகனங்களின் டயர்களில் பயன்படுகிறது.

❖ இயற்கையின் நீர் சுழற்சியில் காற்று முக்கியப் பங்கு வகிக்கிறது.

❖ சூரியனிடமிருந்து வரும் தீங்கு விளைவிக்கக்கூடிய கதிர்வீச்சுகள் புவியின் மேற்பரப்பிற்கு வருவதை வளிமண்டலத்திலுள்ள ஓசோன் படலம் தடுக்கின்றது.

❖ சில தவிர்க்க முடியாத சூழல்களில்

அ. சுவாசப் பிரச்சனையுள்ள நோயாளிகள்



ஆ. மிக உயரமான மலைச் சிகரங்கள் ஏறுவோர்



இ. ஆழ்கடல் நீந்துபவர்களும் ஆக்சிஜன் வாயு நிறைந்த உருளையை சுவாசத்திற்கு பயன்படுத்துகின்றனர்.



❖ வீசும் காற்றானது, காற்றாலைகளின் இறக்கைகளை சுழலச் செய்கின்றது. காற்றாலைகள் நீர் நிலைகளிலிருந்து நீர் இறைக்கவும், மாவு அரைக்கவும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுகின்றன.




### நினைவில் கொள்க

❖ காற்று நம்மைச் சுற்றி எல்லா இடங்களிலும் இருக்கின்றது.

❖ நமது பூமியைச் சுற்றி ஒரு பெரிய உறை போலக் காணப்படும் காற்று, வளிமண்டலம் என்றழைக்கப்படுகிறது.

❖ ஆக்சிஜன் முன்னிலையில் ஒரு பொருளை வெப்பப்படுத்தும் போது, ஒளியையும், வெப்பத்தையும், வெளிப்படுத்தும் நிகழ்வு எரிதல் எனப்படும்.

❖ தாவரங்களின் ஒளிச்சேர்க்கையின் பொழுது வெளியாகும் ஆக்சிஜனை விலங்குகள் தங்கள் சுவாசத்திற்குப் பயன்படுத்திக் கொள்கின்றன என்பதை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 58
11-08-2018 10:28:49

பிரிஸ்ட்லியின் சோதனை மூலம் நாம் அறியலாம்.

- இன்ஜென்ஹவுஸ் சோதனையின் மூலம் ஒளிச்சேர்க்கையின் பொழுது ஆக்சிஜனை வெளியிட சூரிய ஒளி தேவைப்படுகிறது என்பதை அறியலாம்.
- காற்றில் நைட்ரஜன் 78%, ஆக்சிஜன் 21%, கார்பன்–டை–ஆக்சைடு 1%, நீராவி, மந்த வாயுக்கள் மற்றும் சிறு தூசுப்பொருட்கள் கலந்துள்ளன.
- காற்றின் இயைபு இடத்திற்கு இடம் மற்றும் பருவத்திற்குப் பருவம் மாறுபடுகிறது.
- தாவரங்களில்,

கார்பன்–டை–ஆக்சைடு + நீர் —(சூரியஒளி / பச்சையம்)→ உணவு + ஆக்சிஜன்

- விலங்குகளில்,

உணவு + ஆக்சிஜன் → கார்பன்–டை–ஆக்சைடு + நீர் + ஆற்றல்

- நீர்வாழ் தாவரங்களும் விலங்குகளும் சுவாசத்திற்கு நீரில் கரைந்துள்ள ஆக்சிஜனைப் பயன்படுத்துகின்றன.
- பூமியை நேரடியாகத் தாக்கக்கூடிய தீங்கு விளைவிக்கக்கூடிய கதிர் வீச்சுகளை வளிமண்டலத்திலுள்ள ஓசோன் படலம் தடுத்துப் பாதுகாக்கிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 59 11-08-2018 10:28:49

## இணையச்செயல்பாடு

# ஒளிச்சேர்க்கை



தாவரங்கள் ஒளிச்சேர்க்கையின் போது சூரிய ஆற்றலை வேதி ஆற்றலாக மாற்றுகையில் அதன் அணு நிலையை அறிவோமா!

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி 'Illuminating Photosynthesis' பக்கத்திற்குச் செல்க.

படி 2: செயல்பாட்டின் மேல்பக்கத்தில் 3 பொத்தான்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் 'The Cycle' என்பதைச் சொடுக்கினால் திரை விலகும். தாவரத்தையும் தண்ணீர்க்குடுவையையும் தேர்ந்தெடுக்கவும்.

படி 3: 'Atomic Shuffle' என்பதைச் சொடுக்கி, ஒளிச்சேர்க்கையின் போது இருக்கும் அணு நிலையைத் தெரிந்து கொள்க.

படி 4: செயல்பாட்டை மீண்டும் செய்ய 'Replay' என்பதையும் அடுத்த செயல்பாட்டிற்கு 'Next' என்பதையும் சொடுக்கவும்

படி 1






படி 2

படி 3





படி 4

**உரலி:**

http://www.bbc.co.uk/schools/scienceclips/ages/10_11/rev_irrev_changes_fs.shtml

B440_SCI_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 60 11-08-2018 10:28:50

## மதிப்பீடு

9ARICX

### I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. காற்றில் நைட்ரஜனின் சதவீதம் ________ .

அ. 78% ஆ. 21%

இ. 0.03% ஈ. 1%

2. தாவரங்களில் வாயுப் பரிமாற்றம் நடைபெறும் இடம் ________ ஆகும்.

அ. இலைத்துளை ஆ. பச்சையம்

இ. இலைகள் ஈ. மலர்கள்

3. காற்றுக் கலவையில் எரிதலுக்கு துணைபுரியும் பகுதி ________ ஆகும்.

அ. நைட்ரஜன்

ஆ. கார்பன்–டை–ஆக்சைடு

இ. ஆக்சிஜன்

ஈ. நீராவி

4. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையில் நைட்ரஜன் பயன்படுத்தப்படுகிறது ஏனெனில் ________ .

அ. உணவிற்கு நிறம் அளிக்கிறது

ஆ. உணவிற்கு சுவை அளிக்கிறது

இ. உணவிற்கு புரதத்தையும், தாது உப்புக்களையும் அளிக்கிறது

ஈ. உணவுப் பொருளை புதியதாகவே இருக்கும்படிச் செய்கின்றது

5. காற்றில் உள்ள ________ மற்றும் ________ வாயுக்களின் கூடுதல் காற்றின் 99 % இயைபாகிறது

i. நைட்ரஜன் ii. கார்பன்–டை–ஆக்சைடு
iii) மந்த வாயுக்கள் iv. ஆக்சிஜன்

அ. i மற்றும் ii ஆ. i மற்றும் iii

இ. ii மற்றும் iv ஈ. i மற்றும் iv

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. காற்றில் காணப்படும் எளிதில் வினைபுரியக்கூடிய பகுதி ________ ஆகும்.

2. ஒளிச்சேர்க்கையின் பொழுது வெளிவரும் வாயு ________ ஆகும்.

3. சுவாசக் கோளாறு உள்ள நோயாளிக்கு கொடுக்கப்படும் வாயு ________ ஆகும்.

4. இருண்ட அறையினுள் வரும் சூரிய ஒளிக்கற்றையில் ________ காண முடியும்.

5. ________ வாயு சுண்ணாம்பு நீரை பால் போல மாற்றும்.

### III. சரியா (அ) தவறா எனக் கூறுக. தவறாக இருப்பின் சரியாக எழுதவும்

1. உள்ளிழுக்கும் காற்றில் அதிக அளவு கார்பன்–டை–ஆக்சைடு உள்ளது.

2. புவி வெப்பமயமாதலை மரங்களை நடுவதன் மூலம் குறைக்கலாம்.

3. காற்றின் இயைபு எப்பொழுதும் சமமான விகிதத்தில் இருக்கும்.

4. திமிங்கலம் ஆக்சிஜனை சுவாசிக்க நீரின் மேற்பரப்பிற்கு வரும்.

5. காற்றில் ஆக்ஸிஜனின் இயைபானது, தாவரங்களின் சுவாசம் மூலமும், விலங்குகளின் ஒளிச்சேர்க்கை மூலமும் சமன் செய்யப்படுகிறது.

### IV. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. இயங்கும் காற்று | – | அடிவளிமண்டலம் |
| 2. நாம் வாழும் அடுக்கு | – | ஒளிச்சேர்க்கை |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 61 11-08-2018 10:28:50

3. வளிமண்டலம் – தென்றல் காற்று

4. ஆக்சிஜன் – ஓசோன் படலம்

5. கார்பன்–டை–ஆக்சைடு – எரிதல்

## V. கீழ்வரும் வாக்கியங்களை சரியான வரிசையில் எழுதுக

1. தாவரங்கள் உணவு தயாரிக்கும் முறைக்கு ஒளிச்சேர்க்கை என்று பெயர்.
2. தாவரங்களின் வளர்ச்சிக்கு ஆற்றல் தேவைப்படுகிறது.
3. தாவரங்களும் விலங்குகளைப் போல ஆக்சிஜனை எடுத்துக் கொண்டு கார்பன்–டை–ஆக்சைடை வெளியிடுகின்றன.
4. தாவரங்கள் சூரிய ஒளியின் முன்னிலையில், பச்சையத்தின் துணையோடு, வளி மண்டலத்திலிருந்து கார்பன்–டை–ஆக்சைடை எடுத்துக் கொண்டு உணவு தயாரிக்கின்றன.
5. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இந்த முறையில் சுவாசிக்க ஆக்சிஜன் கிடைக்கிறது.
6. இந்த முறையில், தாவரங்கள் ஆக்சிஜனை வெளியிடுகின்றன.

## VI. ஒப்புமை தருக

1. ஒளிச்சேர்க்கை : ________ :: சுவாசம்: ஆக்சிஜன்
2. காற்றின் 78% : எரிதலுக்கு துணை புரிவதில்லை :: ________ : எரிதலுக்கு துணை புரிகிறது

## VII. கொடுக்கப்பட்டுள்ள படத்தை கூர்ந்து கவனித்து, கேள்விக்கு பதிலளிக்கவும்.

1. மீன்காட்சியகத்தில் தொட்டியில் உள்ள தாவரங்களை நீக்கினால் என்னவாகும்?
2. மீன் காட்சியகத்தில் உள்ள மீன்களை நாம் நீக்கிய பின், தாவரங்களுடன் அதனை ஓர் இருண்ட அறையினுள் வைத்தால் என்னவாகும்?



## VIII. மிகக் குறுகிய விடையளி

1. வளிமண்டலம் என்றால் என்ன? வளிமண்டலத்தில் உள்ள ஐந்து அடுக்குகளின் பெயர்களைத் தருக.
2. நிலத் தாவரங்களின் வேர்கள், சுவாசத்திற்கான ஆக்சிஜனை எவ்வாறு பெறுகின்றன?
3. ஒருவரின் ஆடையில் எதிர்பாராத விதமாக தீப்பற்றினால், என்ன செய்ய வேண்டும்? ஏன்?
4. நீங்கள் வாய் வழியாக சுவாசித்தால், என்ன நிகழும்?

## IX. குறுகிய விடையளி

1. மழைக்காலங்களில் பிஸ்கட்டை மூடாமல் வைக்கும்பொழுது, மொறுமொறுப்புத் தன்மையை இழக்கிறது? ஏன்?
2. பணியிலுள்ள போக்குவரத்துக் காவலர் முகமூடி அணிவதேன்?

## X. விரிவான விடையளி

1. தாவரங்களும், விலங்குகளும் ஆக்சிஜன் மற்றும் கார்பன்–டை–ஆக்சைடு, இவற்றின் இடையே உள்ள சமநிலையை எவ்வாறு பாதுகாக்கின்றன?
2. பூமியில் உயிரினங்கள் வாழ வளிமண்டலம் ஏன் தேவைப்படுகிறது?

## XI. உயர் சிந்தனைத்திறன் வினாவிற்கு விடையளி

1. தீயணைப்பானிலிருந்து தீயை அணைப்பதற்கு ஏன் கார்பன்–டை–ஆக்சைடு வெளியிடப்படுகிறது என உங்களால் யூகிக்க முடிகிறதா?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_4.indd 62 11-08-2018 10:28:52



# அலகு 5 செல்

9B1EEK

## செல்லின் வகைப்பாடு

- செல்லின் வகைகள்
  - புரோகேரியாட்டிக் செல் — தெளிவான உட்கரு கிடையாது
    - பாக்டீரியா
    - சயனோபாக்டீரியா
  - யூகேரியாட்டிக் செல் — தெளிவான உட்கரு காணப்படுகிறது
    - தாவர செல்
    - விலங்கு செல்






## கற்றல் நோக்கங்கள்

- ❖ எல்லா உயிரினங்களும் செல்களாலானது என்பதை அறிந்து கொள்ளுதல்
- ❖ நுண்ணோக்கியைப் பயன்படுத்தி செல்லை எப்படி உற்றுநோக்குவது என்பதை அறிதல்
- ❖ செல்லின் அமைப்பைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல்
- ❖ செல்லைப் பற்றியும், செல்லின் நுண்ணுறுப்புகள் பற்றியும் விளக்கிக் கூறுதல்.
- ❖ தாவர செல்லும், விலங்கு செல்லும் அமைப்பின் அடிப்படையில் எவ்வாறு வேறுபடுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 63 11-08-2018 10:30:26

## அறிமுகம்





மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்று நோக்கவும். இவை இரண்டிற்குமிடையே உள்ள ஒற்றுமையை உங்களால் காணமுடிகிறதா?

உங்கள் கண்களை மூடி, ஒரு செங்கல் சுவரைக் கற்பனை செய்து பாருங்கள். அந்தச் சுவரின் அடிப்படை அலகு எது ? ஆம், செங்கல்தான் சுவரின் அடிப்படை அலகு. செங்கல் சுவரைப் போலவே உங்கள் உடலும் ஒரு அடிப்படை அலகாக கட்டமைக்கப்பட்டுள்ளது. அதன் பெயரே செல் ஆகும். **உயிரினங்களின் அடிப்படை அமைப்பு மற்றும் செயல் அலகு செல் ஆகும்.**

செல்கள் ஓர் உயிரியின் அனைத்து அடிப்படைப் பண்புகளையும் செயல்பாடுகளையும் கட்டமைக்கின்றன.

### 5.1 செல்கள்

அனைத்து உயிரினங்களும் ஓர் செல்லாலோ அல்லது பல செல்களாலோ ஆனவை. பலவகையான செல்கள் காணப்பட்டாலும் அவை அடிப்படையான ஒத்த சில பண்புகளைக் கொண்டுள்ளன.

9BAAG8

### 5.1.1 செல்லின் கண்டுபிடிப்பு

ராபர்ட் ஹூக், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர், கணித அறிஞர் மற்றும் கண்டுபிடிப்பாளர். இவர் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட நுண்ணோக்கியை மேம்படுத்தி ஒரு கூட்டு நுண்ணோக்கியை உருவாக்கினார். நுண்ணோக்கியின் அருகில் வைக்கப்பட்டுள்ள விளக்கில் இருந்து வரும்

**மேலும் அறிந்துகொள்வோம்!**

**நம்மால் வெறும் கண்களால் செல்லினை காண இயலாது.** ஏனெனில் அது அளவில் மிகச்சிறியது. அதனை கூட்டு நுண்ணோக்கியால் நம்மால் காண இயலும். தற்காலத்தில் எலக்ட்ரான் நுண்ணோக்கியானது செல்களை நன்கு உருப்பெருக்கம் செய்து காணப்பயன்படுகிறது.







athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 64 11-08-2018 10:30:30

ஒளியை, நீர் லென்ஸ் கொண்டு குவியச் செய்து நுண்ணோக்கியின் கீழ் வைக்கப்பட்டுள்ள பொருளிற்கு ஒளியூட்டினார். அதன் மூலம் அப்பொருளின் நுண்ணிய பகுதிகளை நுண்ணோக்கியின் மூலம் தெளிவாகக் காண முடிந்தது.

ஒரு முறை மரத்தக்கையை இந்த நுண்ணோக்கினைக் கொண்டு கண்டபோது அதில் சிறிய ஒரே மாதிரியான அறைகளைக் கண்டார். இது அவருக்கு ஆச்சரியம் அளிக்கவே வண்ணத்துப்பூச்சியின் இறகுகள், தேனீக்களின் கண்கள் என பலவற்றையும் நுண்ணோக்கியினைக் கொண்டு ஆராய்ந்தார்.






ராபர்ட் ஹூக்

அதன் அடிப்படையில் 1665 ஆம் ஆண்டு மைக்ரோகிராபியா என்ற தனது நூலினை வெளியிட்டார். அதில் முதன்முதலில் செல் என்ற சொல்லினைப் பயன்படுத்தி திசுக்களின் அமைப்பினை விளக்கினார் . லத்தீன் மொழியில் செல்லுலா என்பதற்கு சிறிய அறை என்று பொருள் ஆகும்.

**செல்லைப் பற்றி படிக்கும் அறிவியல் பிரிவு செல் உயிரியல் எனப்படும்.**

## 5.2 செல்லின் அமைப்பு

ஒரு செல் மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. செல்லைச் சுற்றி காணப்படும் வெளி உறையான செல்சவ்வு
2. திரவநிலை சைட்டோபிளாசம்
3. உட்கரு

நமது உடலில் கண்கள், இதயம், நுரையீரல் போன்ற உறுப்புகள் எவ்வாறு தனித்தனியான நுட்பமான பணிகளை செய்வதற்காக அமைந்துள்ளனவோ அதுபோல செல்லின் பல்வேறு பணிகளைச் செய்வதற்காக செல்லினுள் பல உறுப்புகள் காணப்படுகின்றன. இவை செல் **நுண்உறுப்புகள்** எனப்படுகின்றன.

உடலின் எப்பகுதியில் ஒரு செல்லானது இடம்பெறுகிறதோ, அதற்கேற்ப அச்செல்லின் நுண்ணுறுப்புகள் சிறப்புத்தன்மைகளைப் பெற்று அந்த உறுப்பின் நுட்பமான பணிகளைச் செய்கின்றன.

### 5.2.1 செல்லின் அளவு

செல்கள் வேறுபட்ட அளவுகளில் காணப்படுகின்றன. இவற்றின் அளவானது மைக்ரோமீட்டரிலிருந்து (ஒரு மீட்டரில் ஆயிரத்தில் ஒரு பகுதி) சில சென்டிமீட்டர் வரை வேறுபடுகின்றது.

இவை பொதுவாக மிகச் சிறியவையாக இருப்பதால் இவற்றை வெறும் கண்களால்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 65 11-08-2018 10:30:31

காண இயலாது. இவற்றினை கூட்டு நுண்ணோக்கி வழியாகப் பெரிதுபடுத்திப் பார்க்கலாம்.

**செயல்பாடு 1:**

**நோக்கம்:**

ஒரு தனி செல்லின் அமைப்பைக் கண்டறிதல் (கோழி முட்டை)

**தேவையான பொருட்கள் :**

கோழி முட்டை, ஒரு தட்டு

**செயல்முறை :**

கோழி முட்டையின் ஓட்டை உடைத்து, முட்டையை கவனமாக தட்டில் ஊற்றவும்.

**காண்பன :**

கோழி முட்டையின் மையத்தில் மஞ்சள் பகுதியும், அதைச் சுற்றி ஒளி ஊடுருவக் கூடிய, ஜெல்லி போன்ற, ஆல்புமினால் ஆன வெண்மைப்பகுதியும் உள்ளது. அடர்த்தியான மஞ்சள் பகுதி, அச்செல்லின் உட்கருவாகும். வெள்ளை நிறப்பகுதி சைட்டோபிளாசம் எனப்படும். முட்டை ஓட்டின் உட்புறம் ஒரு மெல்லிய சவ்வு காணப்படுகிறது. அது செல்சவ்வைக் குறிக்கிறது.



பாக்டீரியாக்கள் மிகச்சிறியவை. ஒரே செல்லால் ஆனவை. இவை 0.1 முதல் 0.5 மைக்ரோமீட்டர் வரையிலான அளவில் காணப்படுகின்றன.

இதற்கு மாறாக ஒரே செல்லால் ஆன நெருப்புக்கோழியின் முட்டையானது 170 மி.மீ விட்டம் கொண்டதாக உள்ளது. இதனை வெறும் கண்களால் பார்க்க இயலும்.

நமது உடலில் நரம்பு செல்லானது மிக நீளமான செல்லாகக் கருதப்படுகின்றது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> செல்லின் அளவிற்கும் உயிரினத்தின் அளவிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. உதாரணமாக யானையின் செல், சுண்டெலியின் செல்லை விட மிகப் பெரியதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

## 5.2.2 செல்லின் வடிவம்

செல்கள் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக சில செல்களின் வடிவங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.



நரம்பு செல்



இரத்த சிவப்பணுக்கள்



தசை செல்கள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 66 11-08-2018 10:30:34

## செல் அளவுகள்

**(சிறியது முதல் பெரியது வரை)**




9BJ6HV

### 5.2.3 செல்களின் எண்ணிக்கை

செல்களின் எண்ணிக்கை உயிரினத்திற்கு உயிரினம் மாறுபடும். உயிரினங்கள் ஒரு செல் கொண்டு ஒரு செல் உயிரினமாக இருக்கலாம் அல்லது பல செல்கள் (நூறு முதல் மில்லியன் எண்ணிக்கையில்) கொண்டு பல செல் உயிரினமாகவும் இருக்கலாம். பாக்டீரியா, அமீபா, கிளாமிடோமோனஸ் மற்றும் ஈஸ்ட் போன்றவை ஒரு செல் உயிரினத்திற்கு உதாரணமாகும். ஸ்பைரோகைரா, மாமரம், மற்றும் மனிதன் போன்றவை பல செல் உயிரினங்களுக்கு உதாரணமாகும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> தோராயமாக, மனித உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கை $3.7 \times 10^{13}$ (அ) 37,000,000,000,000.

### 5.3 செல்லின் வகைகள்

பொதுவாக செல்கள் இரண்டு வகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவை தெளிவற்ற உட்கருவைக் கொண்ட புரோகேரியாட்டிக் செல்கள் மற்றும் தெளிவான உட்கருவைக் கொண்ட யூகேரியாட்டிக் செல்கள் ஆகும்.

### 5.3.1 புரோகேரியாட்டிக் செல்கள்

பாக்டீரியா போன்ற ஒரு செல் நுண்ணியிரிகளில் புரோகேரியாட்டிக் செல்கள் காணப்படுகின்றன. இவை தெளிவான உட்கருவினை கொண்டிருக்காது. இவற்றின் உட்கரு நியூக்ளியாய்டு என அழைக்கப்படுகின்றது. இச்செல்களின் நுண்ணுறுப்புகளைச் சுற்றி சவ்வுகள் காணப்படுவதில்லை.

இப்புவியில் முதன்முதலில் உருவான செல் புரோகேரியாட்டிக் செல் ஆகும். இவை 0.003 மைக்ரோமீட்டர் முதல் 2.0 மைக்ரோமீட்டர் வரையிலான விட்டம் கொண்டவை.

எ.கா: எக்ஸெரிச்சியா கோலை பாக்டீரியா.

புரோகேரியோட்டிக் செல் அமைப்பு
எ.கா எக்ஸெரிச்சியா கோலை






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 67 11-08-2018 10:30:39

## 5.3.2 யூகேரியாட்டிக் செல்கள்

தெளிவான உட்கருவைக் கொண்டுள்ள செல்கள் யூகேரியாட்டிக் செல்கள் என அழைக்கப்படுகின்றன. இவை புரோகேரியாட்டிக் செல்களைவிட அளவில் பெரியவை. இவை சவ்வினால் சூழப்பட்ட நுண்உறுப்புகளைக் கொண்டுள்ளன. **எ.கா:** தாவர செல்கள், விலங்கு செல்கள், பெரும்பான்மையான பூஞ்சைகள் மற்றும் ஆல்காக்கள்.

யூகேரியாட்டிக் செல்




### செயல்பாடு 2:

**நோக்கம்:**

வெங்காயத் தோலை உரித்து, அதை நுண்ணோக்கியில் வைத்துப் பார்த்தல்

**தேவையான பொருட்கள்:**

கண்ணாடி ஸ்லைடு (நழுவம்) கண்ணாடி மென்தகடு, வெங்காயம், அயோடின் கரைசல், கத்தி, இடுக்கி மற்றும் நுண்ணோக்கி.

**செயல்முறை:**

ஒரு வெங்காயத்தை எடுத்து அதை நீள வாக்கில் இரண்டு துண்டுகளாக வெட்டவும். அதிலிருந்து சதைப்பற்றுள்ள இலையை எடுத்து, அதன் உட்பக்கமுள்ள ஒளி ஊடுவக் கூடிய மெல்லிய சவ்வு போன்ற பகுதியை பிரிக்கவும். கண்ணாடி நழுவத்தை எடுத்து, அதில் ஒரு துளிநீரை விட்டு, அந்நீரில் இச்சவ்வை வைக்கவும். அதன் மீது ஒரு துளி அயோடின் கரைசலை இடவும். கண்ணாடி மென் தட்டால் இதை மூடி, நுண்ணோக்கியில் வைத்து பார்க்கவும்..

**காண்பன :**

நுண்ணோக்கியில் வெங்காயத் தோலில் உள்ள செவ்வக வடிவ செல்லினை நாம் பார்க்கலாம். ஒவ்வொரு செல்லிலும் நியூக்ளியஸ் இருப்பதையும் நாம் காணலாம்.



### புரோகேரியாட்டிக் மற்றும் யூகேரியாட்டிக் செல்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள்

| புரோகேரியாடிக் செல் | யூகேரியாட்டிக் செல் |
|---|---|
| ஒன்று முதல் இரண்டு மைக்ரான் விட்டம் கொண்டவை. | பத்து முதல் நூறு மைக்ரான் விட்டம் கொண்டவை. |
| செல் நுண்உறுப்புகளைச் சுற்றி சவ்வு காணப்படுவதில்லை. | செல் நுண்உறுப்புகளைச் சுற்றி சவ்வு காணப்படுகின்றது. |
| தெளிவற்ற உட்கரு கொண்டவை. | தெளிவான உட்கரு கொண்டவை |
| நியுக்ளியோலஸ் காணப்படுவதில்லை | நியுக்ளியோலஸ் காணப்படும் |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 68 11-08-2018 10:30:40

## 5.3.3 தாவர செல் மற்றும் விலங்கு செல்

தாவரங்கள் மற்றும் விலங்குகள் பல செல் உயிரினங்களாகும். இவற்றின் செல்கள் யூகேரியாட்டிக் செல்கள் என அழைக்கப்படுகின்றன.

### தாவர செல்லின் முக்கியப் பண்புகள்

- ❖ தாவரசெல்கள் விலங்கு செல்களை விட அளவில் பெரியனவையாகவும், கடினத்தன்மை மிக்கதாகவும் உள்ளன.
- ❖ தாவர செல்கள் அதனைச் சுற்றி வெளிப்புறத்தில் செல்சுவரையும் அதனையடுத்து செல்சவ்வினையும் கொண்டுள்ளன.
- ❖ தாவரசெல்கள் பசுங்கணிகங்களை கொண்டுள்ளன. அவற்றில் காணப்படும் பச்சையம் என்னும் நிறமி தாவரத்திற்கு அதன் உணவினை தயாரித்துக்கொள்ள உதவுகின்றது.
- ❖ நுண்குமிழ்கள் காணப்படுகின்றன ஆனால் சென்டிரியோல்கள் காணப்படவில்லை.

தாவர செல்




### விலங்கு செல்லின் முக்கிய பண்புகள்

- ❖ விலங்கு செல்கள், தாவர செல்களைவிட அளவில் சிறியவை. விலங்குசெல்கள் கடினத்தன்மை அற்றவை.
- ❖ விலங்கு செல்லைச் சுற்றி செல்சவ்வு காணப்படுகிறது ஆனால் செல்சுவர் காணப்படுவதில்லை.
- ❖ விலங்கு செல்லில் பசுங்கணிகங்கள் காணப்படுவதில்லை.
- ❖ இவை சிறிய நுண்குமிழ்களை கொண்டுள்ளன.
- ❖ விலங்கு செல்லில் சென்ட்ரியோல்கள் உண்டு.

விலங்கு செல்




### செல்லின் முப்பரிமாண அமைப்பு

1. ஒரு செல் எப்படி இருக்கும்?
2. செல்லின் வடிவம் மற்றும் அளவு என்ன?

9BT2JI




செல்கள் முப்பரிமாண அமைப்புடையவை. மேற்காணும் முப்பரிமாண அமைப்பில் நீங்கள் செல்லின் முழுத்தோற்றத்தைக் காணலாம். செல்லின் நுண்உறுப்புகளின் அளவு, வடிவம் மற்றும், அவற்றின் அமைவிடத்தையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 69 11-08-2018 10:30:42

**செயல்பாடு 3: நோக்கம்:** இருபரிமாண மற்றும் முப்பரிமாண அமைப்பிற்கிடையே உள்ள வேறுபாட்டைக் கண்டறிதல்.

**தேவையான பொருள்கள்:** பாலித்தீன் பை, தண்ணீர், கோலிக்குண்டு,

**செய்முறை:** பாலித்தீன் பையில் தண்ணீரை எடுத்துக்கொண்டு அதில் கோலிகுண்டைப் போடவும். பிறகு அதனை பார்த்து உனது நோட்டில் படம் வரையவும். நீ வட்ட வடிவில் படம் வரைந்திருந்தால் அது இருபரிமாணப் படம். நீ கோள வடிவில் வரைந்திருந்தால் அது முப்பரிமாணப்படம் ஆகும்.

**முடிவு:** இப்போது நீ தவறாகப் புரிந்து கொண்டிருந்தால் அதனை உணர்ந்திருப்பாய். விலங்கு செல்கள் எப்போதும் கோள வடிவில் தான் இருக்கும். வட்ட வடிவில் இருக்காது.

### 5.3.4 செல்லின் நுண்ணுறுப்புகள் மற்றும் அதன் பணிகள்

| வ. எண் | செல்லின் பாகம் | முக்கிய பணிகள் | சிறப்புப் பெயர் |
|---|---|---|---|
| 1 | செல் சுவர் | • செல்லைப் பாதுகாக்கிறது.<br>• செல்லிற்கு உறுதி மற்றும் வலிமையைத் தருகிறது. | தாங்குபவர் (அல்லது) பாதுகாப்பவர். |
| 2 | செல் சவ்வு | • செல்லிற்குப் பாதுகாப்பு தருகிறது.<br>• செல்லின் போக்குவரத்திற்கு உதவுகிறது | செல்லின் கதவு |
| 3 | சைட்டோபிளாசம் | • நீர் அல்லது ஜெல்லி போன்ற, செல்லில் உள்ள நகரும் பொருள் | செல்லின் நகரும் பகுதி |
| 4 | மைட்டோ காண்டிரியா | • செல்லிற்குத் தேவையான அதிக சக்தியை உருவாக்கித் தருகிறது | செல்லின் ஆற்றல் மையம் |
| 5 | பசுங்கணிகம் | • இதில் பச்சையம் என்ற நிறமி உள்ளது.<br>• இது சூரிய ஒளியை ஈர்த்து ஒளிச் சேர்க்கையின் மூலம் உணவு தயாரிக்க உதவுகிறது. | செல்லின் உணவுத் தொழிற்சாலை |
| 6 | நுண்குமிழ்கள் | • இது உணவு, நீர் மற்றும் வேதிப் பொருள்களைச் சேமிக்கிறது. | சேமிப்புக் கிடங்கு |
| 7 | உட்கரு (நியூக்ளியஸ்) | • செல்லின் மூளையாகச் செயல்படுகிறது.<br>• செல்லின் அனைத்துச் செயல்களையும் ஒருங்கிணைத்துக் கட்டுப்படுத்துகிறது. | செல்லின் கட்டுப்பாட்டு மையம். |
| 8 | உட்கரு உறை (நியூக்ளியஸ் உறை) | • நியூக்ளியஸைச் சுற்றி அதைப் பாதுகாக்கிறது<br>• நியூக்ளியஸின் உள்ளேயும் வெளியேயும் பொருள்களை அனுப்புகிறது. | உட்கரு வாயில் (அல்லது) உட்கரு கதவு |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 70 11-08-2018 10:30:42

## நினைவில் கொள்க

❖ உயிரினங்களின் அடிப்படை அலகு செல்களாகும்.

❖ செல் இரு வகைப்படும். அவை புரோகேரியோட்டிக் செல்கள் மற்றும் யூகேரியோட்டிக் செல்களாகும்.

❖ தாவர செல்லும், விலங்கு செல்லும் தங்களது செயல்களைச் செய்வதற்கு அதற்கே உரித்தான செல் நுண்ணுறுப்புகளைக் கொண்டுள்ளன.

❖ விலங்கு செல்களைக்காட்டிலும் தாவர செல்கள் செல்சுவர் மற்றும் பசுங்கணிகம் ஆகியவற்றை கூடுதலாகப் பெற்றுள்ளன.

## செல்

### இணையச்செயல்பாடு



**தாவர செல்லிற்கும் விலங்கு செல்லிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை அவற்றின் செயல்பாட்டைக் கொண்டு அறிவோமா!**




படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி 'What do Cells do?' பக்கத்திற்குச் சென்றவுடன், Start என்பதைச் சொடுக்கி, செயல்பாட்டைத் தொடங்குக.

படி 2: Continue என்பதைச் சொடுக்கி செயல்பாட்டின் உள்ளே சென்றதும் செல்லின் பாகங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றைக் கொண்டு முழு செல் அமைப்பை உருவாக்க வேண்டும். பாகங்களின் மேல் சுட்டியை வைக்க, அவற்றின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளலாம்.

படி 3: சுட்டியைக் கொண்டு பாகங்களை இழுத்து, செல்லின் பொருத்தமான இடத்தில் பொருத்துக.

படி 4: விலங்கு செல்லை முழுமையாகச் செய்து முடித்ததும், அதே செயல்முறையில் தாவர செல்லையும் அறிக.



படி 1


படி 2



படி 3

**உரலி:**

http://sepuplhs.org/high/sgi/teachers/cell_sim.html

B440_SCI_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 71 11-08-2018 10:30:44

## மதிப்பீடு

9C2XL6

### I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. செல்லின் அளவைக் குறிக்கும் குறியீடு

   அ. சென்டி மீட்டர் ஆ. மில்லி மீட்டர்

   இ. மைக்ரோ மீட்டர் ஈ. மீட்டர்

2. நுண்ணோக்கியில், பிரியா செல்லைப் பார்க்கும் போது அச்செல்லில் செல்சுவர் இருக்கிறது. ஆனால் நியூக்ளியஸ் இல்லை. பிரியா பார்த்த செல்.

   அ. தாவர செல் ஆ. விலங்கு செல்

   இ. நரம்பு செல் ஈ. மீட்டர்

3. யூகேரியோட்டின் கட்டுப்பாட்டு மையம் எனப்படுவது

   அ. செல் சுவர் ஆ. நியூக்ளியஸ்

   இ. நுண்குமிழ்கள் ஈ. பசுங்கணிகம்

4. கீழே உள்ளவற்றில் எது ஒரு செல் உயிரினம் அல்ல?

   அ. ஈஸ்ட் ஆ. அமீபா

   இ. ஸ்பைரோ கைரா ஈ. பாக்டீரியா

5. யூகேரியோட் செல்லில் நுண்ணுறுப்புகள் காணப்படும் இடம்

   அ. செல்சுவர்

   ஆ. சைட்டோபிளாசம்

   இ. உட்கரு (நியூக்ளியஸ்)

   ஈ. நுண்குமிழ்கள்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. செல்களைக் காண உதவும் உபகரணம் ________________

2. நான் செல்லில் உணவு உற்பத்தியைக் கட்டுப்படுத்துகிறேன் நான் யார்? ________________

3. நான் ஒரு காவல்காரன் நான் செல்லினுள் யாரையும் உள்ளே விடமாட்டேன், வெளியேயும் விட மாட்டேன். நான் யார்? ________________

4. செல் என்ற வார்த்தையை உருவாக்கியவர் ________________

5. நெருப்புக் கோழியின் முட்டை ________________ தனி செல் ஆகும்.

### III. சரியா (அ) தவறா எனக் கூறுக. தவறாக இருப்பின் சரியாக எழுதவும்

1. உயிரினங்களின் மிகச் சிறிய அலகு செல்.
2. மிக நீளமான செல் நரம்பு செல்
3. பூமியில் முதன் முதலாக உருவான செல் புரோகோயோட்டிக் செல் ஆகும்.
4. தாவரத்திலும், விலங்கிலும் உள்ள நுண்ணுறுப்புகள், செல்களால் ஆனவை.
5. ஏற்கனவே உள்ள செல்களிலிருந்து தான் புதிய செல்கள் உருவாகின்றன.

### IV. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | கட்டுப்பாட்டு மையம் | – | செல் சவ்வு |
| 2. | சேமிப்பு கிடங்கு | – | மைட்டோ காண்ட்ரியா |
| 3. | உட்கரு வாயில் | – | நியூக்ளியஸ் (உட்கரு) |
| 4. | ஆற்றல் உற்பத்தியாளர் | – | உட்கரு உறை |
| 5. | செல்லின் வாயில் | – | நுண்குமிழ்கள் |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## V. சரியான முறையில் வரிசைப்படுத்துக.

1. யானை, பசு, பாக்டீரியா, மாமரம், ரோஜாச் செடி.
2. கோழி முட்டை, நெருப்புக் கோழி முட்டை, பூச்சிகளின் முட்டை

## VI. ஒப்புமை தருக

1. புரோகேரியோட்:பாக்டீரியா::யூகேரியோட் : __________________
2. ஸ்பைரோகைரா : தாவர செல் : : அமீபா : __________________
3. உணவு உற்பத்தியாளர் : பசுங்கணிகம் : : ஆற்றல் மையம்: _______________

## VII. மிகக் குறுகிய விடையளி

1. 1665 ஆம் ஆண்டு செல்லைக் கண்டறிந்தவர் யார்?
2. நம்மிடம் உள்ள செல்கள் எந்த வகையைச் சார்ந்த செல்கள்?
3. செல்லின் முக்கிய கூறுகள் யாவை?
4. தாவர செல்லில் மட்டும் காணப்படும் நுண்ணுறுப்பு எது?
5. யூகேரியாட்டிக் செல்லிற்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக?
6. நகரும் மையப்பகுதி என்று அழைக்கப்படும் பகுதி எது?
7. சிவா "சிறிய வெங்காயத்தை பெரிய வெங்காயத்தோடு ஒப்பிடும் போது, பெரிய வெங்காயம் பெரிய செல்களைக் கொண்டுள்ளன" என்கிறான். இதை நீ ஏற்றுக் கொள்கிறாயா? மறுக்கிறாயா? ஏன்?

## VIII. குறுகிய விடையளி

1. உயிரினங்களைக் கட்ட உதவும் கட்டுமானம், செல் எனப்படுகிறது ஏன்?
2. பின்வரும் தாவர செல்லில் ஏதேனும் நான்கு பாகங்களைக் குறி.



3. புரோகேரியாட்டிக், யூகேரியாட்டிக் செல்கள் – வேறுபடுத்துக.
4. நுண்ணோக்கியில் நீ கண்ட தாவர செல் மற்றும் விலங்கு செல்லின் படம் வரைக.
5. செல் உயிரியலில் இராபட் ஹூக்கின் பங்களிப்பு பற்றி விளக்குக

## IX. விரிவான விடையளி

1. எவையேனும் ஐந்து செல் நுண்ணுறுப்புகளையும், அதன் பணிகளையும் அட்டவணைப்படுத்துக.
2. புரோகேரியாட்டிக் செல்லின் படம் வரைந்து பாகங்களைக் குறி

## X. செயல் திட்டம்

1. உங்கள் கற்பனைத் திறனைப் பயன்படுத்தி உங்களால் தாவர செல்லின் முப்பரிமாண படத்தை வரைக.
2. ஜெல்லி, கேக் போன்ற உணவு பொருட்களைப் பயன்படுத்தி செல்லை உருவாக்குக. அச்செல்லின் நுண்ணுறுப்புகளைக் குறிக்க கொட்டைகள் உலர் பழங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக. இந்த மாதிரியை உங்கள் வகுப்பறையில் காட்சிப் பொருளாக வைத்து ஆசிரியர்களையும் மற்ற வகுப்பு மாணவர்களையும் அழைத்து அதைப் பார்க்கச் செய்க. அதைப் பற்றி அவர்களைக் கேள்விகள் கேட்கச் சொல்லி, அதற்குரிய பதில்களை நீங்கள் கூறுங்கள்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_5.indd 73 11-08-2018 10:30:45



அலகு

# 6 மனித உறுப்பு மண்டலங்கள்



## கற்றல் நோக்கங்கள்

- ❖ மனித உடலின் உறுப்புகள் மற்றும் உறுப்புமண்டலங்களின் அமைப்பு மற்றும் அதன் பணிகளைப் புரிந்து கொள்ளுதல்.
- ❖ மனித உடலில் உள்ள பல்வேறு மண்டலங்களையும் அவற்றின் ஒருங்கிணைப்பையும் அறிந்து கொள்ளுதல்.
- ❖ செரிமானம், உட்கிரகித்தல், சுவாசம், கழிவு நீக்கம் மற்றும் இன்னும் பிற. வாழ்க்கைச் செயல் முறைகளின் முக்கித்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்

9CBTHT



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 74 11-08-2018 10:33:15

## அறிமுகம்

உறுப்பு மண்டலம் என்பது அடிப்படைத் திசுக்களால் ஆன ஒன்றிணைந்த உறுப்புகளின் கூட்டமைப்பால் ஆனது. இத்தகைய அமைப்பு முறை ஓர் உயிரினத்தின் பல்வேறு செயல்களை திறனுடன் செயல்படுத்த உதவுகிறது. உறுப்புகள் ஒருங்கிணைந்து ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்தலே **உறுப்பு மண்டலம்** எனப்படும். நமது உடலில் எட்டு பிரதான உறுப்பு மண்டலங்கள் உள்ளன. அவை

- ❖ எலும்பு மண்டலம் ❖ தசை மண்டலம்
- ❖ செரிமான மண்டலம் ❖ சுவாச மண்டலம்
- ❖ இரத்தஓட்ட மண்டலம் ❖ நரம்பு மண்டலம்
- ❖ நாளமில்லாச் சுரப்பி மண்டலம்
- ❖ கழிவு நீக்க மண்டலம்

மனித உடலின் உறுப்பு மண்டலங்களின் அமைப்பு மற்றும் அதன் பணிகளைப் பற்றி இப்பாடத்தில் மேலும் காண இருக்கின்றோம்.

## 6.1 எலும்பு மண்டலம்

- ❖ எலும்பு மண்டலமானது எலும்புகள், குருத்தெலும்புகள், மற்றும் மூட்டுகளால் ஆக்கப்பட்டுள்ளது.
- ❖ தசைகள் இணைக்கப்படுவதற்கு ஏற்ற பகுதியாக எலும்புகள் திகழ்கின்றன.
- ❖ நடத்தல், ஓடுதல், மெல்லுதல், போன்ற செயல்களுக்கு எலும்பு மண்டலம் உதவுகிறது.

மனிதனின் எலும்பு மண்டலம் 206 எலும்புகளை உடையது. சில குருத்தெலும்புகள், இணைப்பு இழைகள், தசை நார்கள் ஆகியவைற்றையும் எலும்பு மண்டலம் உள்ளடக்கியுள்ளது. இணைப்பு இழைகள் எலும்புகளை எலும்புகளுடன் இணைக்கின்றன. தசைநார்கள் எலும்புகளை தசைகளுடன் இணைக்கின்றன.

எலும்பு மண்டலம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. அவை **அச்சுச் சட்டகம் மற்றும் இணையுறுப்புச் சட்டகம்.**

அச்சுச்சட்டகமானது மனித உடலின் செங்குத்தான அச்சை உருவாக்குகிறது. அவை

- ❖ மண்டையோடு
- ❖ முதுகெலும்புத் தொடர் (முதுகெலும்பு)
- ❖ விலா எலும்புக் கூடு

9CKPPG

இணையுறுப்புச் சட்டகமானது மார்பு வளையங்கள், இடுப்பு வளையங்கள், கை கால் எலும்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**செயல்பாடு 1:** அமைதியாக அமர்ந்து உங்களின் உடல் அசைவுகளை கவனிக்கவும். உங்களது இமைகளை நொடிக்கு, நொடி இமைத்துக் கொண்டிருப்பீர்கள். உங்கள் சுவாசத்தின் போது நிகழும் உடல் அசைவுகளைக் கவனியுங்கள் அந்த அசைவுகளை உங்கள் குறிப்பேட்டில் எழுதுங்கள். நம் உடலில் உள்ள சில பகுதிகள் எளிதில் அசையும் திறன் கொண்டவை, சில உறுப்புகள் பல திசைகளில் அசையும் தன்மை கொண்டவை. சில உறுப்புகள் ஒரே ஒரு திசையில் மட்டும் அசையக்கூடியவை. சில உறுப்புக்களை எல்லாத் திசைகளிலும் அசைக்க முடியாது. அது ஏன்?

### மண்டையோடு

மண்டை ஓட்டில் மண்டை ஓட்டு எலும்புகள் மற்றும் முக எலும்புகள் உள்ளன. இவை மூளை மற்றும் முகத்தின் உள்ளமைப்பைப் பாதுகாக்கின்றன. வாய்க்குழியின் அடித்தளத்தில் காணப்படும் ஹயாய்டு எலும்பு மற்றும் செவிச் சிற்றெலும்புகளான சுத்தி எலும்பு, பட்டடை எலும்பு, அங்கவடி எலும்புகளும் மண்டையோட்டில் அடங்கும். மனிதர்களின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 75 11-08-2018 10:33:15

முகத்திலேயே கீழ்த்தாடை எலும்பு தான் மிகப் பெரியது மற்றும் உறுதியானது.

### மண்டையோடு




### முதுகெலும்புத் தொடர்

முதுகெலும்புத் தொடர் மண்டையோட்டின் அடிப்புறத்தில் இருந்து தொடங்குகிறது. இது தண்டுவடத்தைப் பாதுகாக்கின்றது. இது சிறிய முள்ளெலும்புத் தொடர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

### விலா எலும்புக் கூடு

விலா எலும்புக் கூடு 12 இணைகள் கொண்ட வளைந்த, தட்டையான விலா எலும்புகளைக் கொண்டுள்ளது. அவை மென்மையான இதயம், நுரையீரல் போன்ற இன்றியமையாத உடல் உறுப்புகளைப் பாதுகாக்கின்றன.

### கை – கால் எலும்புகள்

மனிதனின் கை – கால் எலும்புகள் இரண்டு இணைகளைக் கொண்டவை, அவை முன்னங்கை மற்றும் பின்னங்கால் எனப்படும். முன்னங்கை எலும்புகள் பிடித்தல், எழுதுதல் போன்ற செயல்களுக்கும், பின்னங்கால் எலும்புகள் நடப்பது, அமர்வது போன்ற செயல்களுக்கும் உதவுகின்றன.

### எலும்பு வளையம்

அச்சுச்சட்டகத்துடன் முன்னங்கைகளையும், பின்னங்கால்களையும் இணைப்பதற்கு முறையே மார்பு வளையம் மற்றும் இடுப்பு வளையமும் உதவுகின்றது.

### எலும்பு மண்டலம்




**செயல்பாடு 2:** நமது உடலில் எலும்புகள் இணையும் இடத்திலேயே அசைவுகள் ஏற்படுகிறது என்பதைக் காண்பித்தல்.

**தேவையான உபகரணங்கள்** : மர அளவு கோல் மற்றும் நூல்

**செயல்முறை** : ஒரு மர அளவுகோலை எடுத்து உங்களுடைய மேற்கையினையும், முன்னங்கையினையும் சேர்த்துக் கட்டும்படி உங்கள் நண்பரிடம் கூறுங்கள். (படத்தில் காட்டியபடி) மர அளவுகோல் உங்களின் முன்னங்கையின் மத்தியில் இருக்கட்டும். இப்பொழுது நீங்கள் எவ்வளவு முறை முயன்றாலும் உங்களால் உங்களுடைய முழங்கையினை மடக்க இயலாது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181



**முடிவு** : ஒரு தனி எலும்பு வளையாது, பல்வேறு எலும்புகள் முழங்கையில் இணைந்து கையை மடக்க உதவுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

1. நமது உடலில் காணப்படும் எலும்புகளில் மிகச்சிறியது நமது உள்காதில் உள்ள அங்கவடி (stapes) எலும்பு ஆகும். இது 2.8 மில்லி மீட்டர் மட்டுமே நீளம் உடையது (சராசரி நீளம்). நமது உடலில் நீளமான எலும்பு தொடை எலும்பு ஆகும்.

2. குழந்தைகள் பிறக்கும் பொழுது 300க்கும் அதிகமான எலும்புகளுடன் பிறக்கின்றன. அவர்கள் வளரும் பொழுது சில எலும்புகள் இணைந்து ஒன்றாக மாறிவிடுகின்றன. ஆகையால் முதிர்ச்சியடைந்த மனிதனின் எலும்புக் கூட்டில் 206 எலும்புகள் உள்ளன.

## 6.2 தசை மண்டலம்

நமது உடலில் எலும்பு மண்டலம் மற்றும் நரம்பு மண்டலத்துடன் சேர்ந்து தசை மண்டலமும் உடலசைவிற்கு உதவுகிறது.

தசைகள் சுருங்கி விரியும் தன்மை கொண்டவை. ஆகையால் அவை உடல் அசைவிற்கு உதவுகின்றன. தசைகள் உடலை சரியான நிலையில் வைத்திருக்கவும், உடல் நிலைப்பாட்டைப் பராமரித்துக் கொள்ளவும் உதவுகின்றன. உடலில், மூன்று வகை தசைகள் உள்ளன. அவை

- எலும்புத் தசைகள்
- மென் தசைகள்
- இதயத் தசைகள்

### தசைகள் எவ்வாறு இயங்குகிறது?

தசைகளால் தள்ள இயலாது. இழுத்துக் கொள்ள மட்டுமே இயலும். மூட்டுக்களில் எலும்புகளை அசைவிக்க இரு தசைகள் தேவைப்படுகிறது. ஒரு தசை சுருங்கும் பொழுது மற்றொன்று விரிவடைகிறது.

**செயல்பாடு 3:** உங்களது முன்னங்கையை மெதுவாக மேலும் கீழும் அசையுங்கள். உங்கள் கையில் உள்ள இருதலைத் தசை மற்றும் முத்தலைத் தசை சுருங்கி விரிவதை உணருங்கள். இவற்றில் கையை மடக்கும்போது முன்புறம் உள்ள இருதலைத் தசைகள் சுருங்கி தடிமனாகிறது. பின்புறத்தில் உள்ள முத்தலைத் தசைகள் தளர்வு கொண்டு, நீண்டு மெல்லியதாகிறது. அதே நேரத்தில் மேற்புறத்தில் உள்ள இருதலைத் தசைகள் தடிமனாவதை நீங்கள் உணரலாம்.

கையினை நீட்டும் போது மேல்புறம் உள்ள இருதலைத் தசைகள் தளர்வடைவதையும் பின்புறம் உள்ள முத்தலைத் தசைகள் சுருங்குவதையும் உணரலாம்.

எ.கா: முன்னங்கையை மேலும், கீழும் அசைவிக்க இருதலைத் தசை, முத்தலைத் தசை என இரு வகைத் தசைகள் தேவைப்படுகின்றன. நமது முன்னங்கையை தூக்கி உயர்த்தும்பொழுது இரு தலைத்தசை சுருங்கி, சிறியதாகிறது, அதே சமயம் முத்தலை தசை விரிந்து கையை மேலே உயர்த்த உதவுகிறது. நாம் முன்னங்கையை கீழ் இறக்கும் பொழுது முத்தலைத் தசை சுருங்கி இருதலைத் தசை விரிவடைந்து கையை கீழே இறக்க உதவுகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 77 11-08-2018 10:33:18

### எலும்புத் தசை

எலும்புத் தசைகள் நமது உடலில் உள்ள எலும்புகளுடன் இணைந்து செயல்படக் கூடியவை. நமது விருப்பத்திற்கேற்ப செயல்படுவதால், இவற்றை இயக்கு தசைகள் என்கிறோம்.

எ.கா: கைகளில் உள்ள தசைகள்.




9CUKR4

### தசை மண்டலம்






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

### மென்தசைகள்

மென்தசைகள் உணவுக்குழல்,சிறுநீர்ப்பை, தமனிகள் மற்றும் பிற உள்ளுறுப்புக்களின் சுவர்களில் காணப்படும். இவை நம் விருப்பத்திற்கேற்பச் செயல்படாதவை. எனவே, இவை கட்டுப்படாத இயங்கு தசைகள் எனப்படுகின்றன.




### இதயத் தசைகள்

இதயத்தின் சுவர் இதயத் தசைகளால் ஆனது. இவை சீராகவும், தொடர்ச்சியாகவும் இதயத்தை துடிக்க வைக்கின்றன. இவையும் நமது விருப்பத்திற்கேற்ப கட்டுப்படாத இயங்கு தசைகளே.

இதயத் தசைகள் – இதயம்



## 6.3 செரிமான மண்டலம்

செரிமான மண்டலத்தில் உணவுக் குழாய் மற்றும் அதனுடன் இணைந்த செரிமானச் சுரப்பிகளும் உள்ளன. இம்மண்டலமானது சிக்கலான உணவுப் பொருட்களை எளிய மூலக்கூறுகளாக மாற்றுதல் மற்றும் செரிக்கப்பட்ட உணவை உட்கிரகித்தல் போன்ற செயல்களைச் செய்கிறது.

உணவுக்குழாயுடன் தொடர்புடைய செரிமான சுரப்பிகளாக உமிழ் நீர் சுரப்பி, கல்லீரல் மற்றும் கணையம் ஆகியவை உள்ளன. இவை செரிமானப் பாதையில் உணவுச் செரிமானம் நடைபெறுவதற்கு உதவியாக செரிமான நொதிகளைச் சுரக்கின்றன. உணவுக் குழாய் சுமார் 9 மீட்டர் நீளமுடைய தசையாலான நீண்ட குழல் ஆகும். இரைப்பை செரிமானத்தின் பிரதான உறுப்பாக உள்ளது. சிறுகுடலில் உட்கிரகித்தல் நடைபெறுகிறது.

| வ.எண் | உணவுப் பாதையின் பாகங்கள் |
|---|---|
| 1 | வாய் |
| 2 | வாய்க்குழி |
| 3 | தொண்டை |
| 4 | உணவுக் குழல் |
| 5 | இரைப்பை |
| 6 | சிறுகுடல் |
| 7 | பெருங்குடல் |
| 8 | மல வாய் |

| வ.எண் | செரிமான சுரப்பிகள் |
|---|---|
| 1 | உமிழ் நீர் சுரப்பிகள் |
| 2 | இரைப்பை சுரப்பிகள் |
| 3 | கல்லீரல் |
| 4 | கணையம் |
| 5 | குடல் சுரப்பிகள் |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 79 11-08-2018 10:33:20




## 6.4 சுவாச மண்டலம்

சுவாச வாயுக்களின் பரிமாற்றம் மற்றும் சுவாசித்தல் நிகழ்ச்சியில் ஈடுபட்டுள்ள மண்டலம் சுவாச மண்டலம் ஆகும். இதில் நாசித்துளைகள், நாசிக்குழி, தொண்டை, குரல்வளை, மூச்சுக்குழல், கிளை மூச்சுக்குழல் மற்றும் நுரையீரல்கள் அடங்கும். இதன் மூலம் தூய்மையான காற்றானது உள்ளிழுக்கப்பட்டு வெளிவிடப்படுகின்றது. நுரையீரலில் காற்றுக்கும், இரத்தத்திற்கும் இடையே $O_2$ மற்றும் $CO_2$ பரிமாற்றம் நடைபெறுகிறது. குரல் **வளைமூடி (எப்பிகிளாட்டிஸ்)** என்ற அமைப்பு சுவாசப்பாதைக்குள் உணவு செல்வதை தடுக்கின்றது.

### நுரையீரல்கள்

சுவாச உறுப்புகளில் நுரையீரல்கள் முக்கியமானவையாகும். இவை மார்பறையினுள் அமைந்துள்ளன. பொதுவாக **காற்றுக்குழாய்** என்று அழைக்கப்படும். **மூச்சுக்குழலானது** குருத்தெலும்பு வளையங்களால் தாங்கப்பட்டுள்ளது. இது குரல்வளை மற்றும் தொண்டையை நுரையீரல்களுடன் இணைத்து காற்று செல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

மூச்சுக்குழல் மார்பு அறையினுள் நுழைந்தவுடன் இரு மூச்சுக்கிளைக் குழல்களாகப் பிரிந்து வலது, இடது நுரையீரல்களுக்குள் நுழைந்து பல நுண்குழல்களாகப் பிரிந்து, முடிவில் **நுண் காற்றுப்பைகளில் (ஆல்வியோலைகளில்)** திறக்கின்றன. நுரையீரல்களைச் சுற்றி இரு அடுக்குகளைக் கொண்ட ஒரு பாதுகாப்புப் படலம் காணப்படுகிறது. இதற்கு **ப்ளூரா** (Pleura) என்று பெயர்.

வாயுக்களின் ஊடுருவல் ($O_2$ மற்றும் $CO_2$) நுண்காற்றுப்பையைச் சுற்றியுள்ள மெல்லிய சுவர் வழியாக நடைபெறுகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 80 11-08-2018 10:33:20

## சுவாச மண்டலம்




**நாம் சுவாசிக்கும் போது காற்று எங்கே செல்லுகிறது?**

நாசித்துவாரங்கள்
↓
நாசிக்குழி
↓
தொண்டை
↓
லாரிங்ஸ்
↓
மூச்சுக்குழல்
↓
முதல் நிலை கிளை மூச்சுக்குழல்
↓
நுண்குழல் கிளை மூச்சு
↓
ஆல்வியோலஸ்

**சுவாச மண்டலத்தின் மூலம் நடைபெறும் வாயுக்களின் பரிமாற்றம் மூன்று வேறுபட்ட செயல் நிலைகளைக் கொண்டது. அவை**

1. **வெளிசுவாசம்:** நாசித்துவாரங்களின் வழியாக காற்றிலுள்ள $O_2$ உள்ளிழுக்கப்பட்டு, நுரையீரல்களில் உள்ள $CO_2$ வெளிவிடப்படுகிறது.

2. **உட்சுவாசம்:** இரத்த ஓட்ட மண்டலம் வழியாக $O_2$ உடல் முழுவதும் அளிக்கப்பட்டு அங்குள்ள $CO_2$ எடுத்து செல்லப்படுகிறது. **இரத்தச் சிவப்பணுக்களில் உள்ள ஹீமோகுளோபினால் $O_2$ மற்றும் $CO_2$ கடத்தப்படுகிறது.**

3. **செல்சுவாசம்:** செல்கள் வழியாக $O_2$ – வை எடுத்துக்கொண்டு $CO_2$ வை வெளிவிடுகின்றன.

**செயல்பாடு 5:**

**நோக்கம்:** சுவாசிக்கும்போது வெளியேற்றப்படும் காற்றில் கார்பன் – டை– ஆக்சைடு (கரியமில வாயு) அதிகமாக உள்ளது என்பதை நிருபித்தல்.

**தேவையான பொருள்கள் :** மூடியுடன் கூடிய இரண்டு கண்ணாடி குவளைகள், உறிஞ்சி (straw) மற்றும் சுண்ணாம்பு நீர்.

**செய்முறை:** இரண்டு குவளைகளிலும் சுண்ணாம்பு நீரை ஊற்றி, மூடி கொண்டு மூடவும். முதல் குவளையை அப்படியே வைக்கவும், இரண்டாவது குவளையின் மூடியில் துளையிடவும் உறிஞ்சியைச்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 81 11-08-2018 10:33:21

செருகி, பின்னர் அதனுள்ளே காற்றை ஊதிவிடவும்.

**கண்டறிதல்:** இரண்டாவது குவளையில் உள்ள சுண்ணாம்பு நீர் பால் போன்று மாறியுள்ளது. கரியமில வாயு மட்டுமே சுண்ணாம்பு நீரைப் பாலாக மாற்றும் தன்மையுடையது.

**முடிவு:** சுவாசிக்கும் போது வெளியேற்றப்பட்ட காற்றில் கார்பன்– டை– ஆக்சைடு அதிகமாக உள்ளது என அறிய முடிகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

மனிதனின் ஒவ்வொரு நுரையீரலும் ஏறக்குறைய 300 மில்லியன் நுண் காற்றுப்பைகள் உள்ளன. கொட்டாவி விடுதல் மூலம் நாம் அதிக அளவு ஆக்ஸிஜனை உள்வாங்கி அதிக அளவு கார்பன்–டை–ஆக்சைடு வெளியிடுகிறோம்.

## 6.5 இரத்த ஓட்ட மண்டலம்

நமது இரத்த ஓட்ட மண்டலம் இதயம், இரத்தக்குழாய்கள் இரத்தம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது நமது உடலில் உள்ள சுவாச வாயுக்கள், உணவுச்சத்துப் பொருள்கள், ஹார்மோன்கள், கழிவுப்பொருள்கள் போன்றவற்றைக் கடத்துகிறது. இது தீங்கு விளைவிக்கக் கூடிய நோய்க் கிருமிகளிடம் இருந்து நம்மைப் பாதுகாக்கின்றது. மேலும் உடல் வெப்ப நிலையை ஒரே சீராக வைக்கவும் உதவி செய்கின்றது.

### இதயம்

இதயம் மார்பறையில், இரண்டு நுரையீரல்களுக்கும் இடையே அமைந்துள்ளது. நமது இதயம் நான்கு அறைகளைக் கொண்டது. இதயம் இரு சுவர்களைக் கொண்ட **பெரிகார்டியம்** உறையினால் சூழப்பட்டுள்ளது. நமது இதயம் நம்முடைய வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து இரத்தத்தை உந்தி அனுப்புகிறது.




### இரத்தக் குழாய்கள்

நமது உடலில் மூன்றுவகையான இரத்தக் குழாய்கள் உள்ளன. அவை **தமனிகள், சிரைகள்** மற்றும் **தந்துகிகள்** ஆகும். இவைகள் மூடிய வலைப்பின்னல் போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் வழியாக இரத்தத்தினை எடுத்துச் செல்கின்றன.

### இரத்தம்

இரத்தம் ஒரு திரவ இணைப்புத் திசுவாகும். இரத்தம் பிளாஸ்மா மற்றும் இரத்த அணுக்களைக் கொண்டுள்ளது. இரத்த அணுக்கள் மூன்று வகைப்படும் அவை, இரத்த சிவப்பணுக்கள் (RBCs), இரத்த வெள்ளை அணுக்கள் (WBCs), இரத்தத் தட்டுகள் (platelets). இரத்த சிவப்பணுக்கள் எலும்பு மஜ்ஜையில் உருவாக்கப்படுகின்றன.

**செயல்பாடு 6:**

உங்கள் வலது கையில் உள்ள ஆள்காட்டி மற்றும் நடு விரலையும் உங்கள் இடது கை மணிக் கட்டின் உள்பக்கம் வைத்துக் கொள்ளவும். உங்களால் துடிப்பின் அசைவை உணர முடிகிறதா? ஏன் அவ்வாறு துடிக்கிறது? இந்தத் துடிப்பு நாடித் துடிப்பு எனப்படும். அது தமனியில் செல்லும் இரத்த ஓட்டத்தினால் ஏற்படுகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 82 11-08-2018 10:33:22

ஒரு நிமிடத்தில் எத்தனை நாடித்துடிப்புகள் ஏற்படுகிறது என்று எண்ணமுடிகிறதா? அதன் எண்ணிக்கையே நாடித் துடிப்பு **விகிதம்** எனப்படும். சாதாரணமாக ஓய்வு நிலையில் உள்ள ஒரு மனிதனின் சராசரி நாடித்துடிப்பு ஒரு நிமிடத்தில் 72 – இல் இருந்து 80 வரை இருக்கும். உங்கள் உடலில் எங்கு நாடித்துடிப்பை உணர்கிறீர்களோ, அதைக் கண்டறியவும். உங்களுடைய நாடித் துடிப்பை பதிவு செய்து உங்கள் வகுப்புத் தோழர்களின் நாடித் துடிப்பையும் பதிவு செய்து அதை ஒப்பிடுக.



9DDCUE

## இரத்த ஓட்ட மண்டலம்






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 83 11-08-2018 10:33:23

**இரத்த தானம்**

மருத்துவமனைகளில் நோயாளிகளின் தேவைக்காக இரத்தம் தற்காலிகமாக இரத்த வங்கிகளில் சேமிக்கப்படுகின்றது. 18 வயதுக்கு மேல், ஆரோக்கியமான ஒவ்வொருவரும் இரத்ததானம் செய்யலாம். அதன் மூலம் அவசரகால விபத்துக் காலங்களிலும், அறுவை சிகிச்சையின் போதும், இரத்தம் தேவைபடுபவர்களுக்கு உரிய காலத்தில் இரத்தம் கொடுக்கப்படுகிறது. இரத்ததானம் இவர்களின் உயிர்காக்க உதவுகிறது.



## 6.6 நரம்பு மண்டலம்

மனிதனுக்கு நன்கு வளர்ச்சியடைந்த நரம்பு மண்டலம் அமையப் பெற்றுள்ளது.

நரம்பு மண்டலம் நியூரான்கள் அல்லது நரம்பு செல்களால் ஆனது. இம்மண்டலத்தில் மூளை, தண்டுவடம், உணர்ச்சி உறுப்புகள் மற்றும் நரம்புகள் உள்ளன. நரம்பு மண்டலமும், நாளமில்லாச் சுரப்பி மண்டலமும் **இணைந்து கடத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு** ஆகிய இரு முக்கியப் பணிகளை மேற்கொள்கின்றன.

நரம்பு மண்டலம்






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 84 11-08-2018 10:33:25

### மூளை

நமது மூளை ஒரு சிக்கலான உறுப்பு ஆகும். இது மண்டையோட்டின் கபாலக் குழியினுள் உள்ளது. இது திசுக்களாலான மூன்று உறைகளால் சூழப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இந்த சவ்வுகளுக்கு **மூளை உறைகள்** (Meninges) என்று பெயர். மூளையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை முன் மூளை, நடு மூளை மற்றும் பின் மூளை என்பவையாகும். மூளையானது உடலின் மத்தியக் கட்டுப்பாட்டு மையம் ஆகும்.




### தண்டுவடம்

தண்டுவடம் பின்மூளையில் உள்ள முகுளத்தின் தொடர்ச்சி ஆகும். இது முதுகெலும்புத் தொடரினால் மூடப்பட்டிருக்கின்றது. தண்டுவடமானது, மூளையை உடலில் உள்ள பல்வேறு பாகங்களோடு நரம்புகளினால் இணைக்கக்கூடிய அமைப்பாக உள்ளது.

### நரம்பு மண்டலத்தின் செயல்கள்




#### 1. உணர்ச்சி உள்ளீடு

உணர் உறுப்புகளிலிருந்து சமிக்ஞை கடத்தப்படுதல்.

#### 2. ஒருங்கிணைப்பு

உணர்ச்சி சமிக்ஞைகளை ஒருங்கிணைத்து வெளிப்பாடுகளை உருவாக்குதல் மற்றும் பதில்களை உருவாக்குதல்.




மூளையில் நூறு மில்லியனுக்கும் அதிகமான தகவல்களை ஒருவர் வாழ்நாளில் சேமித்து வைக்க முடியும் என்று கூறப்படுகிறது.

#### 3. செயல் வெளிபாடு

மூளை மற்றும் தண்டுவடத்திலிருந்து சமிக்ஞைகளை செயல்படும் உறுப்புகளாகிய தசை மற்றும் சுரப்பி செல்களுக்குக் கடத்துதல்.

## 6.7 உணர் உறுப்புகள்

உணர் உறுப்புகள் வெளி உலகின் சாளரங்கள் ஆகும். நமது உடலில் ஐந்து உணர் உறுப்புகள் உள்ளன. அவை கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு மற்றும் தோல் ஆகும். உணர் உறுப்புகள் நமது சுற்றுப்புறத்தை நாம் தெரிந்து கொள்ளவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவுகின்றன. உணர் உறுப்புகளால் மட்டுமே நாம் பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல் மற்றும் உணர்தல் போன்ற செயல்களைச் செய்ய முடிகிறது.

### கண்கள்

கண்கள் மூலம் நம்மைச் சுற்றி இருக்கும் பொருள்களை நாம் பார்க்க முடிகிறது. அதன் நிறம், வடிவம், அளவு மற்றும் அது அருகில் உள்ளதா அல்லது தொலைவில் உள்ளதா, அது நகர்கின்றதா, இல்லை நிலையாக உள்ளதா என்பது பற்றிக் காணமுடிகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 85 11-08-2018 10:33:26

கண் இமைகள், மற்றும் கண் புருவங்கள் கண்ணில் தூசியும், அழுக்கும் படியாமல் கண்களைப் பாதுகாக்கின்றன. கண் மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை கார்னியா, ஐரிஸ் மற்றும் கண்மணி (பியூப்பில்).




### செவிகள்

செவிகள் நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு ஒலிகளைக் கேட்பதற்கு உதவுகின்றன. அவை ஒலி மிகுந்தவையா, மென்மையானவையா, மகிழ்ச்சி தரும் ஒலியா, விரும்பத்தகாத ஒலியா அல்லது மந்தமான ஒலியா என்று வேறுபடுத்தவும் முடிகிறது. மேலும் செவிகள் நாம் நடக்கும் போதும், ஓடும் போதும், மலையில் ஏறும் போதும் நமது உடலைச் சமநிலையில் வைத்திருக்க உதவுகின்றன. செவியானது **புறச்செவி, நடுச்செவி** மற்றும் **உட்செவி** போன்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.




மனிதனின் புறச் செவியில் உள்ள மடல் **புறச் செவி மடல்** (Pinna) என்றழைக்கப்படுகிறது.

### தோல்

உடல் முழுவதுமாக மூடியுள்ள, மிகப் பெரிய உணர் உறுப்பு தோல் ஆகும். நம்மைச் சுற்றியுள்ள பொருள்களை நமது தோல் தொடும்போது அப்பொருள் வெப்பமாக உள்ளதா அல்லது குளிர்ச்சியாக உள்ளதா, வழவழப்பாக உள்ளதா அல்லது சொரசொரப்பாக உள்ளதா, அப்பொருள் காய்ந்துள்ளதா அல்லது ஈரமாக உள்ளதா, கடினமாக உள்ளதா அல்லது மிருதுவாக உள்ளதா, என்பதைக் கண்டறிய உதவுகிறது. தோல் உடலை மூடி இருப்பதால் நோய்க் கிருமிகளிடமிருந்து நமது உடலைப் பாதுகாக்கின்றது.

மேலும் இது நமது உடலை ஈரப்பசையோடு வைத்திருக்கின்றது. சரியான உடல் வெப்பநிலையை ஒழுங்குபடுத்தி வைக்கிறது.




### தோலின் பணிகள்

1. நுண்ணுயிரிகளிடமிருந்து உடலைப் பாதுகாக்கும் அரணாகத் தோல் உள்ளது
2. தோல் சூரியஒளியைப் பயன்படுத்தி உடலுக்குத் தேவையான வைட்டமின் D – ஐ உற்பத்தி செய்கிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 86 11-08-2018 10:33:30

**உங்கள் உணர் உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளவும்.**

- ❖ மிக அதிகமான ஒளியிலோ அல்லது மிகக்குறைந்த ஒளியிலோ, மேலும் நகரும் வாகனத்தில் செல்லும் பொழுதோ படிக்க வேண்டாம்.
- ❖ தொலைக்காட்சி, கணினி, செல்பேசி, மடிக்கணினி போன்ற ஒளித்திரைகளை அதிக நேரம் தொடர்ந்து பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்
- ❖ உங்கள் கண்களை மிகக் கடினமாகத் தேய்க்க வேண்டாம்.
- ❖ கண்ணில் உள்ள தூசிகளை அகற்ற தினந்தோறும் 2 அல்லது 3 முறை தூய்மையான தண்ணீர் கொண்டு உங்கள் கண்களை மெதுவாக (மென்மையாக) சுத்தம் செய்யவும்.
- ❖ செவிகள் கடுமையான அடி அல்லது தாக்குதல் போன்ற நிகழ்ச்சிகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும்
- ❖ கொண்டை ஊசி, பல் குச்சி இவற்றை வைத்து செவிகளைச் சுத்தம் செய்வது ஆபத்தான செயல், எனவே இதனைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இதனால் காதுச் சவ்வு கிழிந்துவிடும் காது தொற்று ஏற்படும்.
- ❖ தினமும் தோலைச் சுத்தமாகவும், புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்ள தினமும் ஒரு முறையாவது குளிக்க வேண்டும்.

## 6.8 நாளமில்லாச் சுரப்பி மண்டலம்

உடலில் பல்வேறு செயல்களை நாளமில்லாச் சுரப்பி மண்டலம் ஒழுங்குபடுத்தி, நமது உடலின் உட்புற சூழலைப் பராமரிக்கின்றது. உடலில் பல நாளமில்லாச் சுரப்பிகள் அமைந்துள்ளன. இச் சுரப்பிகள் ஹார்மோன்கள் என்னும் வேதிப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன.

நாளமில்லாச் சுரப்பி மண்டலம்




9DH8H2

| நாளமில்லா சுரப்பிகள் | – | இருப்பிடம் |
|---|---|---|
| பிட்யூட்டரி சுரப்பி | – | மூளையின் அடிப்பகுதி |
| பீனியல் சுரப்பி | – | மூளையின் அடிப்பகுதி |
| தைராய்டு சுரப்பி | – | கழுத்து |
| தைமஸ் சுரப்பி | – | மார்புக்கூடு |
| கணையம் | – | வயிற்றின் அடிப்பகுதி |
| அட்ரினல் சுரப்பி | – | சிறு நீரகத்தின் மேல் |
| இனப்பெருக்க உறுப்புகள் | – | இடுப்புக் குழி |

## 6.9 கழிவு நீக்க மண்டலம்

நமது உடலிலிருந்து, நைட்ரஜன் கலந்த கழிவுகள், கழிவுநீக்க மண்டலம் மூலம் வெளியேற்றப்படுகின்றது. இதில் சிறுநீரகங்கள், சிறுநீர்நாளங்கள், சிறுநீர்ப்பை, மற்றும் சிறுநீர்ப் புறவழி ( யூரித்ரா ) ஆகியவை அடங்கும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 87 11-08-2018 10:33:52

### சிறுநீரகம்

சிறுநீரகங்கள் அவரை விதை வடிவத்தில் அடிவயிற்றுக் குழியில் அமைந்துள்ளன. நெஃப்ரான்கள் சிறுநீரகத்தின் செயல் அடிப்படை அலகுகளாகும். இவை இரத்தத்தினை வடிகட்டி சிறுநீரை உருவாக்குகின்றன.




உங்களுக்குத் தெரியுமா?

நாம் ஏன் நீரை அருந்துகிறோம்? நமது உடலில் 70% நீர் உள்ளது. நமது மூளையில் உள்ள சாம்பல் நிறப் பகுதியில் அதிகளவு (85%) நீர் உள்ளது. கொழுப்பு செல்களில் குறைந்த அளவு (15%) மட்டுமே உள்ளது. நாம் உணவின் மூலமாகவும், பருகும் நீர் மூலமாகவும் ஒரு நாளைக்கு 1.5 முதல் 3.5 லிட்டர் வரை நீர் அருந்துகிறோம்.






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 88 11-08-2018 10:33:52

## கழிவு நீக்க மண்டலம்




### நினைவில் கொள்க

❖ எலும்பு மண்டலம் உடலுக்கு வடிவம் கொடுப்பதோடு, உடலில் உள்ள மிருதுவான உள்உறுப்புகளைப் பாதுகாக்கிறது.

❖ நமது உடலில் மூன்று வகையான தசைகள் உள்ளன. அவை எலும்புத் தசைகள், மென்தசைகள் மற்றும் இதயத் தசைகள் எனப்படும்.

❖ இரத்த ஓட்டமண்டலம், இதயம், இரத்தம் மற்றும் இரத்தக் குழாய்களைக் கொண்டுள்ளது.

❖ உதரவிதானம் – மார்புக் குழியின் தரைப்பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய தட்டையான திசு.

❖ செரித்தல் என்பது நாம் உண்ணும் உணவின் பெரிய மூலக்கூறுகளை படிப்படியாக சிறிய மூலக்கூறுகளாகவும், கரையும் பொருளாகவும் மாற்றும் செயலாகும்.

❖ மூளை மண்டைஓட்டினால் பாதுகாக்கப்படுகிறது. மூளை மூன்று பகுதிகளை உடையது அவை 1. முன் மூளை 2. நடு மூளை 3. பின் மூளை

❖ உணர் உறுப்புகள் எனப்படுவது – கண்கள், செவிகள், மூக்கு, நாக்கு மற்றும் தோல் ஆகும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## இணையச்செயல்பாடு

# மனித உடல் அமைப்பியல்




செயல்பாட்டின் வழி மனித உடல் அமைப்பியலை அறிந்து கொள்வமா!

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி 'The human body systems' என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க. இப்போது தோன்றும் மனித உடல் உறுப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்க.

படி 2: இப்போது தேர்வு செய்த உடல் உறுப்பைத் திரையில் பெரிதாக்க சுட்டியில் உள்ள நகர்த்தும் உருளை / + குறியீட்டைப் பயன்படுத்தவும்.

படி 3: 'Layers' என்னும் நழுவலில் உள்ள வட்டத்தை நகர்த்தி, உடல் உறுப்பின் பல்வேறு படலங்களை அதிகப்படுத்தி / குறைத்து அறிக.

படி 4: செயல்பாட்டின் விளக்கத்தில் இடம்பெற்றுள்ள மற்ற உடல் உறுப்புகளையும் தேர்வு செய்து, அவற்றின் அமைப்பையும் பணிகளையும் அறிக.

படி 1





படி 2



படி 3

**உரலி:**

https://www.healthline.com/health/human-body-maps

B440_SCI_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 90 11-08-2018 10:33:55

## மதிப்பீடு

9E5ZZC

### I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. மனிதனின் இரத்த ஓட்ட மண்டலம் கடத்தும் பொருள்கள் __________

   அ. ஆக்சிஜன்

   ஆ. சத்துப் பொருள்கள்

   இ. ஹார்மோன்கள்

   ஈ. இவை அனைத்தும்

2. மனிதனின் முதன்மையான சுவாச உறுப்பு __________

   அ. இரைப்பை ஆ. மண்ணீரல்

   இ. இதயம் ஈ. நுரையீரல்கள்

3. நமது உடலில் உணவு மூலக்கூறுகள் உடைக்கப்பட்டு சிறிய மூலக்கூறுகளாக மாற்றப்படும் நிகழ்ச்சி இவ்வாறு அழைக்கப்படுகிறது.

   அ. தசைச் சுருக்கம் ஆ. சுவாசம்

   இ. செரிமானம் ஈ. கழிவு நீக்கம்

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ஒரு குழுவான உறுப்புகள் சேர்ந்து உருவாக்குவது __________ மண்டலம் ஆகும்.
2. மனித மூளையைப் பாதுகாக்கும் எலும்புச் சட்டகத்தின் பெயர் __________ ஆகும்.
3. மனித உடலிலுள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முறைக்கு __________ என்று பெயர்.
4. மனித உடலிலுள்ள மிகப்பெரிய உணர் உறுப்பு __________ ஆகும்.
5. நாளமில்லா சுரப்பிகளால் சுரக்கப்படுகின்ற வேதிப்பொருள்களுக்கு __________ என்று பெயர்.

### III. சரியா (அ) தவறா எனக் கூறுக. தவறாக இருப்பின் சரியாக எழுதவும்

1. இரத்தம் எலும்புகளில் உருவாகின்றது.
2. இரத்த ஓட்ட மண்டலம் மனித உடலிலுள்ள கழிவுகளை வெளியேற்றுகிறது..
3. உணவுக் குழலுக்கு இன்னொரு பெயர் உணவுப் பாதை.
4. இரத்த ஓட்ட மண்டலத்திலுள்ள மிகச் சிறிய நுண்குழலுக்கு இரத்தக் குழாய்கள் என்று பெயர்.
5. மூளை, தண்டுவடம் மற்றும் நரம்புகள் சேர்ந்ததே நரம்பு மண்டலம் ஆகும்.

### IV. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | காது | – | இதயத் தசை |
| 2. | எலும்பு மண்டலம் | – | தட்டையான தசை |
| 3. | உதர விதானம் | – | ஒலி |
| 4. | இதயம் | – | நுண் காற்றுப்பைகள் |
| 5. | நுரையீரல்கள் | – | உள்ளுறுப்புக்களைப் பாதுகாக்கின்றது |

### V. கீழுள்ளவற்றை முறைபடுத்தி எழுதுக

1. இரைப்பை → பெருங்குடல் → உணவுக் குழல் → தொண்டை → வாய் → சிறுகுடல் மலக்குடல் → மலவாய்.
2. சிறுநீர்ப் புறவழி → சிறுநீர் நாளம் → சிறுநீர்ப்பை → சிறு நீரகம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 91 11-08-2018 10:33:55

## VI. ஒப்புமை தருக

1. தமனிகள் : இரத்தத்தை இதயத்திலியிருந்து எடுத்து செல்பவை ::________ இரத்தத்தை இதயத்திற்கு கொண்டு வருபவை

2. நுரையீரல் : சுவாச மண்டலம் :: __________ : இரத்த ஓட்ட மண்டலம்

3. நொதிகள் : செரிமான சுரப்பிகள் :: ______________ :நாளமில்லாச் சுரப்பிகள்

## VII. மிகக் குறுகிய விடையளி

1. எலும்பு மண்டலம் என்றால் என்ன?
2. எபிகிளாட்டிஸ் என்றால் என்ன?
3. மூவகையான இரத்தக்குழாய்களின் பெயர்களை எழுதுக.
4. விளக்குக – மூச்சுக்குழல்
5. செரிமான மண்டலத்தின் ஏதேனும் இரண்டு பணிகளை எழுதுக.
6. கண்ணின் முக்கிய பாகங்களின் பெயர்களை எழுதுக.
7. முக்கியமான ஐந்து உணர் உறுப்புகளின் பெயர்களை எழுதுக.

## VIII. குறுகிய விடையளி

1. விலா எலும்புக்கூடு பற்றி சிறு குறிப்பு எழுதுக.
2. மனித எலும்பு மண்டலத்தின் பணிகளை எழுதுக.
3. கட்டுபடாத இயங்கு தசைக்கும் கட்டுபாட்டில் இயங்கும் தசைக்குமுள்ள வேறுபாட்டை எழுதுக.

## IX. விரிவான விடையளி

1. நாளமில்லா சுரப்பி மண்டலம் மற்றும் நரம்பு மண்டலத்தின் பணிகளை பட்டியலிடுக.
2. கீழ்கண்ட மனித கழிவு நீக்க மண்டலத்தில் முக்கியமான நான்கு பாகங்களை எழுது. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.



அ. மேற்கண்ட கழிவு நீக்க மண்டலத்தில் எந்த பாகம் இரத்தத்திலுள்ள அதிக உப்பு மற்றும் நீரை நீக்குகிறது.

ஆ. சிறுநீர் எங்கு சேமிக்கப்படுகிறது?

இ. மனித உடலிலிருந்து சிறுநீர் எந்தக் குழல் வழியாக வெளியேற்றப்படுகிறது?

ஈ. சிறுநீரகத்திலுள்ள சிறுநீரை எந்தக் குழல் சிறுநீர்ப்பைக்கு கொண்டு செல்கிறது?

## X. உயர் சிந்தனைத்திறன் வினாக்களுக்கு விடையளி

1. உதரவிதானத்தில் அசைவுகள் இல்லையெனில் என்ன நடக்கும்?
2. இதயத்தின் இரு பாகங்கள் தடித்த தசைச்சுவரால் பிரிக்கப்பட்டுள்ளன. ஏன்?
3. கோடைக்காலத்தில் வியர்வை அதிகமாக சுரப்பது ஏன்?
4. உணவை விழுங்கும் போது சில சமயங்களில் விக்கல் மற்றும் இருமல் ஏற்படுவது ஏன்?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_6.indd 92 11-08-2018 10:33:57



அலகு

# 7 கணினியின் பாகங்கள்



## கற்றல் நோக்கங்கள்

- உள்ளீட்டகம், மையச்செயலகம் மற்றும் வெளியீட்டகம் பற்றி அறிந்துகொள்ளுதல்
- நினைவகத்தின் அலகுகள் பற்றி அறிதல்
- உள்ளீட்டு, வெளியீட்டுக் கருவிகளைப் பற்றி அறிதல்
- கணினியின் பாகங்களை எவ்வாறு இணைப்பது என்பதை அறிந்துகொள்ளுதல்

9EEW1Z



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 93 11-08-2018 10:48:37

## கணினி – அறிமுகம்

பரந்து விரிந்து கிடக்கும் இந்த பூமியை ஒரு புள்ளியில் இணைப்பது என்பது எளிதானதா? எளிதெனில், அதனை நிறைவேற்ற இயலுமா? இவ்விரு வினாவுக்கும் விடை ஒன்றே, அது கணினி. கணினியின் உதவியுடன், உலகின் எந்த மூலையிலிருந்தும் நம் செயல்களை எளிதாக்க முடியும் என்பதை மறுப்பதற்கில்லை. அவ்வாறு பரவலாகப் பயன்படுத்தப்படும் கணினியின் தேவையை நாம் அறிந்திருப்போம். எனினும், அக்கணினி எப்படி இயங்குகிறது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா! பொதுவாகவே, கணினியில் மிக முக்கியமான மூன்று பாகங்கள் உள்ளன. அம்மூன்று பாகங்களையும் ஒன்றாக இணைக்கும்போதுதான், கணினியை நம்மால் முழுமையாக இயக்க முடியும். அம்மூன்று பாகங்கள் எவை எவை? அவற்றை எவ்வாறு இணைக்க வேண்டும்? என்பதைப் பற்றி இனி விரிவாகப் பார்க்கலாம்.

## 7.1 கணினியின் பாகங்கள்

1. உள்ளீட்டகம் (Input Unit)
2. மையச்செயலகம் (CPU)
3. வெளியீட்டகம் (Output Unit)




### உள்ளீட்டகம் (Input Unit)

கணினிச் செயலாக்கத்துக்குத் தரவுகளையும் கட்டளைகளையும் உள்ளீடு செய்வதே உள்ளீட்டகம் (input Unit). அவ்வாறு தரவுகளை உள்ளீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளையே உள்ளீட்டுக்கருவிகள் என்றழைக்கிறோம்.

விசைப்பலகை (Keyboard), சுட்டி (Mouse), வருடி (Scanner), பட்டைக் குறியீடு படிப்பான் (Barcode reader), ஒலிவாங்கி (Microphone–Mic.), இணையப் படக்கருவி (Web Camera), ஒளி பேனா (Light Pen) போன்றவைதான் உள்ளீட்டுக்கருவிகள்.

மேற்காணும் உள்ளீட்டுக் கருவிகளில் விசைப்பலகையும், சுட்டியும் மிக முக்கியமானவை. அவற்றைப் பற்றி விரிவாகக் காண்போமா?

### விசைப்பலகை




முதலில் விசைப்பலகையைப் பற்றித் தெரிந்து கொள்வோம். நாம் பயன்படுத்தும் எல்லா வகைக் கணினியிலும் தவிர்க்க முடியாத இடத்தைப் பெறுவது விசைப்பலகை. ஏனெனில் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்னும் கூற்று, மொழிக்கு மட்டுமின்றி கணினிக்கும் பொருந்துவதாகும். அப்படிப்பட்ட எண்ணையும் எழுத்தையும் கணினியில் உள்ளீடு செய்வதற்கு விசைப்பலகையே ஆதாரமாகும். அவ்விசைப்பலகையில் இரண்டு விதமான விசைகள் (பொத்தான்கள் ) உள்ளன. எண்களைக் கொண்ட விசைகளை எண்விசை (Number Key) என்றும், எழுத்துகளைக் கொண்ட



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 94 11-08-2018 10:48:38

விசைகளை எழுத்து விசை (alphabet key) என்றும் வழங்குவர்.

### சுட்டி




விசைப்பலகையைப் போன்றே சுட்டியும் நம் கணினிப் பயன்பாட்டுக்கு இன்றியமையாததாகும். பொதுவாக சுட்டியில் இரண்டு பொத்தான்களும் அவ்விரண்டிற்கும் நடுவில் நகர்த்தும் உருளையும் காணப்படும். கணினியில் குறிமுள்ளை இயக்குவதே இதன் முக்கிய பணி.

கோப்புகளைத் திறப்பதற்கு வலது பொத்தானையும் (right button), கோப்புகளைத் தேர்வு செய்வதற்கும், தேர்வு செய்யப்பட்ட கோப்புகளில் நமக்குத் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு இடது பொத்தானையும் (left button) பயன்படுத்த வேண்டும். கணினியின் திரையை மேலும் கீழும் இயக்குவதற்கு நகர்த்தும் உருளையையும் (scroll ball) பயன்படுத்தலாம்.

### மையச் செயலகம் (CPU – Central Processing Unit)

மனிதனின் உடலை இயக்கும் மூளையைப் போன்று, கணினியின் செயல்பாடுகளை இயக்குவது மையச்செயலகம். இது கணினியின் உள்ளீட்டுக் கருவிகள் கொடுக்கும் உள்ளீடுகளைப் (தரவுகளைப்) பெற்றுத் தகவல்களாக வெளியீட்டுக் கருவிகள்மூலம் வழங்குகின்றது. இம்மையச்செயலகமானது,

1. நினைவகம் (Memory Unit)
2. கணிதத் தருக்கச் செயலகம் (ALU–Arithmetic Logic Unit)
3. கட்டுப்பாட்டகம்( Control Unit)

ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

### கட்டுப்பாட்டகம் (Control Unit)

கணினியின் எல்லாப் பகுதிகளின் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்துவது இதன் பணி, மென்பொருள் வாயிலாகக் கொடுக்கப்படும் கட்டளைகளை ஏற்று, அதற்கேற்றவாறு சமிக்ஞைகளை அனுப்பி வைக்கிறது.

### கணிதத் தருக்கச் செயலகம் (ALU)

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற எல்லாவிதமான எண்கணித, தருக்கச் செயல்பாடுகளும் கணிதத் தருக்கச் செயலகத்தில் நடைபெறுகின்றன.

### நினைவகம் (Memory Unit)

மனிதன் தனக்குத் தேவைப்படும் செய்திகளை, நிகழ்வுகளைத் தன் நினைவகத்தில் சேமித்து வைப்பதைப் போல் கணினியும் தன்னுள் கொடுக்கப்படும் தரவுகள் மற்றும் தகவல்களை சேமித்து வைக்கிறது. அதனையே கணினியின் நினைவகம் என்கிறோம். கணினியில் உள்ள நினைவகத்தை முதன்மை நினைவகம் (Primary Memory), இரண்டாம் நினைவகம் (Secondary Memory) என இரண்டாகப் பிரிக்கலாம். இதுமட்டுமல்லாது, கணினியின் மற்ற தற்காலிக நினைவகத்தைக் குறுவட்டு (compact disk), விரலி (pen drive) போன்றவற்றைக் கொண்டு மேலும் விரிவுபடுத்தலாம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 95 11-08-2018 10:48:38

## வெளியீட்டகம் (Output Unit)

மையச் செயலகத்திலிருந்து ஈரடிமானக் குறிப்புகள் (Binary signals) பெறப்படுகின்றன. இக்குறிப்புகளைக் கணினியானது, பயனருக்குக் கொண்டு செல்ல, வெளியீட்டகம் பயன்படுகின்றது.




குறுவட்டில் (CD) சேமிக்கும் தகவல்களை விட, 6 மடங்கு அதிகமாக DVD தட்டில் சேமிக்க முடியும்.

கணினித்திரை (Monitor), அச்சுப்பொறி (Printer), ஒலிபெருக்கி (Speaker), வரைவி(Plotter) போன்றவை வெளியீட்டகத்தின் கருவிகளாகச் செயல்படுகின்றன.

பல்வேறுபட்ட வெளியீட்டுக் கருவிகள் இருந்தாலும், கணினியின் பாகங்களுள் ஒன்றாக இணைந்து செயல்படும் கணினித்திரை மிக முக்கியமான வெளியீட்டுக் கருவியாகும். இது பார்ப்பதற்குத் தொலைக்காட்சி பெட்டியின் திரை போன்றே இருக்கும். சுட்டியை இயக்குதல், விசைப்பலகையில் தட்டச்சு செய்தல், படம், கேளிக்கைச் சித்திரங்கள் மற்றும் காணொளிகளை நம் கண்களுக்குக் காட்சிப்படுத்துவதே கணினித் திரையின் முக்கிய பணி. அடிப்படையில் இரண்டு வகையான கணினித் திரைகள் உள்ளன. அவை,

1. CRT திரை ( Cathode Ray Tube)
2. TFT திரை ( Thin Film Transistor)

CRT திரைகளைக் காட்டிலும் TFT திரை குறைந்த அளவில் வெப்பத்தை வெளிப்படுத்துவதோடு, குறைந்த அளவிலான இடமே இதற்குப் போதுமானதாக இருக்கிறது. ஆகையால் தற்போதுள்ள கணினிகளில் TFT திரையின் பயன்பாடே அதிகமிருக்கிறது.

## 7.2 நினைவகத்தின் அலகுகள்

தரவுகள் பிட் (Bit) என்ற அலகால் அளவிடப்படுகின்றன. ஒரு பிட் என்பது 0 அல்லது 1 என்னும் ஈரடிமான எண்களைக் குறிப்பதாகும்.






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 96 11-08-2018 10:48:40

### கணினியின் வகைகள்

கணினியானது அவற்றின் அமைப்பு, வடிவம், வேகம், திறன், நினைவகம் செயல்படும் முறை, பயன்கள், மின்சக்தி தேவை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகிறது. அவ்வகையில் கணினியை,



மீக்கணினி



பெருமுகக்கணினி



தனியாள் கணினி



குறுமுகக்கணினி

- ❖ மீக்கணினி (Super Computer)
- ❖ பெருமுகக்கணினி (Mainframe Computer)
- ❖ நுண்கணினி அல்லது தனியாள் கணினி (Micro or Personal Computer)
- ❖ குறுமுகக்கணினி (Mini Computer) என்று வகைப்படுத்தலாம்.

### தனியாள் கணினியின் வகைகள் (Personal computers – Types)



மேசைக்கணினி



மடிக்கணினி



பலகைக் கணினி

நுண்கணினி (Micro Computer) என்றழைக்கப்பட்ட கணினியையே தற்போது தனியாள் கணினி என்று அழைக்கின்றோம். இக்கணினியைப் பயன்படுத்துவதற்கு எளிதாக (user friendly) இருப்பதால், பயனாளர்கள் மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். தனியாள் கணினிகளின் அளவையும் செயல்திறனையும் பொருத்து, அவை மூவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ மேசைக்கணினி (Desktop)
- ❖ மடிக்கணினி (Laptop)
- ❖ பலகைக் கணினி (வரைப்பட்டிகை) (Tablet)

## 7.3 கணினியை இணைத்தல்

உங்கள் வீடுகளில் மின்விளக்கு, மின்விசிறி போன்றவை மின்கம்பிகள் மூலம் இணைக்கப்பட்டு இயங்குவதைப் பார்த்திருப்பீர்கள். அதைப்போலவே, கணினியின் பல்வேறு பாகங்கள், இணைப்புவடம் (connecting cable) மூலம் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இதர மின்சாதன பொருள்கள் போல் அன்றி, கணினியானது பல பாகங்களாக இருப்பதனால் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படும் போது ஒரு முழுமையான இயங்கு நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது. இவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுவதாலேயே, கணினியை ஆங்கிலத்தில் சிஸ்டம் (System) என்று அழைக்கிறோம்.

இணைப்புவடம் பல்வேறு அளவுகளில் காணப்படுவதோடு, ஒவ்வோர் இணைப்புவடமும் தனிப்பட்ட பயன்பாட்டைக் கொண்டுள்ளன. அவற்றின் பெயர்களையும் பயன்பாட்டையும் இனிக் காண்போம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 97 11-08-2018 10:48:40

## இணைப்புவடங்களின் வகைகள்

- காணொளிப் பட வரிசை ( VGA)
- மிகுதிறன் பல்லூடக இடைமுகப்பு (HDMI)
- பொதுவரிசை இணைப்பு (USB)
- தரவுக்கம்பி (Data cable)
- ஒலி வடம் (Audio Cable)
- மின் இணைப்புக் கம்பி (Power cord)
- ஒலி வாங்கி இணைப்புக்கம்பி (Mic cable)
- ஈதர் வலை இணைப்புக்கம்பி (Ethernet cable)

1. காணொளிப் பட வரிசை ( VGA)



கணினியின் மையச் செயலகத்தைத் திரையுடன் இணைக்க பயன்படுகிறது.

2. பொதுவரிசை இணைப்பு (USB)



அச்சுப்பொறி (printer), வருடி (scanner), விரலி (pen drive), சுட்டி (mouse), விசைப்பலகை (keyboard), இணையப்படக்கருவி (web camera), திறன்பேசி (smart phone), போன்றவற்றைக் கணினியுடன் இணைக்கப் பயன்படுகிறது.

3. மிகுதிறன் பல்லூடக இடைமுகப்பு (HDMI)



உயர் வரையறை வீடியோ, டிஜிட்டல் ஆடியோ ஆகியவற்றை ஒரே கேபிள் வழியாக எல்.இ.டி. தொலைக்காட்சிகள், ஒளிவீழ்த்தி (projector), கணினித் திரை ஆகியவற்றை கணினியுடன் இணைக்க HDMI பயன்படுகிறது.

4. தரவுக்கம்பி (Data cable)



கணினியின் மையச் செயலகத்துடன் கைப்பேசி, கையடக்கக் கணினி (Tablet) ஆகியவற்றை இணைக்க, தரவுக் கம்பி பயன்படுகிறது.

5. ஒலி வடம் (Audio cable)



கணினியை ஒலிபெருக்கியுடன் இணைக்க ஒலி வடம் பயன்படுகிறது.

6. மின் இணைப்புவடம் (Power Cord)



மையச்செயலகம், கணினித்திரை, ஒலி பெருக்கி, வருடி ஆகியவற்றிற்கு மின் இணைப்பை வழங்குகிறது.

7. ஒலி வாங்கி (Mic)



ஒலிவாங்கியை மையச்செயலகத்துடன் இணைப்பதற்கு ஒலி வாங்கி இணைப்புவடம் உதவுகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 98 11-08-2018 10:48:40

8. ஈதர் வலை (Ethernet)



கணினியுடன் இணையவழித் தொடர்பை ஏற்படுத்த **ஈதர் வலை** (Ethernet) பயன்படுகிறது.

## 7.4 கம்பியில்லா இணைப்புகள்

கம்பியில்லா இணைப்புகள் என்பன, ஊடலை (Blue tooth) மற்றும் அருகலை (Wi–Fi) வாயிலாக, இணைப்புவடம் ஏதுமின்றிக் கருவிகளைக் கணினியுடன் இணைப்பதாகும்.

### 1. ஊடலை (Bluetooth)

ஊடலை மூலம் சுட்டி, விசைப்பலகை ஆகியவற்றைக் கணினியுடன் இணைக்கலாம். அருகில் உள்ள தரவுகளைப் பரிமாறிக் கொள்ளவும் முடியும்.

### 2. அருகலை (Wi–Fi)

இணைய வசதியை இணைப்புவடம் இல்லாமல் பெறவும், தரவுகளைப் பரிமாறிக்கொள்ளவும் அருகலை பயன்படுகிறது.

9EN53H

## மதிப்பீடு

9EXN5A

### I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. உள்ளீட்டுக்கருவி அல்லாதது எது?

அ. சுட்டி ஆ. விசைப்பலகை

இ. ஒலிபெருக்கி ஈ. விரலி

2. மையச்செயலகத்துடன் திரையை இணைக்கும் கம்பி எது?

அ. ஈதர்வலை (Ethernet) ஆ. வி.ஜி.ஏ. (VGA)

இ. எச்.டி.எம்.ஐ. (HDMI) ஈ. யு.எஸ்.பி. (USB)

3. கீழ்வருவனவற்றுள் உள்ளீட்டுக்கருவி எது?

அ. ஒலிபெருக்கி ஆ. சுட்டி

இ. திரையகம் ஈ. அச்சுப்பொறி

4. கீழ்வருவனவற்றுள் கம்பி இல்லா இணைப்பு வகையைச் சேர்ந்தது எது?

அ. ஊடலை ஆ. மின்னலை

இ. வி.ஜி.ஏ. (VGA) ஈ. யு.எஸ்.பி. (USB)

5. விரலி ஒரு ____________ ஆக பயன்படுகிறது.

அ. வெளியீட்டுக்கருவி

ஆ. உள்ளீட்டுக்கருவி

இ. சேமிப்புக்கருவி

ஈ. இணைப்புக்கம்பி



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 99 11-08-2018 10:48:40

## II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. காணொளிப் பட வரிசை (VGA) | – | உள்ளீட்டுக் கருவி |
| 2. அருகலை | – | இணைப்புவடம் |
| 3. அச்சுப்பொறி | – | எல்.இ.டி. (LED) தொலைக்காட்சி |
| 4. விசைப்பலகை | – | கம்பி இல்லா இணைப்பு |
| 5. மிகுதிறன் பல்லூடக இடைமுகப்பு (HDMI) | – | வெளியீட்டுக்கருவி |

## III. குறுகிய விடையளி

1. கணினியின் கூறுகள் யாவை ?
2. உள்ளீட்டகத்திற்கும் வெளியீட்டகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டு கூறுக.
3. பல்வேறு இணைப்புவடங்களைக் கூறி, எவையேனும் மூன்றனை விளக்குக.

## செயல்பாடு:

**(4–3–2–1 எனும் சூத்திரத்தைக் கொண்டு கணினியியை இணைக்கும் செயல்பாடு.)**

கணினியின் பல்வேறு பாகங்களை ஒன்றோடு ஒன்று இணைப்பதன் மூலம் ஒரு கணினியானது முழுமையடைகிறது. மாணவர்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள 4– 3– 2– 1 எனும் சூத்திரத்தை பயன்படுத்தி கணினியின் பாகங்களை இணைக்கவும். அதாவது 4 கருவிகளான: மையச்செயலகம், கணினித்திரை, விசைப்பலகை, சுட்டி இவைகளை 3 இணைப்புக் கம்பிகளைக் கொண்டு இணைத்தல். மேலும் மையச்செயலகம் கணினித்திரை ஆகிய 2 – ற்கும் மின் இணைப்பு கொடுத்து 1 முழுமையான கணினியை இயங்கு நிலைக்குக் கொண்டுவருதல்..

ஒரு முழுமையான கணினியைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்குத் தேவையான பாகங்கள். சுட்டி, விசைப்பலகை, கணினித்திரை, மையச்செயலகம், மற்றும் இவைகளை இணைப்பதற்குத் தேவையான இணைப்பு மற்றும் மின்கம்பிகள்.

<table>
<tr><td colspan="5">4–3–2–1 எனும் சூத்திரத்தைக் கொண்டு கணினியியை இணைத்தல்</td></tr>
<tr><td rowspan="2">4<br>கருவிகள்</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>சுட்டி</td><td>விசைப்பலகை</td><td>கணினித்திரை</td><td>மையச்செயலகம்</td></tr>
<tr><td colspan="2" rowspan="2">3<br>இணைப்புக்கம்பிகள்</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>காணொளிப் பட வரிசை (VGA) இணைப்புக்கம்பி (கணினித்திரை)</td><td>பொதுவரிசை இணைப்பு (USB) இணைப்புக்கம்பி (விசைப்பலகை)</td><td>பொதுவரிசை இணைப்பு (USB) இணைப்புக்கம்பி (சுட்டி)</td></tr>
<tr><td colspan="3">2<br>மின்கம்பி இணைப்பு</td><td></td><td></td></tr>
<tr><td colspan="3" rowspan="3">1<br>முழுமையான இயங்குகின்ற கணினி</td><td>மையச்செயலகத்திற்கு மின்கம்பி இணைப்பு</td><td>கணினித்திரைக்கு மின்கம்பி இணைப்பு</td></tr>
<tr><td rowspan="2"></td><td></td></tr>
<tr><td>முழுமையான கணினி</td></tr>
</table>



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 100 11-08-2018 10:48:43

கலைச்சொற்கள்

9F7J6X

| | | |
|---|---|---|
| அடிப்படை அலகு | - | Basic Unit |
| அரிதிற் கடத்தி | - | Poor conductor |
| அருகலை | - | Wi-Fi |
| அழுத்தப்பட்ட காற்று | - | Compressed air |
| ஆவியாதல் | - | Vapourization |
| இணை மின் சுற்று | - | Parallel circuit |
| இயக்க ஆற்றல் | - | Kinetic energy |
| இயைபு | - | Composition |
| இரத்த ஓட்ட மண்டலம் | - | Circulatory system |
| இரும்பு துருப்பிடித்தல் | - | Rusting of iron |
| ஈதர் வலை இணைப்புக்கம்பி | - | Ethernet cable |
| உட்கரு முதலில் தோன்றிய செல் | - | Prokaryotic cells |
| உட்கரு | - | Nucleus |
| உணர்வு உறுப்புகள் | - | Sense organs |
| உணவு உற்பத்தி | - | Food production |
| உண்மையான உட்கரு உடைய செல் | - | Eukaryotic cell |
| உராய்வு | - | Friction |
| உள்ளீட்டகம் | - | Input unit |
| உறைதல் | - | Freezing |
| ஊடலை | - | Bluetooth |
| எரிதல் | - | Combustion |
| எரிபொருள் | - | Fuel |
| எலும்பு மண்டலம் | - | Skeletal system |

| | | |
|---|---|---|
| எளிதில் எரியக்கூடிய | - | Inflammable |
| ஒலிஇணைப்பான் | - | Audio jack |
| ஒலிப்பெருக்கி | - | Speaker |
| ஒலி வடம் | - | Audio Cable |
| ஒலிவாங்கி | - | Microphone |
| ஒலிவாங்கி இணைப்புக்கம்பி | | Mic cable |
| ஒளிச்சேர்க்கை | - | Photosynthesis |
| ஒளிப்பேனா | - | Light Pen |
| ஒளிவீழ்த்தி | - | Projector |
| கசைஇழை | - | Flagella |
| கட்டுப்பாட்டகம் | - | Control Unit |
| கணித தருக்கச்செயலகம் | - | Arithmetic Logic Unit |
| கம்பி | - | Cord/cable |
| கரைபொருள் | - | Solute |
| கரைப்பான் | - | Solvent |
| கழிவு நீக்க மண்டலம் | - | Excretory system |
| காணொளிப் பட வரிசை | | VGA |
| காற்றாலைகள் | - | Wind Mills |
| குமிழ்கள் | - | Vacuoles |
| குறுமுகக்கணினி | - | Mini Computer |
| குறுவட்டு | - | Compact Disk |
| கூட்டு நுண்ணோக்கி | - | Compound microscope |
| சுடர் | - | Flame |
| சுருங்குதல் | - | Contraction |
| சுவாச மண்டலம் | - | Respiratory system |
| சுவாசம் | - | Respiration |
| செரிமான மண்டலம் | - | Digestive system |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 101 11-08-2018 10:48:44

| | | |
|---|---|---|
| செல் உறுப்புகள் | - | Cell organelles |
| தசை மண்டலம் | - | Muscular system |
| தரவுக்கம்பி | - | Data cable |
| திரையகம் | - | Monitor |
| துணை மின்கலன் | - | Secondary cell |
| தொடர் மின் சுற்று | - | Series circuit |
| நரம்பு மண்டலம் | - | Nervous system |
| நரம்புச் செல் | - | Nerve cell |
| நாளமில்லாசுரப்பி மண்டலம். | - | Endocrine system |
| நினைவகம் | - | Memory Unit |
| நீள் விரிவு | - | Linear Expansion |
| நுண்கணினி | - | Micro computer |
| பசுங்கணிகம் | - | Chloroplast |
| பச்சையம் | - | Chlorophyll |
| பட்டைக் குறியீடு படிப்பான் | - | Barcode Reader |
| பதங்கமாதல் | - | Sublimation |
| பரும விரிவு | - | Cortical Expansion |
| பிளாஸ்மா சவ்வு | - | Plasma membrane |
| பெருமுகக்கணினி | - | Mainframe Computer |
| பைரக்ஸ் கண்ணாடி | - | Pyrex glass |
| பொதுவரிசை இணைப்பு | - | USB |
| மடிக்கணினி | - | Laptop |
| மலையேறுபவர் | - | Mountaineer |
| மின் ஆற்றல் | - | Electrical energy |
| மின் இணைப்புக் கம்பி | - | Power cord |
| மின் கடத்திகள் | - | Conductors |

| | | |
|---|---|---|
| மின் கல அடுக்கு | - | Battery |
| மின் சுற்று | - | Electrical circuit |
| மின்கடத்தா பொருள் | - | Insulators |
| மின்கலன் | - | Cell |
| மிகுதிறன் பல்லூடக இடைமுகப்பு | | HDMI |
| மீக்கணினி | - | Super Computer |
| முதன்மை மின் கலன் | - | Primary cell |
| மூலக்கூறுகள் | - | Molecules |
| மூழ்குபவர் | - | Diver |
| மேசைக்கணினி | - | Desktop |
| வருடி | - | Scanner |
| வரைவி | - | Plotter |
| வளிமண்டலம் | - | Atmosphere |
| விரலி | - | Pen drive |
| விரிசல் | - | Cracking |
| வெண்கணிகம் | - | Leucoplast |
| வெப்ப விரிவு | - | Thermal Expansion |
| வெப்பச் சமநிலை | - | Thermal Equilibrium |
| வெப்பநிலை | - | Temperature |
| வெப்பநிலைமானி | - | Thermometer |
| வெப்பம் கடத்தல் | - | Heat transfer |
| வெப்பம் | - | Heat |
| வெளியீட்டகம் | - | Output unit |
| வேதி ஆற்றல் | - | Chemical energy |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 102 11-08-2018 10:48:44

## அறிவியல்
## ஆறாம் வகுப்பு – இரண்டாம் பருவம்
## பாடநூல் உருவாக்கம்

### ஆலோசனைக்குழு

குழுத்தலைவர்

**முனைவர் த.வி. வெங்கடேஷ்வரன்**
விஞ்ஞானி
விஞ்ஞான் பிரசார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை,
புதுடெல்லி.

**முனைவர் ந. ராதாகிருஷ்ணன்**
உதவிப்பேராசிரியர்,
தாவரவியல் துறை, சென்னை பல்கலைக் கழகம், கிண்டி வளாகம்,
சென்னை.

மீளாய்வு

**முனைவர் வி. சிவமாதவி**
இணைபேராசிரியர்,
பாரதி மகளிர் கல்லூரி, சென்னை.

**முனைவர் கோ. ரமேஷ்**
உதவி பேராசிரியர் (வேதியியல்),
டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி, வியாசர்பாடி சென்னை.

**முனைவர் கோ. ராஜலட்சுமி**
உதவிப்பேராசிரியர்
பாரதி மகளிர் கல்லூரி, சென்னை.

**முனைவர் மஸ்ஹர் சுல்தானா**
துறைத் தலைவர் – விலங்கியல் (ஓய்வு),
மாநிலக் கல்லூரி, சென்னை.

வல்லுநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் வனிதா டேனியல்**
துணை இயக்குநர்,
SCERT, சென்னை.

**து. பிரபாகரன்.**
உதவிப்பேராசிரியர்,
SCERT, சென்னை.

**ச. ராஜேஷ்,**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
வங்கனூர், திருவள்ளூர்.

பாட மீளாய்வு

**ந. தாமரைக் கண்ணன்,**
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்,
ஜெய்கோபால் கரோடியா தேசிய மேல்நிலைப் பள்ளி, தாம்பரம், சென்னை.

**முனைவர் சீ. ரவி காசி வெங்கட்ராமன்,**
தலைமை ஆசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, தேசூர் திருவண்ணாமலை.

### பாடநூல் ஆசிரியர்கள்

**த. பெருமாள் ராஜ்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மாணிக்க மங்கலம்,
வலங்கைமான் ஒன்றியம், திருவாரூர்.

**முனைவர் மே.நா. தனுஜா**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி தேவசோலை, நீலகிரி.

**இரா. ராமன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, வையாவூர், காஞ்சிபுரம்.

**முனைவர் ந. வித்யகீதா**
விரிவுரையாளர்,
DIET, ஆடுதுறை, தஞ்சாவூர்.

**ம. ஆனந்தன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, சேர்வைக்காரண்பட்டி, திண்டுக்கல்.

**ந. மணிகண்டன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, ராசிங்காபுரம், தேனி.

**நா. பாலுச்சாமி**
தலைமை ஆசிரியர் (ஓய்வு),
மாநாகராட்சி மேல்நிலைப் பள்ளி, பீலமேடு, கோயம்பத்தூர்.

**மா. தமிழரசி,**
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் (ஓய்வு),
புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வடுகர்பேட்டை, திருச்சி.

**மோ. மோகனப்பிரியா**
முதுகலை ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கொரடாச்சேரி, திருவாரூர்.

**ச. ஷியாமளா**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு ஆதிதிராவிடர் நலத்துறை உயர்நிலைப் பள்ளி, புளியந்தோப்பு, சென்னை.

**இர. ஆசிர் ஜூலியஸ்,**
உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

இணையச் செயல்பாடு

**ஞா. தவமணி மகேஷ்வரி,**
முதுநிலை விரிவுரையாளர், DIET, திரூர்.

**பொ. சின்னத்துரை,**
இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ.தொ.ப., T–சானார்பாளையம், திருப்பூர்.

### கலை மற்றும் வடிவமைப்பு

வரைகலை
**கோபு ராசுவேல், முத்துக்குமார்,**
**பிரமோத், வேல்முருகன், மதியழகன்.**

நிழல் வரைப்படம்
**தாமரை சீனிவாசன்**
ஓவியர்,
சௌத்திரி நகர், வளசரவாக்கம், சென்னை.

புத்தக கட்டமைப்பு
**வே.சா. ஜாண்ஸ்மித்**

அட்டை வடிவமைப்பு
**கதிர் ஆறுமுகம்**

QC
**மனோகர் இராதாகிருஷ்ணன்**
**ப. அருண் காமராஜ்**

ஒருங்கிணைப்பு
**ரமேஷ் முனிசாமி**

தட்டச்சர்
**மு. சத்யா**
நியூ பெருங்களத்தூர், சென்னை.

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

**இரா. ஜெகநாதன்**
இடைநிலை ஆசிரியர், (மா.தி.ஒ.)
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

**ந. ஜெகன்**
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**ஜே.எப். பால் எட்வின் ராய்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, வீரபாண்டி, சேலம் மாவட்டம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Science_IInd Term Tamil_Book_Unit_7.indd 103 15-08-2018 12:26:55

# வரலாறு

## இரண்டாம் பருவம்

### தொகுதி 3



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter01 - Tamil Version.indd 104 13-08-2018 19:44:02

# பொருளடக்கம்

## வரலாறு


| அலகு | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 107 |
| 2. | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 22 |
| 3. | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 138 |


## புவியியல்


| | | |
|---|---|---|
| 1. | வளங்கள் | 155 |


## குடிமையியல்


| | | |
|---|---|---|
| 1. | தேசியச் சின்னங்கள் | 172 |
| 2. | இந்திய அரசமைப்புச் சட்டம் | 187 |


## பொருளியல்


| | | |
|---|---|---|
| 1. | பொருளியல் – ஓர் அறிமுகம் | 199 |


9GHYF6

மின்நூல்

9GRUGT

மதிப்பீடு

B441_SOC_6_T2_TM

இணைய வளங்கள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter01 - Tamil Version.indd 105 13-08-2018 19:44:02

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 106 13-08-2018 19:44:03

அலகு **1**

# வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்



## கற்றல் நோக்கங்கள்

9H1QIG

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வழியாக,

- ஆரியர்களின் பூர்வீகம், அவர்கள் இந்தியாவிற்குள் குடியேறுதல் ஆகியவற்றை அறிந்து கொள்ளல்.
- வேதகாலம் குறித்து கற்றுக் கொள்வதற்கான சான்றுகளை அடையாளம் காணல்.
- தொடக்க மற்றும் பின்வேதகால அரசியல், பொருளாதார மத வடிவங்களின் உருவாக்கத்தைப் புரிந்து கொள்ளல்.
- தொடக்க மற்றும் பின்வேதகால மக்கள் வாழ்ந்த பகுதிகளைக் கண்டறிதல்.
- தொடக்க வேதகாலத்திற்கும் பின்வேதகாலத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ளல்.
- தமிழ்நாட்டின் பெருங்கற்கால, இரும்புக்காலப் பண்பாட்டைப் புரிந்துகொள்ளல்.

## வேதகாலம்

சிந்துவெளி நாகரிகத்தின் சரிவோடு இந்தியாவில் நகரமயமாதலின் முதல் கட்டம் ஒரு முடிவிற்கு வந்தது. ஆரியரின் வருகையால் வேதகாலம் எனும் காலகட்டம் தொடங்கியது.

**வேதகாலம்** – இந்திய வரலாற்றில் கி.மு. (பொ.ஆ.மு) 1500 – 600 காலகட்டம். 'வேதங்கள்' என்பதில் இருந்து இப்பெயரைப் பெற்றது.

## ஆரியர்கள் என்போர் யார்?

ஆரியர்கள் இந்தோ–ஆரிய மொழி பேசும், இடம் விட்டு இடம் குடிபெயர்ந்து செல்லக்கூடிய கால்நடை மேய்ப்பவர்கள் ஆவர். இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து அலையலையாகக் குடிபெயர்ந்து இந்துகுஷ் மலைகளிலுள்ள கைபர் கணவாய் வழியாக வந்தனர்.

கால்நடைகளை மேய்ப்பதே இவர்களின் முதன்மைத் தொழில் என்றாலும் அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண் முறையையும் (slash and burn) பின்பற்றினர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter01 - Tamil Version.indd 107 13-08-2018 19:44:04




**உங்களுக்குத் தெரியுமா?**

**அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண்முறை (Slash and Burn Agriculture)**

இம்முறையில் நிலத்தின் மீதுள்ள மரங்கள் மற்றும் செடி, கொடிகள் அனைத்தும் வெட்டப்பட்டு எரிக்கப்படும். அந்நிலத்தில் குறுகிய காலகட்டத்திற்கு வேளாண்மை செய்து அதன்பின் அந்நிலம் கைவிடப்படும். பின்னர் மக்கள் மற்றொரு இடத்தில் இதே போன்று வேளாண்மை செய்யத் தொடங்குவர்.

| காலம், பரப்பு, சான்றுகள் | |
|---|---|
| புவியியல் பரப்பு | வட இந்தியா |
| காலப்பகுதி | இரும்புக் காலம் |
| கால அளவு | கி.மு (பொ.ஆ.மு) 1500– 600 வரை |
| சான்றுகள் | வேதகால இலக்கியங்கள் |
| நாகரிகத்தின் இயல்பு | கிராம நாகரிகம் |

## ஆரியர்களும் இந்தியாவில் அவர்களின் வாழ்விடங்களும்:

9HALK4

- ரிக்வேதகால ஆரியர்கள் நாடோடிகள் ஆவர். அடிப்படையில் மேய்ச்சல் சமூகத்தினரான அவர்களுக்கு கால்நடைகளே முக்கிய சொத்து ஆகும்.
- ரிக்வேத காலத்தில் ஆரியர்களின் வாழ்விடம் பஞ்சாப் ஆகும். அப்போது அப்பகுதி 'சப்த சிந்து' அதாவது ஏழு ஆறுகள் ஓடும் நிலப்பகுதி என்றழைக்கப்பட்டது.
- ஏறத்தாழ கி.மு (பொ.ஆ.மு) 1000–இல் ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து சிந்து கங்கைச் சமவெளியில் குடியமர்ந்தனர்.
- இரும்புக் கோடரி, இரும்பினாலான கொழுமுனையைக் கொண்ட கலப்பை ஆகியவற்றைப் பரவலாக பயன்படுத்தினர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 108 13-08-2018 19:44:04

உங்களுக்குத் தெரியுமா?

**நான்கு வேதங்கள்:**
ரிக், யஜுர், சாம, அதர்வன.

## சான்றுகள்

**வேத கால இலக்கியங்கள்**

வேத கால இலக்கியங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. **சுருதிகள்** – நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும். அவைகள் புனிதமானமவை, நிலையானவை, கேள்விகள் கேட்கப்பட முடியாத உண்மை எனக் கருதப்பட்டவை.

சுருதி என்பது கேட்டல் (அல்லது எழுதப்படாதது) எனும் பொருள் கொண்டது; இவை வாய்மொழி வாயிலாக அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தப்பட்டன.

2. **ஸ்மிருதிகள்** – ஆகமங்கள், தாந்திரீகங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய மதம் குறித்த போதனைகளைக் கொண்ட நூல்களாகும். அவை நிலையானவை அல்ல, தொடர்ந்து மாற்றங்களுக்கு உள்ளாகுபவை.

'ஸ்மிருதி' என்பதன் பொருள் இறுதியான எழுதப்பட்ட பிரதி என்பதாகும்.




உங்களுக்குத் தெரியுமா?

**இந்தியாவின் தேசிய குறிக்கோள்**

"சத்யமேவ ஜெயதே" ("வாய்மையே வெல்லும்") என்ற வாக்கியம் முண்டக உபநிடதத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

### தொல்பொருள் சான்றுகள்:

சிந்து மற்றும் கங்கை நதிப்பகுதிகளிலும் பஞ்சாப், உத்திர பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய தொல்லியல் ஆய்விடங்களிலும் கிடைத்துள்ள இரும்புக் கருவிகள், மட்பாண்டங்கள் ஆகியன.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 109 13-08-2018 19:44:04

**வேதகாலத்தை வகைப்படுத்துதல்**




## வேதகாலப் பண்பாடு

### அரசியலும் சமூகமும்

ரிக் வேத கால அரசியல் ரத்த உறவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். குலம் (clan) என்பதே அரசியலின் அடிப்படை அலகாகும். அதன் தலைவர் குலபதி ஆவார். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கிராமம் ஆகும். கிராமத்திற்கு கிராமணி தலைவர் ஆவார். பல கிராமங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு 'விஸ்' (குலம்) என்றழைக்கப்பட்டது. இதற்கு விசயபதி தலைவர் ஆவார். 'ஜனா' (இனக்குழு)வின் தலைவர் ராஜன் ஆவார். இவர் ஜனஸ்யகோபா (மக்களின் பாதுகாவலர்) எனப்பட்டார். ரிக் வேத காலத்தில் பல இனக்குழு அரசுகள் (ராஷ்டிரம்) இருந்தன. (பரதர், மத்சயர், புரு).

### அரசர்

தனது இனக்குழுவைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்பதே ராஜனின் முக்கியப் பொறுப்பாகும். அவருடைய அதிகாரம் இனக்குழு மன்றங்களான விதாதா, சபா, சமிதி, கணா ஆகிய அமைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டது. இவைகளில் விதாதா (இனக்குழுவின் பொதுக்குழு) பழமையானதாகும்.

**சபா** – மூத்தோர்களைக் கொண்ட மன்றம்.

**சமிதி** – மக்கள் அனைவரையும் கொண்ட பொதுக்குழு.

அரசர் தனக்கு உதவி செய்வதற்காக புரோகிதர் (தலைமை குரு) ஒருவரை பணியில் அமர்த்திக் கொண்டார்.அரசியல்,பொருளாதாரம்,இராணுவம் தொடர்பான விஷயங்களில் அரசனுக்கு சேனானி (படைத் தளபதி) உதவி செய்தார். கிராமங்களின் தலைவர் கிராமணி ஆவார்.

ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து கங்கை, யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் குடியேறியபோது தொடக்ககாலக் குடியேற்றங்கள் மாற்றம் பெற்று பிரதேச அரசுகளாயின. பரம்பரை அரசுரிமை தோன்றியது. முடியாட்சி முறையில் அரசரின் அதிகாரங்கள் அதிகரித்தன. அரசர் தனது நிலைமையை வலுப்படுத்திக் கொள்ள பல சடங்குகளையும் யாகங்களையும் செய்தார்.

பின்வேதகாலத்தில்பலஜனாக்கள்அல்லது இனக்குழுக்கள் இணைக்கப்பட்டு ஜனபதங்கள் அல்லது ராஷ்டிரங்கள் உருவாயின. சமிதி, சபா ஆகியவை தங்கள் முக்கியத்துவத்தை இழந்தன. விதாதா என்ற மன்றம் இல்லாமல் போனது. புதிய அரசுகள் தோன்றின. பாலி என்பது மக்கள் தாங்களாகவே மனமுவந்து அரசனுக்கு கொடுத்துவந்த காணிக்கையாகும். பின்வேதகாலத்தில் இது ஒரு வரி ஆக மாற்றம் பெற்று மக்களிடமிருந்து தொடர்ந்து முறையாக வசூல் செய்யப்பட்டது. குரு மற்றும் பாஞ்சால அரசுகள் செழித்தோங்கிய காலம் இது. மேலும் அயோத்தி, இந்திரப்பிரஸ்தம், மதுரா போன்ற நகரங்களும் இக்காலத்தில் உருவாயின.

பாலி – இது ஒரு வரி ஆகும். ஒருவர் தனது விவசாய மகசூலில் அல்லது கால்நடைகளில் 1/6 பங்கை இவ்வரியாகச் செலுத்த வேண்டும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 110 13-08-2018 19:44:04

**சமூக அமைப்பு**

வேதகால சமூகம் தந்தை வழிச் சமூகமாகும். வெள்ளைநிறத்தோல்கொண்டஆரியர்கள்,கருப்பு நிறத் தோல் கொண்ட ஆரியரல்லாதவர்களிடம் இருந்து தங்களை வேறுபடுத்திக் கொண்டனர். கருப்பு நிற ஆரியர் அல்லாத மக்களை தசயுக்கள், தாசர்கள் என்று அழைத்தனர். தொடக்க வேதகால சமுதாயத்துக்குள் மூன்று பிரிவுகள் காணப்பட்டன (Treyi). பொது மக்கள் விஸ் என்று அழைக்கப்பட்டனர். போர்வீரர்கள் சத்ரியர்கள் எனவும் மதகுருமார்கள் பிராமணர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். பிற்கால கட்டத்தில் திறன் கொண்ட, ஆரியரல்லாத மக்களை ஆரியர்கள் தமது சமுதாய ஏற்பாட்டுக்குள் கொண்டுவர நேர்ந்தது. அப்போது நான்கு இறுக்கமான வர்ண அமைப்பு உருவாக்கப்பட்டது. மதகுருவான பிராமணர், போரிடும் சத்ரியர், நில உடைமையாளர்களான வைசியர், வேலைத் திறன் கொண்ட சூத்திரர் என்று நான்கு வர்ணங்கள் கொண்ட சமூக அமைப்பு உருவானது. இவ்வாறு நான்கு படிநிலைகள் கொண்ட சமூக ஒழுங்கு உருவாக்கப்பட்டது.

வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கிய சான்றுகள் இருக்கின்றபோதிலும், பயன்பாட்டுப் பொருள் சான்றுகள் போதுமான அளவு இல்லை.

**பெண்களின் நிலை**

ரிக்வேதகால சமூகத்தில், பெண்கள் ஓரளவிற்கு சுதந்திரம் பெற்றிருந்தனர். மனைவி குடும்பத்தின் தலைவியாக மதிக்கப்பட்டார். பெண்கள் தனது கணவருடன் தமது வீட்டில் சடங்குகள் நடத்தினார். குழந்தைத் திருமணத்தையும், உடன்கட்டை ஏறுதலையும் அறிந்திருக்கவில்லை. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளத் தடைகள் இல்லை. இருந்தபோதிலும் பெற்றோரிடமிருந்து சொத்துக்களைப் பெறும் சொத்துரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டது. பொது நிகழ்வுகளில் பெண்கள் எந்தப் பங்கும் வகிக்கவில்லை.

பின்வேதகாலத்தில் சமூகத்தில் மட்டுமின்றி, குடும்பத்திலும் கூட பெண்களின் பங்கும் அவர்களுக்கான நிலையும் குறைந்துபோனது. பெண்கள் குடும்பத்தில் சடங்குகளை நடத்த முடியாத நிலை உருவானது. திருமணம் தொடர்பான விதிகள் இறுக்கமும் குழப்பமும் பெற்றன. பலதார மணம் சாதாரணமாக நடைபெற்றது. கைம்பெண் மறுமணத்திற்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. சாதிகளுக்கு இடையிலான திருமணம் நிராகரிக்கப்பட்டது.

**பொருளாதார வாழ்க்கை**

வேதகாலப் பொருளாதாரமானது கால்நடை மேய்ச்சலும் வேளாண்மையும் கலந்ததாகும். ரிக்வேதகால ஆரியர்களின் முதன்மைத் தொழில் கால்நடைகள் மேய்ப்பது என்றாலும் மரவேலை செய்வோரும், தேர்கள் செய்வோரும், மட்பாண்டங்கள் செய்வோரும், உலோக வேலை செய்வோரும், துணி நெய்வோரும், தோல்வேலை செய்பவர்களும் இருந்தனர். பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் இக்காலத்தைச் சேர்ந்ததாகும். குதிரைகள், பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், காளைகள் மற்றும் நாய்கள் வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தப்பட்டன.



சிந்து மற்றும் பஞ்சாப் பகுதிகளில் ஆரியர்கள் நிரந்தரமாகக் குடியேறியபின் அவர்கள் வேளாண்மை செய்யத் தொடங்கினார். யவா (பார்லி) அவர்களின் முதன்மை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 111 13-08-2018 19:44:04

பயிராகும். கோதுமை, பருத்தி ஆகியவை சிந்துவெளி மக்களால் பயிர் செய்யப்பட்ட போதிலும் ரிக் வேதத்தில் அவைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொரு வருடமும் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது.

பின்வேத காலத்தில் ஆரியர்கள் பசு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை மட்டுமல்லாமல் யானைகளையும் பழக்கப்படுத்தினர். தொடக்க வேத கால கைவினைஞர்களோடு நகை செய்வோர், சாயத்தொழில் செய்வோர், உலோகங்களை உருக்குவோர் போன்றோரும் சமூகத்தில் இடம் பெற்றிருந்தனர். இக்காலப் பண்பாடு **வர்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு** என்று அழைக்கப்படுகிறது.

இரும்புக் கொழுமுனை கொண்ட கலப்பை மற்றும் இரும்புக் கோடாரி ஆகியவற்றின் உதவியோடு அதிக அளவிலான நிலங்களில் வேளாண்மை செய்யப்பட்டது. நெல், கோதுமை, பார்லி ஆகியன பயிர் செய்யப்பட்டன. வேளாண்மை வளர்ச்சி பெற்றதால் நிலத்தின் மீது தனியுரிமை உருவானது. புதிய தொழில்களும், கலைகளும் வளர்ந்து உபரி உற்பத்தி ஏற்பட்டு வணிகத்துக்கு இட்டுச் சென்றன.

வணிகம் பெருகியது. பண்டமாற்றுமுறை பரவலாகக் காணப்பட்டது. (பொருள் கொடுத்து பொருள் வாங்குவது). அவர்கள் நிஷ்கா, சத்மனா என்னும் தங்க நாணயங்களையும், கிருஷ்ணாலா என்னும் வெள்ளி நாணயங்களையும் வணிகத்தில் பயன்படுத்தினர்.

உங்களுக்குத் தெரியுமா?

**ரிக்வேத கால மக்கள் அறிந்திருந்த உலோகங்கள்**

- தங்கம் (ஹிரண்யா)
- இரும்பு (சியாமா)
- தாமிரம்/செம்பு (அயாஸ்)

**மதம்**

ரிக்வேதகால ஆரியர்கள் பெரும்பாலும் நிலம் மற்றும் ஆகாய கடவுளர்களை வழிபட்டனர். பிருத்வி (நிலம்), அக்னி (நெருப்பு), வாயு (காற்று), வருணன் (மழை), இந்திரன் (இடி) போன்றவற்றை வணங்கினர். மேலும் அதிதி (நித்தியக் கடவுள்), உஷா (விடியற்காலைத் தோற்றம்) ஆகிய குறைவான பெண் தெய்வங்களை வணங்கினர். அவர்களின் மதம் சடங்கு முறைகளை மையமாகக் கொண்டது. வேத மந்திரங்களைப் பாராயணம் செய்வதே வழிபாட்டு முறையாக இருந்தது. குழந்தைகள் (பிரஜா), பசு (கால்நடைகள்), செல்வம் (தனா) ஆகியவற்றின் நலனுக்காக மக்கள் தெய்வங்களை வணங்கினர். பசு புனிதமான விலங்காகக் கருதப்பட்டது. அக்காலத்தில் கோவில்கள் இல்லை. சிலை வழிபாடும் வழக்கத்தில் இல்லை.

பின்னாளில் மதகுருவாக இருப்பது ஒரு தொழிலாகவும், அது பரம்பரைத் தொழிலாகவும் ஆனது. ஆரியர் அல்லாத கடவுள்களும் ஏற்கப்பட்டிருக்கலாம். இந்திரனும், அக்னியும் முக்கியத்துவத்தை இழந்தனர். பிரஜாபதி (படைப்பவர்), விஷ்ணு (காப்பவர்), ருத்ரன் (அழிப்பவர்) ஆகிய கடவுளர்கள் முக்கியத்துவம் பெற்றனர். வேள்விகளும், சடங்குகளும் மிகவும் விரிவடைந்தன.

## கல்வி

**குருகுலக்கல்வி முறை**

- குருகுலக் கல்வி முறை என்பது பழங்கால கற்றல் முறை ஆகும்.
- குருகுலம் என்னும் சொல் குரு (ஆசிரியர்), குலம் (குடும்பம் அல்லது வீடு) என்ற இரண்டு சமஸ்கிருத வார்த்தைகளின் கூட்டாகும்.
- இம்முறையில் மாணவர்கள் (சிஷ்யர்கள்) குருவுடன் தங்கியிருந்து, அவருக்குச் சேவை செய்வதோடு கல்வியும் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்வர்.
- வாய்மொழி மரபில் மாணவர்கள் பாடங்களைக் கற்றனர். கற்றவை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 112 13-08-2018 19:44:05

அனைத்தையும் மாணவர்கள் மனப்பாடம் செய்தனர்.

- நான்கு வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கணம், தர்க்கவியல், நெறிமுறைகள், ஜோதிடம், கணிதம், இராணுவ உத்திகள் ஆகியன மாணவர்களுக்குக் கற்றுத்தரப்பட்டன.



- ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கான பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
- இரு பிறப்பாளர்கள் (Dvijas) மட்டுமே குருகுலத்தில் மாணவர்களாகச் சேர்க்கப்படுவர். பெண்களுக்கு பொது கல்வி அளிக்கப்படவில்லை.

### நான்கு ஆஸ்ரமங்கள்: (வயதின் அடிப்படையில்)

பின்வேதகால இறுதியில் வாழ்க்கையின் நான்கு நிலைகள் (நான்கு ஆஸ்ரமங்கள்) என்ற கோட்பாடு உருவாயின.

- பிரம்மச்சரியம் (மாணவப் பருவம்)
- கிரகஸ்தம் (திருமண வாழ்க்கை)
- வனப்பிரஸ்தம் (காடுகளுக்குச் சென்று தவம் செய்தல்)
- சன்னியாசம் (மோட்சம் அடைவதற்காக துறவற வாழ்க்கை மேற்கொள்ளல்)

**சிந்துவெளி மற்றும் வேதகால நாகரிகங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கூறுக.**

| | |
|---|---|
| | |
| | |
| | |

### தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் சமகாலத்தில் நிலவிய பண்பாடுகள்

வடஇந்தியாவின் தொடக்ககால வேதப் பண்பாடு இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய பகுதிகளில் நிலவிய செம்புக்கால பண்பாட்டோடு ஒத்துப்போகிறது. மக்கள் செம்பையும் (chalco) கல்லையும் (lithic) ஒரே காலகட்டத்தில் பயன்படுத்தியதால் இது செம்புக் காலகட்டம் Chalcolithic Culture என்று தமிழில் அழைக்கப்படுகின்றது.

இந்தியாவின் செம்புக்காலப் பண்பாடு முதிர்ந்த நிலை ஹரப்பா பண்பாட்டின் சமகாலப் பண்பாடாகும். ஹரப்பா பண்பாட்டின் வீழ்ச்சிக்குப் பின்னருங்கூட, செம்புக் காலப் பண்பாடு தொடர்ந்து நிலவியது.

வடஇந்தியாவின் பின்வேதகாலப் பண்பாடும். தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தைச் சேர்ந்தவை ஆகும். இரும்புக் காலத்தின் முடிவில் மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டினுள் கி.மு. (பொ.ஆ.மு) 600 – கி.பி. (பொ.ஆ) 100 காலடி எடுத்து வைத்தனர்.

பண்டைய தமிழகத்தின் பெருங்கற்காலம், சங்ககாலத்திற்கு முந்திய காலத்தோடு ஒத்துப்போகிறது. கருப்பு மற்றும் சிவப்புநிற மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் ஒரு கூறாக உள்ளது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 113 13-08-2018 19:44:05

## தமிழ்நாட்டின் பெருங்கற்காலம்/ இரும்புக்காலம்.

உங்களுக்குத் தெரியுமா?

பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் Megalithc Age என்று அழைக்கப்படுகிறது. Megalith என்பது கிரேக்கச் சொல்லாகும். 'Mega' என்றால் பெரிய, lith என்றால் 'கல்' என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியததால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

9HJHLR

### தமிழகத்திலுள்ள பெருங்கற்கால/இரும்புக்கால தொல்லியல் ஆய்விடங்கள்.

**ஆதிச்சநல்லூர்–தூத்துக்குடி மாவட்டம்**

இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில், முதுமக்கள் தாழிகள், பல்வகைப்பட்ட மட்பாண்டங்கள் (கருப்பு, சிவப்பு) இரும்பாலான குத்துவாள், கத்திகள், ஈட்டிகள், அம்புகள், சில கல்மணிகள், ஒரு சில தங்க ஆபரணங்கள் கிடைத்துள்ளன.

வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளான புலி, யானை, மான் போன்றவற்றின் வெண்கலத்தாலான உருவங்கள் கிடைத்துள்ளன.

மட்பாண்டங்கள் செய்தல், கல் மற்றும் மரங்களைப் பயன்படுத்தி பொருட்கள் செய்தல் போன்ற திறன்களை மக்கள் பெற்றிருந்தனர்.





**கீழடி – சிவகங்கை மாவட்டம்**

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை திருப்பத்தூர் தாலுகாவிலுள்ள கீழடி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த பழமையான நகரத்தை அகழ்ந்து ஆய்வு செய்துள்ளது. செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் நன்கு அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு போன்ற சான்றுகள் இந்த ஆய்வில் கிடைத்துள்ளன. மேலும் தமிழ்–பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள மண்பாண்டங்கள், கண்ணாடியிலான மணிகள், செம்மணிகள், வெண்கல் படிகம், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள், சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை போன்றவையும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் துறை இரு மாதிரிகளை கதிரியக்க கார்பன் வயதுக்கணிப்பு முறையில் கணிக்க அமெரிக்காவில் புளோரிடா என்னும் இடத்தில் உள்ள பீட்டா அனாலடிக் என்ற நிறுவனத்திற்கு அனுப்பியது. அச்சோதனையில் இப்பொருள்கள் கி.மு (பொ.ஆ.மு) 200ஐச் சார்ந்தது என்பது தெரியவந்துள்ளது. இங்கு ரோம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 114 13-08-2018 19:44:05

நாட்டைச் சேர்ந்த பழங்கால தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே நிலவிய வணிகத் தொடர்பிற்கு மேலும் சில சான்றுகளாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

தீபகற்ப இந்தியாவிலிருந்து எஃகு ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் பெரிப்ளஸ் குறிப்பிடுகிறார்.





**பொருந்தல் – திண்டுக்கல் மாவட்டம்**



கிடைத்துள்ள பொருட்கள்: புதைகுழிப் பொருட்கள், கண்ணாடி மணிகள் (வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் மற்றும் பச்சை வண்ணங்களில்) இரும்பு வாள்கள், தமிழ் – பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள், அரிசி நிரப்பப்பட்ட மட்பாண்டங்கள், ஓரளவு அரிதான கற்களான படிகக்கல், சிவப்பு நிற மணிக்கற்கள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்கள்.

இரும்பினாலான கதிர் அறுக்கும் அரிவாள், ஈட்டி, கொழுமுனைகள் ஆகியவை தமிழக மக்கள் நெல் விளைவித்ததற்கு சான்றுகளாய் உள்ளன. இங்கு கிடைத்துள்ள அரிசி நிரம்பிய பானை, மக்களின் முக்கிய உணவாக அரிசி இருந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

**பையம்பள்ளி – வேலூர் மாவட்டம்**

இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் – இரும்பினால் செய்யப்பட்ட தொல் பொருட்களோடு பெருங்கற்காலத்து கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. ரேடியோ கார்பன் முறையில் இப்பண்பாட்டின் காலம் கி.மு. (பொ.ஆ.மு) 1000 என கணிக்கப்பட்டுள்ளது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 115 13-08-2018 19:44:05

**கொடுமணல்–ஈரோடு மாவட்டம்**



பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள கொடுமணல் என்னும் ஊர் இதுவே என அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட முந்நூற்றுக்கும் அதிகமான மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் நூல் சுற்றி வைக்கப்பயன்படும் சுழல் அச்சுக்கள், சுருள்கள், துணிகளின் சிறிய துண்டுகள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், மணிகள் முக்கியமாக சிவப்பு நிற மணிக்கற்கள் ஆகியவற்றையும் தொல்லியல் ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக் கல் (Menhir) பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள்

புதிய கற்காலத்தின் கடைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருங்கற்காலப் புதைப்பு முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இம்முறையின்படி இறந்தவர்களின் உடல் பெரிய மட்பாண்டத்தில் வைக்கப்படும். ஏனைய சில பொருட்களும் அதனுடன் வைக்கப்படும். இந்த பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரும்பைக் குறித்த அறிவைப் பெற்றிருந்த, சமூகமாக கூடி வாழத் தெரிந்திருந்த மிகவும் முன்னேறிய தமிழ் நாகரிகத்திற்கான சாட்சிகளாகும்.



**முதுமக்கள் தாழிகள்** இவை இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய மண் பானைகள் ஆகும்.

**கற்திட்டைகள் (Dolmens):**



பாண்டவன் திட்டு, தருமபுரி

இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறம் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின்மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும். இக்கற்திட்டைகள் வீரராகவபுரம் (காஞ்சிபுரம் மாவட்டம்) கும்மாளமருதுபட்டி (திண்டுக்கல் மாவட்டம்) நரசிங்கம்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**நினைவு கற்கள் (Menhir)**



பிரிட்டானிய (Breton) மொழியில் 'மென்' என்றால் கல், 'கிர்' என்றால் "நீளமான" என்று பொருள். ஒரே கல்லிலான இத்தூண்கள் இறந்தோரின் நினைவாக செங்குத்தாக நடப்படும்.

திருப்பூர் மாவட்டம் சிங்கரிபாளையம், தேனி மாவட்டம் வெம்பூர் ஆகிய இடங்களில் இவ்வாறான நினைவுத் தூண்கள் உள்ளன. இவை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 116 13-08-2018 19:44:05

உப்பாற்றின் இரு கரைகளிலும் பழங்கால வாழ்விடங்கள் இருந்ததைக் சுட்டிக்காட்டுகின்றன. மதுரை மாவட்டம் நரசிங்கம்பட்டியிலும், ஈரோடு மாவட்டம் குமரிக்கல் பாளையத்திலும், கொடுமணலிலும் இது போன்ற நினைவுத் தூண்கள் உள்ளன.



புலிமான் கோம்பை
கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டு

**நடுகற்கள்**

இறந்துபோன வீரனின் நினைவைப் போற்றும் வகையில் நடப்படும் கல் நடுகல்லாகும் தனது கிராமத்தை கொடிய விலங்குகளிடமிருந்து அல்லது எதிரிகளிடம் இருந்து காப்பாற்றும் முயற்சியில் மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய வீரர்களின் நினைவாக நடப்படுவது ஆகும். திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு அருகேயுள்ள மானூர், தூத்துக்குடி மாவட்டம் வெள்ளாளன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன.

## மீள்பார்வை

- ஆரியர்கள் ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு) 1500ல் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தனர். இக்காலகட்டத்திற்கு வேத நூல்கள் முக்கியச் சான்றுகளாகும்.
- வேதகால அரசியல் இரத்த உறவை அடிப்படையாகக் கொண்டது.
- ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்தபோது அங்கிருந்த தொடக்ககாலக் குடியேற்றங்கள் பிரதேச அரசுகளாக மாறின.
- இரும்புக் கலப்பையும் இரும்புக் கோடரியும் அதிக அளவிலான நிலங்களை வேளாண்மையின் கீழ் கொண்டுவர உதவின.
- புதிய கைவினைத் தொழில்களும் கலைகளும் வளர்ந்தன. கங்கைச் சமவெளிப் பகுதிகளில் நகரங்கள் தோன்றுவதற்கு இவைகள் வழி வகுத்தன.
- வடஇந்தியாவின் பிற்கால வேத சமூகமும் தென்னிந்தியாவின் இரும்புக்காலச் சமூகமும் ஒரே காலத்தைச் சேர்ந்தவையாகும்.

## அருஞ்சொல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நிலையான | – | Eternal |
| ரத்த உறவு | – | Kinship |
| தந்தை வழி (சமூகம்) | – | Patriarchal |
| ஆண்/பெண் தெய்வம் | – | Deity |
| சமகாலத்தில் | – | Contemporary |
| உலோகவியல் | – | Metallurgy |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஆரியர்கள் முதலில் ___________ பகுதியில் குடியமர்ந்தனர்.

   அ) பஞ்சாப் ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி

   இ) காஷ்மீர் ஈ) வடகிழக்கு

2. ஆரியர்கள் ___________ லிருந்து வந்தனர்.

அ) சீனா ஆ) வடக்கு ஆசியா இ) மத்திய ஆசியா ஈ) ஐரோப்பா

3. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்" ___________லிருந்து எடுக்கப்பட்டது.

   அ) பிராமணா ஆ) ஆரண்யகா இ) வேதம் ஈ) உபநிடதம்

4. வேதகாலத்தில் என்ன விகிதத்தில் நிலவரி வசூலிக்கப்பட்டது?

   அ) 1/3 ஆ) 1/6 இ) 1/8 ஈ) 1/9

**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. **கூற்று:** வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

   **காரணம்:** நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.

   அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

   ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

   இ) கூற்று சரி; காரணம் தவறு

   ஈ) கூற்று தவறு; காரணம் சரி

2. **கூற்று 1:** தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அதன் மீது அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வரி விதிக்கப்பட்டது என்றும் பெரிப்ளஸ் குறிப்பிடுகிறார்.

   **கூற்று 2:** இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.

   அ) கூற்று 1 தவறானது

   ஆ) கூற்று 2 தவறானது

   இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை

   ஈ) இரண்டு கூற்றுகளும் தவறானவை

3. வேதகால சமூகம் தொடர்பான கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது.

   அ) ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்.

   ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது.

   இ) தந்தையின் சொத்துக்களை மகன் மரபுரிமையாகப் பெற்றான்.

   ஈ) உடன்கட்டை ஏறுதல் தெரியாது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 118 13-08-2018 19:44:05

4. கீழ்க்கண்டவற்றில் எந்த ஏறுவரிசை ரிக்வேத சமூகத்தைப் பொறுத்தமட்டில் சரியானது?

அ) கிராமா < குலா < விஷ் < ராஸ்டிரா < ஜனா

ஆ) குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஸ்டிரா

இ) ராஸ்டிரா < ஜனா < கிராமா < குலா < விஷ்

ஈ) ஜனா < கிராம < குலா < விஷ் < ராஸ்டிரா

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வேதப்பண்பாடு ___________ இயல்பைக் கொண்டிருந்தது.
2. வேதகாலத்தில் மக்களிடமிருந்து ___________ என்ற வரி வசூலிக்கப்பட்டது.
3. ___________ முறையானது பண்டைய கால கல்விகற்கும் முறையாகும்.
4. ஆதிச்சநல்லூர் ___________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## IV. சரியா? தவறா?

1. பல இடங்களில் கிடைத்துள்ள ரோமானியக் தொல் பொருட்கள் இந்திய–ரோமானிய வணிக உறவுகளுக்குச் சான்றுகளாய் உள்ளன.
2. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும்.
3. படைத்தளபதி 'கிராமணி' என அழைக்கப்பட்டார்.
4. கருப்பு மற்றும் சிகப்பு மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும்.
5. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

## V. பொருத்துக.

அ) கீழடி – 1. பகடை

ஆ) பொருந்தல் – 2. கொழு முனைகள்

இ) கொடுமணல் – 3. சுழல் அச்சுக்கள்

ஈ) ஆதிச்சநல்லூர் – 4. தங்க ஆபரணங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 1 | 3 | 4 | 2 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

## VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி.

1. நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. வேதகால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் யாவை?
3. 'பெருங்கற்காலம்' பற்றி நீங்கள் அறிந்தது என்ன?
4. 'கற்திட்டைகள்' என்பது என்ன?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 119 13-08-2018 19:44:05

5. முதுமக்கள் தாழிகள் என்றால் என்ன?
6. வேதகாலத்தில் வணிகப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் பெயர்களைக் கூறுக.
7. தமிழ்நாட்டில் காணப்படும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்து சுருக்கமாய் எழுதுக.
2. வேதகாலப் பெண்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக.

**VIII. உயர் சிந்தனை வினா.**

1. குருகுலக் கல்வி முறைக்கும் நவீன கல்விமுறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

**IX. பெருமிதமும் மகிழ்ச்சியும்–உண்மைகளை நாம் கண்டறிவோம்.**

| தொல் பொருள் ஆய்விடங்கள் | தொல்லியல் கண்டுபிடிப்புகள் | உண்மைகள் |
|---|---|---|
| ஆதிச்சநல்லூர் | தமிழ்–பிராமி எழுத்துக்கள் | வரலாற்றுக்கு முந்திய பண்பாடு இருந்துள்ளது |
| கீழடி | ரோமானிய தொல் பொருட்கள் | |
| பையம்பள்ளி | இரும்புக் கருவிகள் | |
| பொருந்தல் | அரிசி நிரப்பப்பட்ட பானை | |
| கொடுமணல் | சுழல் அச்சுக்கள் | |

**X. மாணவர் செயல்பாடு**

1. புதிய வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்குதல்.

சுருதி, கிராமணி, ராஷ்ட்ரா, இரும்புக்காலம், நாடோடிகள், பண்டமாற்று



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 120 13-08-2018 19:44:05

**2.** வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | மி | ச | ரி | சு | பௌ | த | இ | ஸ |
| ச | இ | த | ம | ம் | க் | ஸ் | ரு | பா |
| அ | டை | ட் | தி | ற் | க | க | ம் | ங் |
| ந | பு | ள் | ம | ண | ம் | மா | பு | ச |
| ஸ் | ம | கை | ப | ர் | ங் | மெ | க் | த் |
| க | மி | ர | ணி | ஸ் | வி | ரா | கா | ம |
| ல் | கா | ரு | யா | சே | த | ர் | ல | னா |
| ய | கௌ | ர் | தி | ஷ் | வெ | னா | ம் | ளி |
| ஸு | க | ணா | டி | தி | பு | ப் | ரு | நெ |

1. ஒரு கணவாய்
2. மத போதனையைக் கொண்ட நூல்
3. கிராமங்களின் தொகுதி
4. இனக்குழு மன்றம்
5. மக்கள் மன்றம்
6. அக்னி
7. தங்க நாணயம்
8. வேதகாலம்
9. இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னம்.

## XI. வாழ்க்கைத் திறன்

ஆசிரியரின் உதவியோடு செய்தித் தாள்களிலிருந்து தொல்லியல் கண்டுபிடிப்புகள் குறித்த செய்திகளைச் சேகரிக்கவும்.

**கல்விச் சுற்றுலா**

நீங்கள் இருக்கும் இடத்திற்கு அருகேயுள்ள தொல்லியல் சார்ந்த ஓர் இடத்திற்குச் சென்று வரவும்.

## XII. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| இரண்டு இதிகாசங்களைக் குறிப்பிடவும்.<br><br>விடை: | இறந்தவரின் நினைவாக நடப்படும் ஒற்றைக் கல்தூணின் பெயர்<br><br>விடை: | சிவகங்கை மாவட்டத்திலுள்ள சங்க காலத்தைச் சேர்ந்த நகரத்தின் பெயர்<br><br>விடை: |
| தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது இரண்டு இரும்புக்கால வாழ்விடங்களின் பெயர்களைக் கூறுக.<br><br>விடை: | தொடக்ககால ஆரியர்கள் பின்பற்றிய வேளாண் முறை என்ன?<br><br>விடை: | வேதகாலத்தில் உருவான இரண்டு பெரிய நகரங்களின் பெயரென்ன?<br><br>விடை: |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter01 - Tamil Version.indd 121 13-08-2018 19:44:05

அலகு 2

# மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும்



9I39Q2

## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வழியாக,

- கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் புதிய நம்பிக்கைகள் தோன்றியதற்கான காரணங்களை அறிந்து கொள்ளல்.
- மகாவீரர் மற்றும் புத்தரின் போதனைகள் குறித்த அறிவைப் பெறுதல்.
- சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கண்டறிதல்.
- ஹீனயான மகாயான பிரிவுகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளல்.
- தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் பெற்றிருந்த செல்வாக்கை அறிந்து கொள்ளல்.

## அறிவுமலர்ச்சிக் காலம்

கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டு பண்டைய இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டம் ஆகும். இந்தியாவின் அறிவு மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் அடையாளச் சின்னமாக அக்காலம் விளங்குகிறது. வரலாற்று அறிஞர் வில் டூராண்ட் இக்காலத்தை 'நட்சத்திரங்களின் மழை' என்று பொருத்தமாக வர்ணிக்கிறார்.

## சான்றுகள்

### இலக்கியச் சான்றுகள்

- அங்கங்கள் – சமண நூல்கள்
- திரிபிடகங்கள் மற்றும் ஜாதகங்கள் – பௌத்த நூல்கள்

### அறிவு மலர்ச்சிக்கும் சமணம் பௌத்தம் ஆகியவை தோன்றியதற்குமான காரணங்கள்

புதிய அறிவு மலர்ச்சி ஏற்பட்டதற்கு பல காரணங்கள் உள்ளன. ஏற்கனவே இருந்த சமயத்தின் பெயரால் செயல்படுத்தப்பட்ட சுரண்டல் நடைமுறைகள் புதிய நம்பிக்கைகள் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன.

அவையாவன:

- பின்வேத காலத்தில் பரிந்துரைக்கப்பட்ட சிக்கலான சடங்குகளும் வேள்விகளும்.
- அதிக அளவில் செலவு செய்ய வேண்டி இருந்த வேள்விச் சடங்குகள்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter02 - Tamil Version.indd 122 13-08-2018 19:55:52

- மூடநம்பிக்கைகளும், நடைமுறைகளும் சாதாரண மக்களைக் குழப்பம் அடையச் செய்தன.
- வேள்விச் சடங்குகளுக்கு மாற்றாகக் கற்பிக்கப்பட்ட உபநிடதத் தத்துவங்களைச் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.
- அடிமைமுறை, சாதிமுறை மற்றும் பாலியல் பாகுபாடுகளும் புதிய விழிப்புணர்வு தோன்றுவதற்குக் காரணமாயின.

**சமண மதத்தின் தோற்றம்**

உலகத்தின் மிகப்பழமையான, தற்போதும் வாழ்ந்துகொண்டிருக்கும்மதங்களில்சமணமும் ஒன்றாகும். சமணம் 24 தீர்த்தங்கரர்களை மையமாகக் கொண்டது. தீர்த்தங்கரர்கள் பல்வேறு காலங்களில் மதம் தொடர்பான உண்மைகளைப் போதித்தோர் ஆவர். முதல் தீர்த்தங்கரர் ரிஷபர். கடைசித் தீர்த்தங்கரர் மகாவீரர் ஆவார். கி.மு. (பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் மகாவீரரின் வழிகாட்டுதலில் சமணம் முக்கியத்துவம் பெற்றது.



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | – | வர்த்தமானர் |
| பிறப்பு | – | வைசாலிக்கு அருகேயுள்ள குந்தகிராமம், பீகார் |
| பெற்றோர் | – | சித்தார்த்தர், திரிசலா |
| இறப்பு | – | பவபுரி–பீகார் |

உங்களுக்குத் தெரியுமா?

சமணம் (Jain) என்னும் சொல் ஜினா (Jina) என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் தன்னையும், வெளியுலகத்தையும் வெல்வது என்பதாகும்.

**மகாவீரர் (தலைசிறந்த வீரர்)**

வர்த்தமானர் (செழிப்பு என்று பொருள்) ஒரு சத்திரிய இளவரசர். இருந்தபோதிலும் அவர் தன்னுடைய 30வது வயதில் இளவரசர் என்னும் தகுதியைக் கைவிட்டுவிட்டு துறவறம் மேற்கொண்டார். தீவிரமான தியானத்தை மேற்கொண்டார்.

பன்னிரண்டரை ஆண்டுகால கடுமையான தவத்திற்குப் பின்னர் அவர் எல்லையற்ற அறிவை அடைந்தார். இந்நிலைக்கு 'கைவல்ய' என்று பெயர்.

அதன் பின்னர் அவர் ஜினா (Jina) ஆனார். இவரைப் பின்பற்றியவர்கள் சமணர் (Jains) என்று அழைக்கப்பட்டனர். மகாவீரர் பண்டைய சிரமானிய (Sramanic) மரபுகளை மறு ஆய்வு செய்தார். அவற்றின் அடிப்படையில் புதிய கோட்பாடுகளை உருவாக்கினார். ஆகவே இவர்தான் உண்மையிலேயே சமணத்தை உருவாக்கியவர் என நம்பப்படுகிறது.

**சமணத்தின் தனித்தன்மை வாய்ந்த போதனைகள்**

- இப்பிரபஞ்சத்தை உருவாக்கியவர் கடவுள் என்பதை சமணம் மறுக்கிறது.
- அகிம்சை அல்லது அறவழியே சமணத்தின் அடிப்படைத் தத்துவம்.
- முக்தி அடைவது அல்லது பிறப்பு–இறப்பு–மறுபிறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபடுவதே சமணத்தின் இறுதி லட்சியமாகும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 123 13-08-2018 19:55:52

- இறுதித் தீர்ப்பு என்ற நம்பிக்கையை சமணம் மறுக்கிறது (இறுதித் தீர்ப்பு என்பது யார் சொர்க்கத்திற்கு செல்வது? யார் நரகத்திற்கு செல்வது? என்பதைக் கடவுள் தீர்மானிப்பார் என்ற நம்பிக்கை)
- ஒருவருடைய வாழ்வின் நலன் அல்லது தரம் என்பது அவருடைய கர்மவினையால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை சமணம் ஆதரிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**கர்மா அல்லது கர்மவினை என்றால் என்ன?**

இப்பிறவியில் ஒருவர் செய்யும் செயல்களே அவருடைய/ அவளுடைய இப்பிறவியின் பிற்பகுதி வாழ்க்கையையும், அடுத்த பிறவியில் அவர் வாழப்போகும் வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது என்ற நம்பிக்கை ஆகும்.

### திரிரத்தினங்கள் அல்லது மூன்று ரத்தினங்கள்

கர்மாவிலிருந்து விடுதலை பெறுவதற்கும் மோட்ச நிலையை அடைவதற்கும் மகாவீரர் மூன்று வழிகளை அறிவுறுத்தினார்.

அவை

- நன்னம்பிக்கை
- நல்லறிவு
- நற்செயல்

மோட்சம் என்பது பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுதல் ஆகும்.

### சமணத்தின் நடத்தை விதிகள்

மகாவீரர் தன்னைப் பின்பற்றுவோரை ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கையை மேற்கொள்ளக் கூறினார். அப்படிப்பட்ட வாழ்வை மேற்கொள்ள ஐந்து கொள்கைகளைப் போதித்தார்.

அவை

- அகிம்சை – எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருப்பது
- சத்யா – உண்மையை மட்டுமே பேசுதல்
- அஸ்தேய – திருடாமை
- அபரிக்கிரகா– பணம், பொருள் சொத்துக்கள் மீது ஆசை கொள்ளலாமல் இருப்பது
- பிரம்மச்சரியா – திருமணம் செய்து கொள்ளாமை

உங்களுக்குத் தெரியுமா?

மகாவீரரின் தலைமைச் சீடரான கௌதமசுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார். அதன் பெயர் ஆகம சித்தாந்தம் எனப்படும்.

### திகம்பரரும் சுவேதாம்பரரும்

சமணம் திகம்பரர், சுவேதாம்பரர் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது.

### திகம்பரர்

- திகம்பரர் வைதீக பழமைவாதப் போக்குடைய சீடர்கள்.
- திகம்பரர் பிரிவைச் சேர்ந்த சமணத் துறவிகள் ஆடைகள் அணிவதில்லை. நிர்வாணமாக வாழ்ந்தனர். அவர்கள் எந்த விதமான உடைமையும் வைத்துக் கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது.
- பெண்கள் நேரடியாக விடுதலை பெறவோ நிர்வாண நிலையை அடையவோ முடியாது என திகம்பரர் நம்பினர்.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 124 13-08-2018 19:55:52

### சுவேதாம்பரர்

- சுவேதாம்பரர்கள் முற்போக்கானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.
- சுவேதாம்பர பிரிவைச் சேர்ந்த துறவிகள் வெள்ளை நிற ஆடைகளை அணிகின்றனர். ரஜோகரனா (கம்பளி நூல்களைக் கொண்ட சிறிய துடைப்பம்) பிச்சைப் பாத்திரம், புத்தகம் ஆகியவை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.
- ஆண்களைப் போலவே பெண்களும் விடுதலை பெற சமமான தகுதிகளைக் கொண்டுள்ளனர் என சுவேதாம்பரர்கள் நம்புகின்றனர்.

### சமணம் பரவியதற்கான காரணங்கள்

இந்தியாவில் சமணம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான காரணங்கள்.

- மக்கள் பேசிய மொழியிலேயே சமணக் கருத்துக்கள் சொல்லப்பட்டன.
- புரிந்து கொள்ளும்படியான போதனைகள்.
- அரசர்கள் மற்றும் வணிகர்களின் ஆதரவு.
- சமணத் துறவிகளின் விடாமுயற்சி.

### தமிழகத்தில் சமணத்தின் செல்வாக்கு

- பண்டைய தமிழ் இலக்கியங்கள் ஜைனம் என்பதை சமணம் என்று குறிப்பிடுகின்றன.
- மதுரை நகரிலிருந்து 15 கி.மீ தொலைவில் கீழக்குயில்குடி கிராமத்தில் சமணர் மலை என்ற பெயரில் ஒரு குன்று உள்ளது. சமணத் துறவிகளால் உருவாக்கப்பட்ட தீர்த்தங்கரர்களின் உருவங்கள் இம்மலையில் காணப்படுகின்றன. இது இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்படும் நினைவு சின்னமாக உள்ளது.
- மதுரையிலிருந்து 25 கி.மீ தொலைவிலுள்ள அரிட்டாபட்டி என்ற கிராமத்தில் கலிஞ்சமலை உள்ளது. இதன் ஒரு பகுதியில் பாண்டவர் படுக்கை என்று அழைக்கப்படும் சமணர் குகைகள் உள்ளன. சமணத் துறவிகளுக்கான கற்படுக்கைகளே பாண்டவர் படுக்கை என அழைக்கப்படுகிறது.
- அறவோர் பள்ளி என்பது சமணத் துறவிகள் வாழ்ந்த இடங்கள் என மணிமேகலையில் குறிப்பு உள்ளது.
- கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும் வழியில் சமண பெண் துறவியான கவுந்தியடிகள் அவர்களை ஆசீர்வதித்து அவர்களுடன் சென்றதாக தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.


திருப்பருத்திக்குன்றம்


சித்தன்னவாசல்


சிதாறல் மலைக்கோவில்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 125 13-08-2018 19:55:52

- புகார், உறையூர், மதுரை, வஞ்சி (கருவூர்) காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சமண மடாலயங்கள் இருந்துள்ளன.
- ஜைனக் காஞ்சி – காஞ்சிபுரத்திலுள்ள திருப்பருத்திக் குன்றம் என்ற கிராமத்தில் இரண்டு பழமையான சமணக் கோவில்கள் உள்ளன. இக்கிராமம் முன்னர் ஜைனக் காஞ்சி என்று அழைக்கப்பட்டுள்ளது.
- திருப்பருத்திக்குன்றம் சித்தன்னவாசல் சிதாறல் மலைக்கோவில்

## பௌத்தம்

9IC5RP

### கௌதம புத்தர்

பௌத்த மதத்தை நிறுவியவர் கௌதம புத்தர் ஆவார். அவரின் இயற்பெயர் சித்தார்த்தர். மகாவீரரைப் போலவே இவரும் ஒரு சத்திரிய இளவரசர். அரசாட்சி செய்து கொண்டிருந்த சாக்கிய அரசவம்சத்தில் பிறந்தவர். சித்தார்த்தர் ஏழு நாள் குழந்தையாக இருந்தபோது அவருடைய தாயார் இயற்கை எய்தினார். எனவே அவருடைய சிற்றன்னை கௌதமி அவரை வளர்த்தார்.



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | – | சித்தார்த்தா |
| பிறப்பு | – | லும்பினி தோட்டம் நேபாளம் |
| பெற்றோர் | – | சுத்தோதனா, மாயாதேவி |
| இறப்பு | – | குசி நகரம், உ.பி |

### நான்கு பெரும் காட்சிகள்

சித்தார்த்தா தனது 29வது வயதில் நான்கு துயரம் மிகுந்த காட்சிகளைக் கண்டார். அவை

- கூன் விழுந்த முதுகுடனும், கந்தல் ஆடைகளுடனும் கவனிப்பாரற்ற ஒரு முதியவர்.
- குணப்படுத்த முடியாத வியாதியால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒரு நோயாளி.
- இறந்துவிட்ட ஒரு மனிதனின் சடலம் அழுது கொண்டிருக்கும் அவனின் உறவினர்களால் இடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்படுதல்.
- ஒரு துறவி



### ஞானமடைதல்

புத்தர் (ஞானம் பெற்ற ஒருவர் என்று பொருள்) மனித வாழ்க்கை முழுவதும் துன்பங்களும் துயரங்களும் நிறைந்தது என உணர்ந்தார். அதனால் 29ஆம் வயதில் அரண்மனையை விட்டு வெளியேறி துறவறம் மேற்கொண்டார். ஆறுஆண்டுகள்தவமிருந்தார்.தன்னைத்தானே வருத்திக் கொள்வது விமோச்சினத்திற்கான பாதை அல்ல என்பதை உணர்ந்தார். அதனால் கயாவுக்கு அருகே ஒரு அரசமரத்தடியில் அமர்ந்து ஆழ்ந்த தியானத்தை மேற்கொண்டார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 126 13-08-2018 19:55:53



அவ்வாறு தியானத்தில் இருந்தபோது 49ஆம் நாள் அவர் ஞானம் பெற்றார். அப்போதிலிருந்து அவர் புத்தர் (ஞானம் பெற்றவர்) என அழைக்கப்பட்டார். சாக்கிய அரச குடும்பத்தைச் சேர்ந்த துறவி என்பதால் சாக்கிய முனி என்றும் அழைக்கப்பட்டார்.

வாரணாசிக்கு அருகேயுள்ள, சாரநாத் என்னும் இடத்தில் உள்ள மான்கள் பூங்கா என்ற இடத்தில் புத்தர் தனது முதல் போதனைச் சொற்பொழிவை நிகழ்த்தினார். இது 'தர்ம சக்ர பரிவர்த்தனா' அல்லது தர்ம சக்கரத்தை நகர்த்துதல் என்று அழைக்கப்படுகின்றது.

### புத்தரின் நான்கு பேருண்மைகள்

- வாழ்க்கை துன்பங்கள், துயரங்கள் நிறைந்தது.
- ஆசையே துன்பங்களுக்கான காரணம்.
- ஆசையைத் துறந்துவிட்டால் துன்ப துயரங்களைப் போக்கி விடலாம்.
- சரியான பாதையைப் பின்பற்றினால் (எண்வகை வழிகள்) ஆசைகளை வென்று விடலாம்.

### புத்தரின் எண்வகை வழிகள்

- நல்ல நம்பிக்கை
- நல்ல எண்ணம்
- நல்ல பேச்சு
- நல்ல செயல்
- நல்ல வாழ்க்கை
- நல்ல முயற்சி
- நல்ல அறிவு
- நல்ல தியானம்

புத்தரின் போதனைகள் எளிமையாக இருந்தன. மக்கள் பயன்படுத்திய மொழியிலேயே போதிக்கப்பட்டன. மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பற்றியதாக போதனைகள் இருந்ததால் அவர்கள் தங்கள் வாழ்க்கையோடு பொருத்திப் பார்த்தனர். புத்தர் சடங்குகளையும் வேள்விகளையும் எதிர்த்தார்.

### புத்தரின் போதனைகள்

- புத்தரின் போதனைகள் 'தம்மா' என்று குறிப்பிடப்படுகின்றன.
- கர்மா கோட்பாட்டை பௌத்தம் ஏற்றுக் கொண்டது. (ஒருவனுடைய செயல்களே அவனது வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிக்கிறது என்பதாகும்).
- புத்தர் கடவுளின் இருப்பை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. மறுக்கவும் இல்லை. ஆனால் பிரபஞ்ச விதிகளை நம்பினார்.
- நிர்வாண நிலை அடைவதே வாழ்க்கையின் இறுதி நோக்கம் என்று புத்தர் வலியுறுத்தினார்.
- புத்தர் அகிம்சையை வலியுறுத்தினார்.
- சாதிபடிநிலையினை புத்தர் நிராகரித்தார்.
- வாழ்க்கைச் சக்கரம் – உலகைப் பற்றிய புத்தரின் பார்வையை பிரதிபலிக்கிறது.

### பௌத்த சங்கம்

புத்தர் தனது கருத்துக்களைப் பரப்புவதற்காக சங்கம் ஒன்றை நிறுவினார். அதில் உறுப்பினர்களாக இருந்த துறவிகள் 'பிட்சுக்கள்'



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 127 13-08-2018 19:55:53

என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டனர்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> சைத்தியம் – ஒரு பௌத்தக் கோவில் அல்லது தியானக் கூடம்.
>
> விகாரைகள் – மடாலயங்கள் / துறவிகள் வாழும் இடங்கள்.
>
> ஸ்தூபி – புத்தருடைய உடல் உறுப்புகளின் எஞ்சிய பாகங்கள் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டடம். இவை கலைத்திறமை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் ஆகும்.

### பௌத்தப் பிரிவுகள்:

| ஹீனயானம் | மகாயானம் |
|---|---|
| ▪ புத்தரின் சிலைகளையோ உருவப் படங்களையோ வணங்க மாட்டார்கள்.<br>▪ மிக எளிமையாக இருப்பர்.<br>▪ தனிமனிதர்கள் முக்தி அடைவதே தங்களின் நோக்கம் என்று நம்பினர்.<br>▪ பிராகிருத மொழியைப் பயன்படுத்தினர்.<br>▪ ஹீனயானம் தேரவாதம் என்றும் அழைக்கப்படுகிறது.. | ▪ புத்தரின் உருவங்களை வணங்கினர்.<br>▪ விரிவான சடங்குகளைப் பின்பற்றினர்.<br>▪ அனைத்து உயிரினங்களும் முக்தி பெறுவதே தங்களது நோக்கம் என நம்பினர்.<br>▪ சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தினர்.<br>▪ இப்பிரிவு மத்திய ஆசியா இலங்கை, பர்மா, நேபாளம், திபெத், சீனா, ஜப்பான், ஆகிய நாடுகளில் பரவியது. இந்நாடுகளில் மத்திம வழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

### பௌத்தம் பரவியதற்கான காரணங்கள்

- புத்தரின் போதனைகள் மிக எளிமையாக. உள்ளூர் மக்கள் பேசிய மொழிகளில் இருந்தன.
- விரிவான மதச் சடங்குகளை பௌத்தம் நிராகரித்தது. மாறாக பண்டைய வேதமதம் செலவு மிக்க சடங்குகளையும் வேள்விகளையும் நடத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தியது.
- மக்கள் தம்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தியது
- புத்தரின் கருத்துக்களைப் பரப்பியதில் பௌத்த சங்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.
- அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர் போன்ற அரசர்கள் பௌத்தம் பரவுவதற்கு ஆதரவு அளித்தனர்.
- பௌத்த விகாரைகள் அல்லது மடாலயங்கள் சிறந்த கல்வி மையங்களாகச் செயல்பட்டன. அவற்றில் ஒன்று நாளந்தா. அங்கு சீனயாத்ரிகர் யுவான்–சுவாங் பல ஆண்டுகள் தங்கி கல்வி பயின்றார்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> **சுவரோவியங்கள்**
> மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத்தில் உள்ள அஜந்தா குகைகளின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதக கதைகளை சித்தரிக்கின்றன.



இடை வழி (நடுவு நிலை வழி): உலக சுகங்களின் மீது தீவிரமான பற்றும் இல்லாமல், அதே சமயம் கடுமையான தவ வாழ்வையும் மேற்கொள்ளாமல் இருப்பதைக் குறிக்கிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 128 13-08-2018 19:55:53

| சமணமும் – பௌத்தமும் – ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் | | |
|---|---|---|
| ஒற்றுமைகள் | வேற்றுமைகள் | |
| | சமண மதம் | பௌத்த மதம் |
| ■ மகாவீரர், புத்தர் இருவருமே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் அவர்கள் அரச குடும்ப உரிமைகளை நிராகரித்து, துறவு வாழ்க்கையைத் தேர்வு செய்தனர்.<br>■ வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்தனர்.<br>■ மக்கள் பேசிய மொழிகளில் போதித்தனர்.<br>■ அனைத்து சாதியினரையும், பெண்களையும், சீடர்களாக ஏற்றுக் கொண்டனர்.<br>■ இரத்த பலிகளை எதிர்த்தனர்.<br>■ 'கர்மா' என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர்.<br>■ மதச் சடங்குகளை நடத்துவதன் மூலம் முக்தி அடையமுடியும் என்பதற்கு மாறாக சரியான நடத்தையும் சரியான அறிவுமே முக்திக்கான வழி எனக் கூறினர். | ■ சமணம் தீவிரமான துறவறத்தைப் பின்பற்றியது.<br>■ இந்தியாவில் மட்டுமே இருந்தது.<br>■ கடவுள் இருப்பதாக சமணம் நம்பவில்லை. ஆனால் ஒவ்வொரு யிரிலும் ஜீவன் இருப்பதை நம்பியது | ■ பௌத்தம் இடைப்பட்ட வழியைப் பின்பற்றியது.<br>■ உலகத்தின் பல பகுதிகளிலும் பரவியது.<br>■ அனாத்மா (எல்லையற்ற ஆன்மா) அனித்யா (நிலையாமை) ஆகிய கருத்துகளுக்கு அழுத்தம் வழங்கியது. |

**பௌத்த மாநாடுகள் – இடம்**

| | | |
|---|---|---|
| முதலாவது | – | இராஜகிருகம் |
| இரண்டாவது | – | வைசாலி |
| மூன்றாவது | – | பாடலிபுத்திரம் |
| நான்காவது | – | காஷ்மீர் |

### தமிழ்நாட்டில் பௌத்தத்தின் செல்வாக்கு

- சமணத்திற்கு மிகவும் பிற்பட்டே தமிழகத்தில் பௌத்தம் பரவியது.
- சங்க காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த இலக்கியமாகும்.
- மணிமேகலையில் காஞ்சிபுரம் விரிவாகச் விவரிக்கப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் புகழ் பெற்ற ஒரு பௌத்த மையமாகும். பௌத்த தர்க்கவியல் அறிஞரான தின்னகர் மற்றும் நாளந்தா பல்கலைக் கழகத்தின் மிகப்பெரும் அறிஞர் தர்மபாலர் இவ்வூரைச் சேர்ந்தவர் ஆவார்.
- கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார். அங்கு அசோகரால் கட்டப்பட்ட 100 அடி உயரமுள்ள ஸ்தூபியை அவர் பார்த்தாய்க் குறிப்பிட்டுள்ளார்.



புத்தர் சிலை–நாகப்பட்டினம்



காஞ்சிபுரம் அருகே பல்லூரில் காணப்பட்ட புத்தர் சிலை



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 129 13-08-2018 19:55:53

## ஜாதகக் கதைகள்

ஜாதகக் கதைகள் புகழ் பெற்றவை. புத்தர் முந்தைய பிறவிகளில் மனிதராகவும். விலங்காகவும் இருந்ததைக் குறித்த கதைகளாகும். இவை அறநெறிகளைக் கூறுவன ஆகும்.

## மரங்கொத்திப் பறவையும் சிங்கமும் (ஜாதகக் கதை)



முன்னொரு காலத்தில் ஒரு மரங்கொத்திப் பறவையும் ஒரு சிங்கமும் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் சிங்கம் ஒரு காட்டு எருமையை வேட்டையாடி உண்ணத் தொடங்கியது. அவ்வாறு உண்ணும்போது ஒரு பெரிய எலும்பு சிங்கத்தின் தொண்டையில் சிக்கிக் கொண்டது. சிங்கத்தால் அந்த எலும்பை எடுக்க முடியவில்லை. சிங்கத்திற்குக் கடுமையாக வலித்தது.





இரக்க மனம் கொண்ட மரங்கொத்திப் பறவை சிங்கத்திற்கு எலும்பை எடுக்க உதவி செய்வதாகக் கூறியது. இருந்தபோதிலும் எலும்பை எடுக்கும்போது தன்னை சிங்கம் விழுங்கிவிட மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால் மட்டுமே எலும்பை எடுக்க முடியும் என்று மரங்கொத்தி கூறியது. சிங்கமும் மகிழ்ச்சியாக ஒத்துக்கொண்டு மரங்கொத்தியின் முன்னால் தனது வாயைத் திறந்தது. சிங்கத்தின் வாய்க்குள் நுழைந்த மரங்கொத்தி எளிதாக அந்த எலும்பை வெளியே எடுத்துவிட்டது. சிங்கமும் தனது வாக்குறுதியைக் காப்பாற்றியது மரங்கொத்திப் பறவை பறந்து சென்றது.





பிறிதொருநாள் அதே சிங்கம் மற்றொரு காட்டெருமையைக் கொன்றது. சிங்கத்தோடு சேர்ந்து உண்ணலாம் என்று நினைப்பில் மரங்கொத்தி தனக்கும் சிறிது மாமிசம் தருமாறு சிங்கத்தைக் கேட்டது. மரங்கொத்தி ஏமாற்றம் அடையும் வகையில் சிங்கம் தனது உணவில் மரங்கொத்திக்குப் பங்குதர அப்பட்டமாக மறுத்ததோடு, எவ்வளவு துணிச்சல் இருந்தால் என்னிடம் மறுபடியும் சகாயம் செய்யும்படி கேட்பாய்? உனக்கு நான் ஏற்கனவே நிறையச் செய்தாயிற்று என்றது.

சிங்கம் எதைப்பற்றிப் பேசுகின்றது என்று மரங்கொத்திக்குப் புரியவில்லை. பின்னர் சிங்கம் தெளிவு படுத்தியது. "நீ எனது தொண்டையிலிருந்து எலும்பை எடுக்கிறபோது, உன்னை விழுங்காமல் விட்டுவிட்டேன். அதற்காக நீ எனக்கு நன்றி சொல்ல வேண்டும். இப்போது என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்காதே போய்விடு" என்றது. "நன்றியில்லாத இந்த ஜென்மத்திற்கு உதவி செய்தது என்னுடைய தவறு" என மரங்கொத்தி தனக்குத்தானே சொல்லிக்கொண்டது. மேலும் இதைப்போலத் தகுதியற்ற ஒருவரின்மேல் கோபம் கொள்வதில் அல்லது வருத்தம் அடைவதில் எப்பயனுமில்லை என்று கூறிப்பறந்தது.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter02 - Tamil Version.indd 130 13-08-2018 19:55:54

## உலகம் அந்நாளில் கி.மு. (பொ.ஆ.மு) 6ம் நூற்றாண்டு

கன்பூசியஸ் (குங் பு த்சே)



சீனாவில் கன்பூசியனிசம்

ஜொராஸ்டர்



பாரசீகத்தில் ஜொராஸ்டிரியனிசம்

### மீள்பார்வை

- இந்தியாவில் கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டு அறிவு மலர்ச்சியும் ஆன்மீக வளர்ச்சியும் ஏற்பட்ட காலமாகும்.
- சமணம் 24 தீர்த்தங்கர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கோட்பாடு ஆகும்.
- மகாவீரர் மூன்று நெறிகளை வற்புறுத்திக் கூறுகிறார். அவை நன்னம்பிக்கை, நல்லறிவு மற்றும் நற்செயல்.
- பௌத்தத்தை நிறுவியவர் கௌதம புத்தர்.
- புத்தரின் போதனைகள் தம்மா (தர்மம்) என்று குறிப்பிடப்படுகின்றன.
- பௌத்தம் இந்திய எல்லைகளைத் தாண்டியது. ஆனால் சமணம் இந்தியாவுக்குள்ளாகவே இருந்தது.
- சமணம் மற்றும் பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கை அகிம்சை ஆகும்.

### அருஞ்சொல் விளக்கம்

| | |
|---|---|
| மூடநம்பிக்கைகள் | – Superstitious beliefs |
| ஆசான் | – Preceptor |
| கோட்பாடு | – Doctrine |
| நல்லொழுக்கம் | – Virtuous |
| புனித நூல் | – Sacred book |
| ஈரமான சுவரின்மேல் வண்ணக்கலவைகள் கொண்டு வரையப்படும் ஓவியங்கள் | – Frescoes |
| சடலம் | – Corpse |
| துன்பம் மற்றும் பிறப்பிலிருந்து விடுதலை (நிர்வாண நிலை) | – Nirvana |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter02 - Tamil Version.indd 131 13-08-2018 19:55:54

## பயிற்சிகள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.**

1. பௌத்த நூல்களின் பெயர் என்ன?

அ) அங்கங்கள் ஆ) திரிபிடகங்கள் இ) திருக்குறள் ஈ) நாலடியார்

2. சமணத்தின் முதல் தீர்த்தங்கரர் யார்?

அ) ரிஷபா ஆ) பார்சவ இ) வர்தமான ஈ) புத்தர்

3. சமணத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் இருந்தனர்?

அ) 23 ஆ) 24 இ) 25 ஈ) 26

4. மூன்றாம் பௌத்தசபை எங்குக் கூட்டப்பட்டது?

அ) ராஜகிரகம் ஆ) வைசாலி இ) பாடலிபுத்திரம் ஈ) காஷ்மீர்

5. புத்தர் தனது முதல் போதனை உரையை எங்கு நிகழ்த்தினார்?

அ) லும்பினி ஆ) சாரநாத் இ) தட்சசீலம் ஈ) புத்தகயா

**II. கூற்றோடு காரணத்தைப் பொருத்துக / பொருத்தமான விடையை தேர்ந்தெடு.**

1. **கூற்று:** ஒரு சாதாரண மனிதரால் உபநிடதங்களைப் புரிந்து கொள்ள இயலாது.

**காரணம்:** உபநிடதங்கள் மிகவும் தத்துவம் சார்ந்தவை.

அ) கூற்றும் அதன் காரணமும் சரியானவை.
ஆ) கூற்று தவறானது.
இ) கூற்று சரியானது; ஆனால் அதற்கான காரணம் தவறானது.
ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

2. **கூற்று:** ஜாதகங்கள் புகழ் பெற்ற கதைகளாகும்

**காரணம்:** அஜந்தா குகையின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கின்றன.

அ) கூற்றும் அதற்கான காரணமும் சரி.
ஆ) கூற்று தவறு.
இ) கூற்று சரி; ஆனால் அதற்கான காரணம் தவறு.
ஈ) கூற்றும் அதற்கான காரணம் ஆகிய இரண்டும் தவறு.

9IL1TC

3. சரியான விடையைக் கண்டறியவும்.

விகாரைகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?

1. கல்விக் கூடமாக
2. பௌத்தத் துறவிகளின் தங்குமிடம்
3. புனிதப் பயணிகள் தங்குவதற்காக
4. வழிபாட்டுக் கூடம்

அ) 2 சரி ஆ) 1 மற்றும் 3 சரி இ) 1, 2, 4 ஆகியவை சரி ஈ) 1 மற்றும் 4 சரி



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 132 13-08-2018 19:55:54

4. சமணமும் பௌத்தமும் உருவாவதற்கு கீழ்க்கண்டக் கூற்றுகளைக் காரணமாகக் கருதலாமா?

1. வேள்விச்சடங்குகள் பெருஞ்செலவு மிக்கதாக இருந்தன.
2. மூடநம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் சாதாரண மனிதர்களைக் குழப்பமுறச் செய்தன.

மேற்சொல்லப்பட்ட கூற்றில்/கூற்றுகளில், எது/எவை சரியானது/சரியானவை.

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் இ) 1 மற்றும் 2 ஈ) 1 மற்றும் 2 ம் இல்லை

5. சமணம் குறித்த கீழ்க் கண்டவற்றுள் எது சரியானது?

அ) உலகைக் கடவுள் தோற்றுவித்தார் என்பதைச் சமணம் மறுக்கிறது.

ஆ) உலகைத் தோற்றுவித்தவர் கடவுள் என்பதை சமணம் ஒத்துக் கொள்கிறது.

இ) சமணத்தின் அடிப்படைத் தத்துவம் சிலைவழிபாடாகும்

ஈ) இறுதித்தீர்ப்பு எனும் நம்பிக்கையைச் சமணம் ஒத்துக் கொள்கிறது.

6. பொருந்தாததை வட்டமிடு.

பார்சவா, மகாவீரர், புத்தர், ரிஷபர்

7. தவறான இணையைக் கண்டுபிடி

| | | |
|---|---|---|
| அ) அகிம்சை | – | காயப்படுத்தாமல் இருத்தல் |
| ஆ) சத்யா | – | உண்மைபேசுதல் |
| இ) அஸ்தேய | – | திருடாமை |
| ஈ) பிரம்மச்சரியா | – | திருமண நிலை |

8. சித்தார்த்த கௌதமர் குறித்து கீழே காண்பனவற்றுள் ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் சரி.

அ) இந்து மதத்தை நிறுவியவர் அவரே.

ஆ) அவர் நேபாளத்தில் பிறந்தார்.

இ) அவர் நிர்வாணம் அடைந்தார்.

ஈ) அவர் சாக்கியமுனி என்று அறியப்பட்டார்.

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மகாவீரரின் கோட்பாடு _____________ என்று அழைக்கப்படுகிறது.
2. _____________ என்பது துன்பங்களிலிருந்தும் மறுபிறவியிலிருந்தும் விடுதலை பெற்ற ஒரு நிலை.
3. பௌத்தத்தை நிறுவியவர் _____________ ஆவார்.
4. காஞ்சிபுரத்திலுள்ள, திருப்பருத்திக்குன்றம் என்னும் கிராமம் ஒரு காலத்தில் _____________ என்று அழைக்கப்பட்டது.
5. _____________ என்பது புத்தரின் உடல் எச்சங்கள் மீது கட்டப்பட்டனவாகும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

**IV. சரியா? தவறா?**

1. புத்தர் கர்மாவை நம்பினார்.
2. புத்தருக்குச் சாதி முறை மேல் நம்பிக்கை இருந்தது.
3. கௌதம சுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார்.
4. விகாரைகள் என்பன கோவில்களாகும்.
5. அசோகர் பௌத்த மதத்தைப் பின்பற்றினார்.

**V. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. அங்கங்கள் | – | வர்தமானா |
| 2. மகாவீரர் | – | துறவிகள் |
| 3. புத்தர் | – | பௌத்தக் கோவில்கள் |
| 4. சைத்யா | – | சாக்கியமுனி |
| 5. பிட்சுக்கள் | – | சமண நூல் |

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

1. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் எவை?
2. பௌத்தத்தின் இரு பிரிவுகள் எவை?
3. 'ஜினா' என்பதின் பொருள் என்ன?
4. பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் உள்ள இரண்டு பொதுவான கூறுகளை எழுதுக.
5. பௌத்த சங்கத்தைப் பற்றி குறிப்பெழுதுக.
6. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தற்கு வருகை தந்த சீனப் பயணியின் பெயரைக் குறிப்பிடுக.
7. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பெண் ஜைனத் துறவியின் பெயர் என்ன?

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. பௌத்தத்தின் எட்டு நெறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. சமணத்தின் முக்கியமான ஐந்து நடத்தை விதிகள் எவை?
3. பௌத்தத்தின் நான்கு பேருண்மைகளை எடுத்துரைக்கவும்.
4. பௌத்தத்தின் பிரிவுகளான ஹீனயான, மகாயான பிரிவுகளிடையே உள்ள ஏதேனும் மூன்று வேறுபாடுகளை எழுதவும்.
5. சங்ககாலத்தில் பௌத்தமும் சமணமும் செழித்தோங்கின. ஒவ்வொன்றுக்கும் ஏதாவது இரண்டு சான்றுகளைத் தருக.

**VIII. உயர் சிந்தனை வினா**

1. கர்மா – ஒரு மனிதனின் செயல்கள். ஏதாவது 10 நல்ல செயல்களைக் குறிப்பிடுக.

**IX. மாணவர் செயல்பாடு.**

1. ஜாதகக் கதைகளில் ஒன்றை வாசிக்கவும். அதை நீயே சொந்தமாக எழுதவும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 134 13-08-2018 19:55:54

**2.** கீழ்க்கண்ட தலைப்புகளில் ஓர் அட்டவணை தயார் செய்யவும்.

| மதம் | நிறுவியவர் பெயர், (படத்துடன்) | அவர்களின் பெற்றோர் பெயர் | முக்கியக் கொள்கைகளில் ஏதாவது ஒன்று | பிரிவுகள் | சின்னம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

**3.** கீழ்க்காணும் வார்த்தைகளைப் பொருத்தமான கட்டத்திற்குள் இடவும்.

வார்த்தைகள்: ஜினா, மகாயானா, தீர்த்தங்கரர்கள். ஸ்தூபிகள், நிர்வாணா, திகம்பரர், திரிபிடகங்கள் ஆகமசித்தாந்தம்.

| சமணம் | பௌத்தம் |
|---|---|
| | |

**4.** தகவல் அட்டை தயாரித்தல் – செயல்பாடு

கீழ்க்காணும் மதங்கள் குறித்த செய்திகளைக் கொண்ட அட்டைகள் தயார் செய்யவும்.

இந்துமதம், கிறித்துவம், இஸ்லாம், சமணம், பௌத்தம்

**5.** 'வென்' வரைபடம் மூலம் சமணத்துக்கும் பௌத்தத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளைச் சுட்டிக்காட்டுக



**6.** குறுக்கெழுத்து புதிர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 11 |
| | | | 2 | | | |
| 8 | | 3 | | | | |
| | 9 | 10 | | | | |
| | | | | 4 | | |
| | | | | | 7 | |
| | | | | | 6 | |
| | | 5 | | | | |

**இடமிருந்து வலம்**

1. மூன்று ரத்தினங்களுள் ஒன்று
2. புத்தரின் போதனைகள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன
3. ஒரு சிறந்த கல்வி மையம்
4. புத்தர் ஞானம் பெற்ற இடம்
5. எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருப்பது

**வலமிருந்து இடம்**

6. சித்தார்த்தரின் தாயார்
7. மனித வாழ்க்கையை அவரின் செயலே தீர்மானிக்கிறது

**மேலிருந்து கீழ்**

8. லும்பினி __________மாநிலத்தில் உள்ளது
9. புத்த வழிபாட்டுக் கூடம்
10. பிறப்பு இறப்பு ஆகியவற்றில் இருந்து விடுதலை
11. கௌதம சுவாமியால் தொகுக்கப்பட்ட சமணநூல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 135 13-08-2018 19:55:54

## X. வாழ்க்கைத் திறன்கள்.

பௌத்தம், சமணம் குறித்த கதை அட்டைகளைத் தயாரிக்கவும் (மாதிரி)

| | | |
|---|---|---|
| இளமைப் பருவம்  | நான்கு பேருண்மைகள் | சக்கரம் – எட்டு நெறிகள்  |
| புத்தரின் போதனைகள்  | பௌத்த சங்கம் | பௌத்தப் பிரிவுகள் |

## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| வெள்ளைநிற ஆடை அணிந்த சமணத் துறவிகள் __________ என அழைக்கப்பட்டனர். <br> விடை: | புத்தர் என்பதன் பொருள் என்ன? <br> விடை: | சமணத்தின் 24வது தீர்த்தங்கரர் யார்? <br> விடை: |
| 'தர்ம சக்கர பரிவர்தனா' உரை நிகழ்த்தியவர் யார்? <br> விடை: | பௌத்தத்தில் எத்தனை பேருண்மைகள் உள்ளன? <br> விடை: | எந்த மதத்தின் போதனைகள் நான்கு பேருண்மைகளையும் எட்டு நெறிகளையும் கொண்டுள்ளன? <br> விடை: |
| புத்தரின் பல்வேறு பிறவிகள் பற்றிக் கூறுகிற மிகப் பழமையான பௌத்த நூல் எது? <br> விடை: | தமிழ்நாட்டில் சமண மடாலயங்கள் இருந்த ஏதேனும் 4 இடங்களைக் கூறுக. <br> விடை: | இரட்டைக் காப்பியங்களில் ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக <br> விடை: |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter02 - Tamil Version.indd 136 13-08-2018 19:55:54

# இணையச் செயல்பாடு

**நிகர்நிலை சுற்றுலா – சித்தன்னவாசல்**

இச்செயல்பாட்டின் மூலம் தமிழ்நாட்டின் குகை ஓவியங்களைக் காண நிகர்நிலை சுற்றுலா செல்வோமா!



படி –1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப்பக்கத்திற்குச் செல்க.

படி – 2: நிகர்நிலை சுற்றுலா பக்கத்தைப் பார்க்கலாம். திரையில் தோன்றும் "Adobe Flash Player" என்பதை அனுமதிக்க.

படி – 3: "Slide View" என்பதைத் திறந்து, இயக்கவும்.

படி – 4: சிவப்பு நிற அம்புக் குறியீட்டைச் சொடுக்கிக் குகை ஓவியங்களைக் காண்க..




படி–1 படி–2 படி–3 படி–4

உரலி:

http://view360.in/virtualtour/sithannavasal/

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter02 - Tamil Version.indd 137 13-08-2018 19:55:55

அலகு 3

# குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை



## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வழியாக,

- ஜனபதங்களும் மகாஜனபதங்களும் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த காரணிகளை அறிதல்.
- குடித்தலைமையில் இருந்து முடியாட்சி அரசுகளாக மாற்றம் பெற்ற இந்திய அரசின் பரிணாம வளர்ச்சியை புரிந்து கொள்ளல்.
- மௌரியப் பேரரசின் மகத்துவங்களை அறிதல்.
- இக்காலத்து நிர்வாகமுறையின் முக்கிய அம்சங்கள், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தின் இயல்புகளை அறிதல்.
- அசோகரின் கொள்கையான 'தம்மா' (தர்மம்)வைப் பற்றிய அறிவைப் பெறுதல்.
- மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை அறிதல்.

## கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டின் முக்கியத்துவம்

கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் புதிய பிராந்திய அரசுகள் உருவாயின. இதன் விளைவாக கங்கைச் சமவெளியில் வாழ்ந்த மக்களின் அரசியல் சமூகப் பொருளாதார வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. வட இந்தியாவில் புதிய அறிவு மலர்ச்சி தோன்றி வளரத் தொடங்கியது. மகாவீரரும் கௌதம புத்தரும் இந்த புது எழுச்சிக்கு வித்திட்டனர்.

## சமூகத்தை மாற்றியதில் இரும்பின் பங்கு

சமூக மாற்றத்தில் இரும்பு குறிப்பிடத்தக்கப் பங்கினை வகித்தது. கங்கைச் சமவெளியின் வளமான மண், இரும்பினாலான கொழுமுனையின் பயன்பாடு ஆகியவற்றால் வேளாண் உற்பத்தி அதிகரித்தது. இத்துடன் இரும்பு, கைவினைப் பொருட்களின் உற்பத்தியை எளிதாக்கியதோடு அதிகரிக்கவும் உதவியது. வேளாண் உபரியும், அதிக அளவிலான கைவினைப் பொருட்களின் உற்பத்தியும் வணிக மற்றும் பரிமாற்ற மையங்களைத் தோற்றுவித்தன. இவ்வளர்ச்சி நகரங்களும் பெருநகரங்களும் உருவாவதற்கு வழி வகுத்தது. இரும்பைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட நிபுணத்துவம் மற்றைய மகாஜனபதங்களைவிட மகதம் எழுச்சி பெற முக்கிய காரணமாயிற்று. இவ்வாறாக மகதம் தனக்கான ஒரு பேரரசை உருவாக்கியது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 138 13-08-2018 20:43:50

| | |
|---|---|
| 'கணா' என்னும் சொல் 'சரிசமமான சமூக அந்தஸ்தைக் கொண்ட மக்களைக் குறிக்கும். 'சங்கா' என்றால் 'மன்றம்' என்று பொருள். கண சங்கங்கள் சிறிய நிலப்பகுதியில் மேட்டுக்குடி மக்களைக் கொண்ட குழுவால் ஆளப்பட்டது. கண சங்கங்கள் சமத்துவ மரபுகளைப் பின்பற்றின. | 'முடியாட்சி' அரசு என்பது ஒரு நிலப்பகுதியை அரசனோ அல்லது அரசியோ ஆள்வதாகும். முடியாட்சி முறை அரசில் ஒரு குடும்பம் நீண்ட காலம் ஆட்சி செய்யும்போது அது அரச வம்சமாக மாறுகிறது. இந்த அரசுகள் வைதீக வேத மரபுகளைப் பின்பற்றின. |

## கணசங்கங்களும் அரசுகளும்

கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் இருவகைப்பட்ட அரசுகள் செயல்பட்டன.

- கண–சங்கங்கள் – முடியாட்சிமுறைக்கு முன்னால் மேட்டுக்குடி மக்கள் அடங்கிய குழுவின் ஆட்சி.
- முடியாட்சி அரசுகள் – மன்னராட்சி முறையில் அமைந்தவை

## ஜனபதங்களும் மகாஜனபதங்களும்

மக்கள் குழுவாக குடியேறிய தொடக்ககால இடங்களே ஜனபதங்கள் ஆகும். பின்னர் ஜனபதங்கள் குடியரசுகளாகவோ, சிற்றரசுகளாகவோ ஆனது. கங்கைச் சமவெளியில் இரும்பின் பரவலான பயன்பாட்டால் பரந்து விரிந்த மக்கள் வாழும் பகுதிகள் தோன்றின. இதனால் ஜனபதங்கள் மகாஜனபதங்களாக மாற்றம் பெற்றன.

## பதினாறு மகாஜனபதங்கள் ("பெரும் அரசுகள்")

கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் சிந்து கங்கைச் சமவெளியில் பதினாறு மகாஜனபதங்கள் இருந்தன. இது நாடோடி வாழ்க்கை முறையையும், இரத்த உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்த ஒரு சமூகம், வேளாண் சமூகமாக மாறத் தொடங்கிய காலம் ஆகும். அத்துடன் வணிகம் செய்யவும், பரிமாற்றம் செய்யவும் தொடங்கியது. எனவே நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் வலுவான ஆட்சி அவசியமாயிற்று. அதற்கு மையப்படுத்தப்பட்ட அரசு தேவைப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

**16 மகாஜனபதங்கள்**

அங்கம், மகதம், வஜ்ஜி, காசி, மல்லம், குரு, கோசலம், அவந்தி, சேதி, வத்சம், பாஞ்சாலம், மத்சயம், சூரசேனம், அஸ்மகம், காந்தாரம் மற்றும் காம்போஜம்.

இக்காலத்தில் நான்கு முக்கிய மகாஜனபதங்கள் இருந்தன.

அவைகள்:–

- மகதம் – பீகார்
- அவந்தி – உஜ்ஜைனி
- கோசலம் – கிழக்கு உத்திரப்பிரதேசம்
- வத்சம் – கோசாம்பி, அலகாபாத்

இந்த நான்கு மகாஜனபதங்களில் மகதம் ஒரு பேரரசாக உருவானது.

## மகதத்தின் எழுச்சிக்கான காரணங்கள்

- மகதம் கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதியில் அமைந்து இருந்தது. வளம் மிகுந்த இந்தச் சமவெளி வேளாண் விளைச்சலை அதிகரித்தது. இது அரசுக்கு நிலையான, கணிசமான வருமானத்தை அளித்தது.
- அடர்ந்த காடுகள் கட்டுமானங்களுக்குத் தேவையான மரங்களையும் படைகளுக்குத் தேவையான யானைகளையும் வழங்கியது.
- அதிக அளவிலான இயற்கை வளங்கள் குறிப்பாக இரும்பு ஆயுதங்கள் செய்யவும் மேம்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு உதவியது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 139 13-08-2018 20:43:50




மகதப் பேரரசு

- வணிக, வர்த்தக வளர்ச்சி மக்களை இடம்விட்டு இடம் சென்று கலை மற்றும் தொழில் மையங்களில் குடியேறச் செய்தது.
- இவற்றின் விளைவாக நகரமயமாதல் ஏற்பட்டு மகதம் பேரரசாக எழுச்சி பெற்றது.

## பண்டைய மகதத்தின் அரச வம்சங்கள்

நான்கு அரச வம்சங்கள் மகதத்தை ஆண்டன.

- ஹரியங்கா வம்சம்
- சிசுநாக வம்சம்
- நந்த வம்சம்
- மௌரிய வம்சம்

## ஹரியங்கா வம்சம்

மகதத்தின் படிப்படியான அரசியல் மேலாதிக்க வளர்ச்சி ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரர் காலத்தில் தொடங்கியது. படையெடுப்பு, திருமண உறவு ஆகிய வழிகளில் பிம்பிசாரர் லிச்சாவி, மதுரா மற்றும் கோசல ஆகிய பகுதிகளில் தமது அரசை விரிவு படுத்தினார். அவருடைய மகன் அஜாதசத்ரு (புத்தரின் சமகாலத்தவர்) ராஜகிரகத்தில் முதல் பௌத்த சபை மாநாட்டைக் கூட்டினார். அவருடைய வாரிசான உதயன் பாடலிபுத்திரத்தில் புதிய தலைநகருக்கான அடித்தளமிட்டார்.

## சிசுநாக வம்சம்

ஹர்யங்கா அரச வம்சத்தைத் தொடர்ந்து சிசுநாக அரச வம்சத்தினர் ஆட்சிப் பொறுப்பேற்றனர். இவ்வம்சத்தைச் சேர்ந்த அரசர் காலசோகா தலைநகரை ராஜகிரகத்திலிருந்து பாடலிபுத்திரத்திற்கு மாற்றினார். இவர் இரண்டாம் பௌத்த மாநாட்டை வைசாலியில் கூட்டினார்.

## நந்த வம்சம்

நந்தர்களே இந்தியாவில் முதன்முதலாகப் பேரரசை உருவாக்கியவர்கள் ஆவர். முதல் நந்தவம்ச அரசர் மகாபத்ம நந்தர் ஆவார். அவரைத் தொடர்ந்து அவருடைய எட்டு மகன்களும் ஆட்சி செய்தனர். அவர்கள் நவநந்தர்கள் (ஒன்பது நந்தர்கள்) என்றழைக்கப்பட்டனர். கடைசி அரசரான தனநந்தர் சந்திரகுப்த மௌரியரால் வெற்றி கொள்ளப்பட்டார்.

உங்களுக்குத் தெரியுமா?

### நாளந்தா–யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னம்

நாளந்தா பண்டைய மகத நாட்டில் இருந்த பௌத்த மடாலயம் ஆகும். குப்தர்களின் காலத்தில் அது மிகப் புகழ் பெற்ற கல்வி மையமாகத் திகழ்ந்தது. நாளந்தா என்னும் சமஸ்கிருதச் சொல் நா+அலம்+தா என்ற மூன்று சமஸ்கிருத சொற்களின் இணைப்பில் உருவானது. இதன் பொருள் 'வற்றாத அறிவை அளிப்பவர்' என்பதாகும்.

## மௌரியப் பேரரசு

**சான்றுகள்**

| | |
|---|---|
| தொல்லியல் சான்றுகள் | முத்திரை பதிக்கப்பட்ட நாணயங்கள் |
| கல்வெட்டுகள் | அசோகரின் கல்வெட்டுப் பேராணைகள், ஜுனாகத் கல்வெட்டு ஆகியவை. |
| மதச்சார்பற்ற இலக்கியங்கள் | கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்<br>விசாகதத்தரின் முத்ராராட்சஷம்<br>மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் |
| மதம் சார்ந்த இலக்கியங்கள் | சமண, பௌத்த நூல்கள், புராணங்கள் |
| வெளிநாட்டுச் சான்றுகள் | தீபவம்சம், மகாவம்சம், இன்டிகா. |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 140 13-08-2018 20:43:50

**உங்களுக்குத் தெரியுமா?**

### மெகஸ்தனிஸ்

கிரேக்க ஆட்சியாளர் செலுக்கஸ் நிகேட்டரின் தூதுவராக, சந்திரகுப்த மௌரிய அரசவையில் இருந்தவர். பதினான்கு ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார். அவர் எழுதிய நூலின் பெயர் இண்டிகா. மௌரியப் பேரரசைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள இந்நூல் ஒரு முக்கியச் சான்றாகும்.

## மௌரியப் பேரரசு – இந்தியாவின் முதல் பேரரசு

| | |
|---|---|
| **தலைநகர்** | பாடலிபுத்திரம் (தற்போதைய பாட்னா) |
| **அரசு** | முடியாட்சி |
| **வரலாற்றுக் காலம்** | ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு.) 322 முதல் 187 வரை |
| **முக்கிய அரசர்கள்** | சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர். |

**உங்களுக்குத் தெரியுமா?**

### பாடலிபுத்திரத்தின் பிரம்மாண்டம்

மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரான பாடலிபுத்திர நகருக்கு 64 நுழைவு வாயில்களும் 570 கண்காணிப்பு கோபுரங்களும் இருந்தன.

## சந்திரகுப்த மௌரியர்

மௌரியப் பேரரசே இந்தியாவின் முதல் பெரிய பேரரசாகும். சந்திரகுப்த மௌரியர் இப்பேரரசை மகதத்தில் நிறுவினார். பத்ரபாகு எனும் சமணத்துறவி சந்திரகுப்தரை தென்னிந்தியாவிற்கு அழைத்துச் சென்றார். சந்திரகுப்தர் சரவணபெலகொலாவில் (கர்நாடகா) சமணச் சடங்கான சல்லேகனா செய்து உயிர் துறந்தார். (சல்லேகனா என்பது உண்ணா நோன்பிருந்து உயர் துறத்தல் ஆகும். இது ஒரு சமணச் சடங்கு முறையாகும்.)

## பிந்துசாரார்

பிந்துசாரரின் இயற்பெயர் சிம்ஹஸேனா. இவர் சந்திரகுப்த மௌரியரின் மகன் ஆவார். கிரேக்கர்கள் பிந்துசாரரை அமிர்தகதா என்று அழைத்தனர். அதன் பொருள் 'எதிரிகளை அழிப்பவன்' என்பதாகும். பிந்துசாரரின் ஆட்சியின்போது மௌரியரின் ஆட்சி இந்தியாவின் பெரும்பகுதியில் பரவியது. அவர் தனது மகன் அசோகரை உஜ்ஜைனியின் ஆளுநராக நியமித்தார். அவருக்குப்பின் அசோகர் மகதத்தின் அரசரானார்.

## அசோகர்

மௌரிய அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் அசோகர் ஆவார். அவர் 'தேவனாம்பிரியர்' என்றழைக்கப்பட்டார். 'கடவுளுக்குப் பிரியமானவன்' என்பது இதன் பொருள் ஆகும்.

அசோகர் கி.மு. (பொ.ஆ.மு.) 261ல் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தார். அப்போரில் வென்று கலிங்கத்தைக் கைப்பற்றினார். அப்போரின் பயங்கரத்தை அசோகரே தன்னுடைய 13வது பாறைக் கல்வெட்டில் விவரித்துள்ளார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

"அசோகர் ஒரு பிரகாசமான நட்சத்திரம் போல இன்று வரை ஒளிர்கிறார்"

H.G. வெல்ஸ் – வரலாற்றறிஞர்

### சந்த அசோகர் (தீய அசோகர்) தம்ம அசோகராக (நீதிமான் அசோகர்) மாற்றம்:

கலிங்கப் போருக்குப் பின்னர் அசோகர் ஒரு பௌத்தர் ஆனார். தர்மத்தின் கொள்கையை மக்களுக்குப் பரப்புவதற்காக அவர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுப் பயணங்கள் (தர்மயாத்திரைகள் – Dharmayatras) மேற்கொண்டார். அசோகரின் இரண்டாம் தூண் கல்வெட்டில் தர்மத்தின் பொருள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. அது அனைத்து மதங்களின் சாரமாகவுள்ள மிக



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 141 13-08-2018 20:43:50




உயர்ந்த கருத்தான மனிதாபிமானத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

கீழ்க்கண்டவைகளுக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அவை:

- இரக்க உணர்வு
- அறக் கொடை
- தூய்மை
- புனிதத்தன்மை
- சுய–கட்டுபாடு
- உண்மையுடைமை
- மூத்தோர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோரிடத்தில் மரியாதையுடனும், பணிவுடனும் நடந்து கொள்ளல்.

உங்களுக்குத் தெரியுமா?

### சிங்கமுகத் தூண்

சாரநாத்திலுள்ள அசோகருடைய தூணின் சிகரப் பகுதியில் அமைந்துள்ள சிங்க உருவங்கள் இந்திய தேசிய சின்னமாகவும், வட்ட வடிவ அடிப்பகுதியில் இடம் பெற்றுள்ள சக்கரம் இந்தியாவின் தேசியக் கொடியின் மையச் சக்கரமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

அவர் தன்னுடைய மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்ராவையும் பௌத்தத்தைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பி வைத்தார். தம்மத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காக மேற்கு ஆசியா, எகிப்து, கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கு சமயப்பரப்பாளர்களை அனுப்பி வைத்தார். அசோகர் தர்ம –மகாமாத்திரர்கள் என்னும் புதிய அதிகாரிகளை நியமித்தார். பேரரசு முழுவதிலும் பௌத்தமத்தைப் பரப்புவதே அவர்களுடைய பணியாகும். அசோகர் தனது தலைநகரான பாடலிபுத்திரத்தில் மூன்றாம் பௌத்தமத மாநாட்டைக் கூட்டினார்.

## அசோகரின் பேராணைகள்

பேரரசர் அசோகருடைய ஆணைகள் மொத்தம் முப்பத்திமூன்று. அவைகள் அசோகரால் தூண்களிலும், பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. அவை அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றின் மீது அசோகர் கொண்டிருந்த நம்பிக்கையையும், மக்களின் நலன்மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும் விவரிக்கின்றன.

9J4SHH

> உங்களுக்குத் தெரியுமா?
>
> **பேராணை** – அரசரால் அல்லது உயர் பதவியில் இருப்பவரால் வெளியிடப்பட்ட ஆணை அல்லது பிரகடனம் ஆகும்.



> உங்களுக்குத் தெரியுமா?
>
> **அசோகர் கல்வெட்டுகளில் எழுத்துமுறை**
>
> சாஞ்சி – பிராமி
>
> காந்தகார் – கிரேக்கம் மற்றும் அராமிக்
>
> வடமேற்குப் பகுதிகள் – கரோஸ்தி

அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டுகள் மூவேந்தர்களான பாண்டியர், சோழர், கேரளபுத்திரர் ஆகியோரையும் சத்யபுத்திரர்களையும் குறிப்பிடுகின்றன.

## மௌரியரின் நிர்வாகம்

### மையப்படுத்தப்பட்ட நிர்வாகம்

**அரசர்**

- அரசரே மௌரியப் பேரரசின் மேலான இறையாண்மை மற்றும் அதிகாரம் உடையவர் ஆவார்.
- 'மந்திரிபரிஷத்' எனும் அமைச்சரவை அரசருக்கு உதவியது. இந்த அமைச்சரவை ஒரு புரோகிதர், ஒரு சேனாபதி, ஒரு மகாமந்திரி மற்றும் இளவரசனைக் கொண்டதாகும்.
- அரசர் ஒரு மிகச்சிறந்த உளவுத்துறையைக் கொண்டிருந்தார்.

### வருவாய் முறை

- நிலங்களே அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தந்தது. லும்பினியிலுள்ள அசோகரது கல்வெட்டு பாலி மற்றும் பாகா என்னும் இரண்டு வரிகளைக் குறிப்பிடுகின்றது.
- மொத்த விளைச்சலில் 1/6 பங்கு (பாகா) நிலவரியாக வசூல் செய்யப்பட்டது.
- காடுகள், சுரங்கங்கள், உப்பு மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வரிகள் அரசுக்கு கூடுதல் வருவாயாக அமைந்தன.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter03 - Tamil Version.indd 143 13-08-2018 20:43:51

- அரசு வருவாயில் பெரும்பகுதி இராணுவத்திற்கான ஊதியம், அரசு அதிகாரிகளுக்கான ஊதியம், அறக் கட்டளைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலைகள் அமைத்தல் போன்ற பொதுப்பணிகள் ஆகியவைகளுக்காகச் செலவழிக்கப்பட்டது.

### நீதி நிர்வாகம்

- அரசரே நீதித்துறையின் தலைவராவார். அவரே மேல்முறையீட்டு நீதிமன்றமும் ஆவார்.
- அரசர் தனக்குக் கீழாக பல துணை நீதிபதிகளை நியமித்தார். தண்டனைகள் கடுமையாக இருந்தன.

### இராணுவ நிர்வாகம்

அரசரே படைகளின் தலைமைத் தளபதியாவார்.

முப்பது நபர்களைக் கொண்ட குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆறுகுழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குழுவும் கீழ்க்கண்டவற்றை நிர்வாகம் செய்தது.

- கடற்படை
- ஆயுதங்கள் (போக்குவரத்து மற்றும் விநியோகம்)
- காலாட்படை
- குதிரைப்படை
- தேர்ப்படை
- யானைப்படை

### நகராட்சி நிர்வாகம் (நகரம் மற்றும் மாநகரம்)

- நகரத்தை நிர்வாகம் செய்வதற்காக 30 உறுப்பினர்களைக் கொண்ட குழுவானது 5 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- நகரம் நிர்வாகம் 'நகரிகா' என்னும் அதிகாரியின் கீழிருந்தது. அவருக்கு ஸ்தானிகா, கோபா எனும் அதிகாரிகள் உதவி செய்தனர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ருத்ரதாமனின் ஜுனாகத்/கிர்னார் கல்வெட்டு சுதர்சனா ஏரி எனும் நீர்நிலை உருவாக்கப்பட்டதைப் பதிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் தொடங்கப்பட்டது. அசோகரின் காலத்தில் பணிகள் நிறைவு பெற்றன.

### நாணயம்

பணம் வணிகத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படவில்லை. அரசாங்கம் பணியாளர்களுக்கு ஊதியத்தைப் பணமாகவே வழங்கியது.

மயில், மலை மற்றும் பிறைச் சந்திர வடிவம் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் (பணம்), 'மாஸாகாஸ்' என்று அழைக்கப்பட்ட செப்பு நாணயங்கள் ஆகியன அரசினுடைய நாணயங்களாக இருந்தன.

### வணிகமும் நகரமயமாதலும்

வணிகம் செழிப்புற்றது. குறிப்பாக கிரேக்கம் (ஹெலனிக்) மலேயா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளுடன் பெருமளவு வணிகம் நடைபெற்றது. காசி (பனாரஸ்) வங்கா (வங்காளம்) காமரூபா (அஸ்ஸாம்) மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த மதுரை ஆகிய இடங்களில் சிறப்பு மிக்க துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன என்று அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது.

| முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் | முக்கிய இறக்குமதிப் பொருட்கள் |
|---|---|
| நறுமணப் பொருள்கள் | குதிரைகள் |
| முத்துக்கள் | தங்கம் |
| வைரங்கள் | கண்ணாடிப் பொருட்கள் |
| பருத்தி இழை துணி | பட்டு (லினன்) |
| தந்தத்தினாலான பொருட்கள், | |
| சங்குகள், சிப்பிகள் | |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181



மௌரியர்கால நாணயங்கள்

## மௌரியர் கலையும் கட்டடக்கலையும்

மௌரியர் கால கலையை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

9JDNYA

- உள்ளூர்க் கலை – யக்ஷன், யக்ஷி உருவச் சிலைகள்.
- அரச கலைகள் – அரண்மனைகள் மற்றும் பொது கட்டடங்கள், ஒற்றைக்கல் தூண்கள், பாறை குடைவரைக் கட்டடக்கலை, ஸ்தூபிகள்.

உங்களுக்குத் தெரியுமா?

**யக்ஷன்** என்பது நீர், வளம், மரங்கள், காடுகள், காட்டுச் சூழல் ஆகியவற்றோடு தொடர்புடைய கடவுள் ஆவார். **யக்ஷி** என்பது யக்ஷாவின் பெண்வடிவமாகும்.



யக்ஷா, யக்ஷி சிலைகள்

## ஸ்தூபி

ஸ்தூபியானது செங்கல் அல்லது கற்களால் கட்டப்பட்டுள்ள அரைக்கோள வடிவமுடைய குவிமாடம் போன்ற அமைப்பாகும். புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூபியின் மையத்தில் வைக்கப்பட்டிருக்கும்.



மத்தியப்பிரதேச மாநிலத் தலைநகர் போபாலுக்கு அருகேயுள்ள சாஞ்சி.

## சாரநாத்திலுள்ள ஒற்றைக்கல் தூண்

இத்தூணின் சிகரப்பகுதியில் தர்மச்சக்கரம் இடம் பெற்றுள்ளது.



**பாறைக் குடைவரை கலையின் தொடக்கம்**

நாகார்ஜுனா பராபர் குன்றுகளிலுள்ள பாறை குடைவரைக் குகைக் கோவில்கள்

புத்தகயாவுக்கு வடபுறம் பல குகைகள் உள்ளன. பராபர் குன்றிலுள்ள மூன்று குகைகளில் அசோகருடைய அர்ப்பணிப்புக் கல்வெட்டுகள் உள்ளன. (இக்குகைகள் யாருக்காக அமைத்துத் தரப்பட்டன என்ற விபரங்கள் அடங்கிய கல்வெட்டுகள்)



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 145 13-08-2018 20:43:51



லோமாஸ் ரிஷி குகை – பராபர்

நாகார்ஜுன கொண்டாவிலுள்ள மூன்று குகைகளில் தசரத மௌரியரின் (அசோகரின் பேரன்) கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.

### மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

- அசோகருக்குப் பின்வந்த அரசர்கள் மிகவும் வலிமை குன்றியவர்களாக இருந்தனர்.
- பேரரசின் பல பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்ற கலகங்கள்.
- பாக்டீரிய நாட்டைச் சேர்ந்த கிரேக்கர்களின் படையெடுப்பு பேரரசை மேலும் வலிமை குன்றச் செய்தது.
- மௌரியப் பேரரசின் கடைசி அரசர் பிருகத்ரதா அவருடைய படைத் தளபதியான புஷ்யமித்ர சுங்கரால் கொல்லப்பட்டார். அவரே சுங்க அரசவம்சத்தை நிறுவினார்.

| பண்டைய பெயர் | தற்போதைய பெயர் |
|---|---|
| ராஜகிரகம் | ராஜ்கிர் |
| பாடலிபுத்திரம் | பாட்னா |
| கலிங்கா | ஒடிசா |

## உலகம் அந்நாளில்



**சீனப்பெருஞ்சுவர்**

இது பழங்காலத்தில் கட்டப்பட்ட தொடர்ச்சியான பல கோட்டைச் சுவராகும் குன்–சி–ஹங் என்னும் பேரரசர் தனது பேரரசின் வட எல்லையை பாதுகாப்பதற்காக கி.மு.(பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டில் இந்தச் சுவர்களை இணைத்தார்.



**ஒலிம்பியாவின் ஜியஸ் (zeus) கோயில்**

கிரிஸ்நாட்டில்உள்ளஒலிம்பியாவில்கி.மு(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் ஜியஸ் என்ற கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 146 13-08-2018 20:43:52

## மீள்பார்வை

- கி.மு. (பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டு ஒரு முக்கியமான திருப்புமுனையாகும். பதினாறு மகாஜனபதங்களின் எழுச்சிக்கு அது சாட்சியாய் இருந்தது.
- பதினாறு மகாஜனபதங்களில் மகதம் ஒரு பேரரசாய் எழுச்சி பெற்றது.
- மகதம் ஹரியங்கா, சிசுநாக, நந்த, மௌரிய அரச வம்சங்களால் ஆளப்பட்டது.
- சந்திரகுப்த மௌரியர், மௌரியப் பேரரசை நிறுவினார்.
- மௌரிய அரசர்களில் அசோகர் மிகவும் புகழ் பெற்றவர்.
- அசோகரின் தூண் கல்வெட்டுகளும் மற்றும் பாறைக் கல்வெட்டுகளும், தம்மா பற்றிய அவரது கொள்கைகளை நமக்கு உணர்த்துகின்றன.

### அருஞ்சொல் விளக்கம்

| | | |
|---|---|---|
| சமத்துவம் | – | Egalitarian |
| மடாலயம் | – | Monastery |
| ஆய்வுநூல் | – | Treatise |
| பேரச்சமும் நடுக்கமும் | – | Horror |

9JHJZX

## பயிற்சிகள்

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. நான்கு மகாஜனபதங்களில் மிகவும் வலிமையான அரசு எது?

அ) அங்கம் ஆ) மகதம் இ) கோசலம் ஈ) வஜ்ஜி

2. கீழ்க்கண்டவர்களில் கௌதம புத்தரின் சமகாலத்தைச் சேர்ந்தவர் யார்?

அ) அஜாதசத்ரு ஆ) பிந்துசாரா இ) பத்மநாப நந்தா ஈ) பிரிகத்ரதா

3. கீழ்க்காண்பனவற்றில் எது மௌரியர் காலத்திற்கான சான்றுகளாகும்?

அ) அர்த்த சாஸ்திரம் ஆ) இண்டிகா
இ) முத்ராராட்சஷம் ஈ) இவை அனைத்தும்

4. சந்திரகுப்த மௌரியர் அறியணையைத் துறந்து _____________ என்னும் சமணத் துறவியோடு சரவணபெலகோலாவுக்குச் சென்றார்.

அ) பத்ரபாகு ஆ) ஸ்துலபாகு இ) பார்ஸவநாதா ஈ) ரிஷபநாதா

5. செல்யூகஸ் நிகேட்டரின் தூதுவர் _____________.

அ) டாலமி ஆ) கௌடில்யர் இ) ஜெர்சக்ஸ் ஈ) மெகஸ்தனிஸ்

6. மௌரிய வம்சத்தின் கடைசி அரசர் யார்?

அ) சந்திரகுப்த மௌரியர் ஆ) அசோகர் இ) பிரிகத்ரதா ஈ) பிந்துசாரர்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 147 13-08-2018 20:43:52

**II.** கூற்றைக் காரணத்துடன் பொருத்துக / சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1.** **கூற்று:** அசோகர் இந்தியாவின் மாபெரும் பேரரசர் என கருதப்படுகிறார்.

**காரணம்:** தர்மத்தின் கொள்கையின்படி அவர் ஆட்சி புரிந்தார்

அ) கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்றும் காரணமும் உண்மையானவை, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

**2.** கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவை சரி.

**கூற்று 1.** ஒட்டுமொத்த இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் இணைந்த முதல் அரசர் சந்திரகுப்த மௌரியர் ஆவார்.

**கூற்று 2.** மௌரியரின் நிர்வாகம் பற்றிய செய்திகளை அர்த்தசாஸ்திரம் வழங்குகிறது.

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும்

இ) 1, 2 ஆகிய இரண்டும் ஈ) 1ம் இல்லை 2ம் இல்லை

**3.** கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளைக் கவனமாக கவனி. அக்கூற்றுகளில் சரியானது எது/எவை எனக் கண்டுபிடி.

1. மகதத்தின் முதல் அரசர் சந்திரகுப்த மௌரியர்

2. ராஜகிரிகம் மகதத்தின் தலைநகராய் இருந்தது.

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும்

இ) 1 மற்றும் 2 ஈ) 1ம் இல்லை 2ம் இல்லை

**4.** கீழ்க்காண்பனவற்றைக் காலக்கோட்டின்படி வரிசைப்படுத்தவும்

| | | | |
|---|---|---|---|
| அ) நந்தா | சிசுநாகா | ஹரியங்கா | மௌரியா |
| ஆ) நந்தா | சிசுநாகா | மௌரியா | ஹரியங்கா |
| இ) ஹரியங்கா | சிசுநாகா | நந்தா | மௌரியா |
| ஈ) சிசுநாகா | மௌரியா | நந்தா | ஹரியங்கா |

**5.** கீழ்க்கண்டவைகளில் எது மகதப் பேரரசின் எழுச்சிக்குக் காரணமாயிற்று

1. முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம்

2. அடர்ந்த காடுகள் மரங்களையும், யானைகளையும் வழங்கின

3. கடலின் மீதான ஆதிக்கம்

4. வளமான இரும்புத் தாது கிடைத்தமையால்

அ) 1, 2 மற்றும் 3 மட்டும்

ஆ) 3 மற்றும் 4 மட்டும்

இ) 1, 2 மற்றும் 4 மட்டும்

ஈ) இவையனைத்தும்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 148 13-08-2018 20:43:52

**III.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _____________ மகதத்தின் தொடக்ககாலத் தலைநகராக இருந்தது.
2. முத்ரராட்சசத்தை எழுதியவர் _____________.
3. _____________ பிந்துசாரரின் மகனாவார்.
4. மௌரியப் பேரரசை தோற்றுவித்தவர் _____________.
5. நாடு முழுவதிலும் தர்மத்தைப் பரப்புவதற்காக _____________ பணியமர்த்தப்பட்டனர்.

**IV.** சரியா? தவறா?

1. தேவனாம்பியா எனும் பட்டம் சந்திரகுப்த மௌரியருக்கு வழங்கப்பட்டது.
2. அசோகர் கலிங்கப்போரில் தோல்வியடைந்த பின்னர் போரைக் கைவிட்டார்.
3. அசோகருடைய தம்மா பௌத்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை.
4. நமது காகிதப் பணத்தில் இடம் பெற்றுள்ள சிங்கங்கள் ராம்பூர்வா தூண்களின் காளை சிகரப் பகுதியிலிருந்து பெறப்பட்டவையாகும்.
5. புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூயின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**V.** கீழ்க்கண்டவற்றை பொருத்துக.

| | |
|---|---|
| அ) கணா | 1) அர்த்தசாஸ்திரம் |
| ஆ) மெகஸ்தனிஸ் | 2) மதச் சுற்றுப்பயணம் |
| இ) சாணக்கியா | 3) மக்கள் |
| ஈ) தர்மயாத்திரை | 4) இண்டிகா |

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | 2 | 4 | 3 | 1 |
| இ) | 3 | 1 | 2 | 4 |
| ஈ) | 2 | 1 | 4 | 3 |

**VI.** ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

1. மௌரியர் காலத்திற்கான இரண்டு இலக்கியச் சான்றுகளைக் குறிப்பிடவும்.
2. ஸ்தூபி என்றால் என்ன?
3. மகத அரச வம்சங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. மௌரியர் காலத்தில் அரசு வருவாய் எவற்றிலிருந்து பெறப்பட்டது?
5. நகரங்களின் நிர்வாகத்தில் 'நகரிகா'வுக்கு உதவியவர் யார்?
6. அசோகரின் இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைப் பேராணைகளிலிருந்து நீங்கள் அறிவதென்ன?
7. மௌரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு தமிழ் நூல் கூறுக?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 149 13-08-2018 20:43:52

**VII.** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி

**1.** பௌத்தத்தைப் பரப்புவதற்கு அசோகர் என்ன செய்தார்? (ஏதேனும் மூன்று)

**2.** மகதத்தின் எழுச்சிக்கான காரணங்களில் ஏதாவது மூன்றினை எழுதுக.

**VIII.** உயர் சிந்தனை வினாக்கள்

**1.** கலிங்கப்போர் அசோகரது வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. எவ்வாறு?

**2.** நீ அசோகரைப் போன்ற ஒரு அரசராக இருந்தால் மேற்கொள்ளும் ஏதேனும் ஐந்து நலத் திட்டங்களை எழுதுக.

**IX.** படங்களைப் படிப்போம்.



இது அசோகருடைய பேராணைகள் பற்றிய படம்

அ) பேராணைகள் என்றால் என்ன?

ஆ) எவ்வகைகளில் அசோகரது பேராணைகள் பயன்படுகின்றன?

இ) இப்பேராணைகள் எங்கெல்லாம் பொறிக்கப்பட்டுள்ளன?

ஈ) சாஞ்சி கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்து முறையின் பெயரென்ன?

உ) பாறைப் பேராணைகள் மொத்தம் எத்தனை உள்ளன?

**X.** நான் யார்.

**1.** நான் ஹரியங்கா அரச வம்சத்தைச் சேர்ந்தவன். திருமண உறவுகளின் மூலம் எனது பிரதேசங்களை விரிவு படுத்தினேன். அஜாதசத்ரு எனது மகன். நான் யார்?

**2.** சமூகத்தை மாற்றியமைத்ததில் நான் முக்கியப்பங்கு வகித்தேன். கலப்பைக் கொழுமுனை செய்வதற்கு நான் பயன்படுகிறேன். நான் யார்?

**3.** நான் தேவனாம்பிய என அறியப்பட்டேன். நான் அமைதி வழியை தழுவிக் கொண்டேன். நான் யார்?

**4.** நான் இந்தியாவின் முதல் பேரரசை நிறுவினேன். நான் 'சல்லேகனா' நோன்பிருந்தேன். நான் யார்?

**5.** அசோகரின் சிங்கத் தலைப்பகுதி தூணில் நான் காணப்படுகிறேன். நம்முடைய தேசக் கொடியின் மையத்தில் உள்ளேன். நான் யார்?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter03 - Tamil Version.indd 150 13-08-2018 20:43:52

**XI.** அர்த்தப்படுத்தி விடையைக் கண்டுபிடி

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ 1 | உ 2 | க் 3 | க 4 | கா 5 | ங் 6 | ச் 7 | ச 8 | ட் 9 | டு 10 | ண 11 | த் 12 | த 13 | |
| தா 14 | தி 15 | ந் 16 | ந 17 | நா 18 | ப் 19 | ப 20 | பா 21 | பொ 22 | ம் 23 | ம 24 | மி 25 | மௌ 26 | |
| ய 27 | ர் 28 | ர 29 | ரி 30 | ரு 31 | ல் 32 | வெ 33 | ள் 34 | ள 35 | று 36 | றை 37 | ன் 38 | ஹ 39 | ஷ 40 |

1. மகதத்தை ஆண்ட முதல் அரச வம்சம் ___________(39, 30, 27, 6, 5)
2. ___________ பேரரசு இந்தியாவின் முதல் பெரிய பேரரசாகும். (26, 30, 27)
3. ___________ புதிய தலை நகரான பாடலிபுத்திரத்திற்கு அடித்தளமிட்டார் (2, 13, 27, 38)
4. ___________ ஒரு முக்கியமான ஏற்று மதிப்பொருள் (17, 36, 24,11, 19, 22, 31, 34)
5. பண்டைய மகத நாட்டில் இருந்த மடாலயம் பின்னர் புகழ்பெற்ற கல்வி நிலையமாக திகழ்ந்தது (18, 35, 16, 14)
6. நிலவரி ___________ (20, 5)
7. கலிங்கப் போரின் பயங்கரம் ___________ பொறிக்கப்பட்டுள்ளது (21, 37, 3, 4, 32, 33, 9, 10)
8. கிரேக்கர்கள் பிந்துசாரரை ___________ என்று அழைத்தனர் (1, 25, 28, 13, 4, 14)
9. சாரநாத் தூணின் சிகரப்பகுதியில் அமைந்துள்ளது ___________ (13, 28, 24, 7, 8, 3, 4, 29, 23)
10. அமைச்சரவை ___________ என அழைக்கப்பட்டது (24, 16, 15, 30, 20, 30, 40, 12)

**XII.** செயல்பாடுகள்

1. களப் பயணமாக அருங்காட்சியகம் செல்லுதல்.
2. அசோகர் சந்திரகுப்தர் ஆகியவர்களோடு தொடர்புடைய திரைப்படங்களைக் காணுதல்.

**XIII.** வரைபடப்பணி

1. வரைபடத்தில் அசோகர் பேரரசின் எல்லைகளைக் குறிப்பிடவும்.
2. இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

   அ) தட்சசீலம் ஆ) பாடலிபுத்திரம் இ) உஜ்ஜைனி

   ஈ) சாஞ்சி உ) இந்திரபிரஸ்தம்

**XIV.** வாழ்க்கைத் திறன்

1. அசோகச் சக்கரத்தின் மாதிரி ஒன்றைச் செய்யவும்.
2. சாஞ்சி ஸ்தூபியின் மாதிரி ஒன்றைச் செய்யவும்.
3. நமது தேசக் கொடியின் படம் வரைந்து வர்ணம் தீட்டவும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 151 13-08-2018 20:43:52

**XV.** விடைக்கட்டகம்

| | | |
|---|---|---|
| கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளிப் பகுதிகளில் இருந்த இருவகைப்பட்ட அரசுகளின் பெயர்கள் என்ன?<br><br>விடை: | இரண்டாம் பௌத்தசபையை வைசாலியில் கூட்டியது யார்?<br><br>விடை: | கலிங்கத்தின் தற்போதைய பெயர் என்ன?<br><br>விடை: |
| நகரத்தை நிர்வகித்தவர் _______<br><br>விடை: | மூன்றாம் பௌத்த சபை அசோகரால் எங்கு கூட்டப்பட்டது?<br><br>விடை: | ஏதேனும் இரண்டு மகாஜனபதங்களின் பெயர்களை கூறு?<br><br>விடை: |
| சுதர்சனா ஏரி வெட்டப்பட்டதைக் குறிப்பிடும் கல்வெட்டு எது?<br><br>விடை: | நந்த வம்சத்தின் கடைசி அரசர் யார்?<br><br>விடை: | மௌரியர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வெள்ளி நாணயங்களின் பெயர் என்ன?<br><br>விடை: |

## மூலநூல்கள்


1. ரொமிலா தாப்பர், *முற்கால இந்தியா, தொடக்கக் காலத்திலிருந்து கி.பி. 1300 வரை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2017
2. ஆர்.எஸ் சர்மா, *பண்டைக் கால இந்தியா*, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், 2011
3. Upinder Singh, *A History of Ancient and Early Medieval India* pearson, 2008




athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 152 13-08-2018 20:43:52

# இணையச் செயல்பாடு

## குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை

ஊடாடும் வரைபடத்தைப் பயன்படுத்தி உலக வரலாறு ஒப்பீடு, அரசியல், ராணுவம், கலை, அறிவியல், இலக்கியம், மதம் மற்றும் தத்துவம் ஆகியவற்றை அறிக.



படி – 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி – 2: உலக வரைபடப்பக்கம் தோன்றும்.

படி – 3: பேரரசின் காலத்தையோ அரசியல் காலத்தையோ உள்ளீடு செய்க. (எ.கா. மகதப்பேரரசு)

படி – 4: உள்ளீடு செய்யப்பட்டதற்கு ஏற்ற வரைபடம் தோன்றும்.




**உரலி:**

http://geacron.com/home-en/

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI th History CHapter03 - Tamil Version.indd 153 13-08-2018 20:43:53

## ஆறாம் வகுப்பு – வரலாறு
## ஆக்கம்


### பாட வல்லுநர்கள்

முனைவர். மணிகுமார் K.A
பேராசிரியர் (ஓய்வு), வரலாற்று துறைத் தலைவர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி .

### மேலாய்வாளர்கள்

இரவிசந்திரன் S.L,
உதவிப்பேராசிரியர் (ஓய்வு)
இராஜுஸ் கல்லூரி
இராஜபாளையம்.

அப்பண்ணசாமி M.
ஆலோசகர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியல் பணிகள் கழகம்,
TNTB & ESC, நுங்கம்பாக்கம், சென்னை.

### சமூக அறிவியல் பாட ஒருங்கிணைப்பாளர்கள்

சுஜாதா .M
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

ஜாய் கிறிஸ்டி .N
பட்டதாரி ஆசிரியர்
தே.கல்லுப்பட்டி ஒன்றியம், மதுரை.

### கணினித் தொழில் நுட்பம்

நாகராஜ் D
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, ராபூசல்
புதுக்கோட்டை.

### பாட நூலாசிரியர்கள்

கோமதி .S
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி
பழைய பெருங்களத்தூர்
சென்னை.

சீனிவாசன் .B
பட்டதாரி ஆசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
கிருஷ்ணகிரி.

நான்சி நீதிமா
ஆராய்ச்சியாளர்
லயோலா கல்லூரி, நுங்கம்பாக்கம்
சென்னை.

### இணையச் செயல்பாடு ஒருங்கிணைப்பாளர்

நாகராஜ் D.
பட்டதாரி ஆசிரியர் (வரலாறு)
அரசு மேல்நிலைப் பள்ளி
ராப்பூசல், புதுக்கோட்டை.

### விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ஜே.எப். பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.

## கலை மற்றும் வடிவமைப்புக் குழு

### வரைபடம்

காந்திராஜன் K T
கலை மற்றும் பட ஒருங்கிணைப்பாளர்
தமிழ் விர்ச்சுவல் அகாடமி, சென்னை

ஓவிய ஆசிரியர்கள்,
தமிழ்நாடு அரசு.

கா. தனஸ் தீபக் ராஜன்

கா. நளன் நன்சி ராஜன்
அரசு கவின் கலை கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்

### வடிவமைப்பு

ஆரோக்கியம் பெலிக்ஸ்,
சென்னை

### In-House - QC

மனோகர் இராதாகிருஷ்ணன்
ஜெரார்ட் வில்சன்

### ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

### தட்டச்சு

கௌரி




athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI th History CHapter03 - Tamil Version.indd 154 14/08/18 1:26 PM

# புவியியல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

அலகு 1

# வளங்கள்



## கற்றல் நோக்கங்கள்

- "வளங்கள்" என்பதன் பொருளை அறிமுகப்படுத்துதல்
- வளங்களின் வகைகள் பற்றி விளக்கமாக அறிதல்
- வளங்கள் பாதுகாத்தலின் தேவையைப் புரிந்து கொள்ளுதல்
- பொருளாதாரச் செயல்பாடுகள் பற்றிப் புரிந்து கொள்ளுதல்

9JHG2K

### நுழையுமுன்

இப்பாடம், வளம் என்றால் என்ன? என்பது பற்றியும் அதன் வகைகள் மற்றும் நிலையான வாழ்விற்கு அதனைப் பாதுகாத்தலைப் பற்றியும் விளக்குகிறது. மேலும் பொருளாதாரச் செயல்பாடுகள் என்றால் என்ன? என்பது பற்றியும், இயற்கைக்கும் மனித செயல்பாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினையும் விளக்குகிறது.

*கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா*
*நாடென்ப நாட்டின் தலை* – *குறள் 736*

எந்த வகையிலும் கெடுதலை அறியாமல், ஒருவேளை கெடுதல் ஏற்படினும், அதனை சீர்செய்யுமளவிற்கு வளங்குன்றா நிலையில் உள்ள நாடுதான் நாடுகளிலே தலை சிறந்த நாடாகும்.

அப்பா தனது அறைக்குள் எப்பொழுது வருவார் என்று எதிர்பார்த்துத் தன் படுக்கையில் படுத்திருந்தாள் குழலி. பள்ளியில் கொடுத்த தேர்ச்சி அட்டையில் அப்பாவிடம் கையொப்பம் பெறவேண்டியிருந்தது. ஆனால் அப்பா வருவதற்கான அறிகுறி ஏதும் தென்படவில்லை. அவள் உடனே தன் படுக்கையைவிட்டு எழுந்து சமையலறையில் இருக்கும் தன் தாயிடம் ஓடினாள்.

*குழலி* : அம்மா, அப்பா எங்கே மா?

*அம்மா* : இன்றைக்கு அப்பாவுக்கு அதிகநேரம் வேலையிருப்பதினால் சீக்கிரமாகவே கிளம்பிட்டாங்க.

*குழலி* : அதிகநேர வேலைன்னா என்னம்மா?

*அம்மா* : வேலை நேரத்தைவிட கூடுதலான நேரம் வேலை செய்வதுதான் "அதிகநேர வேலை". அப்பா



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 156 14/08/18 11:38 AM

வேலைபார்க்கும் தொழிற்சாலையில் "சூரிய ஒளித்தகடுகள்" நிறைய தயாரிக்க வேண்டுமாம். அதனால் அப்பாவின் முதலாளி சீக்கிரமா வரச்சொல்லிவிட்டார்.

*குழலி* : நேற்று இரவே என்னிடம் சொல்லியிருக்கலாமே? என் தேர்ச்சி அட்டையில் அப்பாவோட கையெழுத்து போடாமலே இருக்கு.

*அம்மா* : போதும் போதும் போய் முதல்ல குளி நான் கையெழுத்துப் போடுறேன்.

*குழலி* : அம்மா ரொம்ப நன்றிம்மா, ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டுக்குறேன் "சூரிய ஒளித்தகடு"ன்னு சொல்றீங்களே அதை எதுல தயாரிக்கிறாங்க?

*அம்மா* : நான் சொன்னா உனக்கு புரியுமான்னு தெரியல... ஆனாலும் சொல்றேன் கேளு, மணல் என்ற இயற்கை வளத்திலிருந்து சிலிக்கான் என்ற தனிமத்தை பிரித்து அதிலிருந்து PV (Photo Voltaic) செல்களைப் பயன்படுத்தி ஒளி மின்னழுத்தக் கலம் தயாரிக்கிறாங்க. இவை சூரிய ஆற்றலை மின்னாற்றலாக மாற்றுகின்றன.

*குழலி* : இயற்கை வளமா! அப்படின்னா என்னம்மா?

*அம்மா* : மனிதனுக்குப் பயன்படும் எல்லாமே வளம்தான். அது இயற்கையிலிருந்து கிடைத்தால் அது இயற்கை வளம்.

*குழலி* : அப்பா எந்த மாதிரியான வேலை செய்யிறாங்கம்மா?

*அம்மா* : அவர் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடியவர். அதனை உற்பத்தி செய்ய இயற்கை வளங்களைப் பயன் படுத்துகிறார்.

*குழலி* : உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்களை வளங்கள் என்று அழைக்கலாமா?

*அம்மா* : ஆமாம். அவற்றை மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் என்று அழைக்கலாம்.

*குழலி* : சரிம்மா நேரமாயிடுச்சு. நான் பள்ளிக்குப் போகத் தயாராகுறேன்.

## செயல்பாடு: 1

தோட்ட வேலைக்குத் தொடர்பில்லாத பொருட்களை வட்டமிடுக.

மண், விதைகள், நிலம், கணினி, நாற்று, பூந்தொட்டிகள், உரம், பாடநூல்கள்.

மனிதனின் தேவையை நிறைவு செய்யும் எந்தவொரு பொருளும் ***வளமாகும்***. பொருளின் பயன்பாட்டைப் பொறுத்துதான் அதன் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. எல்லா வளங்களுக்கும் மதிப்பு உண்டு. மதிப்பு என்பது பண மதிப்புள்ளதாகவோ, பணமதிப்பற்றதாகவோ இருக்கலாம். பொருளாதாரத்தில் பணமதிப்புள்ள வளங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. (எ.கா) பெட்ரோலியம். பணமதிப்பற்ற வளங்கள் எளிதில் கிடைக்கக் கூடியதாக இருக்கும். (எ.கா) காற்று.

## சிந்தனை வினா

வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்கு நீங்கள் தயார் செய்யும் பட்டியலில் இடம் பெறுகின்ற பொருட்கள், பணமதிப்பு உள்ளவையா?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Std Term-II Geography_Tamil.indd 157 14/08/18 11:38 AM

**உங்களுக்குத் தெரியுமா?**

ஒரு பொருளின் பயன்பாட்டினைக் கண்டறிந்த பின்புதான் அப்பொருள் வளமாக மாறுகிறது. மனிதனின் தேவைகள் நாளுக்கு நாள் மாறுபடக்கூடியவை. தேவையானது மாறுபடும்பொழுது அதை நிறைவு செய்கின்ற வளங்களும் மாறுகிறது. ஒரு பொருளை வளமாக மாற்றுவதற்கான காரணிகள் *காலமும் தொழில் நுட்பமும்* ஆகும். உதாரணமாக நிலக்கரியும், பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வரும் இக்காலகட்டத்தில், புதிய கண்டுபிடிப்பான சூரியத்தகடுகள், சூரிய ஆற்றலை மின்னாற்றலாக மாற்ற உதவுகிறது எனவே தற்போது இது ஒரு சிறந்த வளமாகவே நீடிக்கிறது.


சூரியத்தகடுகள்

**சிந்தனை வினா**

சூரியத் தகடுகளின் சாய்வுக் கோணம் புவியின் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்குமா?

வளங்கள் மூன்று வகைப்படும். அவைகள் ***இயற்கை வளங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் மற்றும் மனித வளங்கள்*** ஆகும்.

## 1. இயற்கை வளங்கள் (Natural Resources)

இயற்கையிலிருந்து நேரடியாகப் பெறப்படும் அனைத்து வளங்களும் ***இயற்கை வளங்கள்*** எனப்படும். காற்று, நீர், மண், கனிமங்கள், நம்மைச் சுற்றியுள்ள இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகள் அனைத்தும் இயற்கை வளங்களாகும். இயற்கை வளங்களின் பயன்பாடானது அவைகள் காணப்படும் இடம், காணப்படும் நிலை மற்றும் அதை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் தொழில்நுட்பத்தினைச் சார்ந்திருக்கும்.


சூரியன்

### இயற்கை வளங்களின் வகைப்பாடு (Classification of Natural Resources)

இயற்கை வளங்களை அதன் தோற்றம், வளர்ச்சிநிலை, புதுப்பித்தல், பரவல் மற்றும் உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

#### அ) தோற்றத்தின் அடிப்படையில் (On the basis of origin)

தோற்றத்தின் அடிப்படையில், வளங்களை ***உயிரியல் வளங்கள்*** (Biotic Resources) மற்றும் ***உயிரற்ற வளங்கள்*** (Abiotic Resources) என வகைப்படுத்தப்படுகிறது.

(i) உயிருள்ள அனைத்தும் ***உயிரியல் வளங்கள்*** எனப்படும். உதாரணமாக தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள்.



(ii) உயிரில்லாத அனைத்து வளங்களும் ***உயிரற்ற வளங்கள்*** எனப்படும். உதாரணமாக நிலம், நீர், காற்று மற்றும் கனிமங்கள்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 158 14/08/18 11:38 AM






6th Std Term-II Geography_Tamil.indd 159
athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
14/08/18 11:41 AM

உலகில் காணப்படும் உயிருள்ள பொருள்கள் மனிதனால் அடையாளம் காணப்பட்ட பிறகுதான் உயிரியல் வளங்களாக அறியப்பட்டன. பழங்கால மனிதர்கள் தங்களின் தேவைக்கேற்ப பொருட்களைச் சேகரித்து, எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பாதுகாத்தனர். அக்கால மனிதனுக்கு மூன்று அடிப்படைத் தேவைகள் மட்டுமே இருந்தன. அவை உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இத்தேவைகளை நிறைவேற்ற அவன் முதல்நிலை செயல்பாடுகளான வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், மீன்பிடித்தல் மற்றும் காட்டு வளங்களை சேகரித்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டான். அதன் பின்னர் வளங்களில் பற்றாக்குறை ஏற்பட்டதால் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பின் மூலமாக தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டான்.



பழங்கால மனிதன் உயிரற்ற வளங்களையும் தேடிச் சென்றான். விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பிற்காக நீர்வளம் மிக்க நல்ல நிலப்பகுதிகளைத் தேடிச் சென்றான். வேட்டையாடுதல் முதல் விவசாயம் செய்தல் வரை அவனுக்குக் கருவிகள் தேவைப்பட்டன. முதன் முதலில் அவன் கற்களைக் கொண்டு கருவிகள் செய்தான். பின்பு இக்கருவிகளைச் செய்ய வேறு மாற்று வளங்களைத் தேடி புவியைத் தோண்டினான். அவ்வாறு தோண்டும்போது முதலில் தாமிரத்தையும் பின்பு இரும்பையும் கண்டுபிடித்தான். இவற்றைத் தேடும் முயற்சியின்போதுதான் வேறு சில விலைமதிப்புள்ள உலோகங்களையும் கண்டறிந்து அவற்றினால் அணிகலன்கள் செய்தான். இவ்வாறு சுரங்கத்தொழில் உருவானது. இன்றைய நிலையிலும் சுரங்கத் தொழில்தான் அனைத்து பொருளாதாரச் செயல்பாடுகளிலும் முன்னிலை வகிக்கிறது.

### ஆ) வளர்ச்சியின் அடிப்படையில் (On the Basis of Development)

வளர்ச்சிநிலையின் அடிப்படையில் வளங்களை, ***கண்டறியப்பட்ட வளங்கள்*** (Actual Resources) மற்றும் ***மறைந்திருக்கும் வளங்கள்*** (Potential Resources) என்று வகைப்படுத்தப்படுகிறது.

9K6C48

*i.* ***கண்டறியப்பட்ட வளங்கள்*** தற்போது பயன்படுத்தப்படுவதும் அதன் இருப்பின் அளவும் அறியப்பட்டிருக்கிறது. (எ.கா) நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

*ii.* ***மறைந்திருக்கும் வளங்கள்*** என்பது தற்பொழுது அதிக பயன்பாட்டில் இல்லாததும், அதன் அளவு மற்றும் இருப்பிடம் அறியப்படாமல் இருப்பதாகும். இவ்வளத்தினை எடுத்து பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் இன்னும் வளர்ச்சியடையவில்லை. (எ.கா) வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடலில் காணப்படும் கடல் ஈஸ்ட் (Marine Yeast).

**உங்களுக்குத் தெரியுமா?**

கடல் ஈஸ்ட்டானது (Marine Yeast) நிலப்பரப்பிலுள்ள ஈஸ்டைவிட (Terrestrial Yeast) மிகுந்த ஆற்றல் உடையது. இச்சத்தை ரொட்டி தயாரித்தல், மது வடித்தல், திராட்சை ரசம் தயாரித்தல், உயிரி எத்தினால் தயாரித்தல் மற்றும் மருத்துவப்புரதம் தயாரித்தலுக்குப் பயன்படுகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 160
14/08/18 11:41 AM

### இ) புதுப்பித்தலின் அடிப்படையில் (On the Basis of Renewability)

வளத்தினை புதுப்பித்தலின் அடிப்படையில் ***புதுப்பிக்கக்கூடிய வளங்கள்*** (Renewable Resources) மற்றும் ***புதுப்பிக்க இயலா வளங்கள்*** (Non Renewable Resources) என வகைப்படுத்தப்படுகிறது.

i. ஒரு முறை பயன்படுத்தப்பட்ட வளங்கள் பின்னர் கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள இயலும் தன்மையுடைய வளங்கள், ***புதுப்பிக்கக்கூடிய வளங்கள்*** என்று அழைக்கப்படுகின்றன. உதாரணமாக காற்று, நீர், சூரிய ஒளி ஆகும். இப்புதுப்பிக்கக்கூடிய வளங்களையும் தவறாகப் பயன்படுத்தும்போது குறைவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆகவே, நாம் அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

**சிந்தனை வினா**

தன்னைத்தானே புதுப்பிக்கக்கூடிய மற்ற வளங்கள் யாவை?

ii. குறிப்பிட்ட அளவில் உள்ள அனைத்து வளங்களும் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். இவ்வளங்கள் பயன்பாட்டிற்குப் பின்பு தீர்ந்து போகக்கூடியவையாகும். இவை உருவாக நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும். இதனால் மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு இதன் சுழற்சி ஈடுகொடுக்காது. (எ.கா) நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கைவாயு மற்றும் கனிமங்கள் ஆகும்.



நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்

**சிந்தனை வினா**

நிலக்கரி எவ்வாறு உருவாயிற்று?

புதுப்பிக்க இயலா வளங்கள் அனைத்தும் ஒருநாள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இல்லாமல் போய்விடும். ஆகையினால் மனிதன் இதற்காக புதிய பொருள்களை, வளமா அல்லது வளமற்றதா என்று பல ஆய்வுகள் செய்து அறிந்த பின்பு, அவற்றைப் பிரித்தெடுக்க புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அப்பொருளின் பரவலைக் கண்டறிய முயல்கிறான். எனவே இவ்வகை வளங்கள் பயன்பாட்டிற்கு வராத வளங்கள் அல்லது மறைந்திருக்கும் வளங்கள் (Potential Resources) ஆகும். காற்றின் ஆற்றல் இவற்றில் ஒன்றாகும். இவ்வாற்றலை இன்றும் நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. காரணம் காற்று வேகமாக வீசக்கூடிய இடங்கள் இன்னமும் முழுமையாக அடையாளம் காணப்படாமல் உள்ளன.



காற்றாற்றல்

### ஈ) பரவலின் அடிப்படையில் (On the Basis of Distribution)

வளங்கள் அதன் பரவலின் அடிப்படையில், ***உள்ளூர் வளங்கள்*** மற்றும் ***உலகளாவிய வளங்கள்*** என்று வகைப்படுத்தப்படுகின்றன.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 161 14/08/18 11:41 AM

i. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காணப்படும் வளங்கள் ***உள்ளூர் வளங்கள்*** (Localized Resources) என்கிறோம். (எ.கா) கனிமங்கள்.

ii. சில வளங்கள் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் வளங்கள் ***உலகளாவிய வளங்கள்*** (Universal Resources) என்று அழைக்கப்படுகின்றன. (எ.கா) சூரிய ஒளி மற்றும் காற்று.

### *செயல்பாடு: 2*

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள விலங்குகள் எந்தப் பகுதி அல்லது கண்டத்தைச் சேர்ந்தவை?



### *(உ) உரிமையின் அடிப்படையில் (On the Basis of Ownership)*

உரிமையின் அடிப்படையில் வளங்களைத் ***தனிநபர் வளங்கள்*** (Individual Resources), ***சமூக வளங்கள்*** (Community–owned Resources), ***நாட்டு வளங்கள்*** (National Resources) மற்றும் ***பன்னாட்டு வளங்கள்*** (International Resources) என்று வகைப்படுத்தப்படுகின்றன.



அடுக்கு மாடிக் கட்டடங்கள்

i. ***தனிநபர் வளங்கள்*** என்பது, ஒரு தனி நபருக்கு மட்டுமே சொந்தமானவையாகும் (எ.கா) அடுக்குமாடிக் கட்டடங்கள்.

ii. ***சமூக வளங்கள்*** என்பது ஒரு பகுதியில் வாழும் மக்கள் தங்கள், பகுதியில் உள்ள வளத்தினைப் பயன்படுத்திக்கொள்வர். இதுவே சமூக வளம் என்று அழைக்கப்படுகிறது. (எ.கா) பூங்கா.

iii. ***நாட்டு வளங்கள்*** என்பது ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதிகள் மற்றும் பெருங்கடல் பகுதிகளுக்கு உட்பட்ட வளங்கள் ஆகும். (எ.கா) இந்தியாவின் வெப்பமண்டல மழைக்காடுகள்.



வெப்ப மண்டல மழைக்காடுகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

வெப்ப மண்டல மழைக்காடுகள் ***"உலகின் பெரும் மருந்தகம்"*** (world's largest pharmacy) என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் காணப்படும் தாவரங்களில் 25% தாவரங்கள் மருத்துவ குணம் கொண்ட தாவரங்களாகும். (எ.கா) சின்கோனா.

iv எந்த ஒரு நாட்டின் எல்லைக்கும் உட்படாத மிகப்பரந்த திறந்த வெளி பெருங்கடல் பகுதியில் காணப்படும் வளங்கள் ***பன்னாட்டு வளங்கள்*** (International Resources) என்று அழைக்கப்படுகின்றன. இப்பகுதிக்குட்பட்ட வளங்களை உலக நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களின் மூலமாகவே பயன்படுத்த இயலும். (எ.கா) திமிங்கலப் புனுகு.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 162 14/08/18 11:41 AM



திமிங்கலப் புனுகு

உங்களுக்குத் தெரியுமா?

ஸ்பெர்ம் திமிங்கலத்தில் இருந்து பெறப்படும் ஒரு வகை திடப்பொருளே திமிங்கலப் புனுகு ஆகும். ஒரு பவுண்டு (0.454 கி.கி) திமிங்கலப்புனுகின் விலை 63,000 அமெரிக்க டாலர் மதிப்புடையதாகும். இது வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

### 2. மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் (Man – Made Resources)

இயற்கை வளங்கள் தொழில்நுட்பத்தினால் மாற்றுருவாக்கம் செய்யப்பட்டு, புதிய பொருள்களாகக் கிடைக்கின்றன. அவ்வாறு பெறப்பட்ட வளங்களை *மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்* என்று அழைக்கிறோம். (எ.கா): கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை, மனிதனால் உருவாக்கப்படும் எல்லாக் கட்டுமானங்களும் மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களாகும். (எ.கா) பாலங்கள், வீடுகள், சாலைகள்.

**செயல்பாடு: 3**

சாலைகள் அமைக்கத் தேவைப்படும் இயற்கை வளங்கள் யாவை?

மூலப்பொருள்களிலிருந்து வேறு பயன்பாட்டுப் பொருள்களாக மாற்றும் இச்செயல்பாடு *இரண்டாம் நிலை செயல்பாடுகள்* (Secondary Activities) எனப்படும். இச்செயல்பாட்டிற்கு மனிதத் திறனும் அவனது சிந்தனைகளும் அடிப்படைத் தேவையாகும்.



மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்

### 3. மனித வளம் (Human Resources)

9KBKGY

இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் *மனித வளம்* என அழைக்கப்படுகிறது. மனிதன் ஒரு இயற்கை வளம். ஆனாலும் மனிதனை நாம் தனி ஒரு வளமாக பார்க்கின்றோம். மனிதன் ஒரு மதிப்புமிகு வளமாக பார்ப்பதற்குக் காரணம் அவனிடம் உள்ள கல்வி, உடல்நலம், அறிவு மற்றும் திறனாகும். (எ.கா) மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையில் கிடைக்கப்படும் பொருள்களைப் பகிர்வதற்கான போக்குவரத்து மற்றும் வணிக அமைப்பே மூன்றாம் நிலை செயல்பாடுகள் (Tertiary Activities) எனப்படும். (எ.கா) வங்கி, வணிகம் மற்றும் தகவல் தொடர்புத்துறை. இச்செயல்பாடுகளில் மனித வளம் பல்வேறு நிலைகளில் பயன்படுகிறது. ஒரு நாட்டின் மனித வளம் அந்நாட்டில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் தரத்தைச் சார்ந்துள்ளது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 163 14/08/18 11:41 AM

## செயல்பாடு: 4

கீழ்காணும் படங்களில் சிறப்பு வாய்ந்த மனிதர்களையும் தொழில்சார்ந்த மனிதர்களையும் அடையாளம் காண்க.



### வளங்களைப்பற்றி காந்தியடிகளின் சிந்தனை (Gandhian Thought on Resources)



காந்தியடிகள்

"*வளங்கள் மனிதனின் பேராசைக்கு அன்று, அவனது தேவைக்கு மட்டுமே*" என்று மகாத்மா காந்தி அவர்கள் கூறுகிறார். உலகில் வளங்கள் குறைவதற்கு மனித இனமே காரணம் எனவும் கூறுகிறார். ஏனென்றால்,

i. வளங்கள் மிகுதியாக எடுக்கப்படுகின்றன.

ii. மனிதத் தேவைகளும் எல்லையை மீறுகின்றன.

ஆகவே, மனிதன் நினைத்தால் மட்டுமே வளங்கள் பாதுகாக்கப்படும்.

### வளத்திட்டமிடுதல் / வளமேலாண்மை (Resources planning / Management)

*வளத்திட்டமிடுதல்* என்பது வளங்களை சரியாக பயன்படுத்தும் திறன் ஆகும். வளத்தினைத் திட்டமிடுதல் என்பது அவசியமான ஒன்றாகும். ஏனெனில்,

i. வளங்கள் மிகவும் குறைவாக உள்ளன. வளத்திட்டமிடுதல் தற்போது வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும், வருங்காலத் தலைமுறைகளுக்குச் சேமித்து வைக்கவும் உதவிபுரிகிறது.

ii. வளங்கள் மிகக்குறைவாக இருப்பன மட்டுமன்றுஅவைபுவியின்மீதுஒழுங்கற்றப் பரவலுடன் காணப்படுகின்றன.

iii. வளங்களை அதிகச் சுரண்டலில் இருந்து தடுத்துப் பாதுகாக்க வளத்திட்டமிடுதல் அவசியமாகும்.

### வளங்களைப் பாதுகாத்தல் (Conservation of resources)

வளத்தினைக் கவனமாகக் கையாளுதல் என்பது *வளங்களைப் பாதுகாத்தல்* எனப்படுகிறது. மக்கள் தொகையின் திடீர்ப் பெருக்கத்தினால் வளங்களின் பயன்பாடு அதிகரிக்கிறது. இதனால் வளங்கள் குறைந்து வரும் வேகமும் அதிகரிக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த அறிவுப்பூர்வமாக வளங்களைப் பயன்படுத்த வேண்டும்.

வருங்காலத் தலைமுறையினரின் தேவைகளைப் பாதிக்காத வண்ணம் வளர்ச்சி இருத்தல் வேண்டும். நிகழ்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருங்காலத் தலைமுறையினருக்கும் போதுமான வளங்களை விட்டு வைத்து, சமநிலைத் தன்மையோடு ஏற்படும் வளர்ச்சியே *நிலையான வளர்ச்சி* (Sustainable Development) எனப்படும்.

*நிலையான வளர்ச்சி* நடைபெற கீழ்க்கண்டவைகளைச் செய்தல் அவசியமாகும்.

i. வளங்கள் குறைந்துகொண்டு வருவதற்கான காரணங்களை அறிதல்.

ii. வீணாக்குதலையும், அதிகப்படியான பயன்பாட்டினையும் தடுத்தல்.

iii. மறுபயன்பாடுள்ள வளங்களை மறுசுழற்சி செய்தல்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

iv. மாசைக் கட்டுப்படுத்துதல்.

v. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.

vi. இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குளைப் பாதுகாத்தல்.

vii. மாற்று வளங்களைப் பயன்படுத்துதல்.

வளங்களைப் பாதுகாக்க வேண்டுமெனில் மூன்று வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் (3RS). அவைகள், *குறைத்தல்* (Reduce), *மறுபயன்பாடு* (Reuse), *மறுசுழற்சி செய்தல்* (Recycle) ஆகும்.




*நினைவில் நிறுத்துக.*

- மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்பவைகள் வளம் ஆகும்.
- இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்து வளங்களும் இயற்கை வளங்கள் ஆகும்.
- உயிருள்ள அனைத்து வளங்களும் உயிரியல் வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- உயிரற்ற அனைத்து வளங்களும் உயிரற்ற வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இயற்கை வளங்களைச் சேகரித்தல் முதல்நிலைச் செயல்பாடு எனப்படுகிறது.
- தற்போது பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் கண்டுபிடிக்கப்பட்ட வளங்கள் எனப்படுகின்றன.
- தற்போது பயன்பாட்டிற்கு வராத வளங்கள் மறைந்திருக்கும் வளங்கள் எனப்படும்.
- வளத்தினைப் பயன்படுத்திய பிறகு, குறிப்பிட்டக் காலத்திற்குள் இயற்கைச் செயல் முறைகளால் புதுப்பித்துக் கொள்ளக் கூடிய அனைத்து வளங்களும் புதுப்பிக்கக்கூடிய வளங்கள் எனப்படுகின்றன.
- குறைவான இருப்பு உள்ள அனைத்து வளங்களும் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும்.
- அனைத்து இடங்களிலும் பரவலாகக் காணப்படும் வளங்கள் உலகளாவிய வளங்கள் எனப்படும்.
- குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் உள்ளூர் வளங்கள் எனப்படும்.
- மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயற்கை வளங்களைச் செயல்முறைகளினால் மாற்றுருவாக்கம் செய்வது மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் எனப்படும்.
- மனிதர்களும் வளங்களே.
- உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் தேவைப்படும் அனைத்துச் சேவைகளும் மூன்றாம் நிலை செயல்பாடுகள் எனப்படும்.
- வளங்களை மிகக் கவனமாகக் கையாளுதலே வளங்களைப் பாதுகாத்தல் ஆகும்.
- நிகழ்காலத்தில் உள்ள மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருங்காலத் தலைமுறையினரையும் கவனத்தில் கொண்டு சுற்றுச்சூழல் பாதிக்கா வண்ணம் ஏற்படும் வளர்ச்சியே நிலையான வளர்ச்சி ஆகும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. | உற்பத்தி | தயாரித்தல் |
| 2. | சூரிய ஒளித்தகடு | சூரிய ஆற்றலை உறிஞ்சும் தகடு |
| 3. | PV செல்கள் | ஒளி மின்னழுத்தக் கலம் |
| 4. | உள்ளூர் வளங்கள் | பரவலாகக் காணப்படாத வளங்கள் |
| 5. | உலகளாவிய வளங்கள் | பரவலாகக் காணப்படும் வளங்கள் |
| 6. | திறந்தவெளிப் பெருங்கடல் | எந்த நாட்டிற்கும் சொந்தமில்லாதப் பெருங்கடற்பகுதி |
| 7. | நிலையான | பேணத்தகுந்த |

## பயிற்சிகள்

9KF85V

### அ) பொருத்துக

| அ | ஆ |
|---|---|
| இயற்கை வளம் | கனிமங்கள் |
| பன்னாட்டு வளம் | நிலையான வளர்ச்சி |
| குறைத்தல், மறு பயன்பாடு, மறுசுழற்சி | காற்று |
| புதுப்பிக்க இயலாதது | உற்பத்தி செய்தல் |
| உலகளாவிய வளம் | திமிங்கலப் புனுகு |
| இரண்டாம் நிலை செயல்பாடுகள் | காடு |

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கரும்பிலிருந்து ____________ தயாரிக்கப்படுகிறது.
2. வளங்களை ______________ கையாளுதல் வளங்களின் பாதுகாப்பு எனப்படுகிறது.
3. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் ______________ எனப்படுகிறது.
4. தற்போது பயன்படுத்தப்படும் வளங்கள் ______________ வளங்கள் என்று அழைக்கப்படுகிறது.
5. ______________ வளம் மிகவும் மதிப்பு மிக்க வளமாகும்.
6. இயற்கை வளங்களைச் சேகரித்தல் ______________ எனப்படுகிறது.

### இ) சிறு குறிப்பு வரைக.

1. புதுப்பிக்கக் கூடிய வளங்கள்
2. மனித வளம்
3. தனிநபர் வளம்
4. மூன்றாம் நிலை செயல்பாடுகள்

### ஈ) மிகச் சுருக்கமாக விடையளி

1. வளங்கள் என்றால் என்ன?
2. கண்டறியப்பட்ட வளங்கள் என்றால் என்ன?
3. உயிரற்ற வளங்களை வரையறு.
4. நிலையான வளர்ச்சி என்றால் என்ன?

### உ) சுருக்கமாக விடையளி

1. உலகளாவிய வளங்கள் மற்றும் உள்ளூர் வளங்களை வேறுபடுத்துக?
2. மனிதன் ஒரு இயற்கை வளம், ஆனால் மனிதன் மட்டுமே ஒரு தனி வளமாக கருதப்படுவது ஏன்?
3. நாட்டு வளம் மற்றும் பன்னாட்டு வளம் – ஒப்பிடுக.
4. மனிதன் உருவாக்கிய வளத்திற்கும், மனித வளத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 166 14/08/18 11:41 AM

5. வளப்பாதுகாப்பைப் பற்றி காந்தியடிகளின் சிந்தனை என்ன?

### ஊ) விரிவாக விடையளி (100–120 வார்த்தைகள் வரை)

1. இயற்கை வளங்களை வகைப்படுத்துக. ஏதேனும் மூன்றினை விவரித்து உதாரணத்துடன் விளக்குக.
2. வளங்களைப் பாதுகாப்பது எப்படி?
3. வளத்திட்டமிடல் என்றால் என்ன? அதன் அவசியம் என்ன?
4. முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைச் செயல்பாடுகளை விவரி.

### எ) வாக்கியமும் புரிதலும்

1. *வாக்கியம்:* வெப்பமண்டலப் பகுதிகளில் அனல் மின்னாற்றலுக்குப் பதிலாக சூரிய ஒளி ஆற்றல் ஒரு சிறந்த மாற்று ஆகும்.

   *புரிதல் 1:* நிலக்கரியும் பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வருகிறது.

   *புரிதல் 2:* சூரிய ஆற்றல் என்றும் குறையாது.

*சரியான விடையைத் தேர்ந்தெடு*

அ. புரிதல் 1 மட்டும் சரி.

ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

2. *வாக்கியம்:* வளங்களைப் பாதுகாக்காவிடில் மனித இனம் அழிந்து விடும்.

   *புரிதல் 1 :* வளங்களைப் பாதுகாக்க வேண்டாம்.

   *புரிதல் 2 :* வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.

*சரியான விடையைத் தேர்ந்தெடு*

அ. புரிதல் 1 மட்டும் சரி.

ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

3. *வாக்கியம் :* மனிதன் விவசாயம் செய்ய தீர்மானித்தான்.

   *புரிதல் 1 :* உணவு சேகரித்து வந்த மனிதனுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

   *புரிதல் 2 :* மனிதன் சேகரித்த உணவு ஊட்டமிக்கதாக இல்லை.

*சரியான விடையைத் தேர்ந்தெடு*

அ. புரிதல் 1 மட்டும் சரி.

ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

### ஏ) வளங்களைப் பாதுகாக்க மூன்று பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி என்ற சொற்களைச் சரியான இடத்தில் எழுதுக.

1. நீ இளம் வயதில் பயன்படுத்திய மிதிவண்டியை உனது பக்கத்து வீட்டு குழந்தைக்குக் கொடுத்தல் ________________.
2. கழிப்பறையில் குறைவான நீரைப் பயன்படுத்துதல் ________________.
3. பயன்படுத்திய நெகிழிப் பொருள்களை உருக்கிச் சாலை அமைத்தல் ________________.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 167 14/08/18 11:41 AM

## ஐ) குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | 2 |
| 3 | | | | | | | | | |
| | | | | | | | | 1 | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | 4 | | | | | | | | |
| | | 5 | | | | | | | |
| 6 | | | | | | | | | |

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. எங்கும் காணப்படும் வளங்கள் | 1. வளங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளில் ஒன்று |
| 2. காலத்தைச் சமநிலையில் வைக்கும் வளர்ச்சி | 2. இது ஒரு பன்னாட்டு வளம் |
| 3. சூரியனிடமிருந்து பெறப்படும் ஆற்றல் | |
| 4. இயற்கையினால் அளிக்கப்படும் வளம் | |
| 5. ஒரு நாட்டிற்குச் சொந்தமான வளங்கள் | |
| 6. குறிப்பிட்ட இடங்களில் காணப்படும் வளம் | |

## ஒ) இந்தியப் புறவரி நிலவரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்

1. நெய்வேலி 2. வங்காள விரிகுடா 3. அரபிக்கடல் 4. தமிழகக் காடுகள் 5. இந்தியப் பெருங்கடல் 6. சேலத்தில் உள்ள கஞ்சமலை இரும்புச் சுரங்கம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th Std Term-II Geography_Tamil.indd 168 14/08/18 11:41 AM

ஓ) கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பொருளாதாரச் செயல்பாடுகள் தொடர்பான படங்களை உற்று நோக்கி அட்டவணையை நிரப்புக.

| வ. எண். | படம் | முதல்நிலை/இரண்டாம் நிலை/மூன்றாம் நிலை | செயல்பாட்டின் பெயர் | காணப்படும் பகுதி |
|---|---|---|---|---|
| 1. |  | | | |
| 2. |  | | | |
| 3. |  | | | |
| 4. |  | | | |

ஔ) ஆசிரியர் செயல்பாடுகள்

1. பள்ளி அல்லது வகுப்பளவில் மாதத்திற்கு ஒருநாள் "மின்சாரம் சேமித்தல் நாள்" கொண்டாடுதல்.
2. பயன்பாடற்ற பொருள்களைக் கொண்டு பள்ளியின் நடைக்கூடச் சுவர்ப்பகுதியை அலங்கரிக்கவும்.
3. பள்ளியின் அருகில் உள்ள ஏதேனும் ஒரு தொழிற்சாலைக்குக் களப்பயணம் மேற்கொள்ளவும்.
4. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்கள் தொடர்பான படங்கள் சேகரிக்கச் செய்தல்.
   (i) மீன்பிடித்தல்
   (ii) வேட்டையாடுதல்
   (iii) உணவு சேகரித்தல்
   (iv) காட்டு வளங்களைச் சேகரித்தல்
   (v) சுரங்கத் தொழில்
   (vi) விவசாயம்
   (vii) கால்நடை வளர்த்தல்
   (viii) மரங்களை வெட்டுதல்

ஆதாரம்


1. Human and economic geography – Goh Cheng Leong


இணையத்தள இணைப்பு

1. https://www.acciona.com/sustainable development




6th Std Term-II Geography_Tamil.indd 169
athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
14/08/18 11:42 AM

# இணையச் செயல்பாடு

## வளங்கள்

**இச்செயல்பாட்டின் மூலம் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் மூலங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளலாம்.**



படி – 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க. திரையில் தோன்றும் தெரிவுகளில் Events, Activities and Games என்பதைத் தேர்வு செய்க.

படி – 2: எண்ணற்ற விளையாட்டுகள் தோன்றும். அவற்றில் Power up என்பதைத் தேர்வு செய்து, Adobe flash player என்பதை அனுமதிக்க.

படி – 3: காற்று மற்றும் சூரியனால் கிடைக்கப்பெறும் ஆற்றலைப் பல்வேறு படிநிலைகளில் விளையாடிப் புரிந்து கொள்க.

படி – 4: மேலும் வெவ்வேறு ஆற்றல் மூலங்கள் குறித்த வினாடி வினாக்களுக்கு விடையளிக்க.



படி – 1



படி – 2




படி – 3




படி – 4

உரலி:

https://energy.techno-science.ca/en/index.php

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th Std Term-II Geography_Tamil.indd 170 14/08/18 11:42 AM

ஆறாம் வகுப்பு – புவியியல்
ஆக்கம்

**பாடவல்லுநர் குழு**

முனைவர். இரா. ஜெகன்குமார்,
உதவி பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
புவியியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

**மேலாய்வாளர்கள்**

திரு. அ. செந்தில்வேலன்
உதவிப்பேராசிரியர் (புவியியல் துறை)
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்.

திரு. யசோதரன் சுரேஷ்
உதவிப்பேராசிரியர் (புவியியல் துறை)
சென்னை கிறித்துவ கல்லூரி,
தாம்பரம் (கி), சென்னை

**சமூக அறிவியல் பாட ஒருங்கிணைப்பாளர்**

மோ. சுஜாதா
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

**கணினித் தொழில்நுட்பம்**

மெல்வின் .A
இடைநிலை ஆசிரியர்
டி.டி.வி. தொடக்கப்பள்ளி, இராமநாதபுரம்.

**பாடநூலாசிரியர்கள்**

ந. ராஜேஸ்வரி
தலைமை ஆசிரியை,
அரசு உயர்நிலைப்பள்ளி
குன்னத்தூர், மங்களவாடி, வேலூர் மாவட்டம்.

ஜே. ஹெலன்
பட்டதாரி ஆசிரியர் (ஓய்வு)
பெ.கா.அ.ம. மேல்நிலைப்பள்ளி,
அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்.

மோ. கிரேனா ஜேனட்,
பட்டதாரி ஆசிரியர்
இரா.செ.அ.ம.மேல்நிலைப்பள்ளி,
ஒண்டிப்புதூர், கோவை மாவட்டம்.

அ. அஞ்சுகம்
பட்டதாரி ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
துறையூர், திருச்சி மாவட்டம்.

இரா. முத்து
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி,
கன்னிகைப்பேர், திருவள்ளூர் மாவட்டம்.

ந. இராஜபாரதி,
ஆசிரியர் பயிற்றுநர்,
வட்டார வளமையம், உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**இணையச் செயல்பாடு ஒருங்கிணைப்பாளர்கள்**

சியாமளா S.
பட்டதாரி ஆசிரியர்
அரசு நலத்துறை உயர்நிலைப் பள்ளி
புளியந்தோப்பு, சென்னை.

மெல்வின் A.
இடைநிலை ஆசிரியர்
DDV ஆரம்பப் பள்ளி, ராமநாதபுரம்.

## கலை மற்றும் வடிவமைப்புக் குழு

**வரைபடம்**

காந்திராஜன் K T
கலை மற்றும் பட ஒருங்கிணைப்பாளர்
தமிழ் விர்ச்சுவல் அகாடமி, சென்னை

ஓவிய ஆசிரியர்கள்,
தமிழ்நாடு அரசு.
மாணவர்கள்
அரசு கவின் கலை கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்.

**வரைகலை & வடிவமைப்பு**

வே. சா. ஜான்ஸ்மித், தியாகராய நகர், சென்னை

**In-House** - QC

மனோகர் இராதாகிருஷ்ணன்
ஜெரார்ட் வில்சன்

**ஒருங்கிணைப்பு**

ரமேஷ் முனிசாமி

**தட்டச்சு**

மா. கல்பனா

**விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு**

இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ஜே.எப். பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

# குடிமையியல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

# அலகு 1



## தேசியச் சின்னங்கள்

### கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவின் இயற்கை தேசியச் சின்னங்களை அறிதல்.
- இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளல்.
- இந்தியாவின் பிற தேசிய சின்னங்களை அறிந்து அவற்றைப் போற்றுதல்.
- இந்திய தேசிய விழாக்களை அறிந்து கொண்டாடுவதில் மகிழ்ச்சி கொள்ளல்.

9KKGIL

### நுழையுமுன்

இப்பாடம் இந்தியாவின் இயற்கை தேசியச் சின்னங்கள் மற்றும் பிற தேசியச் சின்னங்களைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது. தேசிய விழாக்களை விவரிக்கிறது.

வேலனும் பொன்னியும் புலிவனம் என்ற காட்டுக்குக் காணுலா சென்றிருந்தார்கள். காட்டுக்குப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பில் அவர்களுடைய மனது உற்சாகத்திலும் சாகச உணர்விலும் வானத்தில் பறக்க ஆரம்பித்தது. அவர்களுக்கு வழிகாட்டியாக காட்டுயிர் ஆராய்ச்சியாளர் வீணா வந்திருந்தார். அந்தக் காட்டின் ஊடாக பழம்பெருமை வாய்ந்த ஆறு ஒன்று பாய்ந்து கொண்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 2,000 மீட்டர் உயரம் கொண்ட மலைப்பகுதிகளும் அந்தக் காட்டில் இருந்தன.

திட்டமிட்டபடி காட்டின் எல்லைவரை அவர்கள் வாகனத்தில் சென்றடைந்துவிட்டார்கள். "உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்" என்றபடியே, அந்தக் காட்டைப் பார்க்க ஆவலுடன் வந்திருக்கும் 'குட்டி ஆராய்ச்சி'யாளர்களை வனத்துறை அலுவலர் மணிமாறன் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவரிடம் வேலனையும் பொன்னியையும் வீணா அறிமுகப்படுத்தி வைத்தார். இனிமேல் காட்டுப் பாதைக்குள் வழக்கமான வாகனங்கள் செல்ல முடியாது. மின்கலன்களால் இயங்கும்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 173 14/08/18 12:45 PM

புகை வெளியிடாத, கண்ணாடியால் மூடப்பட்ட வாகனத்தில்தான் செல்லமுடியும். வனத்துறை அலுவலர் மணிமாறனுடன் வீணா குழுவினர் காட்டின் எல்லையில் நின்றிருந்த அந்த வாகனத்தில் ஏறிக்கொண்டார்கள்.

"நாம் இப்போது காட்டுக்குச் செல்கிறோம். புலியைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கும். அதிர்ஷ்டமிருந்தால் புலியைப் பார்க்கலாம். ஒரு காட்டின் மையஅச்சு புலிதான் என்றாலும், எண்ணற்ற பறவைகள், பூச்சிகள், ஊர்வன, நீர் – நிலம் இரண்டிலும் வாழும் இருவாழ்விகள் எனப் பலவும் சேர்ந்ததுதான் ஒரு காடு. புலியைப் பற்றி மட்டுமே யோசிக்காமல் காட்டில் தென்படும் உயிரினங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் நேரில் பார்த்து ரசிக்கலாம். அதேநேரம் காட்டுக்குள் சத்தமாக பேசக் கூடாது" என்றார் மணிமாறன்.

அவர்கள் புறப்பட்ட சிறிது நேரத்தில் ஒரு தாமரைத் தடாகத்தைக் கடந்தார்கள். அந்த வாகனம் மெதுவாகவே சென்றது. தாமரைத் தடாகத்தில் தாமரை மலர்கள் அழகுற மலர்ந்து சிரித்தன. "தாமரையில் பல வகைகள் உண்டு. இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள தாமரையை செந்தாமரை என்கிறோம். தனித்தன்மை மிகுந்த வடிவமைப்பைக் கொண்டது தாமரை மலர்" என்று வீணா கூறினார்.

அந்தத் தடாகத்துக்கு அருகிலிருந்த ஒரு பெருமரத்துக்குப் பின்னால், மயில் ஒன்று தோகை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. மரத்தின் இந்தப் பக்கம் இருந்து சத்தம் போடாமல் வேலனும் பொன்னியும் அதை ரசித்தார்கள். "மணிமாறன் மாமா, மழை வந்தா மயில் தோகை விரித்து ஆடும் என்று சொல்வார்கள். அப்போ இப்போது மழை வருமா" என்று பொன்னி கேட்டாள்.

"வரலாம் .மழை வந்தால் மயில் தோகை விரித்து ஆடும் என்பது உண்மைதான். மயில் தோகை விரித்து ஆடுவதைக் கண்ட குறுநில மன்னன் ஒருவர் மயில் குளிருக்கு நடுங்குகிறதோ எனக் கருதி தன் போர்வையைக் கொடையாக அளித்தாராம். இவர் பெருமை வாய்ந்த சங்ககால தமிழகத்தைச் சேர்ந்தவரும், கடையெழு வள்ளல்களுள் மதிப்பிற்குரிய ஒருவருமான பேகன் என்னும் குறுநில மன்னன் ஆவார்.



உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டில் புதுக்கோட்டைமாவட்டத்தில் உள்ள விராலிமலையில் மயில்களுக்கான சரணாலயம் உள்ளது.

"மயில் நம் தேசியப் பறவைன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். நம் பாரம்பரியத்திலும் கலைகளிலும் மயிலுக்கு நீண்டகாலமாக இடம் இருந்திருக்கு. அழகும் கம்பீரமும் நிறைந்த அந்தப் பறவை நாடு முழுவதும் காணப்படுவதே, அது தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முக்கியக் காரணம்." என்றார் மணிமாறன்.

அந்த வனத்திற்குள் சிறு இயந்திர ஒலிகூட எழாமல் வாகனம் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது. இரு புறங்களிலும் காணப்பட்ட வனத்தின் காட்சிகளைக் கண்கொட்டாமல் ரசித்தபடி வந்தனர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 174 14/08/18 12:45 PM

"இப்ப நாம் ஆற்றின் கரையை நெருங்கிட்டோம். இனிமே சிறிது தொலைவுக்கு ஆற்றின் கரையோரமாகத்தான் போகணும். இந்த ஆற்றில் நீங்கள் எதிர்பார்க்காத ஒரு புதிய விலங்கை உங்களுக்குக் காட்டப் போகிறேன். சத்தமில்லாமல் காத்திருந்தால், நிச்சயமாக அதைப் பார்க்கலாம். எல்லோரும் உங்கள் பைனாகுலரை (Binocular) எடுத்துக்குங்க" என்றார் மணிமாறன்.

காட்டுக்குப் போவதென்றால் பைனாகுலருடன்தான் வரவேண்டுமென்று வீணா முன்னதாகவே சொல்லியிருந்தார். வேலனும் பொன்னியும் தெரிந்தவர்களிடம் அதைக் கேட்டு வாங்கி வந்திருந்தார்கள். பைனாகுலரைக் கண்ணில் பொருத்தி, ஆற்றை நோக்கிச் சாய்ந்தவாறு புதர் போல மண்டியிருந்த ஒரு மரத்தின் இடைவெளி வழியாகப் பார்த்தார்கள். "ஏதோ கரியால் முதலை மாதிரி ஓர் உயிரினம் நீந்திப் போகுது போலிருக்கிறதே" என்று வீணா கூறினார். காலை சூரியன் எதிர்ப்புறத்தில் இருந்து அடித்ததால், தெளிவாகப் பார்க்க முடியவில்லை. "சூரியன் கண்ணில் படாத மாதிரி நின்றுகொண்டு கவனமாகப் பாருங்கள், அது கரியால் இல்லை." என்றார் மணிமாறன்.

"ஆமா, அது ஏதோ மீன் போலல்லவா இருக்கிறது" என்றார் வீணா. "அது மீன் இல்லை, நீர்வாழ் பாலூட்டியான ஓங்கில் (டால்பின்)"

"என்னது டால்பினா? கடலில் தாவித் தாவி விளையாட்டு காட்டுமே, அது எப்படி ஆற்றுக்கு வரும்? " என்று வேலனும் பொன்னியும் ஒரே நேரத்தில் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"நம் நாட்டில் ஆற்று ஓங்கில்களும் வாழ்கின்றன. தொலைவிலிருந்து பார்க்கும்போது, நீருக்கு வெளியே நீண்டிருக்கும் அதன் நீண்ட வாயும் கரியால் முதலையின் வாயும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும். ஆனால், இரண்டும் வேறுவேறு. வௌவால்களைப் போலவே இந்த ஓங்கில்களும் மீயொலி அலைகளைப் பயன்படுத்தி இரையைப் பிடிக்கின்றன, இவற்றின் பார்வைத்திறன் குறைவு"

" ரொம்ப சுவாரசியமான தகவலா இருக்கே" என்றான் வேலன்.

"அது சரி, நாம் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த ஆற்றின் பெயர் என்ன தெரியுமா?"

"கங்கை நதிப்புரத்து கோதுமைப் பண்டம்" என்று பாரதியார் புகழ்ந்து பாடினாரே, அந்த கங்கை ஆறுதானே? இங்கே வர்றதுக்கு முன்னாடியே இந்தக் காட்டைப் பற்றி சில விஷயங்களை தெரிஞ்சுக்கிட்டுப் போ என்று அப்பா சொல்லியிருந்தார். அதனால படிச்சு தெரிஞ்சுக்கிட்டேன். நான் சொன்னது சரியா?" என்று கேட்டாள் பொன்னி.

"சந்தேகமே இல்லாமல் சரி."

"2,525 கி.மீ. தொலைவுக்குப் பாயும் இந்தியாவின் நீளமான நதியும் இதுதான் தெரியுமா?" என்று ஆச்சரியப்படுத்தினான் வேலன்.

"பிரம்மபுத்திரா 3,848 கி.மீ நீளமுடையது என்றாலும் அது இந்தியாவில் பாயும் தொலைவு குறைவுதான். அதனால், வேலன் சொன்னதும் சரிதான்" என்றார் வீணா.

"நிறைய விஷயங்களைப் பார்த்துட்டோம். இப்போதைக்கு இந்த மாம்பழங்களைச் சாப்பிட்டுப் பசியாறுங்கள்" என்று மாம்பழத் துண்டுகளை எல்லோருக்கும் கொடுத்தார் மணிமாறன்.

"இந்த மாம்பழம் ரொம்ப சுவையாக இருக்கே. இது என்ன வகை?" என்று கேட்டார் வீணா.

"இமாம்பசந்த். முகலாயர்கள் காலத்தில் ராஜாவுக்காக உருவாக்கப்பட்ட சிறப்பு வகை மாம்பழங்கள். இந்தக் காட்டின்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 175 14/08/18 12:45 PM



எல்லையில் உள்ள தோப்பில் விளைஞ்சது" என்றார் மணிமாறன். மாம்பழங்களைச் சுவைத்துக்கொண்டே மீண்டும் வண்டியில் ஏறி அவர்கள் புறப்படத் தயாரானார்கள்.

"அடுத்து இன்னொரு ஆச்சரியமான விஷயத்தைப் பார்க்கப் போறோம்" என்றபடியே வாகனத்தைக் காட்டின் ஒரு பகுதியையே ஆக்கிரமித்திருந்த ஆலமர விழுதுகளைச் சுற்றி ஓட்டினார் மணிமாறன். அடுத்தடுத்து விழுதுகள் வந்துகொண்டே இருந்தன. எல்லா விழுதுகளையும் சுற்றி முடித்து, புறப்பட்ட இடத்துக்கே அவர்கள் வந்தபோது "இவ்வளவு பெரிய ஆலமரமா?" என்று வேலனும் பொன்னியும் வியந்துபோனார்கள்.

"ஆமாம், இந்த ஆலமரம் ரொம்பப் பெரிசு. இந்தக் காட்டின் மூதாய் மரம் என்றுகூட இதைச் சொல்லலாம். இந்த மரத்தில் ஆயிரக்கணக்கான பறவைகள் தஞ்சமடைகின்றன. கொல்கத்தாவின் அவுரா பகுதியில் அமைந்துள்ள இந்தியத் தாவரவியல் பூங்காவில் உள்ள உலக சாதனை படைத்த ஆலமரத்தைப் போன்றதொரு ஆலமரம் இது." என்றார் மணிமாறன்.

"அடையாறு தியசாபிகல் சொசைட்டியிலும் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. அதை நான் நேரில் பார்த்து வியந்திருக்கிறேன்." என்றாள் பொன்னி.

"கொஞ்சம் பொறுமையா போவோம், ஆலமரத்தின் பின்பக்கமா பாருங்க ஒரு சின்ன யானை மந்தை மலை மேல ஏறிக்கிட்டிருக்கு." என்றார் மணிமாறன்.

" காட்டு யானைகள் ஆக்ரோஷமா இருக்கும்னு சொல்வாங்களே. நமக்கு ஆபத்தில்லையா?" என்று பயத்தை வெளிப்படுத்தினான் வேலன்.

"முதல் விஷயம், காட்டில் எந்த உயிரினத்துக்கும் நாம் தொந்தரவு கொடுக்கக் கூடாது. காடு உயிரினங்களின் வீடு. அதுக்கப்புறம், நம்மை பாதுகாப்பா வைச்சுக்கிட்டு உயிரினங்களை ரசிக்கலாம். அவசர காலத்தில் அறிவுபூர்வமாகவும் சாதுர்யமாகவும் நம்மை எப்படிப் பாதுகாத்துக்கணும்னு தெரிஞ்சிருக்கணும். அதுக்காகத்தான் காட்டுக்குள் போகும்போது காடுகளிலேயே காலம்காலமா வாழ்ந்துவரும் பழங்குடி வழிகாட்டிகளைப் பயன்படுத்துறோம்" என்றார் மணிமாறன்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

"எவ்வளவு பெரிய உயிரினம் என்றாலும், அவற்றை மதிக்கிறவரை, நம்மை அவை எதுவும் பண்ணாதுன்னு சொல்ல வர்றீங்களா மாமா?"

"நிச்சயமா, இப்போ அந்த யானைகளைப் போல நாமும் மலை மேல ஏறலாம். மலை மேல இன்னுமொரு ஆச்சரியம் உங்களுக்குக் காத்திருக்கு"

காட்டுக்குள் இருந்த மலைப்பகுதியில் குறிப்பிட்ட தொலைவு அவர்கள் மேல ஏறிய பிறகு, ஒரு சமவெளி போன்ற சிறு பரப்பு வந்தது. அங்கே வண்டியை நிறுத்திவிட்டு, பைனாகுலர் வழியாக ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினார் மணிமாறன், "அங்கே பாருங்க".

அங்கே தரையில் காய்ந்த இலைகள், சருகுகளைக் கொண்டு கூம்பு வடிவத்தில் கட்டப்பட்ட கூடு போலிருந்தது. "இது எந்த உயிரினத்தோட கூடாக இருக்கும்னு நினைக்கிறீங்க"

"தரையில் பறவைகளும் கூடு கட்டும். ஆனா, இது வித்தியாசமா இருக்கே?" என்றார் வீணா.

"அது ஒரு பாம்போட கூடு, கருநாகத்தின் (King Cobra) கூடு"

"என்னது பாம்பு கூடு கட்டுமா, நாங்க கேள்விப்பட்டதேயில்லையே?" என்றான் வேலன்.

"உலகிலேயே கூடு கட்டி, அதில் முட்டை வைத்து இனப்பெருக்கம் செய்யும் பாம்பு வகை இது. அதேபோல ரொம்ப சாதாரணமா 18 அடி நீளம் வளரும். நஞ்சு கொண்ட பாம்புகளில் உலகிலேயே நீளமானது இது" என்று அவர்களை மேலும் ஆச்சரியப்படுத்தினார் மணிமாறன்.

"அடர்ந்த காட்டுக்குள்ளும் பார்த்துட்டோம், மலை மேலயும் ஏறிட்டோம். ஆனா, புலி மட்டும் இன்னும் தென்படவே இல்லையே" என்று சோர்வுடன் கூறினாள் பொன்னி.

"கவலைப்படாதே பொன்னி, எத்தனையோ ஆச்சரியமான விஷயங்களை இந்தக் காட்டில் நாம பார்த்துட்டோம். புலி ரொம்ப கூச்ச சுபாவம் கொண்ட உயிரினம். அவ்வளவு எளிதா வெளியே வராது. இந்த மலைச்சரிவில் பாறைகள் நிறைந்த ஓர் இடம் இருக்கு. கீழே இறங்கும்போது அங்கே புலி இருக்கான்னு பார்ப்போம்" என்றார் மணிமாறன்.

அவர் சொன்ன இடத்திலும் புலி இல்லை. குழந்தைகள் இருவரும் பல்வேறு ஆச்சரியங்களை அன்றைக்குப் பார்த்திருந்தாலும், புலியைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை மட்டும் அவர்களுக்குத் தீரவில்லை.

"நான் போகும் ஒவ்வொரு காடும் புதுசு புதுசாகத்தான் இருக்கு. ஆராய்ச்சியாளரான எனக்கே தெரியாத பல விஷயங்களை இன்றைக்கு மணிமாறன் சாரும், நிறைய பழங்குடிகளும் எனக்குக் கத்துத்தந்திருக்காங்க. ஆராய்ச்சிக்காகப் பல முறை காட்டுக்கு வந்து போயிருந்தாலும் என்னால் புலியைப் பார்க்க முடிந்ததில்லை. இன்னொரு முறை புலியைப் பார்ப்போம், கவலைப்படாதீங்க" என்று அவர்களைச் சமாதானப்படுத்தினார் வீணா.

அவர்கள் திரும்பி வந்த வழியில் ஓங்கிலைப் பார்த்த அதே இடத்துக்கு வந்தவுடன் ஓய்வெடுப்பதற்காக வண்டியை சற்று நிறுத்தினார்கள். பொன்னி கீழே இறங்கி கண்களில் பைனாகுலரை பொருத்தி புதரில் இருந்த இடைவெளிகள் வழியாக ஆற்றைப் பார்த்தாள். அவளால் ஆச்சரியத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "மாமா, மாமா, அங்க பாருங்க, அங்க பாருங்க" என்று கிசுகிசுக்கும் குரலில் கூறினாள். எல்லோரும் கண்களில் பைனாகுலரைப் பொருத்தி புதருக்குப் பின்னால் இருந்து பார்த்தார்கள். புலி ஒன்று தன் மூன்று குட்டிகளுடன் ஆற்றில் நீர் அருந்திக்கொண்டிருந்தது. அழகு நிறைந்த அந்தக் காட்சியைத் தன் கேமராவில் பதிவு செய்துகொண்டார் வீணா. அந்தப் புலிகள் நீர்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 177 14/08/18 12:45 PM

## இயற்கை தேசியச் சின்னங்கள்



**தாமரை–1950**

சேற்று நீரில் வளர்ந்தாலும் மிக அழகான மலர்கள் மலர்கின்றன.



**ஆலமரம்–1950**

இது பெருமையின் சின்னமாகும். மருத்துவ குணம் கொண்டது.



**புலி–1973**

பூனை இனத்தில் மிகப்பெரியது. உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் இந்தியா 70 % கொண்டுள்ளது.



**மயில்–1963**

இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது தோகையைக் கொண்ட பறவை மயில்.



**யானை–2010**

ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. தான் வாழும் காட்டுப் பிரதேசங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.



**கங்கை ஆறு–2008**

இது வற்றாத ஆறு. வரலாற்றுப் புகழ் பெற்ற தலைநகரங்கள் இவ்வாற்றங்கரையில் தோன்றி செழித்தோங்கின.



**லாக்டோ பேசில்லஸ் 2012**

இது ஒரு தோழமை பாக்டீரியா. இது லேக்டிக் மற்றும் பாக்டீரியாக்களின் குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறது.



**ஆற்று ஓங்கில்–2010**

தான் வாழும் ஆற்றின் சூழல் அமைவின் நிலையை உணர்த்தும் கருவியாக செயல்படுகிறது. அருகி வரும் உயிரினமாக உள்ளது.



**மாம்பழம் 1950**

வைட்டமின் ஏ, சி, டி யை அதிக அளவில் கொண்டது. பெரும்பாலும் சமவெளிகளில் விளைவிக்கப்படுகிறது.



**ராஜநாகம்**

(ஹோஃபிபாகஸ் ஹானா) உலகின் நீண்ட விஷம் நிறைந்த பாம்பு. இவை இந்தியாவின் மழைக்காடுகள் மற்றும் சமவெளிகளில் வாழ்கின்றன.

**இயற்கை தேசிய சின்னங்கள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.**



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 178
14/08/18 12:47 PM

அருந்தித் திரும்பும்வரை கண் கொட்டாமல் அவற்றையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"இதுதான் இந்தியக் காடுகளின் நிஜ ராஜா" என்றார் மணிமாறன்.

"நீங்கள் சொல்றது 100 சதவீதம் உண்மை" என்று ஆமோதித்தார் வீணா.

பிறகு வண்டியில் ஏறி காட்டின் எல்லைக்குத் திரும்பும்போது வீணா ஒரு கேள்வி கேட்டார். "குழந்தைகளா இன்னைக்கு நீங்க நேரில் பார்த்த உயிரினங்கள் அனைத்துக்கும் ஒரு ஒற்றுமை உண்டு தெரியுமா?" என்று கேட்டார் வீணா.

"என்ன ஒற்றுமை, என்ன ஒற்றுமை?" என வேலன் கேட்டான்.

"சீக்கிரம் சொல்லுங்க. நாங்க ரொம்ப ஆவலா இருக்கோம்" என்றாள் பொன்னி.

"இன்றைக்கு நாம பார்த்த எல்லாமே, இந்தியாவோட இயற்கை தேசியச் சின்னங்கள் என்கிற சிறப்பு அங்கீகாரம் பெற்றவை".

"ரொம்பச் சரியா சொன்னீங்க வீணா, பாருங்க நான்கூட அதை யோசிக்கலை" என்றார் மணிமாறன்.

உங்களுக்குத் தெரியுமா?

**தமிழகத்தின் மாநில இயற்கைச் சின்னங்கள்**

| | | |
|---|---|---|
| மாநில விலங்கு | வரையாடு |  |
| மாநிலப் பறவை | மரகதப் புறா |  |
| மாநில மலர் | செங்காந்தள் மலர் |  |
| மாநில மரம் | பனை மரம் |  |

## பிற தேசியச் சின்னங்கள்

### தேசியக் கொடி



மூவண்ணக்கொடி நமது தேசியக் கொடியாகும். மூன்று வண்ணங்களும் சம அளவில் கிடைமட்டமாக அமைந்துள்ளன. மேல்பகுதியில் உள்ள காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. கீழ்ப்பகுதியில் உள்ள பச்சைநிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது. இடையில் உள்ள வெள்ளைநிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது. நடுவில் கருநீல நிறத்தில் அமைந்துள்ள அசோகச் சக்கரம் அறவழியையும் அமைதியையும் வலியுறுத்துகிறது.

தேசியக் கொடியின் நீள, அகலம் 3:2

உங்களுக்குத் தெரியுமா?

- இந்திய தேசியக் கொடியை ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கையா என்பவர் வடிவமைத்தார்.
- விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடி தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தில் (வேலூர் மாவட்டம்) நெய்யப்பட்டது.
- இக்கொடியைப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் (15.08.1947) செங்கோட்டையில் ஏற்றினார்.
- இக்கொடி தற்போது சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.



6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 179
athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
14/08/18 12:47 PM

என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. நடுவில் உள்ள அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டுள்ளது.

### உயர்சிந்தனை வினா

இந்திய தேசியக்கொடியைத் தயாரிக்கும் உரிமை யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது?

உங்களுக்குத் தெரியுமா?

### கொடி காத்த குமரன்




திருப்பூர்க் குமரன் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் பிறந்தார். இளவயதிலிருந்தே இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1932இல் காந்தியடிகளைக் கைது செய்ததைக் கண்டித்து நாடெங்கிலும் போராட்டங்கள் நடைபெற்றன. காந்தியை விடுதலை செய்யக்கோரி நடந்த போராட்டத்தில் திருப்பூர்க் குமரன் கலந்து கொண்டார். காவல் துறையினரின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டு உயிர்துறந்தார். போராட்டக்களத்தில் உயிர்நீத்தபோதும் மூவர்ணக்கொடியைக் கீழே விடவில்லை. இதனால் திருப்பூர்க் குமரன் 'கொடி காத்த குமரன்' என அழைக்கப்படுகிறார். அவரது தியாகத்தை நினைவு கூறும் வகையில் அவரது நூற்றாண்டில் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

## தேசிய இலச்சினை

சாரநாத் அசோகத் தூணின் உச்சியில் அமைந்திருக்கும் நான்முகச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினையாக ஜனவரி 26, 1950இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



இதன் அடிப்பகுதியில் 'சத்யமேவ ஜெயதே' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. 'வாய்மையே வெல்லும்' என்பதே இதன் பொருளாகும். தேசிய இலச்சினை மேல்பகுதி, அடிப்பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

மேல்பகுதியில் நான்கு சிங்க உருவங்கள் ஒன்றுக்கொன்று பின்பக்கமாக பொருந்தியிருக்குமாறு வட்டவடிமான பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நமது இலச்சினையில் மூன்று சிங்க உருவங்களை மட்டுமே காண இயலும்.

**அடிப்பகுதியில்** யானை, குதிரை, காளை, சிங்கம் ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்களுக்கிடையே தர்ம சக்கரம் அமைந்துள்ளது. இந்த இலச்சினை இந்திய அரசின் அலுவல் முறை கடித முகப்புகளிலும் இந்திய நாணயங்களிலும் கடவுசீட்டுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

அசோகர் காலத்தில் சாரநாத் தூணின் உச்சியில் அமைந்திருந்த நான்முகச் சிங்கம் தற்போது சாரநாத் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

## தேசியகீதம்

'ஜன கண மன……' நமது தேசிய கீதமாகும். இது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைபாட்டிற்கு அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இப்பாடல் இரவீந்திரநாத் தாகூரால் வங்காள மொழியில் எழுதப்பட்டது. இதன் இந்தி மொழியாக்கம் ஜனவரி 24, 1950இல் இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 180 14/08/18 12:47 PM

உங்களுக்குத் தெரியுமா?

1911, டிசம்பர் 27ஆம் நாள் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது இப்பாடல் முதன் முதலாகப் பாடப்பட்டது.

### பாடும்போது பின்பற்ற வேண்டியன

- இக்கீதத்தை சுமார் 52 வினாடிகளில் பாட/இசைக்க வேண்டும்.
- பாடும்போது அனைவரும் எவ்வித அசைவுகளும் இன்றி நேராக நிற்க வேண்டும்.
- பொருள் புரிந்து சரியாகப் பாடவேண்டும்.

### தேசியப் பாடல் – வந்தே மாதரம்

வங்க எழுத்தாளர் பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய வந்தே மாதரம் பாடலின் முதல் பத்தி விடுதலை போராட்டத்தில் முக்கியப் பங்களித்தது. இதன் காரணமாக, தேசிய கீதத்துக்கு இணையான தேசியப் பாடல் என்ற சிறப்பு இப்பாடலுக்கு அளிக்கப்படுகிறது என அரசியலமைப்பு சட்ட நிர்ணய மன்றத் தலைவரும் மேனாள் குடியரசுத் தலைவருமான ராஜேந்திர பிரசாத் அறிவித்தார். இப்பாடல் ஆனந்த மடம் என்ற நாவலிலிருந்து எடுக்கப்பட்டது.

### தேசிய உறுதிமொழி

"இந்தியா எனது தாய்நாடு….." எனத் தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியைப் பிதிமாரி வெங்கட சுப்பாராவ் என்பவர் தெலுங்கில் எழுதினார்.

### தேசிய நுண்ணுயிரி

நாம் அன்றாடம் சாப்பிடும் தயிர் பாலிலிருந்து உருவாகப் பயன்படுவது லாக்டோபேசில்லஸ் டெல்புரூக்கி எனும் நுண்ணுயிர். 2012–ம் ஆண்டில் இது தேசிய நுண்ணுயிராக அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் பாக்டீரியா



வேதிவினை புரிந்து பாலில் இருக்கும் புரதத்தை மாற்றுவதால் தயிர் கிடைக்கிறது. தயிர் செரிமானத்துக்கும், வயிற்றுக் கோளாறுகளுக்கும், குளிர்ச்சி தருவதற்கும் அறியப்பட்டது.

### இந்திய நாணயம் (INR) ₹

இந்தியாவின் அதிகாரபூர்வ பணத்தின் பெயர் ரூபாய். 16–ம் நூற்றாண்டில் மன்னர் ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணயத்துக்கு 'ருபியா' என்று பெயர். அதுவே ரூபாய் என்று மருவியுள்ளது. ரூபாய்க்கான சின்னம் ₹. இந்தச் சின்னத்தை 2010–ல் வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி. உதயகுமார்.

### தேசிய நாட்காட்டி

பேரரசர் கனிஷ்கர் காலத்தில் கி.பி.(பொ.ஆ.) 78–ல் சக ஆண்டு முறை தொடங்கியது. இளவேனில் கால சம பகல்–இரவு நாளான மார்ச் 22 அன்று இந்த ஆண்டு தொடங்குகிறது. லீப் ஆண்டுகளில் இது மார்ச் 21 ஆக அமையும். சக ஆண்டு முறையையே நமது தேசிய நாட்காட்டி பின்பற்றுகிறது. பிரபல வான் இயற்பியலாளர் மேக்னாத் சாகா தலைமையிலான நாட்காட்டி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் 1957 மார்ச் 22 முதல் தேசிய நாட்காட்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட இந்திய மக்களிடையே நாட்டுப்பற்றையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தெடுப்பதில் தேசிய சின்னங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 181 14/08/18 12:47 PM

### தேசிய நாட்கள்

### சுதந்திர நாள்



ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 15–ம் தேதி இந்திய சுதந்திர நாள். ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் நாடு விடுதலை பெற்ற நாள் அது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு உதித்த நாளாகவும் கருதப்படுகிறது.

நாடு விடுதலை பெற்ற நாளன்று மகாகவி பாரதியாரின் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே' என்ற பாடலை அகில இந்திய வானொலியில் பாடிய பெருமையைப் பெற்றவர் மறைந்த கர்னாடக இசைப் பாடகி டி.கே. பட்டம்மாள். சுதந்திர நாள் இன்றைக்கும் நாடெங்கும் கோலாகலமாக அனைத்துத் தரப்பினராலும் கொண்டாடப்பட்டுவருகிறது. அன்றைக்கு நாட்டின் பிரதமர் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது முக்கிய நிகழ்வு ஆகும்.

### குடியரசு நாள்



1950 ஜனவரி 26–ம் தேதி இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அதைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த நாளே, குடியரசு நாள். 1947–லேயே நாடு விடுதலை பெற்றுவிட்டாலும், அதற்குப் பிறகும் பிரிட்டன் அரசியே இந்தியாவின் கௌரவத் தலைவராக இருந்துவந்தார். குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு, நாட்டின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவர் ஆவார். குடியரசு நாளில் அவரே செங்கோட்டையில் கொடியேற்றுவார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியக் குடியரசு நாளின் மூன்றாவது நாளான ஜனவரி 29, அன்று 'பாசறைக்கு திரும்புதல்' என்ற விழா சிறப்பாக நடைபெறும். அந்நாளில் தரைப்படை, கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த இசைக்குழுவினர் நிகழ்ச்சிகளை நடத்துவர். குடியரசு தலைவர் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர் ஆவார். இவ்விழாவின் ஒரு பகுதியாக மாலை 6 மணிக்கு குடியரசுத் தலைவர் மாளிகை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

### காந்தி ஜெயந்தி



'தேசத் தந்தை' மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2, தேசிய நாட்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுக் கொண்டாடப்படுகிறது. காந்தியின் பிறந்த நாளைச், 'சர்வதேச அகிம்சை நாள்' ஆக 2007 ல் அங்கீகரித்து ஐ.நா. சபை கொண்டாடி வருகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 182 14/08/18 12:47 PM

## கலைச்சொற்கள்

- கரியால் முதலை – கங்கை முதலை
- ஆற்று ஓங்கில் – கங்கையில் வாழும் டால்பின்
- மீயொலி – கேளா ஒலி அலைகள்

## மீள்பார்வை

- புலி, யானை, டால்பின், மயில், கருநாகம், ஆலமரம், மாம்பழம், கங்கை, தாமரை ஆகியவை இயற்கை தேசியச் சின்னங்களாகும்.
- இந்திய அரசியலமைப்புச் சபை 1947, ஜூலை 22இல் மூவண்ணக்கொடியைத் தேசியக் கொடியாக ஏற்றுக் கொண்டது.
- தேசியக்கொடி, தேசிய இலச்சினை, தேசிய கீதம், தேசியப்பாடல் போன்றவை பிற தேசியச் சின்னங்களாகும்.
- விடுதலை நாள், குடியரசு நாள், காந்திஜெயந்தி போன்றவை முக்கிய தேசிய விழாக்களாகும்.

### *பயிற்சிகள்*

### *I. சரியான விடையைத் தேர்வு செய்க.*

1. தேசியப் பாடலான வந்தே மாதரத்தை இயற்றியவர் ________________.

அ) பிங்காலி வெங்கையா

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஈ) காந்திஜி

9KP47I

2. இந்தியாவின் தேசியக் கீதம் ________________.

அ) ஜன கண மன

ஆ) வந்தே மாதரம்

இ) அமர் சோனார் பாங்கலே

ஈ) நீராடுங் கடலுடுத்த

3. ஆனந்தமடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர் ________________.

அ) அக்பர்

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஈ) ஜவஹர்லால் நேரு

4. ________________பிறந்தநாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்

அ) மகாத்மா காந்தி

ஆ) சுபாஷ்சந்திர போஸ்

இ) சர்தார் வல்லபாய்பட்டேல்

ஈ) ஜவஹர்லால் நேரு

5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தின் நிறம் ________________.

அ) வெளிர்நீலம்

ஆ) கருநீலம்

இ) நீலம்

ஈ) பச்சை

6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி ________________ அருங்காட்சியத்தில் உள்ளது.

அ) சென்னை கோட்டை

ஆ) டெல்லி

இ) சாரநாத்

ஈ) கொல்கத்தா

7. தேசியக் கீதத்தை இயற்றியவர் ________________.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 183 14/08/18 12:47 PM

அ) தேவேந்திரநாத் தாகூர்

ஆ) பாரதியார்

இ) ரவீந்திரநாத் தாகூர்

ஈ) பாலகாங்காதர திலகர்

8. தேசியக் கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு _____________

அ) 50 வினாடிகள்

ஆ) 52 நிமிடங்கள்

இ) 52 வினாடிகள்

ஈ) 20 வினாடிகள்

9. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின்போது வந்தே மாதரம் பாடலைப் பாடியவர் _______________

அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) மகாத்மா காந்தி

ஈ) சரோஜினி நாயுடு

10. விடுதலை நாளின்போது டெல்லியில் கொடியேற்றுபவர் _______________

அ) பிரதம அமைச்சர்

ஆ) குடியரசுத்தலைவர்

இ) துணைக்குடியரசுத் தலைவர்

ஈ) அரசியல் தலைவர் எவரேனும்

## *II. கோடிட்ட இடங்களை நிரப்புக.*

1. இந்திய தேசிய இலச்சினை _______________ல் உள்ள அசோகத் தூணிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. இந்தியாவின் தேசியக் கனி _______________.
3. இந்தியாவின் தேசியப் பறவை _______________.
4. இந்தியாவில் தேசிய மரம் _______________.
5. 1947 விடுதலை நாளின் போது ஏற்றப்பட்டக் கொடி _______________ என்னுமிடத்தில் நெசவு செய்யப்பட்டது.
6. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் _______________.
7. சக ஆண்டு முறையைத் துவக்கியவர் _______________.
8. இந்தியாவின் மிக நீளமான ஆறு _______________.
9. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் _______________.
10. தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரம் _______________ ஆரங்களைக் கொண்டது.

## *III. சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.*

1. நான்முகச் சிங்கம் தற்போது _______________ அருங்காட்சியகத்தில் உள்ளது.

   (கொல்கத்தா / சாரநாத்)

2. தேசியக் கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு _______________.

   (1950 / 1947)

3. _______________ இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

   (லாக்டோ பேசில்லஸ் / ரைசோபியம்)

## *IV. நிரப்புக.*

1. காவி – தைரியம்; வெள்ளை – _________
2. குதிரை – ஆற்றல்; காளை –___________
3. 1947 – விடுதலைநாள்; 1950 –_________

## *V. பொருந்தியுள்ளவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்*

| | | | |
|---|---|---|---|
| 1. | ரவீந்திரநாத் தாகூர் | – | அ. தேசியப்பாடல் |
| 2. | பங்கிம் சந்திர சட்டர்ஜி | – | ஆ.தேசியக்கொடி |
| 3. | பிங்காலி வெங்கையா | – | இ. வான் இயற்பியலாளர் |
| 4. | மேக்னாத் சாகா | – | ஈ. தேசியகீதம் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ). | அ | ஈ | ஆ | இ |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 184 14/08/18 12:47 PM

ஆ). ஈ அ இ ஆ

இ). ஈ அ ஆ இ

### VI. பொருத்தியபின் பொருந்தாதது எது?

1. தேசிய ஊர்வன – புலி
2. தேசிய நீர்வாழ் விலங்கு – லாக்டோ பேசில்லஸ்
3. தேசிய பாரம்பரிய விலங்கு – ராஜநாகம்
4. தேசிய நுண்ணுயிரி – டால்பின்

### VII. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) தேசியக் கொடியின் நீள அகலம் 3:2 என்ற விகிதத்தில் உள்ளது.

   ஆ) அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டது.

   இ) அசோகச் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது.

2. அ) பிங்காலி வெங்கையா தேசியக் கொடியை வடிவமைத்தார்.

   ஆ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.

   இ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக்கொடி குடியாத்தத்தில் நெசவு செய்யப்பட்டது.

### VIII. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.
2. நவம்பர் 26 அன்று குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது.
3. அக்டோபர் 12 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

### IX. விடையளிக்கவும்.

1. தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?
2. தேசிய இலச்சினையின் பாகங்கள் எவை?
3. தேசியக் கீதத்தின் சிறப்பு அம்சங்கள் எவை?
4. இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும்.
5. தேசிய இலச்சினை எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது?
6. தேசிய உறுதி மொழியை எழுதியவர் யார்?
7. தேசிய இலச்சினையின் அடிபாகத்தில் இடம் பெற்றுள்ள விலங்குகள் எவை?
8. இயற்கை தேசியச் சின்னங்கள் எவை?
9. மயில்கள் சரணாலயம் எங்குள்ளது?

### X. செயல்பாடுகள்

- இயற்கை தேசியச் சின்னங்களைக் காட்சிப்படமாக வரைக/கதை உருவாக்குக.
- உன் வகுப்பு / பள்ளிக்கான அடையாளக் குறியீட்டை (Logo) உருவாக்குக.
- அறுகி வரும் உயிரினங்களைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும். கலந்துரையாடுக.
- பள்ளியில் நடைபெற்ற தேசிய விழா / நிகழ்வு குறித்து உள்ளூர் செய்தித்தாளுக்குச் செய்தி அறிக்கை தயாரிக்கவும்.

### XI. வாழ்வியல் திறன்

- குறிப்பிட்ட சில உயிரினங்களை மட்டும் தேசியச் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதன் காரணங்களை ஆய்க.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 185 14/08/18 12:47 PM



# இணையச் செயல்பாடு




## இந்தியச் சின்னங்கள் மற்றும் மாநிலங்கள்

**இந்தியா மற்றும் இந்திய மாநிலங்களின் சின்னங்களை அறிவோம்**

படி–1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி, Play store இல் "National Symbols" என்ற செயலியைத் தரவிறக்கம் செய்து நிறுவவும்.

படி–2: செயலியைத் திறந்து, தேசியச் சின்னகளைத் தேர்வு செய்க. எடுத்துக்காட்டாக, "National Flag, National Bird" போன்ற சின்னங்களைத் தெரிவு செய்து, அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

படி–3: "Back" பொத்தானைத் தெரிவு செய்து கீழ் நோக்கி நகர்த்தி மாநிலங்கள் பற்றி அறியவும். எடுத்துக்காட்டாக, "Tamil Nadu" என்பதைத் தெரிவு செய்க.

படி–4: இப்பொழுது தமிழ்நாட்டின் சின்னங்களைக் காணலாம்.

படி–1




படி–2




படி–3




படி–4




உரலி:

https://play.google.com/store/apps/details?id=com.cdac.symbol

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 186 14/08/18 12:47 PM

அலகு 2

# இந்திய அரசமைப்புச் சட்டம்



## கற்றல் நோக்கங்கள்

- இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி அறிதல்.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உருவாக்கத்தை அறிந்து வியத்தல்.
- இதன் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுதல்.
- அடிப்படை உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து அவற்றைப் பின்பற்றுதல்.

9KUCK9

## நுழையுமுன்

இப்பாடம் இந்திய அரசமைப்புச் சட்டம் உருவானதை விளக்குகிறது. இந்திய அரசு நிர்வாகத்திற்கு வழிகாட்டும் மற்றும் இந்திய குடிமக்களின் உரிமைகளையும் கடமைகளையும் உறுதிப்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்ற இந்திய அரசமைப்புச் சட்டதை விளக்குகிறது.

யாழினியனும் சுடரொளியும் சகோதரர்கள். யாழ் ஆறாம் வகுப்பிலும் சுடர் நான்காம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ் அடுத்தநாள் தனக்கிருக்கும் வகுப்புத் தேர்விற்காக வாசித்துக் கொண்டிருந்தான். அனைத்து வீட்டுப் பாடங்களையும் செய்து முடித்திருந்த மகிழ்ச்சியில் சுடர் தொலைக்காட்சியில் சிறுவருக்கான திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்தான். தொலைக்காட்சியின் ஒலியை மிகவும் அதிக அளவில் வைத்திருந்தான் சுடர். அதுமட்டுமின்றி அந்தப் படத்தில் பெரிதும் லயித்தவனாய் சத்தமாய் சிரித்தபடியும் கைகளைத் தட்டியபடியும் ரசித்துக் கொண்டிருந்தான். அந்த இரைச்சல் யாழை அவனது படிப்பில் கவனத்தைக் குவிக்க விடாமல் தடுத்தது.

எனவே அவன் தொலைக்காட்சியின் ஒலி அளவைக் குறைக்குமாறும், சத்தமிடாமல் அமைதியாக பார்க்குமாறும் சுடரைக் கேட்டுக் கொண்டான். யாழினியனது கோரிக்கையைச் சுடரொளி காது கொடுத்து கேட்டானில்லை.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 187 14/08/18 1:04 PM



திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டும் சுடர் தொலைக்காட்சியின் ஒலி அளவையோ தனது இரைச்சலையோ குறைத்துக் கொள்ளவில்லை. சுடர் மறுப்பதையும் தனக்கு அடுத்த நாள் வகுப்புத் தேர்வு இருப்பதையும் அப்பாவிடம் சென்று முறையிட்டான்.

"அண்ணன் தேர்வுக்கு படிக்கிறான்தானே. அவனைப் படிக்கவிடாமல் தொந்தரவு செய்தால் தவறுதானே" என்றார்.

"நான்தான் திரைப்படம் பார்க்கிறேன்ல. இவன் மட்டும் என்னை படம் பார்க்கவிடாமல் தொந்தரவு செய்யலாமா?" என்றான் சுடர்.

"படிப்பதும் படம் பார்ப்பதும் ஒன்றல்ல தம்பி" என்றார் தந்தை.

ஆனால் இதற்கு உடன்படவில்லை சுடர். யாழிற்கு போலவே இது தனக்கும் வீடுதான் என்றும் அவனுக்குப் படிக்க உரிமை இருக்கிறது என்றால் தனக்குப் படம் பார்ப்பதற்கு உரிமை இருப்பதாகவும் கூறினான்.

இருவருக்குமே வீட்டில் சம உரிமை இருக்கிறது என்பதை அவர்களது தந்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஒருவரது உரிமை அடுத்தவரது சுதந்தரத்தைக் காயப்படுத்தக் கூடாது என்று விளக்கினார். அப்போதும் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சுடர் அடம் பிடித்தான்.

"இங்க பாரு சுடர். இது உன் வீடு. படத்தைச் சத்தமாகப் பார்க்க உனக்கு உரிமை இருக்கிறது. அப்படித்தானே?"

"ஆமாம் அப்பா"

"அதே போல் இது யாழினியனின் வீடு. அவனுக்குப்பிடித்தபாடலைத்தொலைக்காட்சியில் சத்தமாக வைத்துக் கேட்கலாம்தானே?"

"அதெப்படிப்பா, நான்தான் படம் பார்க்கிறேனே. அவனும் சத்தமாகப் பாட்டு கேட்டால் நான் எப்படி படம் பார்க்க முடியும்?"

"இப்ப புரியுதா உன் உரிமைனு நீ சத்தமா படம் பார்க்கலாம்னா அவனும் பாட்டு கேட்கலாம் என்பதும் அவனது உரிமைதான் சுடர்"

"அப்ப எப்படி நான் படம் பார்ப்பேன்?"

"அப்ப எப்படி அவன் படிப்பான்?"

"ஆமாம்ல. சரிப்பா நான் இனிமே படம் பார்க்கல"

"அப்படி இல்ல சுடர். நீ படம் பார்க்கலாம். ஆனால் அடுத்தவர்களுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்"

"கோவித்துக் கொள்ளாதடா யாழ். இனி தொந்தரவு தராமல் படம் பார்க்கிறேன். நீ போய் படிடா"

சுடரது தோளைத் தட்டிக் கொடுத்தவாறே யாழ் புன்னகை தவழ நகர்ந்தான்.

இந்த காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களது தாய், "ஏங்க, இந்த சின்ன வீட்ட நிர்வகிப்பதற்கே இத்தனை சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் தேவைப்படுகிறதே. இத்தனை பெரிய இந்தத் தேசத்தைக் கட்டுக்கோப்பாக நிர்வகிப்பதற்கு எத்தனை சட்டங்களும் நெறிகளும் தேவைப்படும்" என்று வியப்பின் உச்சிக்கே சென்றார்.

"அது ஒரு கடல் தீபா. பல மதங்கள், பல மொழிகள், பல இனங்கள், பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழும் ஒரு நாட்டில் அனைவரையும் சமத்துவமாக நிர்வகிப்பதற்கு



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 188 14/08/18 1:04 PM

வலுவான, தெளிவான சட்டங்களும் வழிமுறைகளும் தேவை. அதைத்தான் அரசமைப்புச் சட்டம் என்கிறோம்" என்றார்.

அடுத்த வேலை நாளில் இருவரும் பள்ளி சென்றனர். அன்று குடியரசு நாளுமாகும்.

அங்குக் குடியரசுதினக் கொண்டாட்டங்கள் களைகட்டியிருந்தன. மாணவர்களும், ஆசிரியர்களும் கொடிமரத்தைச் சுற்றி வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். கொடியேற்றப்பட்டவுடன் சிறப்பு விருந்தினர் சமூக அறிவியலாளர் ஆறுமுகம் அவர்களுடன் உரையாடல் தொடங்கியது.



"தங்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துகள்!" என்றார் சமூக அறிவியலாளர்.

"தங்களுக்கும் குடியரசு தின வாழ்த்துகள் ஐயா!" என்றனர் மாணாக்கர்கள்.

"நாம் ஏன் குடியரசு தினம் கொண்டாடுகிறோம் என்று தெரியுமா?"

"நமது அரசமைப்புச் சட்டம் 1950–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26–ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்." என்றார் வரலாற்று ஆசிரியை மலர்மதி.

"ஆம். தாங்கள் கூறியது சரிதான். ஆனால் அந்த நாளில் நம்முடைய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு வேறு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக 1929–ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்யத்தை (PURNA SWARAJ) அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1930, ஜனவரி 26 அன்று முழு சுதந்திர நாளாகக்(Purna Swaraj Day) கொண்டாடப்பட்டது. பின்னாளில் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது." என்றார் சமூக அறிவியலாளர் ஆறுமுகம்.

"அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?" என்று கேட்டான் நத்தர்.



"அதுபற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னால் நான் சில கேள்விகளைக் கேட்கிறேன். அதற்குப் பதில் கூறுங்கள். பிறகு நான் உங்கள் கேள்விக்குப் பதில் கூறுகிறேன்." என்றார் .

எல்லோரும் "சரி" என்றபடி அவரது கேள்விகளை எதிர்கொள்ளத் தயாராயினர்.

"நீங்கள் உங்கள் வீடுகளில் ஏதேனும் விதிகளைப் பின்பற்றுகிறீர்களா?"

"ஆம்." என்றனர்.

"நீங்கள் உங்கள் பள்ளியில் ஏதேனும் விதிகளைப் பின்பற்றுகிறீர்களா?"

"ஆம்." என்றனர்.

"இரண்டும் ஒன்றா வேறுவேறா?"

"பெரும்பாலும் வேறுவேறானவை."

"பொது இடத்தில் நாம் சில விதிகளைப் பின்பற்ற வேண்டியதிருப்பது அவசியமா?"



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 189 14/08/18 1:04 PM

"ஆம்."

"ஏன் அவை அவசியம்?"

"நாம் அடுத்தவர்களைத் தொந்தரவு செய்யாமல் இருக்க." என்றாள் தமிழ்ச்செல்வி.

"நம்மை அடுத்தவர்கள் யாரும் தொந்தரவு செய்யாமல் இருக்கவும்தான்." என்றான் செல்வா.

"ஆம். நீங்கள் கூறிய காரணங்கள் ஏற்புடையவைதான். அதே நேரம் விதிகளைப் பின்பற்றச்சொல்லி யாரேனும் உங்களைக் கட்டாயப்படுத்தினால் அப்போது எப்படி உணர்வீர்கள்?"

"கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்."

"உங்களுக்கான விதிகளை நீங்களே உருவாக்கும்போது எப்படி உணர்வீர்கள்?"

"மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கும்."

எல்லோரும் ஆமோதிப்பதைப்போல் தலையசைத்தனர்.

"அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்."

"இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எவையெல்லாம் இடம்பெற்றுள்ளன?" என்று கேட்டாள் தீபிகா.

"இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது, கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரச நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

"இதற்கான ஆரம்பகட்டப் பணிகள் எப்போது தொடங்கப்பட்டன?" என்று கேட்டான் கிறிஸ்டோபர்.



"அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 389 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்."

"வேறு யாரெல்லாம் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தார்கள்?"

"ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானா ஆஸாத், எஸ். ராதாகிருஷ்ணன், விஜயலக்ஷ்மி பண்டிட், சரோஜினி நாயுடு உட்படப் பலர் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்."

"இந்த அமைப்பில் பெண்கள் எத்தனை பேர் இருந்தனர்?" என்று கேட்டான் குணசேகர்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 190 14/08/18 1:04 PM



"15 பெண் உறுப்பினர்கள் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்."

"எட்டு பேர்கொண்டஅரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இதற்கான ஆலோசகராக பி.என்.ராவ் நியமிக்கப்பட்டார். இக்குழுவின் முதல் கூட்டம் 1946–ஆம் ஆண்டு டிசம்பர் 9–ஆம் தேதி நடைபெற்றது. அன்றே அரசமைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகள் தொடங்கிவிட்டன."

**உங்களுக்குத் தெரியுமா?**

அண்ணல் அம்பேத்கர் 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

"எதை முன்னுதாரணமாகக்கொண்டு இதை எழுதினார்கள்?"

"இக்குழுவினர் ஐக்கிய இராச்சியம் (United Kingdom), அமெரிக்கா, அன்றைய சோவியத் ரஷ்யா, ஃப்ரான்ஸ், சுவிட்சர்லாந்து உட்பட 60 நாடுகளின்அரசமைப்புச் சட்டங்களை வாசித்து, அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன் மாதிரியாகக்கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினர்."

"ஒரே மூச்சில் இதை எழுதினார்களா?"

"இல்லை.அரசமைப்புச் சட்டம் இறுதி செய்யப்படுவதற்கு முன்னர் சுமார் இரண்டாயிரம் திருத்தங்கள் (amendments) அதில் மேற்கொள்ளப்பட்டன."

"எப்போதுஇச்சட்டம்எழுதிமுடிக்கப்பட்டது?"

"2 ஆண்டுகள், 11 மாதம், 17 நாட்கள் கடந்த நிலையில், 1949–ஆம் ஆண்டு நவம்பர் 26–ஆம் நாள் முழுமையான அரசமைப்புச் சட்டம் தயாரானது."



"இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் நமது அரசமைப்புச் சட்டத்தை அன்றுதான் ஏற்றுக்கொண்டது. ஆகையினால்தான் அந்த நாளை அரசமைப்புச்சட்ட நாளாக ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகிறோம். இல்லையா?" என்று கேட்டான் கார்த்திகேயன்.

"ஆம்." என்றார் ஆறுமுகம்.

"அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க எவ்வளவு செலவானது?" என்று கேட்டான் நத்தர்.

"64 லட்சம் ரூபாய் இதற்கென செலவிடப்பட்டது."

"நமது அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம் என்ன?"

"நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது."



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 191 14/08/18 1:04 PM

"முகப்புரை என்றால் என்ன?"

"அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச் சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது."




"இறையாண்மை என்பது எதைக் குறிக்கிறது?"

"அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்."

"மதச் சார்பின்மை என்பது..?"

"மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும் சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது. அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது."

"இந்திய அரசு சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) வழியேதான் ஆளப்படுகிறது. இல்லையா?"

"ஆம். இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் (parliamentary form of government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும். அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்."

"அடிப்படை உரிமை என்றால் என்ன?"

"ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன."

"அவை என்னென்ன?"

"சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை

**அடிப்படை உரிமைகள்**






athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 192 14/08/18 1:04 PM

ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன."

"வழிகாட்டு நெறிமுறை என்று கூறினீர்களே. அப்படி என்றால் என்ன?"

"அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும்போதும் கவனத்தில் கொள்ளவேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை."

"ஓட்டுரிமை என்பது?"

"பதினெட்டு வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது."

"உரிமைகளைப் போலவே ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமைகளும் இருக்கும் இல்லையா?"

"ஆம். இருக்கின்றன. தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது, எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது, சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும் போது சேவை செய்ய தயாராக இருப்பது, சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது, நமது பழம் பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது, காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது, அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது, வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது, குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6–14 வயதுக்குள் தருவது ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமைகளாக அறிவித்துள்ளது." என்று முடித்தார் சமூக அறிவியலாளர் ஆறுமுகம்.

### தகவல் பேழை

- அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் பி. ஆர். அம்பேத்கர், என்.கோபாலசாமி. கே.எம்.முன்ஷி, சையத் முஹம்மது சதுல்லா, பி.எல்.மிட்டர், என். மாதவ ராவ், டி.டி.கே, டி.பி.கேதான் ஆகிய சட்ட வல்லுனர்கள் இடம்பெற்றிருந்தனர்.
- அக்குழுவின் தலைவரான பி. ஆர். அம்பேத்கர் நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுகிறார்.
- நமது அரசியல் சட்டம் உருவானபோது, 395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம்பெற்றிருந்தன. தற்போது 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் இடம்பெற்றுள்ளன.
- அரசமைப்புச் சட்டம் 16.9.2016–வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது.

### சிந்தனை வினா

உடனடியாக செய்ய வேண்டிய கடமைகளாக நீ எவற்றைப் பட்டியலிடுவாய்?

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 193 14/08/18 1:04 PM

## கலைச்சொற்கள்

மக்களாட்சி – மக்களால் மக்களுக்காக நடத்தப்பெறும் அரசாங்கம்

வரைவுக்குழு – அரசமைப்புச் சட்ட வரைவை உருவாக்க அமைக்கப்பட்ட குழு

முகப்புரை – இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கான அறிமுகம்

மதச்சார்பின்மை – அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களையும் சமமாக நடத்துதல்

சமத்துவம் – அனைத்து மக்களுக்கும் சமத்துவ பொருளாதார நிலை சமத்துவ வாய்ப்பு அளித்தல்

இறையாண்மை – அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள முழு அதிகாரம்.

## மீள்பார்வை

❖ ஜனவரி 26 குடியரசு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

❖ இந்திய அரசமைப்புச் சட்டம் அடிப்படை கருத்துகளையும் கொள்கைகளையும் சட்டத்தையும் கொண்டுள்ளது.

❖ இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் ஆவார்.

❖ அரசமைப்புச் சட்டத்தின் முகவுரை நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறது.

❖ இந்தியா ஒரு இறையாண்மையுடைய சமய சார்பற்ற மக்களாட்சி குடியரசு நாடாகும்.

❖ அனைத்து குடிமக்களும் அவரவர் மதத்தைப் பின்பற்றலாம்.

❖ நிர்வாகத்துறை சட்டமன்றத்திற்கு முழு பொறுப்புடையதாக உள்ளது.

❖ அடிப்படை உரிமைகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

❖ அரசு நெறிமுறை கோட்பாடுகள் மக்களுக்கு வழிகாட்டுகிறது.

❖ வயது வந்தோர் வாக்குரிமை 18 வயதை அடைந்தவர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை வழங்குகிறது.

❖ அனைத்து குடிமக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளும் உண்டு.

## பயிற்சிகள்

### I. சரியான விடையை தேர்வு செய்க:

9KXZ96

1. அரசமைப்புத் தினம் கொண்டாடப்படும் நாள் ________________.

அ) ஜனவரி 26   ஆ) ஆகஸ்டு 15

இ) நவம்பர் 26   ஈ) டிசம்பர் 9

2. அரசமைப்புச் சட்டத்தை ________________ ஆம் ஆண்டு அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொண்டது.

அ) 1946   ஆ) 1950

இ) 1947   ஈ) 1949

3. அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை ________________ சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அ) 101   ஆ) 100

இ) 78   ஈ) 46



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 194 14/08/18 1:04 PM

4. இஃது அடிப்படை உரிமை அன்று________________.

அ) சுதந்திர உரிமை　　ஆ) சமத்துவ உரிமை

இ) ஒட்டுரிமை　　ஈ) கல்வி பெறும் உரிமை

5. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது ________________.

அ) 14　　ஆ) 18

இ) 16　　ஈ) 21

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக ________________ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை என போற்றப்படுபவர் ________________.
3. நம் அடிப்படை உரிமைகளை உறுதிசெய்யவும் பாதுகாக்கவும் செய்வது ________________ ஆகும்.
4. நம் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் ________________.

## III. பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுதந்திர தினம் | – | அ. நவம்பர் 26 |
| 2. | குடியரசு தினம் | – | ஆ. ஏப்ரல் 1 |
| 3. | இந்திய அரசமைப்பு தினம் | – | இ. ஆகஸ்டு 15 |
| 4. | அனைவருக்கும் கல்வி உரிமை | – | ஈ. ஜனவரி 26 |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ.) | இ | அ | ஈ | ஆ |
| ஆ.) | இ | ஈ | அ | ஆ |
| இ.) | ஈ | ஆ | அ | இ |

## IV. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி.

### அரசமைப்புச் சபை

1. அரசமைப்பு நிர்ணய சபை எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
2. வரைவுக்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் பங்கேற்றனர்?
3. அரசமைப்பு நிர்ணய சபையில் பங்கேற்ற பெண் உறுப்பினர்கள் எத்தனை பேர்?
4. அரசமைப்புச் சட்ட உருவாக்கம் எப்போது முடிவடைந்தது?

## V. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:

1. ஜனவரி 26 குடியரசு தினமாக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது?
2. அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?
3. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுக.
4. அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
5. நீ செய்ய விரும்பும் கடமைகளைப் பட்டியலிடுக.
6. முகப்புரை என்றால் என்ன?
7. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்களின் மூலம் நீ புரிந்து கொள்வது என்ன?
8. வரையறு: இறையாண்மை.

## VI. செயல்பாடுகள்:

1. மாணவர்கள் தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ தங்கள் வகுப்புக்கான விதிமுறைகளைத் தயாரித்தல். பின்பு அவற்றிலிருந்து வகுப்புக்கான விதிகளின் தொகுப்பை உருவாக்குதல்.
2. வீடு, பள்ளி, சமூக அளவில் உன் உரிமைகளையும் கடமைகளையும் பட்டியலிடுக.
3. சமத்துவம், குழந்தைத்தொழிலாளர் அனைவருக்கும் கல்வி பெறும் உரிமை – இத்தலைப்புகளைப் பற்றி கலந்துரையாடுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 195　　14/08/18 1:04 PM

4. அமைதிக்கான நோபல் பரிசு (2014) இந்தியாவை சேர்ந்த கைலாஷ் சத்தியார்த்திக்கும் பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யுசூப்சாய்க்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது – இவர்களின் பணிகளைக் கேட்டறிக.

*VII வாழ்வியல் திறன்*

1. உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளுள் உனக்குப் பிடித்தமானது எது? ஏன்?
2. இந்திய அரசமைப்புச் சட்டம் நமக்கான உரிமைகளையும் கடமைகளையும் வழங்கியுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் குறித்து எண்ணங்களைப் பகிர்க.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 196 14/08/18 1:04 PM

## இணையச் செயல்பாடு

### இந்திய அரசியலமைப்புச் சட்டம்

**இந்திய அரசியலமைப்பை அறிவோமா!**




*படி -1* கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி The Constitution of India என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.

*படி -2* திரையில் தோன்றும் GO என்பதைச் சொடுக்கி, கொடுக்கப்படும் வினாக்களைத் தேர்வு செய்து, கருப்பொருளை அறிக.

*படி -3* மேலும் கூடுதல் தகவல்களை அறிந்து கொள்வதற்கு வலப்பக்கத்தின் கீழ் உள்ள Next என்பதைச் சொடுக்குக.

*படி -4* அடுத்த கருத்தை அறிந்து கொள்ள வலப்பக்கம் மேற்பகுதியில் உள்ள ☒ என்பதைச் சொடுக்குக.




படி–1



படி–2



படி–3



படி–4

உரலி:

http://mocomi.com/constitution-of-india/

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 197 14/08/18 1:04 PM

## ஆறாம் வகுப்பு – குடிமையியல்
## ஆக்கம்


**பாடவல்லுநர் குழு**

முனைவர். கோட்டைராஜன்,
உதவி பேராசிரியர்
அரசியல் அறிவியல் துறை
பெரியார் அரசு கலைக்கல்லூரி கடலூர்.

**மேலாய்வாளர்**

அப்பண்ணசாமி M.
ஆலோசகர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
TNTB & ESC, நுங்கம்பாக்கம், சென்னை.

**சமூக அறிவியல் பாட ஒருங்கிணைப்பாளர்**

சுஜாதா .M
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

**பாடநூலாசிரியர்கள்**

சாந்தி ந.
இடைநிலையாசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
பாலவேடு, திருவள்ளூர்.

எட்வின் .R
தலைமை ஆசிரியர்
சமயபுரம்.

ஆதிவள்ளியப்பன்
எழுத்தர், சென்னை.

சரவணன் பார்த்தசாரதி
எழுத்தாளர் / மொழிப்பெயர்ப்பாளர்
ஒக்கூர், சிவகங்கை.

**இணையச் செயல்பாடு ஒருங்கிணைப்பாளர்கள்**

ஜெய செல்வன் D.
பட்டதாரி ஆசிரியர்
அரசு உயர்நிலைப் பள்ளி
வரகூர், தஞ்சாவூர்..

விஜய் ஆனந்த் D.
பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, அட்டயம்பாட்டையன் வட்டம்,
தாரமங்கலம், சேலம்...

**விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு**

இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ஜே.எப். பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.

### கலை மற்றும் வடிவமைப்புக் குழு

**வரைபடம்**

காந்திராஜன் K T
கலை மற்றும் பட ஒருங்கிணைப்பாளர்
தமிழ் விர்ச்சுவல் அகாடமி, சென்னை

ஓவிய ஆசிரியர்கள்,
தமிழ்நாடு அரசு.

மாணவர்கள்
அரசு கவின் கலை கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்

**வரைகலை & வடிவமைப்பு**

வே. சா. ஜான்ஸ்மித், தியாகராய நகர், சென்னை

**In-House - QC**
மனோகர் இராதாகிருஷ்ணன்
ஜெரார்ட் வில்சன்

**ஒருங்கிணைப்பு**
ரமேஷ் முனிசாமி

**தட்டச்சு**
கல்பனா



இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது. ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 198 14/08/18 2:52 PM

# பொருளியல்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI Economics- Lesson 1.indd 199 14/08/18 1:21 PM

அலகு 1

# பொருளியல் – ஓர் அறிமுகம்



9L48LH

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் உள்ளே இருந்த சிறுவர் பூங்காவில் இருந்து சிறுவர்களின் சிரிப்புச் சத்தம் பலமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. சறுக்கு மரத்தில் சறுக்கிக்கொண்டும் சிலர் சீசாவில் மேலும் கீழுமாக ஆடிக்கொண்டும் இருந்தனர்.

இன்னும் சிலரோ அங்கிருந்த ஊஞ்சலில் வானத்தையே தொட்டுவிடும் அளவுக்கு உயரமாகவும் வேகமாகவும் ஆடிக்கொண்டிருந்தனர். அவர்கள் இறங்கியதும் இடம் பிடிக்க நினைத்த குழந்தைகள் ஓரமாக நின்றுகொண்டிருந்தனர்.

சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடாமல் தனியே தூரமாக உட்காந்திருந்தான் கவின். அவனது பார்வை எங்கேயோ இருந்தது.

மற்றவர்களோடு சேராமல் கவின் தனித்து அமர்ந்திருப்பதைத் தூரத்தில் இருந்து பார்த்த அவனது மாமா மோகன் அவனை நோக்கி வந்தார்.

"என்ன கவின்… நீ விளையாடப்போகலையா?" என்றபடியே அவனது அருகில் வந்து அமர்ந்தார்.

"இல்ல மாமா எல்லோரும் என்னைக் கிராமத்துக்காரன்னு கிண்டல் செய்யிறாங்க", என்று சொல்லும்போதே அவனது கண்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. "நம்ம





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI Economics- Lesson 1.indd 200 14/08/18 1:21 PM

விமலனும் சேர்ந்து சிரிக்கிறான். எவ்வளவு ஆசை ஆசையாக இந்த விடுமுறைக்கு இங்கே வந்தேன். இப்போ ஏன் வந்தோம்னு தோணுது மாமா... நான் திரும்ப எங்க ஊருக்கே போயிடுறேன்," விசும்பலோடு சொன்னான் கவின்.

"அப்படியா? அவன் எங்கே?" என்று அங்கிருந்த சிறுவர்கள் கூட்டத்தில் தம் மகன் விமலனைத் தேடினார்.

"தம்பி" என்று உரக்க அழைத்தார்.

அவர் குரலைக் கேட்டு "என்னப்பா..?" என்று அருகில் வந்தான்.

"நம்ம கவினை எல்லோரும் சேர்ந்து கிண்டல் செஞ்சீங்களா?" என்றார் மோகன்.

அமைதியாக நின்றுகொண்டிருந்தான் விமலன்.

சற்று வருத்தத்துடன் மோகன் "இன்னிக்கு இவ்வளவு பெரிய நகரத்தில் இருந்தாலும்.. நானும் அதே கிராமத்தில இருந்து வந்தவன்தான். என்னோட வேர் அந்த கிராமம்தான்" என்றவர், "சரி போய் உன்னோட நண்பர்களையும் அழைச்சுகிட்டு வா.. நான் உங்களோட பேசணும்" என்று சொல்லிவிட்டு கவின் அருகில் அமர்ந்தார்.

விமலனும் அவனது நண்பர்களும் அமர்ந்ததும் "சரி நேரடியாக விஷயத்திற்கு வருகிறேன். நாம சாப்பிடுற அரிசி, பருப்பு எங்கே இருந்து கிடைக்குதுன்னு தெரியுமா?" என கேட்டார் மோகன்.

"அரிசி, பருப்பு தானே, கடையில இருந்து வாங்கிக்கொண்டு வருவாங்க" என்றான் ஆனந்தன்.

"சரி.. கடைக்கு எங்கே இருந்து வருது?"

"அவங்க இன்னொரு கடையில இருந்து வாங்கிட்டு வருவாங்களாகயிருக்கும்."

இன்பா சந்தேகத்துடன் "அதைப் பயிர் செய்றவங்ககிட்ட இருந்து வாங்குவாங்கன்னு நினைக்கிறேன் மாமா," என்றாள்.

"ரொம்பச் சரி! பயிர் செய்றவங்களதான் நாம விவசாயின்னு சொல்லுறோம். கிராமங்களில் விவசாயம் தான் முக்கியத் தொழில்."

**உயர்சிந்தனை வினா:**

பணம் என்பதே உலகில் இல்லையென்றால் – கற்பனை செய்.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181



"கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒருமுறை பொதுவான ஒர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் தான் சந்தை".

குழந்தைகள் ஆச்சரியத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"கிராமத்தில் இருந்து அவங்க விவசாயம் செய்து அரிசி, பருப்பு, தானியங்கள், காய்கறிகள் போன்றவற்றை நகரத்தின் கடைகளுக்கு அனுப்பி வைக்கிறாங்க. நாம அதை வாங்கிப் பயன்படுத்துகிறோம்."

"இப்போ எனக்கு ஒரு சந்தேகம் மாமா" என்றான் கவின்.

"என்ன சொல்லு கவின்."

"கிராமத்துல சில நாட்கள்ல எல்லாப் பொருள்களையும் ஒரே இடத்திற்குக் கொண்டு வந்து விற்கிறதையும் நான் பார்த்திருக்கிறேன். அதைக் கடைனு சொல்லாம சந்தைனு ஏன் சொல்றாங்க?"

"ஆமாம்" கவின்.

**நுகர்வோர் பொருட்கள்**

அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன. (எ.கா) அரிசி, துணிகள், மிதிவண்டிகள் போன்றவை.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI Economics- Lesson 1.indd 202 14/08/18 1:21 PM

## செயல்பாடு 1

- மாதிரிச் சந்தை அமைக்கத் திட்டமிடவும்.
- ஒவ்வொரு மாணவரும் காய்கறிகளையோ / பழங்களையோ கொண்டு வரச் செய்தல்
- பொருட்களைச் சந்தையைப் போன்று காட்சிப்படுத்தி அதன் விலைகளைக் குறிக்கச் செய்தல்.
- மற்ற வகுப்பு மாணவர்களையும் பொருட்களை வாங்கச் சொல்லுதல்.
- இச்செயல்பாட்டின் மூலம், மாணவர்கள் பொருட்களின் மதிப்பு, வாங்குதல், விற்றல் போன்றவற்றில் அனுபவத்தையும், லாபம், நட்டம், தேவை மற்றும் அளிப்பு போன்றவற்றைப் பற்றிய அறிவினையும் பெறுவர்.
- சந்தை லாபமானதாக இருக்க வேண்டும். எனவே லாபம் கிடைக்கும் வகையில் விற்பனை விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

"சந்தைக்கு வரும் பொருட்கள் எல்லாம் எங்கிருந்து வருகிறதுன்னு உங்களுக்குத் தெரியுமா?".

"தெரியாது மாமா".

"நான் ஏற்கனவே சொன்னதுபோல கிராமத்துலதான் பெரும்பாலான பொருட்கள் விளைவிக்கப்பட்டுச் சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன."

"சரி கவின். சந்தையில என்ன செயல்பாடு நடைபெறுதுன்னு தெரியுமா?"

"வாங்குவதும் விற்பதும்," என்றான் கவின்.

"அது தான் வியாபாரம். பரவாயில்லையே கவின் நீ அம்மாவோட சந்தைக்குப் போனதும் இல்லாமல் இவ்வளவு விஷயங்களையும் கவனிச்சிருக்கியே".

பெருமிதத்துடன் சிரித்தான் கவின்.

(குழந்தைகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து)

"கிராமம் பத்தி முழுசா தெரிஞ்சுக்காம கவினைக் கிண்டல் பண்ணிட்டோம்".

"மன்னிச்சிடுங்க மாமா, இனி யாரையும் காயப்படுத்தும்படி பேசமாட்டோம். இதைப் பற்றி இன்னும் அதிகமா தெரிஞ்சிக்க ஆவலா இருக்கோம் மாமா," என்றனர்.

"சரி சொல்றேன் கேளுங்க," என்று விவரிக்கத் தொடங்கினார் மோகன்.



பண்டமாற்று முறையின் சிக்கல்கள்

சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்ததுபோக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.** *–குறள்: 0479*

**விளக்கம்:** தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போலத் தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## செயல்பாடு 2

"ஒன்றிலிருந்து இருபது வரைக்கும் கொண்டாட்டம் கொண்டாட்டம்" என்ற பாடலைப் பாட / இசைக்கச் செய்தல். பாடலின் பொருளை விமர்சிக்கச் செய்தல்."

9L7VAT

## செயல்பாடு 3

கொடுக்கப்பட்ட அட்டவணையைப் பூர்த்திச் செய்தல்.

| வ. எண். | நாடுகள் | நாணயம் | குறியீடு |
|---|---|---|---|
| 1. | ஜெர்மனி | | |
| 2. | பிரேசில் | | |
| 3. | இந்தியா | | |
| 4. | அர்ஜெண்டினா | | |
| 5. | சீனா | | |

"சந்தையில் விற்கப்படும் பொருட்களைச் சிறு வியாபாரிகளும் மக்களும் பணம் கொடுத்து வாங்கிட்டுப் போறாங்க" என்றார் மோகன்.

"உங்களுக்கு ஒன்னு தெரியுமா?"

"பழைய காலத்தில் பண்டமாற்று முறைன்னு ஒன்று இருந்தது ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்வது தான் அது. (எ.கா.) ஒரு மூட்டை அரிசிக்குப் பதிலாகத் தேவையான அளவு துணியைப் பெற்றுக் கொள்வதாகும்".

"இதிலே சிக்கல் என்னன்னா.... ஒருவரிடம் அரிசி அதிகமாக இருக்கும், ஒரு நெசவாளரிடம் துணி அதிகமாக இருக்கும். அரிசி வைத்திருப்பவர் துணியை வாங்க விரும்புவார். ஆனால் துணியை வைத்திருப்பவர் அரிசியை வாங்கத் தயாராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பரிமாற்றம் நடக்கும்".

### முதல் நிலைத் தொழில்கள்

உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல் நிலைத் தொழில்கள் எனப்படுகிறது.

- வேளாண்மை
- கால்நடைகள் வளர்த்தல்
- மீன் பிடித்தல்
- கனிமங்கள், தாதுப்பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல்.
- கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல், மரம் வெட்டுதல்.







athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI Economics- Lesson 1.indd 204 14/08/18 1:22 PM

"பண்டங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளும்போது பண்டங்களின் மதிப்பில் ஏற்படும் வேறுபாடு பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்தது. இப்பிரச்சனையைத் தீர்க்க கண்டுபிடிக்கப்பட்ட கருவிதான் பணம்."

"ஓ! அப்படியா!" என வியந்தனர் குழந்தைகள்.

"பழங்காலத்துல வேட்டையாடிகளாக, உணவு சேகரிப்பாளர்களாக வாழ்ந்து வந்த மக்கள், படிப்படியாக வேளாண்மை செய்யக் கற்றுக் கொண்டனர், என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாறு அவர்கள் வேளாண்மை செய்வற்கு வசதியாகவே நீர் நிலைகள் அருகே குடி இருப்புகளை அமைத்துக் கொண்டு, அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இடங்களே கிராமம், ஊர் என்று அழைக்கப்பட்டன. இன்றளவும் விவசாயம் நமது நாட்டின் பொருளாதார ஆணிவேராகத் திகழ்கிறது. மனிதனின் தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் அளவில்லை. அதன் அடிப்படையிலேயே புதிது புதிதாக தொழில்களைச் செய்யக் கற்றுக் கொண்டான். வேளாண்மை மற்றும் மேய்ச்சலில் ஈடுபடுபவர்கள் விவசாயிகள், உழவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

"தொழில்களிலேயே விவசாயம் தான் முதன்மையானதா?"

"ஆமாம், விவசாயம் போலவே இன்னும் சில தொழில்களையும் முதன்மையான தொழில்கள்னு சொல்லுவாங்க".

"விவசாயம், தொழிற்சாலைகள் எல்லாம் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கு. உங்களுக்குப் புரியும்படி நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி மூன்று பிரிவுகளாகச் சொல்லலாம்".

"கிராமம்னா விவசாயம் தானா? அங்கே இருக்கிறவங்க என்ன வேலைக்குப் போவாங்க?" என்றான் விமலன்.

"கிராமம் எப்படி இருக்கும் மாமா" என்று இன்பாவும் சேர்ந்து கொண்டாள்.

"விவசாயம் தான் முதன்மையான வேலையாக இருக்கும் விமலன். பட்டணம்னு சொல்லப்படுகின்ற நகரம் போன்று வசதிகள் அங்கே இருக்காது. அதே நேரம் அவர்களுக்குத் தேவையான அடிப்படையானவை கிடைக்கும்படி இருக்கும். சின்னச்சின்ன கடைகள் இருக்கும். அரிசி, பருப்பு மாதிரியே காய்கறி உற்பத்தியும் கிராமங்களில்தான் அதிகம். பால், காபி, டீ போன்ற பானங்களில் சேர்க்கும் சர்க்கரை, ஆலைகளில்தான் உற்பத்தியாகுதுன்னாலும் அதுக்கு மூலப் பொருளான கரும்பு கிராமங்களில்தான் விளையுது. மிளகாய் தொடங்கி கடுகு வரை சமையலுக்கான பெரும்பாலான பொருட்கள் கிரமத்துலேர்ந்துதான் வருது."

"அடேயப்பா... இதுக்கெல்லாம் ரொம்ப விலை அதிகம்னு அம்மா சொல்லுவாங்க. அப்ப கிராமத்தில் இருக்கிறவங்க எல்லாம் பணக்காரங்களாகத்தான் இருப்பாங்க போல," என்றான் ஆதித்யா.

"அப்படி இல்லை. அங்கே உற்பத்தி செய்யுறது மட்டும்தான் அவங்க. அப்பொருட்களை அவங்கட்ட இருந்து வாங்கி, விற்க நிறைய வியாபர இடை நிலை முகவர்கள் இருப்பதால்.. விவசாய உற்பத்தியாளர்களுக்குப் போய்ச்சேரும் பணம் குறைவாகத்தான் இருக்கும்."

"ஐயோ.. பாவம்! ஆனா.. கிராமம் தான் உண்மையிலேயே நகரத்தின் நிழல் போல," என்று வியந்தான் ஆனந்தன்.





athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI Economics- Lesson 1.indd 205 14/08/18 1:22 PM

## இரண்டாம் நிலைத் தொழில்கள்

முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலை தொழில்கள் என்றும், தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்.

- வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் – பருத்தி, சர்க்கரை, உணவுபதப்படுத்துதல்.
- காடுசார்ந்த தொழிற்சாலைகள் – காகிதத்தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்.
- கனிமத் தொழிற்சாலைகள் – சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்.
- கடல்சார் தொழிற்சாலைகள் – கடல் உணவு பதப்படுத்துதல்.



## செயல்பாடு 4

தகுந்த இடங்களில் ✓ குறியிடவும்

| வ. எண். | தொழில் | முதல் நிலைத் தொழில்கள் | இரண்டாம் நிலைத் தொழில்கள் | மூன்றாம் நிலைத் தொழில்கள் |
|---|---|---|---|---|
| 1. | விவசாயி | | | |
| 2. | ஆசிரியர் | | | |
| 3. | துணி தைப்பவர் | | | |
| 4. | பொறியாளர் | | | |
| 5. | வங்கி மேலாளர் | | | |

"சின்னத் திருத்தம், **கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு.** இதுவும் நான் சொல்லவில்லை. மகாத்மா காந்தியடிகள் சொன்னது."

"அருமையாகச் சொல்லி இருக்கிறார்," என்று உற்சாகமாகச் சொன்னான் கவின்.

அப்போது மோகனுடைய சட்டைப்பையில் செல்போன் சிணுங்கியது.

அவர் அதை எடுத்துப் பார்த்தார். விமலனின் அம்மா பொன்னி அழைத்திருந்தார். செல்போனை ஆன் செய்து, "சொல்லும்மா.." என்றார்.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI Economics- Lesson 1.indd 206 14/08/18 1:22 PM

## மூன்றாம் நிலைத் தொழில்கள்

முன்னர் கூறிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.

- போக்குவரத்து – சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்.
- தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்.
- வர்த்தகம் – பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்.
- வங்கி – பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்.








"அங்கே என்ன உட்கார்ந்துகிட்டுக் கதை அளந்துகிட்டு இருக்கீங்க. பசங்களையும் அழைச்சுட்டு வீட்டுக்கு வாங்க. சாப்பாடு தயாரா இருக்கு," என்று சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டார்.

"சரி வாங்க எங்க வீட்டுக்குப் போகலாம். சாப்பாடு தயாரா இருக்குன்னு," எழுந்தார் மோகன். பின்னடியே பசங்களும் "ஹேய்!" என்று உற்சாகமாய்ச் சத்தம்போட்டபடி எழுந்தனர்.

"கிராமம் எவ்வளவு முக்கியமானதுன்னு சொன்னீங்க. அப்போ நகரம் முக்கியமானது இல்லையா?" என்று கேட்டாள் இன்பா.

"ஒன்று முக்கியமாக இருந்தால் மற்றொன்று முக்கியமில்லாதது என்று யார் சொன்னது? அதனதன் அளவில் ஒவ்வொன்றும் முக்கியமானதுதான்."

அப்படீன்னா, நகரத்தைப் பற்றியும் சொல்லுங்களேன்," என்று கேட்டாள் இன்பா.

"அவ்வளவுதானே.. சொன்னால் போச்சு. இன்று உலக மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நகரங்களில் தான் வாழ்கிறார்கள். நம்ம தமிழ்நாட்டில் 47 சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கிறார்களாம்."

"அடேயப்பா!"

"அதுமட்டுமல்ல. தமிழ்நாடு உற்பத்தி தொழிலிலும் சேவைத்தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலம். இவை நகரங்களை மையமாகக்கொண்டே இயங்குகின்றன."

"கேட்கவே பெருமையா இருக்கு மாமா. இந்தச் செயல்பாடுகளை என்னவென்று சொல்லுங்களேன்" என்றான் கவின்.

"ஆமா.. அதுவுமில்லாமல்.. கிராமங்களைவிட நகரங்களில் வேலை வாய்ப்புகள் அதிகம். சிறுதொழில் செய்பவர்கள் தொடங்கி அமைப்பு சாரா தொழிலாளர்கள் வரை நகரத்தில் தான் அதிகமாக இருக்காங்க."

"புரியலையே."



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI Economics- Lesson 1.indd 207 14/08/18 1:22 PM

"இப்போ கிராமத்தில் முடி திருத்தகம், துணிகளைத் துவைத்து, இஸ்திரி போட்டுக்கொடுக்கும் சலவை நிலையங்கள் எல்லாம் ஒண்ணோ ரெண்டோ தானே இருக்கும். ஆனால் நகரத்தில் இந்த மாதிரி சிறுதொழில் செய்பவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்கள். இப்படி நகரத்தில் கிடைக்கக்கூடிய உபரி வருவாயும் அதிகமாக இருக்கும்."

"ஓ!"

"ஆமா, நன்கு வடிவமைக்கப்பட்ட சாலைகள், துறைமுகம், விமான நிலையம், ரயில் நிலையங்கள் போன்ற இடங்கள் எல்லாம் ஏற்றுமதி, இறக்குமதி சிறப்பாக நடக்கத் துணை புரிகின்றன. இதற்கு உதவுவதற்கு ஏற்றார் போல வங்கிக் கிளைகள் நகரங்களில் அதிகம். இப்படி அன்றாடப் பணப்புழக்கத்திற்குப் பெருமளவில் வங்கிகள் உதவி செய்வதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணையாக நிற்கின்றன."

"இவை அனைத்தையும் மூன்றாம் நிலை தொழில்கள் எனலாம்."

"நான் இங்கேயே இருந்தும், எனக்கு இதெல்லாம் தெரியல அப்பா," என்றான் விமலன்.

"உண்மையிலயே நிறைய செய்திகள் தெரிஞ்சுகிட்டோம் மாமா," என்றாள் இன்பா.

"நல்லது. இனிமே கிராமம்தான் உசத்தி, நகரம்தான் உசத்தின்னு யாராச்சும் சொல்லுவீங்களா?"

"நிச்சயமாகச் சொல்லமாட்டோம் மாமா. யாராச்சும் அப்படிச் சொன்னால் எங்களுக்குத் தெரிஞ்சதை அவங்களுக்கும் சொல்லிக்கொடுப்போம்," என்று ஒரே குரலில் கூறினர் குழந்தைகள்.

"சரி சாப்பிட போகலாம் எல்லோரும் வாங்க," என்று கூப்பிட்டார் மோகன்.

"இன்னும் கொஞ்சம் நேரம் விளையாடிட்டு சாப்பிடப் போகிறோம்", என்றனர் குழந்தைகள்.

கவினின் கையைப் பற்றிக்கொண்டு, குழந்தைகள் பூங்காவை நோக்கி ஓட்டமெடுத்தனர்.

எல்லோரும் ஒற்றுமையோடே விளையாடப் போவதைப் பெருமிதத்துடன் பார்த்து, நல்ல விஷயங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்த திருப்தியை உணர்ந்தார், பொருளாதார ஆசிரியரான மோகன்.

**கற்றல் வெளிப்பாடுகள்**

- குழந்தைகள் 'சந்தை' என்பதன் பொருளை புரிந்து கொள்வர்
- 'பண்டமாற்று முறை' பற்றித் தெளிவான கருத்தைப் பெறுவர்
- பலவிதமான தொழில்களைப் பற்றிய அறிவினைப் பெறுவர்

A-Z கலைச்சொற்கள்

**கலைச்சொற்கள்**

- நுகர்வோர் – பொருட்களைப் பயன்படுத்துவோர்
- குடியிருப்புகள் – மனிதர்கள் வாழுமிடம்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

## பயிற்சிகள்

9LD4NJ

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் ________________.
2. 'தேன் சேகரித்தல்,' என்பது ________________ தொழில்.
3. மூலப்பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றுவது ________________ எனப்படும்.
4. காந்தியடிகளின் கூற்றுப்படி, கிராமங்கள் நம் நாட்டின் ________________.
5. தமிழ்நாட்டில் ________________ சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.

### II) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. கால்நடைகள் வளர்ப்பு | – | இரண்டாம்நிலைத் தொழில் |
| 2. உணவு பதப்படுத்துதல் | – | சேவை |
| 3. இரும்பு எஃகுத் தொழிற்சாலை | – | முதல்நிலைத் தொழில் |
| 4. தொலைபேசி | – | வேளாண்சார் தொழிற்சாலை |
| 5. பருத்தியாலை | – | மூன்றாம்நிலைத் தொழில் |

### III) பொருத்திய பின் பொருந்தாத இணையைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. சிறிய அளவிலான தொழிற்சாலை | – | பண பரிவர்த்தனை |
| 2. காடுசார்ந்த தொழிற்சாலைகள் | – | தகவல் தொழில்நுட்பம் |
| 3. சேவைகள் | – | காகிதத் தொழிற்சாலைகள் |
| 4. வங்கி | – | கால்நடைகள் வளர்ப்பு |

### IV) சரியான விடையைக் கண்டறிக.

1. வேளாண்மை என்பது (முதன்மை / இரண்டாம் )நிலைத் தொழிலாகும்.
2. பொருளாதார நடவடிக்கைகள் (உடைமை / பயன்பாடு) அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.
3. சர்க்கரை ஆலை (முதன்மை / இரண்டாம்) நிலைத் தொழிலாகும்.
4. வேளாண்மைசார் தொழிற்சாலை (பருத்தி யாலை / மரச்சாமான்கள்).
5. பால்பண்ணை ஒரு (பொது நிறுவனம் / கூட்டுறவு துறை).

### V) கீழ்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

1. சந்தை – வரையறு.
2. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
3. வணிகம் என்றால் என்ன?
4. சேமிப்பு என்றால் என்ன?
5. பணம் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் யாது?
6. நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்புகள் வளர்ச்சியடைதற்கான காரணம் என்ன?
7. இரண்டாம்நிலைத் தொழில்கள் என்று எவற்றை அழைக்கின்றோம்?
8. நகரங்களை மையமாகக் கொண்டு இயங்கும் தொழில்கள் எவை?



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI) **கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.**

1. உனது மாவட்டத்தில் நடைபெறும் முக்கிய முதல்நிலைத் தொழில்களைப் பட்டியலிடுக.
2. உனது மாவட்டத்தில் உள்ள உற்பத்தித் தொழிற்சாலைகளைக் குறிப்பிடுக.
3. மூலப்பொருள் பயன்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்படுகின்றன?
4. சேவைத்துறையில் காணப்படும் தொழில்களை எழுதுக.
5. நகரங்களின் அம்சங்களாக நீ அறிவன யாவை?

VII) **கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.**

| வ. எண். | கிராமங்களில் நடைபெறும் தொழில்கள் | நகரங்களில் நடைபெறும் தொழில்கள் | இரண்டிலும் நடைபெறும் தொழில்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

**செயல்பாடு**

"**சிந்துநதியின் மிசை நிலவினிலே**" என்ற பாரதியாரின் பாடலிலுள்ள வரிகளை எழுதவும். இப்பாடலில் பண்டமாற்று முறையின் மூலம் மாற்றிக் கொள்ளப்பட்ட பொருட்கள் எவையெவை என ஆசிரியர் உதவியுடன் அறிந்து கொள்ளவும்.

VIII) **படங்களை ஒட்டவும்.**

| முதல்நிலைத் தொழில்கள் | இரண்டாம்நிலைத் தொழில்கள் | மூன்றாம்நிலைத் தொழில்கள் |
|---|---|---|
| | | |



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
VI Economics- Lesson 1.indd 210 14/08/18 1:22 PM

குறிப்புகள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

VI Economics- Lesson 1.indd 211 14/08/18 1:22 PM

## குறிப்புகள்



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181